எஸ். எஸ். எல். ஸி. 1954

லிப்கோ

தமிழ் உரை விளக்கமும் வினுவிடையும்

[சிறப்புப் பகுதி]

LIPCO TAMIL URAIVILAKK
HUM-VINAVI
BY CHARI
CONNEMARA PUBLIC LIBRARY
25 MAR 1956
MADRAS

விளக்கமான பதவுரை கருத்துக்கள்–அழகான விளக்க உரைகள்–இன்றியமையாத இலக்கணக் குறிப்புக்கள் – ஆய்ந்தெடுத்த வினுவிடைகள், மாதிரி வினுத்தாள்கள் அநுபந்தம் யாவும் அடங்கியுள்ளன.

அநுபவம்பெற்ற தமிழாசிரியர் மூவரால் இயற்றப்பெற்றது

பதிப்பாளர்:

தந்தி: "லிப்கோ"

டெலிபோன்: 85388

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
'பூரங்கம்', 8, ரங்கநாதன் ரோடு,
தியாகராயநகர், சென்னை-17.

உரிமை பதிவு செய்யப்பெற்றது]

[விலை அணு. 0-12-0

வள்ளுவர் வாய்மொழி

(திருக்குறள்)

அணு குண்டு, ஹைடிரஜன் குண்டு, கோபால்டு குண்டு முதலான பலவகைக் குண்டுகளின் தோற்றத்தால் உலகம் அஞ்சி நடுங்குகின்றது. இன்றைய உலகில் இன வெறி, நிற வெறி, மொழி வெறி முதலியவை நிரம்பியுள்ளன. ''எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓரினம்'' என்னும் தமிழ்ப் பண்பாட்டினை உலகிற் பரப்ப ஐக்கிய நாடுகளின் கழகம் பாடுபடுகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் தமிழனின் கடமை யாது? உலக அமைதிக்கு வழி காண்பதே தலையாய கடமை அன்றோ? உலக அமைதிக்குரிய வழி வள்ளுவர் வாய்மொழியின்கண் காணப்படுகின்றது என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ?

பண்டிதர்களும் பாமரர்களும், முதியவர்களும் இளைஞர்களும், செல்வரும் வறியரும் விரும்பிப் படிப்பதற்குரிய நூல் திருக்குறள். அத்தகைய நூலினை யாவரும் படிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே இந்நூல் மிகக் குறைந்த விலையுடன் வெளிப்படுத்தப் பெற்றுள்ளது.

அழகிய பதிப்பு	*மூலம் மட்டும்*
144 பக்கங்கள்	*விலை அணா 4*

SREE RAMAPRASAD PRESS, 56, BROADWA[Y] MADRAS - 1.

[..]MARA PUBLIC LI[..]

S. S. L. C 1954

THE LIFCO GOLDEN GUIDE TO

TAMIL TEXTS : PART II

BY

"THREE EXPERIENCED PANDITS"

S. V. CHARI
G. V. PATHI
R. S. CHARI

R.B. No. 316
3-53

PUBLISHERS:

THE LITTLE FLOWER CO.,

MEMBERS OF THE NATIONAL BOOK LEAGUE, ENGLAND.
"BHURANGAM BUILDINGS",
8, RANGANATHAN ROAD,
Thyagarayanagar, MADRAS S-17.
Telegraphic Address: LIFCO, MADRAS; Telephone: 85388.

53646
26 C 2111

SOLE AGENTS IN THE CITY:

Messrs. M. DAMODARAM & CO., Booksellers,
APPAH BUILDINGS,
9/286, ESPLANADE, G. T., MADRAS-1.

பொருளடக்கம்

CONNEMARA PUBLIC LIBRARY
2 5 MAR 1956
MADRAS

		பக்கம்
செய்யுட் பகுதி		
I. பழஞ் செய்யுள்		
புறநானூறு	...	1
II. இடைக்காலச் செய்யுள் (முற்பகுதி)		
சிலப்பதிகாரம்	...	14
III. இடைக்காலச் செய்யுள் (பிற்பகுதி)		
கம்ப ராமாயணம்	...	48
IV. இக்காலச் செய்யுள்		
1. குசேலோ பாக்கியானம்	...	83
2. பாஞ்சாலி சபதம்	...	93
வினு விடைகள் (செய்யுட்பகுதி)	...	104
நீதிகள்	...	144
உரைநடைப் பகுதி		
1. இறையனார் அகப்பொருள்	...	1
2. ஆய் அண்டிரன்	...	8
3. பாரதியார் தமிழ்ப்புலமை	...	20
4. நலங்கிள்ளியும் கோவூர் கிழாரும்	...	30
இலக்கணம்	...	38
மாதிரி வினுத்தாள்கள்	...	52
அநுபந்தம்	...	57

PUBLIC LIBRARY
2 5 MAR 1956
MADRAS

எங்கள் நன்றி

அன்புமிக்க எமது ஆசிரியர் மூவர்க்கும், உடனிருந்து உதவிய உயர்திரு. தமிழ்ப் பேராசிரியர் மயிலை. சிவ. முத்து அவர்கட்கும், தங்கள் சிறந்த கருத்துக்களை அடிக்கடி உதவி எம்மை ஆதரித்து வரும் தமிழாசிரிய நண்பர்க்கும், மதிமிக்க மாணவர்க்கும், எமது நூலை வெகு திறம்பட அச்சிட்டுதவிய அருட்பெருஞ்சோதி அச்சகம், சென்னை1-, ஞானோதயா பிரஸ், சென்னை-1. ஸ்ரீ சாமுண்டி அச்சகம், சென்னை-17 ஆகியவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

அனைவருக்கும் இறைவன் இன்னருள் புரிவானாக.

— பதிப்பாளர்கள்

CONNEMARA PUBLIC LIBRARY
25 MAR 1956
MADRAS

லிப்கோ

எஸ். எஸ். எல். ஸி.

தமிழ் உரை விளக்கமும் வினு விடையும்

பகுதி II. சிறப்பு

செய்யுட் பகுதி

1. பழஞ்செய்யுள்

இப் பிரிவில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க கால இலக்கியங்களிலிருந்து தொகுக்கப் பெற்ற பாடல்கள் அமைந்துள்ளன.

பெயர்க் காரணம்: இது புறம் + நானூறு எனப் பிரிக்கப்பட்டுப் புறத்தைப் பற்றிய நானூறு அகவற்பாக்களைக் கொண்ட நூல் என்று பொருள் படும். இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. அறம், போர் முதலிய செய்திகளைக் கூறுவது புறம் எனப்படும். இடவாகு பெயர்.

இன்ன வகை என்பது: சங்க நூல்களாகக் கருதப்படுகின்ற கீழ்க்கணக்கு, மேற்கணக்கு என்னும் இரு பிரிவினவாகிய நூல்களில் இது மேற்கணக்கைச் சார்ந்தது. எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என்னும் நூல்கள் மேற்கணக்கு நூல்களாம். அவற்றில் இந்நூல் எட்டுத் தொகையில் எட்டாவதாகும்.

எட்டுத்தொகை நூல்கள்: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

புறநானூற்றிலுள்ள பாடல்களை இயற்றிய புலவர்கள் ஓர் ஊரினரல்லர்; ஒரு காலத்தவரல்லர்; ஒரு மரபினருமல்லர். இந் நூற்பாடல்களைத் தொகுத்தாரும், தொகுக்கும்படி சொல்லியவரும் இன்னார் எனத் தெரியவில்லை. இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலாக 400 பாக்களைக் கொண்டது. புறம், புறம் பாட்டு என்பன இதன் வேறு பெயர்கள்.

திணை துறைகள் : இதிலுள்ள ஒவ்வொரு பாடலுக்கும் தனித் தனியே திணை, துறைகளுண்டு: **திணை என்பது மக்கள் ஒழுக்கம். துறையென்பது, மக்கள் விலங்கு முதலியன சென்று நீருண்ணும் துறைபோலப் பலவகைப் பட்ட பொருளும் ஒரு வகைப்பட்டுச் செல்லுவதற்குரிய வழி** என்று பொருள்படும். அஃதாவது மக்கள் வாழ்க்கைக்கு உரிய வழியாம்.

இந்நூலிற்குப் பழையதோர் உரையுண்டு; அது முற்றிலும் கிடைத்திலது. பல நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும் இந்நூற் பாடல்களை மேற்கோள்களாக எடுத்தாண்டமையின் இதன் பெருமை வெளியாகும்.

இந் நூலிலிருந்து பண்டைத் தமிழகத்தில் திகழ்ந்த முடி வேந்தர் மூவர், அவர் தம் சிற்றரசர், சேனைத் தலைவர், போர் வீரர், புலவர்களைப் பாதுகாத்த (1) பாரி (2) வல்வில் ஓரி (3) மலையன் (4) அதியமான் (5) பேகன் (6) ஆய் (7) நள்ளி என்னும் கடை எழு வள்ளல்களின் வரலாறுகள், அக்காலத்துத் தமிழ் மக்களின் நாகரிகப் பண்புகள் முதலியன உணரலாம். **காலம்** கடைச்சங்க காலமாகிய கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்பர்.

ஆசிரியரைப் பற்றிய குறிப்புக்கள் :

ஔவையார்: முதற் பாடலை எழுதிய ஆசிரியர் **ஔவையார்** என்ற பெண்பால் புலவராவர். இவர் கடைச்சங்க காலத்து வாழ்ந்தவர்; சேர சோழ, பாண்டிய மன்னர்களாலும் கடை எழு வள்ளல்களாலும் குறுநில மன்னர்களாலும் பெரிதும் மதித்துப் போற்றப் பட்டவர். பிற்காலத்தில் மூதுரை, நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்களை எழுதிய ஔவையார் இவரல்லர். இவர் குறுநில மன்னனும் கடை எழு வள்ளல்களில் ஒருவனுமாகிய தகடூரை ஆண்ட அதியமானைப் புகழ்ந்து பாடி அவன் அளித்த அமுதமயமான நெல்லிக் கனியை உண்டு நீண்ட நாள் வாழ்ந்தனர் என்பர். இஃது அவர் பாடலாலேயே

விளங்குகிறது. ஔவையார் அதியமானின் அவைக்களப் புலவ ராகவும் அமைச்சர் தகுதியிலும் நீண்ட நாள் அவனுடன் வாழ்ந்து அவனுக்கு நன்மை பல செய்துள்ளனர்.

இவர் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலிய சங்க இலக்கியங்களிலும் உள்ளன. அதியமான் நெடு மானஞ்சி, தொண்டைமான், பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலியவர்கள் இவரால் புகழ்ந்து பாடப்பட்டவர்களாவர். ஔவையார் அக் காலத்தில் விளங்கிய பெண்பாற் புலவர்களில் ஈடும் எடுப்பும் அற்றவராய்ச் சிறந்து விளங்கினர். அவருடைய புலமை பெண் குலத்துக்கே பெருமை அளிப்பதாய்த் திகழ் கின்றது.

இளம்பெரு வழுதி : இரண்டாம் பாடலை இயற்றிய புலவர் **கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி** என்பவர். இவர் பாண்டிய அரசர்களில் ஒருவர் என்பதை 'வழுதி' என்ற பாண்டியர்க்கு உரிய சிறப்புப் பெயரே விளக்கும். இவர் இளமையிலே பேரறிவு பெற்றுத் திகழ்ந்தமையின் இளம்பெரு வழுதி எனப்பட்டார் போலும். கடலுள் மாய்ந்த என்பது அடைமொழி. இவர் கடலில் விழுந்து இறந்திருத்தல் வேண்டும். ஆகவே அதனை யே அடைமொழியாக்கிக் கூறினர். அவ்வாறு வழங்குதல் பண்டைக்கால வழக்கம். வெள்ளியம்பலத்துத் துஞ்சிய (இறந்த) பெருவழுதி, சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்பன போல வரும் பெயர்கள் இதனை நன்கு விளக்கும். இப் புலவர் பெருமான் பாடிய பாடலிலிருந்து அவருடைய விரிந்த மனப் பான்மையும், தன்னலமற்ற தன்மையும் இனிது விளங்கும்.

பொன்முடியார்; மூன்றாம் பாடலை இயற்றியவர் **பொன்முடியார்** என்ற பெண்பாற் புலவர். பொன் முடியார் என்ற பெயராலும் 'ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே' என்று தன்னைத் தாயா கக் குறிப்பதாலும் இவர் பெண்பாற் புலவர் என்பது விளங்கு கிறது. சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை யைப் பற்றிப் பாடிய தகடூர் யாத்திரை என்ற நூலில் இப் புலவர் பாடிய சில பாடல்கள் காணப்படுவதால் இவர் அவன் காலத்தவர் என்பது தெரிகின்றது. அதியமான் நெடுமானஞ்சி யையும் இவர் புகழ்ந்து பாடியுள்ளார். திருக்குறளைப் பற்றிப் புகழ்ந்து பாடப்பட்ட திருவள்ளுவ மாலை என்ற நூலிலும் இவர்

பாடியதாக ஒரு பாடல் உள்ளது. இவர் காலத்திலிருந்த சிறந்த புலவர் அரிசில் கிழார் என்பவராவர். பொன்முடியார் வீர உணர்ச்சி ததும்பப் பாடுதலில் வல்லவர். அதற்கு நம் பாடப் பகுதிச் செய்யுளே சிறந்த சான்றாகும். அழகிய உவமைகளை அமைத்துப் பாடுவதிலும் வல்லவர் இப்புலவர்.

1. அதியமானின் கொடைப்பெருமை

ஒருநாட் செல்லலம்; இருநாட் செல்லலம்;
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ!
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் தது அது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

பதவுரை

அணிபூண் - அழகிய ஆபரணங்களை
அணிந்த - அணிந்துள்ள
யானை - யானையும்
இயல்தேர் - சிறந்த இயல்பினை உடைய தேரினையும் உடைய
அதியமான் - அதியமான் என்ற வள்ளல்
ஒரு நாள் செல்லலம்-(நாம்) ஒரு நாள் செல்லோம்;
இருநாள் செல்லலம் - இரண்டு நாட்கள் மட்டும் செல்லோம்;
பலநாள் பயின்று - பலநாட்கள் சென்று பழகினாலும்
பலரொடு செல்லினும்- (தனித்துச் செல்லாமல்) பலரையும் உடனழைத்துச் சென்றாலும்
தலை நாள் போன்ற - முதல் நாள் கண்டது போன்ற
விருப்பினன் - விருப்பம் சிறிதும் குறையாத இயல்புடையவனாக உள்ளவன்;
பரிசில் பெறூஉம் காலம் - நாம் பரிசிலை அடைவதற்குரிய காலமானது
நீட்டினும் - சிறிது அதிகப்பட்டாலும், (தாமதமானாலும்),
நீட்டாது ஆயினும் - அதிகப் படா விட்டாலும்
யானை - யானையானது
தன் கோட்டிடை - தன்னுடைய தந்தத்தின் கண்
வைத்த - வைத்துக்கொண்டுள்ள

கவளம் போல - கவளமாகிய உணவு அதன் வாயிற் செல்வது தவறாததுபோல
கை அகத்தது - பரிசில் நமது கையின்கண் உள்ளது;
அது பொய் ஆகாது - அது தவறாது;
அருந்த - (பரிசிலை) உண்ண
ஏமாந்த நெஞ்சம் - விருப்பங் கொண்ட மனமே!
வருந்த வேண்டா - வருந்துதல் வேண்டா;
அவன் தாள் வாழ்க - அவனுடைய (அதியமானுடைய) தாள்கள் வாழ்வனவாக.
[மாதோ, ஏ - அசைகள்]

கருத்து: அதியமான் நாம் ஒருநாள் அல்லது இருநாள் செல்லாமல் பல நாள் சென்றாலும், பலரோடு சென்றாலும் வெறுப்புறாமல் முதல்நாளில் நம்மைக் கண்டபோது கொண்டது போன்ற விருப்பத்தினையுடையவன். அவன் பரிசளிக்கச் சிறிது காலம் தாமதித்தாலும் தாமதிக்கா விட்டாலும் யானையின் தந்தங்களுக்கிடையில் வைக்கப்பட்ட உணவு அதன் வாயில் புகுவது தவறாதது போலப் பரிசில் நம் கையின்கண் உள்ளது. அது தவறாது. பரிசிலை அடைய விருப்பம் கொண்ட மனமே! வருந்த வேண்டா. அதியமானுடைய தாள்கள் வாழ்வனவாக.

விளக்கம்

தலை நாள் போன்ற விருப்பினன்: ஒருவரிடம் ஒரு முறையன்றி மறுமுறை உதவி கருதிச் சென்றால் அவர் வெறுப்பு அடைவது இயல்பு. அதியமானோ இரு முறையன்றிப் பல முறை செல்லினும், தான் மட்டும் அன்றிப் பலரையும் உடன் அழைத்துச் சென்றாலும் சிறிதும் வெறுப்படையான். வெறுப்படையாமை மட்டும் அன்று. ஒருவரை முதன் முதலிற் காணும் போது எத்தகைய விருப்பம் கொள்வானோ அத்தகைய விருப்பத்தினின்றும் சிறிதும் மாறான் என்று அவனுடைய ஈகை மனப்பான்மையை இனிது விளக்கினர் ஆசிரியர்.

யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போலக் கையகத்தது:

யானை தன் தந்தங்களிடையில் வைத்துள்ள உணவு அதன் வாயிற் புகுவதற்குச் சிறிது காலம் தாழ்த்தாலும் அதன் வாயிற் செல்வது தவறாது; அது போல அதியமான் பரிசளிக்கச் சிறிது காலந் தாழ்ப்பினும் பரிசில் கிடைப்பது தவறாது என்பதாகும்.

இனி, யானை வாயிற்கொண்டு உண்ணுகின்ற வரையிலும் தன் கோட்டின்கண் வைத்துள்ள கவளம் போலப் பரிசில் நம்

கையகத்தில் உள்ளது; இனி உண்ண வேண்டுவதே என்றும் பொருள் கூறலாம்.

கையகத்தது என்பது நிச்சயமாகக் கிடைக்கும் என்ற உறுதி பற்றிக் கூறியதாம். உறுதிபற்றி எதிர்காலம் இறந்த காலமாய்க் கூறப்பட்டது.

வாழ்க அவன் தாள்: இதற்கு அதியமானுடைய முயற்சி வாழ்வதாக என்றும் பொருள் கூறலாம்.

அருந்தேமாந்த நெஞ்சம்: ஏமாந்த நெஞ்சம் அருந்து என்று கொண்டு, உண்ண ஆசைப்பட்ட மனமே உண்பாயாக என்றும் பொருள் கூறலாம். அருந்து - முன்னிலை ஏவல் ஒருமை வினை முற்று.

கவளம்: இங்கு வெல்லமும் அரிசியும் கலந்து யானைக்குக் கொடுக்கும் ஒரு வாய் உணவைக் குறித்தது.

திணையும் துறையும்: திணை: பாடாண் திணை; துறை: பரிசில் கடாநிலை.

பாடாண்திணை. பாடு + ஆண் + திணை. பாடப்படும் ஆண் மகனது ஒழுக்கம் என்பது தொடர்ப்பொருள். அஃதாவது பரிசிலர் பரிசில் குறித்து ஒருவனைப் பாடுதல் என்று சுருங்கக் கூறலாம்.

பரிசில் கடாநிலை: பரிசில் அளிப்போன் பரிசில் பெற வந்தவரைப் பிரிய நேருமே என்று கருதி விரைவில் பரிசில் அளிக்காது காலந்தாழ்க்க, பரிசிலர் தம் சுற்றத்தாரின் துன்பங்களை எடுத்துக்கூறி, அத்துன்பந் தீர்க்க விரைந்து செல்ல வேண்டுமாதலால் விரைவில் பரிசினை அளித்து அனுப்பி உதவுக என்று கூறிக் கேட்கும் நிலையாகும்.

இலக்கணம்: விருப்பினன் - குறிப்பு வினைமுற்று. பூண் - காரணப் பெயர். பெறூஉம் - குறில் நெடிலாகி அளபெடுத்தமையால் **இன்னிசையளபெடை;** ஓசை குறைந்த விடத்து அளபெழுந்தமையால் செய்யுளிசை யளபெடை என்பாரும் உளர். கோட்டிடை-இடை ஏழாம் வேற்றுமை உருபு. அருந்த - 'த' வில் உள்ள அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. வாழ்க - வியங்கோள் வினைமுற்று; வாழ்க என்பதில் உள்ள அகரம் தொக்கத் தொகுத்தல் விகாரம்.

2. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் பெருமை

உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமிய ருண்டலும் மிலரே; முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

பதவுரை

இந்திரர் - இந்திரர்க்கு உரிய
அமிழ்தம் - தேவாமுதமானது
இயைவது ஆயினும் - விதியினாலாவது, தாம் செய்த தவத்தினாலாவது தம்மிடம் கூடுவதானாலும்
இனிது என - அவ்வமுதத்தை இன்பம் தருவது என நினைத்து
தமியர் - தாமமட்டும் தனியராய்
உண்டலும் இலர் - உண்ணாதவராய்
முனிவு இலர் - யாரிடத்தும் வெறுப்பு இல்லாதவராய்
பிறர் அஞ்சுவது - பிறர் அஞ்சத்தகுந்த துன்பச் செயலைச் செய்வதற்கு
அஞ்சி - தாமும் பயந்து
துஞ்சலும் இலர் - (அவ்வச்சம் நீக்குதற் பொருட்டு) சோம்பி இருத்தல் அற்றவராய்
புகழ் எனின் - புகழ் கிடைப்பதாயிருந்தால்
உயிரும் கொடுக்குவர் - தம் உயிரையும் கொடுக்கும் இயல்புடையவராய்
பழி எனின் - பழிவருவதானல்
உலகு உடன் பெறினும் - அதனால் இவ்வுலகம் முழுவதையும் பெறுவதானாலும்
கொள்ளலர் - ஏற்றுக்கொள்ள விரும்பாதவராய்
அயர்வு இலர் - மனச் சோர்வு அற்றவராய்
அன்ன - அத்தகைய
மாட்சி அனையர் ஆகி - பெருமை உடையவர் ஆகி
தமக்கு என - தம் நலத்துக்கு என்று
முயலா - முயற்சி செய்யாத
நோன்தாள் - வலிய முயற்சியையுடைய
பிறர்க்கு என - பிறர் நலத்துக்கென்று
முயலுநர் - முயல்பவர்கள்
உண்மையானே - உலகில் இருக்கின்றமையாலேயே
இவ்வுலகம் - இந்த உலகமானது
உண்டு - நிலைத்திருக்கிறது.
[ஆல், அம்ம - அசைகள்]

கருத்து : இந்திரர்க்குரிய பெறுதற்கரிய தேவாமுதம் கிடைத்தாலும் அதனைத் தாம் மட்டும் தனித்திருந்து உண்ணும் தன்மை இல்லாதவராய், யாரிடத்தும் வெறுப்பு இல்லாதவராய், பிறர் அஞ்சத்தக்க பாவச் செயல்களுக்குத் தாமும் அஞ்சி, சோம்பலற்றவராய், புகழ் கிடைப்பதாக இருந்தால் உயிரையும் வழங்குபவராய், பழிவருவதாக இருந்தால் அதனல் இவ்வுலகம் முழுவதும் கிடைப்பதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளாதவராய், தமக்கென்று முயலாமல் பிறர் நலத்துக்கென முயலும் பெரியோர்கள் வாழ்வதால் இவ்வுலகமானது நிலைத்திருக்கிறது.

விளக்கம்

பிறர்க்கென முயலுநர் உண்மையான் இவ்வுலகம் உண்டு என்று கூட்டுக.

இந்திரர் அமிழ்தம்........இலர்: அமிழ்தம் என்பது சாவாமருந்து. அத்தகைய அமிழ்தமே கிடைக்கப் பெற்றுலும் பெரியோர்கள் அதனைத் தாம் மட்டும் உண்ணுர்; பலர்க்கும் பகுத்துக் கொடுத்துப் பிறகு தாம் உண்ணுவர். 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்ற கொன்றை வேந்தன் செய்யுளும் இக்கருத்தைக் கொண்டதே. (மருந்து - அமிழ்தம்)

இந்திரர் என்பது சிறப்பாகத் தேவர் தலைவனுகிய இந்திரனைக் குறிக்காமல் தேவர்களைக் குறித்தது.

அஞ்சுவது அஞ்சி: அஞ்ச வேண்டியன பழியையும், பாவத்தையும் தரும செயல்களாம். அத்தகைய செயல்களுக்கு அஞ்சி ஒழுகவேண்டும். அஞ்சாமை என்பது மக்களுக்கு இருக்கவேண்டிய சிறந்த குணங்களில் ஒன்ருகும். ஆனல் அஞ்ச வேண்டிய பழி பாவங்களுக்கு அஞ்சாமை சிறந்த குணமாகாது. அவற்றிற்கு அஞ்சி ஒழுகுதலே சிறந்த குணமாம். 'அஞ்சுவ தஞ்சாமை, பேதைமை; அஞ்சுவது அஞ்சல், அறிவார் தொழில்' என்று வள்ளுவர் கூறியதும் காண்க.

புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் : ஒரு செயலைச் செய்வதால் புகழ் கிடைப்பதாக இருந்தால் அச் செயல் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், செய்து முடித்தல் வேண்டும். அதனல் உயிருக்கே தீங்கு நேர்வதாக இருந்தாலும் உயிரை வழங்கியேனும் புகழைப் பெறுதல் வேண்டும். ஏனென்னில் இவ்வுலகில், என்றும் அழியாமல் நிலைப்பது புகழேயன்ருே ! புகழ் குறித்தன்ருே மக்கள் வாழ்கின்றனர். உயிருக்கு ஊதியம் புகழ்

என்றே வள்ளுவரும் கூறுகின்றார். ஆகவே புகழ் என்பது உயிரினும் மேம்பட்டது என்பது விளங்குகின்றது. அத்தகைய மேம்பட்ட புகழை உயிரை வழங்கியேனும் பெறுவதே முறை.

பழி எனின்........கொள்ளலர்: ஒரு செயலைச் செய்வதால் பழி உண்டாகுமென்றால் அச்செயலைச் செய்தல் கூடாது. அப்படிச் செய்வதால் இவ்வுலகம் முழுவதையும் ஆளும் அரசாட்சியே கிடைப்பதாக இருந்தாலும் அவ்வாட்சியை விரும்பிப் பழிச் செயல் செய்தல் கூடாது. இவ்வுலக ஆட்சி நிலையானதன்று. மனித வாழ்க்கையும் நிலையானதன்று. நிலையற்ற வாழ்க்கையை யுடையவன், நிலையற்ற உலக ஆட்சியை விரும்பி உலகம் உள்ள அளவும் நிலைத்திருக்கக் கூடிய பழி தரும் செயலைச் செய்வது அறியாமையாம். ஆதலால் பழி எனில் உலகுடன் பெறினும் கொள்ளலர் என்று கூறினர்.

தமக்கென........முயலுநர்: மக்கள் செய்யும் செயலும் பிறவும் தங்கள் வாழ்வின் முன்னேற்றத்தைக் கருதியனவாகவே இருத்தல் கூடாது. பிறர் நலம் கருதியனவாகவே இருத்தல் வேண்டும். பிறர் நலமுற்று வாழ்வதால் தாமும் நலம் பெறமுடியும். பிறர் நலமுறத் தக்க செயல்களைச் செய்வதால் தாங்கள் துன்பமுற நேர்ந்தாலும் அத்துன்பத்தைப் பாராட்டாமல் பிறர் நலம் கருதி உழைத்தலே மக்கட் பண்பாகும். அத்தகையவர் 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' என்று போற்றப்படுவர்.

இம்பாடலின் கருத்தைப் 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அஃதின்றேல், மண்புக்கு மாய்வது மன்' என்று வள்ளுவர் கூறிய குறட் பாட்டின் கருத்தோடு ஒப்பு நோக்கி இன்புறுக.

திணையும் துறையும்: இச்செய்யுள் **பொதுவியல்** என்ற திணையும், **பொருள் மொழிக்காஞ்சி** என்ற துறையும் அமைந்ததாம். **பொதுவியல்:** புறப்பொருள் **வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்** என ஏழுதிணைகளாகப் பகுக்கப்படும். அவ்வேழு திணைகளுக்கும் பொதுவாகிய இலக்கணங்களைத் தொகுத்துக் கூறுவது பொதுவியலாம்.

பொருள் மொழிக்காஞ்சி: முனிவர் உயிருக்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை தரத் தக்க பொருள்களைத் தெளிவாக வகுத்துக் கூறுதல்.

இலக்கணம்: இலர், கொள்ளலர் என வருவன முற்றெச்சங்கள்; முனிவு, துஞ்சல், அயர்வு-தொழிற்பெயர்கள். உயிரும்-உம்மை

உயர்வு சிறப்பு. பெறினும் என்பதில் உள்ள **உம்மை** பெற முடியாமையை விளக்கி நின்றமையால் எதிர்மறை **உம்மை**, முயலா— **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.**

நோன்றாள்: நோன்மை + தாள்: 'ஈறுபோதல்' என்ற பண்புப் புணர்ச்சி விதியால் 'மை' கெட்டது. நோன் + தாள்: னல் முன்றனவும்' என்ற விதியால் 'ன்' என்ற எழுத்தை ஈற்றிலுடைய சொல்லுக்கு முன் தகர முதன் மொழி வரும்போது தகரம் றகரமாகத் திரிந்தது.

3. தாய் தந்தை முதலியோர் கடமைகள்.

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே ;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

பதவுரை

ஈன்று - குழந்தையைப்பெற்று
புறந்தருதல் - காப்பாற்றுதல்
என் தலைக் கடனே - தாயாகிய என்னுடைய முதற்கடமையாம் ;
சான்றோன் ஆக்குதல் - அக்குழந்தையைக் கல்வியறிவுடைய பெரியோனாகச் செய்வது
தந்தைக்குக்கடனே - தந்தையின் கடமையாம்;
வேல் வடித்துக் கொடுத்தல் - வேலாயுதத்தைக் கூர்மையாகச் செய்து தருதல்
கொல்லற்குக் கடனே - கருமானது கடமையாம் ;
நல் நடை நல்கல்-சிறந்த ஒழுக்கத்தை அளித்தல்
வேந்தற்குக் கடனே - அரசனுக்குரிய கடமையாம் ;
ஒளிறுவாள் - ஒளி வீசுகின்ற வாளாயுதத்தைக் கொண்டு
அருஞ்சமம் முருக்கி - கொடிய போர்க்களத்தில் பகைவரை அழித்து
களிறு எறிந்து பெயர்தல் - வலிய ஆண் யானையைக் கொன்று மீளுதல்
காளைக்குக் கடனே - காளை போன்ற வீரனாகிய என் மகனுக்குக் கடமையாம்.

கருத்து: குழந்தையைப் பெற்றுக் காத்தல் தாயின் கடமை; அவனை அறிவுடையவனாகச் செய்தல் தந்தையின் கடமை ; வேலைக் கூர்மை செய்து கொடுத்தல் கருமான் கடமை;

சிறந்த ஒழுக்கமுடையவனகச் செய்தல் அரசன் கடமை; போர்க்களத்தில் பகைவரை வாளாயுத்தால் கொன்று குவித்து வலிய ஆண்யானையைக் கொன்று திரும்புதல் அந்த வீர மகனின் கடமையாம்.

விளக்கம்

ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே: நாட்டின் நலத்திற்கெனக் குழந்தைகளைப் பெறுதல் அந்நாட்டுக் குடிமக்கள் கடமைகளுள் ஒன்ருகும். தற்காலத்திலும் இரஷ்யா போன்ற நாடுகளில் தாய்மார்கள் குழந்தை பெறுதலை நாட்டுச் சேவையாகக் கருதுகின்றன ரன்ருே? அத்தகைய தாயருக்கு அரசாங்கமும் பட்டமும் பரிசும் அளித்துப் பாராட்டுகின்றது அன்ருே!

குழந்தையைப் பெறுதல் மட்டும் தாயின் கடமையன்று; பெற்ற குழந்தையைத் தக்க வழியில் போற்றி வளர்த்தலும் தாயின் கடமையாம். ஒரு பெண் இல்வாழ்விலும், பொது வாழ்விலும் செய்ய வேண்டிய கடமைகள் பலவாயிருப்பினும் இக்கடமையே அவள் முதற் கடமையாகப் பண்டைக்காலத்தில் கருதப்பட்டு வந்தது என்பது இதனல் விளங்கும்.

என் தலைக் கடனே என்றமையால் இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் ஒரு பெண்பாற்புலவர் என ஊகிக்க முடிகின்றது.

சான்ருேனக்குதல் தந்தைக்குக் கடனே: சான்ருேன் - கல்வி அறிவு ஒழுக்கங்கள் நிறைந்தவன். தன் மகனைத் தன்னுடைய பழக்க வழக்கங்களாலும், ஒழுக்க முறைகளாலும் நல்லவனக வளர்த்து உரிய வயதில் கல்வி கேள்விகளில் வல்லவனகச் செய்ய வேண்டியது தந்தையின் சிறந்த கடமையாம்.

> "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
> முந்தி யிருப்பச் செயல்"

என்று திருவள்ளுவர் கூறியதும் காண்க. முந்தியிருப்பச் செயலாவது சான்ருேனக்குதலேயாம்.

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே: ஆண் மக்கள் காளைப் பருவத்தில் எத்தகையவர்களோடு கூட்டுறவு கொள்கின்றனரோ அத்தகைய பழக்க வழக்கங்களையே உடையவராவர். நல்லவராதலும், தீயவராதலும் அப்பருவத்திலேயாம். ஒரு நாட்டில் அரசனுடைய ஆட்சி முறையாக நடந்தால் அங்குக் கொலை, களவு போன்றன செய்யும் கொடியவர்களும், சிற்றினத்தாரு

மாகிய கீழ் மக்களும் இரார். அத்தகையவர் இல்லையாகவே வளரும் வாலிபர்கள் நன்மக்களாகவே - நல்லொழுக்கமுடையவர்களாகவே - வளர்தல் கூடும். ஆகவே மக்களின் நல்லொழுக்கத்திற்கு அரசனின் நல்லாட்சியே காரணமாயமைதலின் நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே என்று கூறினர்.

வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே

இதனால், பண்டைக்காலத் தமிழர்கள் வீரத்தையே பெரிதென மதித்தனர். போருக்குரிய பயிற்சியையே பயிற்சிகளில் சிறந்ததெனக் கருதினர். அதனாலே ஒவ்வொரு சிற்றூரிலும் கொல்லர் முதலியவர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய கடமைகளில் எல்லாம் பெரியது நாட்டுச் சேவைக்கு உதவும் போர்க் கருவிகளைச் செய்து தருதலேயாம். தன் மகன் களிறெறிந்து பெயரும் வீரனைத் திகழ்தல் வேண்டும் என்று விரும்பும் வீரத்தாய், வீரனுக்குரிய சிறந்த போர்க்கருவியைச் செய்து தருதல் கொல்லன் கடன் என்று கூறினர்.

களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

பகைவரைப் போர்க்களத்தில் கொன்று குவித்து நாட்டைக் காப்பது நாட்டில் பிறந்த நன்மக்களின் - வாலிபர்களின் - கடமையாம். பண்டைக் காலத்தில் யானையைக் கொல்லல் வீரச் செயல்களில் மிகவும் பெரியதாக மதிக்கப்பட்டு வந்தது. தன் மகன் அத்தகைய ஒப்பற்ற வீரனைத் திகழ்தல் வேண்டும் என்று அத்தாய் விரும்புகின்றாள்.

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

என்று ஒரு சிறந்த வீரனின் இயல்பை வள்ளுவர் கூறியது காண்க. இத்தகைய வீரர்கள் பலர் இருந்தமையாலே பண்டைக்காலத்தில் தமிழ்நாடு யாருக்கும் அடிமைப்பட்ட நாடாக இருந்ததில்லை, என்ற உண்மையும் இங்கு உணரத்தக்கது.

இச்செய்யுளில் ஒரு மகன் சிறந்த வீரனை ஆதற்கு அடிப்படையானவை எவை என்பதையும் குறிப்பாகக் கூறியுள்ளார் ஆசிரியர். உடல் வலிமை, அறிவு வலிமை, படைக்கலம், கட்டுப்பாடான வாழ்க்கை ஆகிய நான்கும் வீரனுக்கு இன்றியமையாதனவாம். இந்நான்கும் குழந்தைப் பருவத்திலிருந்தே படிப்படியாக வளரவேண்டும். இந்நான்கு பண்புகளையும் வளர்க்கும்

பொறுப்பைத் தாயும, தந்தையும், கொல்லனும் அரசனும் ஏற்று வளர்த்தல் வேண்டும் என்ற உண்மையை ஆசிரியர் இச் செய்யுளில்விளக்கிக் கூறியுள்ளார்.

இதனல் ஆசிரியர் எத்தகைய வீரவுள்ளம் வாய்ந்த தாயாக விளங்கினர் எனற உண்மை விளங்கும்.

திணை : **வாகை.** வாகையாவது பகைவரை வென்று வெற்றி மாலை சூடி ஆரவாரித்தல். வாகை ஒருவகைப் பூ. போரில் வென்றவர் வாகைப்பூமாலையைச் சூட்டிக்கொளவது பண்டைய வழக்கமாதலால் இது வாகை எனப்பட்டது.

துறை : மூதின் முல்லை - சிறந்த வீரர்களுக்கே யன்றி வீரக் குடியில் பிறந்த பெண்களுக்கும் **வீரம்** உண்டெனக் கூறுதல். இச்செய்யுளில் **வீரத்தா**யின் வீர உள்ளம் நன்கு விளங்குவதால் இது மூதின் முல்லை என்ற துறையின் பாற்படும்.

இலக்கணம் : ஈன்று — **இறந்தகால வினையெச்சம்** :ஈன்- பகுதி ற்—இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி.

புறந்தருதல் - **தொழிற்பெயர். புறந்தா - பகுதி.** வடித்து—வினையெச்சம்; வடி - பகுதி. நன்னடை—**பண்புத்தொகை.** ஒளிறு வாள் - **வினைத்தொகை.** அருமை+சமம்=அருஞ்சமம்; **பண்புத் தொகை.**

முருக்கி-வினையெச்சம்; முருக்கு-பகுதி. காளை காளைபோன்ற வீரனைக் குறித்தமையால் **உவமையாகு** பெயர். (காளை —எருது.)

என்றலை ; என் + தலை 'னல முன்றனவும் ணள முன் டணவும், ஆகும் தநக்கள் ஆயுங்காலே' என்ற விதியால் னகர ஈற்று நிலைமொழிக்கு முன், தகர முதன் மொழிவர, தகரம் றகரமாகத்திரிந்தது.

நன்னடை : நன்மை+நடை, 'ஈறுபோதல்' என்ற பண்புப் புணர்ச்சி விதியால் மை விகுதிகெட்டது. நன் + நடை, னலமுன்றனவும், என்ற முன்கூறிய விதியால் னகர ஈற்றுச்சொல்லுக்கு முன், நகர முதன் மொழிவர நகரம் னகரமாகத் திரிந்தது.

களிறெறிந்து : களிறு+எறிந்து. 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்ற விதியால் றுவில் உள்ள உகரம் செல்ல 'ற்', மட்டும் நின்றது. 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவதியல்பே' என்ற விதியால் வருமொழி உகரம் சேர்ந்து'ற்' 'ற' ஆகியது.

II. இடைக்காலச் செய்யுள்

(முற்பகுதி)

சிலப்பதிகாரம்

சிலம்பு+அதிகாரம் : அதிகாரம் - அதிகரித்தல் (முதன்மை யாகக் கொள்ளுதல்). சிலம்பினது செய்திகளை முதன்மையாகக் கொண்ட நூல் என்பதே பொருள். **ஆறும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.** சிலம்புஎன்னும் நிலைமொழி மென்றொடர்க் குற்றியலு கரம் வேற்றுமைப் புணர்ச்சியில் **சிலப்பு** என வன்றொட ராயிற்று.

பெயர்க்காரணம் : கண்ணகியின் காலணிகளில் ஒன்றைக் கோவலன் மதுரையில் விற்கத் தொடங்குகையில் பொற் கொல்லனது பொய் மொழி கேட்ட பாண்டிய மன்னனால் முறை யின்றிக் கொல்லப்பட்டான். இதனையறிந்த கண்ணகி தனது மற்றைச் சிலம்பினால் கோவலன் குற்றமற்றவனென்றும் அவ னைக் கொன்றது முறையன்று என்றும் பாண்டியனிடம் வழக் குரைத்தாள். இவ்வாறு சிலம்பின் காரணமாக விளைந்த, கண் ணகி கோவலன் வரலாறுகளை விவரித்துச் சொல்வதால் இந்நூல் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது.

நூலின் வேறு பெயர்கள் : இந்நூல் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் கலந்து வருமாறு இயற்றப் பெற்றதால் **முத்தமிழ்க் காப்பியம்** என்றும், உரைநடையும் இசைப்பாட்டும் இடையிடையே விரவி வரப் பெற்றுள்ளமையால் **உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்** என்றும் பெயர் பெறும்.

நூலின் வகை : முதன் முதலில் தமிழில்தான் இயற்றப் பட்டமையால் இது **முதல் நூலாகும்.** சிறு காப்பியம், பெருங் காப்பியம் என்ற வகையில் இந்நூல் பெருங்காப்பியமாம். ஐம் பெருங் காப்பியங்களில் இந்நூலும் ஒன்றாகும். மற்றையவை மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன வாம்.

அறிவிக்கும் நீதிகள் : 1. நீதி தவறிய மன்னனை அறக் கடவுள் கூற்றாய் நின்று கொல்லும் என்பதும், 2. கற்பிற் சிறந்த பத்தினியை மன்னவரே யன்றி விண்ணவரும் துதித்தல்

முதல் வழிநூல்களைச் சிறிது தழுவியது சார்புநூல்

இயல்பு என்பதும், 3. முன்பு செய்த இருவினைகளும் செய்த முறையே செய்தவர்களைத் தேடிவந்து பயனைத்தரும் என்பதும் இந்நூலால் நாம் அறியும் மூன்று நீதிகளாம்.

பெருமை : இந்நூல் சொல்லின்பம் பொருளின்பங்களிற் சிறந்தது. பண்டைக்கால மக்களின் நாகரிகம் முதலியவற்றை இக்கால மக்கள் எளிதில் உணர்ந்துகொள்வதற்குக் கருவியாக உள்ளது. பாரதியாரும் **'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனும் மணியாரம்'** என இதனைப் புகழ்ந்துள்ளார்.

பிரிவுகள் : இது புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்று மூன்று பெரும் பிரிவுகளையும், மங்கல வாழ்த்துப்பாடல் முதல் வரந்தரு காதை ஈறாக முப்பது சிறு பிரிவுகளையும் கொண்டது.

உரையாசிரியர்: இந்நூலுக்கு அரும்பத உரை ஒன்று உள்ளது. அதன் ஆசிரியரின் பெயர் முதலியன விளங்கவில்லை. அவரது உரையை அடிப்படையாகக் கொண்டு அடியார்க்கு நல்லார் என்ற புலவர் விரிவான சிறந்த உரை இயற்றியுள்ளார். ஆனால் அவரது உரை முற்றும் கிடைக்கவில்லை.

நூலாசிரியர் வரலாறு :

ஆசிரியர் : இளங்கோவடிகள்.

பெயர்க்காரணம் : இவர் சேர மன்னன் செங்குட்டுவன் தம்பியாதலால் இளங்கோ என வழங்கப் பெற்றார். பின்னர் சமண மதத்தில் சேர்ந்து துறவு பூண்டமையின் இளங்கோவடிகள் என அழைக்கப் பெற்றார்.

ஊர் : வஞ்சிமாநகர்.

பெற்றோர் : தந்தை - **சேரலாதன்.** தாய் - **நற்சோணை.**

சமயம் : சைனம்.

காலம் : சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெடுத்து வழிபட்டபொழுது இலங்கையரசன் முதற்கயவாகு வந்திருந்தான் என இந்நூல் கூறும். அம் மன்னனது காலம் கி. பி. 123 என இலங்கைச் சரிதமாகிய மகாவம்சம் கூறும். எனவே செங்குட்டுவனது உடன் பிறந்தவராம் இளங்கோவும் அக்காலத்தவர் என்பது தெளிவுறும். **(கி. பி. இரண்டாம் நூற்றாண்டு)**

சமகாலப் புலவர்: சீத்தலைச் சாத்தனார், கபிலர், பரணர் முதலியவர்கள்.

நூலியற்றக் காரணம்: ஒரு சமயம் சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணும்பொருட்டு மனைவி வேண்மாளுடனும், தம்பி இளங்கோவுடனும், மதுரையிலிருந்து வந்திருந்த சீத்தலைச் சாத்தனாருடனும் பேராற்றங்கரையில் தங்கியிருந்தான். அவ் வமயம் வேட்டுவர்கள் கையுறைகளுடன் வந்து வேந்தனை வணங்கி, ஒரு நங்கை விமானமொன்றில் விண்ணிற் சென்றதைத் தாம் கண்ணாரக் கண்டதாகக் கூறினர். அது கேட்ட மன்னவன் வியந்தனன். அருகிலிருந்த சீத்தலைச் சாத்தனார் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி மதுரையை எரித்தது முதலிய தாம் கண்டறிந்த செய்திகளை விளக்கிக் கூறினர். அவற்றைக் கேட்ட இளங்கோவடிகள் கோவலன், கண்ணகி ஆகியவரின் வரலாறுகளை அமைத்துச் சிலப்பதிகாரத்தை இயற்றினர்.

பெருமை: அரசச் செல்வத்தைப் பெறுந் தகுதி தமக் குண்டு என்று நிமித்திகனால் அறிந்தபோது தம் உடன் பிறந்தோன் மனம் நோவா வண்ணம் அதனை வெறுத்துத் துறவு பூண்டார் இளங்கோ; தாம் சேரர் குலத்துப் பிறந்தவ ராயினும் முடியுடை மூவேந்தரையும் ஏற்றத் தாழ்வின்றிப் புகழ்ந்துள்ளார்; இடத்துக்கேற்றவாறு பிற சமயக் கடவு ளரையும் உயர்த்திக் கூறியிருக்கின்றார். இவற்றால் இவரது பரந்த நோக்கம் விளங்கும். இயற்கைக் காட்சிகள், வரலாற்று நிகழ்ச்சிகள் முதலியவற்றைக் கூறுவதில் இவர்க்கு நிகரானவ ரில்லை. இதுபற்றியே பாரதியாரும் 'யாமறிந்த புலவரிலே இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று சிறப்பித்துள்ளார்.

கனாத்திறம் உரைத்த காதை

கனாத்திறம் உரைத்த காதை: கண்ணகி தான் கண்ட கன வைத் தேவந்தி என்னும் பார்ப்பனத் தோழியிடம் உரைத்த காதை. (காதை=பாட்டு; தற்பவ வட சொல்) "கதை உடை யது காதை."

கதைச் சுருக்கம்

[கோவலன் கண்ணகியை மணந்த பின்னர், தன் காதலி யைப் பிரிந்து மாதவியோடு கூடி இன்புற்று வாழ்ந்து வந்தான். அவ்வமயம் கண்ணகி கணவனது பிரிவாற்றாது மிகவும் வருந்

தினள். கண்ணகிக்குத் தேவந்தி என்னும் தோழி இருந்தாள். அவள் அவ்வப்பொழுது வந்து கண்ணகியைத் தேற்றினள்].

தேவந்தி வரலாறு: முன்னொரு காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் மாலதி யென்னும் பெயருடைய பார்ப்பன மங்கை யொருத்தி யிருந்தாள். அவள் பிள்ளைப் பேறு இன்றி இருந்தமையால் அவள் கணவன் மற்றொரு மங்கையை மணந்து இன்புற்றிருந்தான். அவளுக்கு ஆண்மகவொன்று பிறந்தது. ஒரு நாள், தாயார் வெளியே சென்றிருந்தபொழுது அம் மகவு பசி பொறுக்கமாட்டாமல் அழுவதைப் பார்த்து மனம்பொறுத மாலதி அதனை எடுத்துப் பாலூட்டினாள். பால் தொண்டையில் விக்கிப் பாலகன் இறந்தனன். அது கண்ட மாலதி வருந்தி, "இப் பிள்ளையை யான் கொன்று விட்டேன்" என்று இதன் தாய் என் மீது பழி சுமத்துவாளே! பால் கொடுக்கப்போய்ப் பாழாய் முடிந்ததே! ஐயோ தெய்வமே! இதற்கு நான் என் செய்வேன்?" என்று புலம்பிக் கோயில் கண்ட இடமெல்லாம் பிள்ளையைக் கொண்டு அலைந்து திரிந்தாள். இவ்வாறு கோயில் தோறும் சென்று கும்பிட்டும் ஒரு தெய்வமும் மனமிரங்கி மனக் கவலையை மாற்றவில்லை. கடைசியாக அவள் சாத்தன் கோட்டம் சென்று வணங்கி வரம் கிடக்கவே, அந்நள்ளிரவில் அருகேயிருந்த சுடுகாட்டுக் கோட்டத்தில் பிணந் தின்ன வந்த ஒரு பேய் மாலதியின் மேல் இரக்கம் கொள்வதுபோல் நடித்து அவளைப் பார்த்து, "பெண்ணே! முன் பிறப்பில் தவஞ் செய்யாதவர்க்கு இப் பிறப்பில் தெய்வங்கள் வரங் கொடுக்கமாட்டா. இஃது உண்மை; ஆதலால் உன் கையிலுள்ள பிள்ளையை என்னிடம் தா" என்று இழுத்துப் பறித்து விழுங்கி விட்டது.

இதைக் கண்ட மாலதி வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற்போல மனம் நைந்து, இடியோசை கேட்ட மயில் போல் ஏங்கி யழுதாள். அவ்வழுகையைக் கண்ட சாத்தன் மனமிரங்கி "அன்னையே அழவேண்டா. நீ போகும் வழியில் பிள்ளையை உயிரோடு கண்டு மகிழ்வாய்" என்று சொல்லி மறைந்து தானே ஒரு பாலன் வடிவுகொண்டு, அவள் செல்லும் வழியில் ஒரு சோலையிற் கிடந்தருளினன். அப் பிள்ளையைக் கண்ட மாலதி அகமகிழ்ந்து அது மாயப் பிள்ளை என்பதறியாது கட்டியணைத்து முத்தமிட்டு விரைந்து எடுத்துச் சென்று அதன் தாய் கையில் கொடுத்தாள்.

இவ்வாறு வந்த சாத்தனும் அவ் வந்தணனுக்கு மைந்தனாகிக் கற்க வேண்டிய நூல்களைக் கற்று மேம்பட்டு வரும்

நாளில் தந்தை இறக்கவே ஈமக் கடனாற்றி உரிய காலத்தில் தேவந்தி என்னும் பெண்ணை மணம் புரிந்து எட்டாண்டு இல்லறம் நடத்தி வாழ்ந்துவரும் நாளில் ஒரு நாள் சாத்தன் தன் மனைவியின் முன்பு தனது தெய்வ நலத்தைக் காட்டி "நீ என் கோட்டத்துக்கு வா" என்று கூறி மறைந்தான். மணாளனது பிரிவைக் கண்டு மனங் கலங்கிய் தேவந்தி அவனைப் பிரிய மனமின்றிச் சாத்தன் கோட்டம் சார்ந்து அவனை வழிபாடு செய்து வந்தாள்.

தேவந்தி தன்னைப்போல் கண்ணகியும் தன் காதலனைப் பிரிந்து தவிக்கின்றாள் என்று உணர்ந்து தான் வழிபடு கோட்டத்திற் சென்று வழிபட்டுக் கண்ணகியும் தன் காதலனைப் பெற வேண்டுமென்று வணங்கிப் பின்பு கண்ணகியிடம் சென்று "நீ உன் கணவனை விரைவில் கண்டு மகிழ்வாய்" என்று ஆசி கூறினள்.

கண்ணகி கண்ட கனா: அது கேட்ட கண்ணகி தேவந்தியை வணங்கி "அம்மையே, நீ இவ்வாறு சொல்வதால் நான் என் காதலனைப் பெறுவேன் என்பதில் ஐயமில்லை. ஆயினும், நேற்றிரவில் சிறிது கண்ணயர்ந்திருக்கையில் கனவொன்று கண்டேன். அக் கனவை நினைப்பதற்கே இப்பொழுது நடுங்குகின்றேன். என் காதலனும் நானும் ஒரு பெரிய நகரத்திற்குச் செல்வது போலவும், அங்கு என் காதலன் மீது வஞ்சமான பழி சூழ்த்தப்பட்டது போலவும், நான் அவ்வூரரசனிடம் சென்று முறையிட்டதுபோலவும், அவ்வரசனுக்கும், அந்நகரத்திற்கும் அதனால் தீங்கு விளைந்தது போலவும் ஒரு தீக்கனவு கண்டேன். இவ்வாறு தீவினையுற்ற என் காதலனோடு பின்பு நான் பெற்ற நலங்களைக் கேட்டால் நகைப்பாய்" என்று கூறினாள்.

இவ்வாறு தீக்கனவைக் கண்டு திகைத்து வருந்திய கண்ணகியைத் தேவந்தி பலவாறு தேற்றி அவளைப் பார்த்து, "பெண்மணி, முற்பிறப்பில் உன் கணவன் பொருட்டு ஒரு நோன்பு செய்யத் தவறிவிட்டாய்; அதனாலேயே உனக்கு இத்தகைய தீங்குகள் நேர்ந்தன; முற்பிறப்பில் நேர்ந்த குறையை இப்பிறப்பில் நிறை செய்து விடலாம். காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தருகே சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் பெயருடைய இரண்டு பொய்கைகள் இருக்கின்றன. அவற்றில் நீராடி அண்மையிலுள்ள காமன் கோட்டத்தில் சென்று தொழுதால், இப்பிறப்பில் எப்பொழுதும் கணவனைப் பிரியாத பெரு

வாழ்வு பெறுவதோடு, மறுபிறப்பிலும் போக நாட்டில் பிறந்து காதலனோடு களித்து மகிழ்ந்து வாழலாம். அப்பொய்கை யிடத்திற்கு நாமும் போவோம்'' என்று கண்ணகியை அழைத்தாள். அதற்குக் கண்ணகி இணங்காமல் அவ்வாறு துறை முழுகித் தெய்வம் தொழுவது தன் மரபிற்கும் நிலைமைக்கும் தகாதென்று எடுத்துரைத்தாள்.

கோவலன் வருகை: அச்சமயம் கோவலன் மாதவியினிடம் மனம் வேறுபட்டுக் கண்ணகியை அடைந்தான். மனைவியின் துயர் நிலையைக் கண்டு அவன் 'பொய் யொழுக்கமுடைய மாதவியுடன் கூடி முன்னோர் தேடிய பொருளனைத்தும் தோற்று வறுமையடைந்தது வெட்கத்தைத் தருகிறது' என்று கூறினன். கண்ணகி மாதவிக்கு மேலும் பொருள்தர முடியாதவாறு தான் வறுமையடைந்தது நோக்கி வெட்க முறுவதாகக் கருதித் தன் சிலம்புகளை ஏற்குமாறு கூறினள். கோவலன் மதுரைமா நகர் சென்று சிலம்பை விற்று இழந்த பொருளைத் தேடுவதாகவும், விடியுமுன் இருவரும் புறப்படலாமெனவும் கூறினன்.

மாலையும் மகளிரும்

அகனகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த
மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
கோலம் கொடியிடையார் தாங்கொள்ள

பதவுரை

கொடியிடையார்-கொடிபோன்ற இடையினையுடைய பெண்கள்
பகல் மாய்ந்த மாலை - சூரியன் மறைந்த மாலை நேரத்தில்
அகல் நகர் எல்லாம் — தம் அகன்ற வீடுகளில் எல்லாம்
அரும்பு அவிழ் - அரும்பு மலர்ந்த
முல்லை நிகர் மலர் - முல்லையாகிய ஒளிமிக்க மலர்களை
நெல்லொடு தூஉய்-நெல்லோடு கலந்து தூவி
மணி விளக்கம் காட்டி -அழகிய விளக்கை ஏற்றி
இரவிற்கு ஓர் கோலம் - இரவுப் பொழுதுக் கேற்ற ஒப்பற்ற அழகிய கோலங்களை
தாம்கொள்ள - தாங்கள் மேற்கொள்ள

கருத்து : சூரியன் மறையும் மாலை நேரத்தில் பெண்கள் தம் வீடுகளில் முல்லை மலரும் நெல்லும் கலந்து தூவி, விளக்கேற்றி இரவுக்குரிய கோலங்களைச் செய்து கொள்ளத் தொடங்கினர்.

விளக்கம்

அகநகர் எனக்கொண்டு காவிரிப்பூம் பட்டினத்தின் அகநக ராக (உள்நகராக) விளங்கிய பட்டினப்பாக்கம் என்றும் பொருள் கொள்ளலாம்.

பகல் என்பது ஆகுபெயராய்ப் பகலைச்செய்கின்ற சூரியனைக் குறித்தது. மாய்தல்—மறைதல்.

மணி விளக்கம் : இதற்கு மாணிக்க விளக்கு என்றும், மை விளக்கு என்றும் பொருள் கூறுவர் அடியார்க்கு நல்லார். அங் ஙனமாயின் மணியும் விளக்கமும என விரித்து உம்மைத் தொகை யாகக் கொள்க.

அரும்பு அவிழ்... தூய் : முல்லை மலரும் நெல்லும் தூவி மாலைக் காலத்தில் மகளிர் தம் மனையுறை தெய்வத்தை வணங்கு வது வழக்கம்.

இரவிற்கோர் கோலம் தாம் கொள்ள : பகற் காலத்தில் மகளிர் அணிந்திருந்த மணி, பூண், மாலை முதலிய அணிகலன் களை நீக்கி இரவிற்கேற்ற மென்மையான ஆடை அணிகளை அணிந்தனர் என்பதாம். இதனால் அவர்களுடைய செல்வச் சிறப்பு விளங்கும்.

இலக்கணம் : அகல் நகர், அவிழ் முல்லை, **வினைத்தொகை கள்;** (அகல், அவிழ் என்ற பகுதிகள் நகர், முல்லை என்ற பெயரை அடுத்துவந்தமை காண்க.) தூஉய்: தூவி என்ற சொல் திரிந்து அளபெடுத்தமையின் **சொல்லிசையளபெடை.** பகல்: பகற்பொழுது உண்டாதற்குக் காரணம் சூரியன். சூரியன் கார ணம். பகல் காரியம். பகல் என்ற காரியப் பெயர் அதன் காரணமாக உள்ள சூரியனைக் குறித்துவந்தமையால் **காரிய ஆகு பெயர்.** இரவிற்கு + ஓர் = இரவிற்கோர். (குற்றியலுகரப் புணர்ச்சி) கொடியிடையார் — கொடிபோன்ற இடையார் என விரியும்; **உவமத்தொகை.**

தேவந்தி வரலாறு

மாலதி மாற்ருள் குழந்தைக்குப் பால்கொடுக்கப் பால் விக்கிக் குழந்தை இறத்தல்

மேலோர்நாள்

மாலதி மாற்ருள் மகவுக்குப் பாலளிக்கப்
பால்விக்கிப் பாலகன் ருன்சோர

பதவுரை

மேலோர் நாள்-முன்னெருநாள்
மாலதி - மாலதி என்ற பெயருடையாள் ஒருத்தி
மாற்ருள் மகவுக்கு - தன்னுடைய மாற்ருள் (சக்களத்தி) குழந்தைக்கு
பால் அளிக்க - பாலூட்ட
பால் விக்கி - அப் பாலானது விக்குதலினுல்
பாலகன்தான் சோர - அக் குழந்தை இறக்க

கருத்து: முன்னெரு நாளில் மாலதி என்பவள் தன் மாற்ருள் குழந்தைக்குப் பாலூட்டும்போது பால் விக்கி அக் குழந்தை இறந்தது.

விளக்கம்

மாற்ருள்: ஒருவன் பல பெண்களைத் திருமணம் செய்து கொண்டிருந்தால் ஒருத்திக்கு மற்றெருத்தி மாற்றவள் ஆவாள். (சக்களத்தி என்பது உலக வழக்கு)

மாற்றவள் இல்லாத சமயத்தில் அவள் குழந்தை அழவே மாலதி அக்குழந்தைக்குப் பாலூட்டினுள். அக்குழந்தை பால் புரைக்கேறி இறந்துவிட்டது.

சோர என்பது இங்கு இறக்க என்ற பொருளில் வந்துள்ளது.

இலக்கணம்: மாற்ருள் + மகவுக்கு = மாற்ருண் மகவுக்கு: "ளள வேற்றுமையில் மெலிவரின் னணவும்" என்ற விதியால் ள் என்ற எழுத்தை ஈற்றிலுடைய சொல்லுக்கு முன் ம என்ற மெல்லின முதன்மொழி வரவே நிலைமொழி 'ள்' 'ண்' ஆகத் திரிந்தது. பாலகன் + தான் = பாலகன்ருன். சோர—வினையெச்சம்.

மாலதி அடைந்த துன்பம்

மாலதியும்

பார்ப்பா னெடுமனையாள் என்மேற் படாதனவிட்(டு)
ஏற்பன கூருரென் றேங்கி மகக்கொண்டு

பதவுரை

மாலதியும் - மாலதி என்ற அம்மங்கையும்
பார்ப்பானெடு - தன் கணவ்னை அந்தணனுடன்
மனையாள் - அவன் மனைவியாகிய தன்மாற்ருளும்
படாதன - பொருந்தாத பழிமொழிகளை

விட்டு - கூறுதலை விட்டுவிட்டு
ஏற்பன கூறார் - பொருத்த
மான மொழிகளைக் கூறமாட்
டார்களே!

என்று ஏங்கி - என்று மனம்
வருந்தி
மகக்கொண்டு - இறந்த குழந்
தையை எடுத்துக்கொண்டு

கருத்து: மாலதி குழந்தை இறந்தவுடன் ஐயோ என் கண வரும், என் மாற்றாளும் என்மேல் ஆடாப் பழி கூறுவரே என் செய்வேன் என்று வருந்திக் குழந்தையை எடுத்துக்கொண்டு சென்றனள்.

விளக்கம்

படாதனவிட்டு ஏற்பன கூறார்: குழந்தை எதிர்பாராத வகையில் இறந்துவிட்டது. என்றாலும் மாற்றாள் குழந்தை யாதின் பொறுமையால் வேண்டுமென்றே கொன்றுவிட்டாள் என்று தன் கணவனும் மாற்றாளும் வீண் பழி சுமத்திப் பேசுவரே ஒழிய உண்மை உணர்ந்து கூறார் என்று மாலதி வருந்தினள்.

படுதல்—பொருந்துதல். படாதன—பொருந்தாதன, பழி மொழிகள். ஆடாப் பழி என்க.

இலக்கணம்: மாலதியும்—**இறந்தது தழுவிய எச்ச உம்மை.** இழிவு சிறப்பும்மை என்றும் கூறுவர். பார்ப்பானொடு மனையாள்:ஒடு- பார்ப்பானும் மனையாளும் என்று எண்ணுப் பொருளில் வந்தது. படாதன—எதிர்மறைப் பலவின்பால் வினையாலணையும் பெயர்.

மக+கொண்டு=மகக்கொண்டு. மக என்ற அகர ஈற்றுச் சொல்லே பண்டு இளமைப் பொருளை உணர்த்தி வந்தது. 'இயல் பினும் விதியினும் நின்ற உயிர்முன் வலிமிகும்' என்ற விதியால் வல்லினம் மிக்கது.

மாலதி தெய்வங்களிடம் முறையிடல்

அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம்,
புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம், பகல்வாயில்
உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம்
வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம்,
நிக்கந்தக் கோட்டம், நிலாக்கோட்டம் புக்கெங்கும்
"தேவிர்காள்! எம்முறுநோய் தீர்ம்"என்று மேவி ஓர்
பாசாண்டச் சாத்தற்குப் பாடுகிடந் தாளுக்கு

பதவுரை

அமரர் தரு கோட்டம் - தேவர் தரு நிற்கும் கோயிலும்
வெள் யானை கோட்டம்-வெண்மையான ஐராவதம் என்ற யானை நிற்கும் கோயிலும்
புகர்வெள்ளை நாகர்தம் - அழகினையுடைய பல தேவருடைய
கோட்டம் - கோயிலும்
பகல் வாயில் - கிழ்த்திசையில் தோன்றுகின்ற
உச்சிக்கிழான் - சூரியனுடைய
கோட்டம் - கோயிலும்
ஊர்க் கோட்டம் - சிவபிரான் வசிக்கும் இடமாகிய கைலாயம் நிற்கும் கோயிலும்
வேல் கோட்டம் - வேலாயுதத்தையுடைய முருகன் கோயிலும்
வச்சிரக் கோட்டம் - இந்திரனுடைய படையாகிய வச்சிராயுதம் நிற்கும் கோயிலும்
புறம்பணையான் -சாதவாகனன் (ஐயனார்)
வாழ்கோட்டம் - வசிக்கும் கோயிலும்
நிக்கந்தக் கோட்டம் - அருகன் கோயிலும்
நிலாக் கோட்டம் - சந்திரன் கோயிலும்
எங்கும் புக்கு - ஆகிய எல்லா இடங்களிலும் சென்று
தேவிர்காள் - தெய்வங்களே!
எம் உறுநோய் - எம்முடைய மிக்க துன்பத்தை
தீர்ம் என்று - நீக்குவீர்களாக என்று வேண்டி
ஓர் பாசண்டச் சாத்தற்கு - (அத்தெய்வங்கள் அவள் துன்பத்தைப் போக்காமையின் அவ்விடங்களை விட்டுச் சென்று) ஒப்பற்ற பாசண்டச் சாத்தன் என்ற தெய்வத்தை
மேவி - அடைந்து
பாடு கிடந்தாளுக்கு - வரம் வேண்டிக் கிடந்தவளாகிய மாலதியை

கருத்து: மாலதி குழந்தையை எடுத்துகொண்டு சென்று தேவதரு, ஐராவதம், பலதேவர், சூரியன், கயிலாயம், முருகன், வச்சிராயுதம், சாதவாகனன், அருகன், சந்திரன் முதலிய தெய்வங்கள் வசிக்கும் கோயில்களை அடைந்து தன் துன்பத்தைத் தீர்க்குமாறு முறையிட்டாள். அத்தெய்வங்கள் அவள் துன்பத்தைத் தீராமையின் அவ்விடங்களை விட்டகன்று பாசண்டச் சாத்தன் கோயிலை அடைந்து இறந்த குழந்தையை உயிர்ப்பித்துத் தருமாறு வரங்கிடந்தாள்.

விளக்கம்

அமரர்தரு: தேவதரு. அஃதாவது தேவர்களுக்குரிய மரமாகிய கற்பக விருட்சம், மந்தாரம், பாரிஜாதம், ஸந்தானம்,

கல்பகம், ஹரிசந்தனம் என்ற ஐந்து மரங்களைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். காவிரிப்பூம்பட்டினத்தில் விளங்கிய பலவகைக் கோயில்களில் தேவதருவை நிலைநாட்டி வழிபடும் கோயிலும் ஒன்று இருந்தது என்று தெரிகிறது.

வெள்யானை : வெள்ளையானை. இந்திரனுடைய வாகனமாகிய ஐராவதம் வெள்ளை யானை யாதலால் இஃது ஐராவதத்தைக் குறிக்கும். காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டுதோறும் இந்திர விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தமையால் இந்திரனுக்குரிய கோயில் மட்டுமன்றி அவன் வாகனமாகிய ஐராவதம், அவனது ஆயுதமாகிய வச்சிராயுதம், அவன் மரமாகிய கற்பக விருட்சம் ஆகியவைகளுக்கும் காவிரிப்பூம்பட்டினத்தில் கோயில்கள் இருந்தன என்று தெரிகிறது.

புகர் வெள்ளை நாகர் : புகர் - அழகு. நாகர் - தேவர்; வெள்ளை நாகர் - வெண்ணிறமுடைய பலதேவர். பலதேவர் கிருஷ்ணனுடன் பிறந்தவர். அவர் வெண்ணிறமுடையவர். அவரைப் 'பால் வண்ணன்' என்று சிறப்பித்துக் கூறுவர்.

பகல் வாயில் உச்சிக் கிழான் : பகல் வாயில் - பகல்தோன்றுவதற்கு வழியாக உள்ள கீழ்த்திசை. உச்சிக்கிழான்-உச்சிக்குரியவன்; சூரியன். சூரியன் உச்சியில் வரும் நண்பகலையே உச்சி என்று கூறுகிறோம். சந்திரனும் உச்சிக்கு வருகிறது. எனினும் அந்த நேரத்தை உச்சி என்று கூறுவதில்லை. ஆகவே உச்சிக்கிழான் என்பது சூரியனைக் குறிக்கிறது.

இத்தொடர்க்குப் பகற்பொழுது உண்டாவதற்குக் காரணமாக உள்ள சூரியன் என்றும் பொருள் கூறலாம்.

மேலும், பகல் வாயில் - நண்பகற்போதில், உச்சிக் கிழான் - உச்சிக்கு உரியவனாக விளங்குகின்ற சூரியன் என்று இத்தொடர்க்குப் பொருள் கூறுதல் மிகவும் பொருத்தமாதல் காண்க.

ஊர்க்கோட்டம் : ஊர் என்பது இங்குச் சிவபெருமான் வசிக்கும் ஊராகிய (இடமாகிய) கயிலாயத்தைக் குறித்தது. கயிலையையே தெய்வமாக வழிபட்டுவந்த கோயில் என்க.

வேல் கோட்டம் : வேல் என்பது ஆகுபெயரால் வேலைக் கையிலே உடைய முருகனை உணர்த்தியது.

புறம்பணையான் : புறம்பு + அணையான். புறம்பு—நகரின் புறம். நகர்ப்புறத்தில் வாழ்பவன் சாதவாகனன் என்ற ஐயனார்.

நிக்கந்தன் : நி + கந்தன் = கந்தங்களற்றவன் என்பது பொருள். கந்தங்கள் ஐந்து வகைப்படும். அவை உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்பன.

பாசண்டச் சாத்தன் : சாத்தன் ஒரு தெய்வம். சாத்திரங் களில் வல்லவன் என்பது பொருள். பாசண்டம் என்பது தொண்ணூற்றுறுவகைச் சமய சாத்திரங்களின் கோவை. இத் தேவன் அச்சாத்திரங்களில் எல்லாம் வல்லவனாதலால் பாசண் டச் சாத்தன் எனப்பட்டான்.

இலக்கணம் : வெள்யானை—**பண்புத்தொகை.** பகல் வாயில் —**ஆறும் வேற்றுமைத்தொகை.** பகல் வாயில் உச்சிக்கிழான்— பகல் வாயிலில் (கீழ்த்திசையில்) தோன்றுகின்ற சூரியன் என்று கொண்டால் ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை. பகல்வாயாகிய சூரியன் என்று கொண்டால் **இருபெயரொட்டுப், பண்புத் தொகை.** நண்பகற் பொழு தில் என்று கொண்டால் (பகல்வாய் இல்.) இல்—ஏழ னுருபு. உச்சிக்கிழான்—**நான்காம் வேற்றுமைத் தொகை.** வேல் —**ஆகுபெயர்.** பாடு கிடந்தாள்: பாடு — **முதனிலை திரிந்த தொழிற் பெயர்** (படு என்ற முதனிலை பாடு எனத் திரிந்தது). கிடந்தாள்—**வினையாலணையும் பெயர்.** உறு நோய்—**உரிச்சொல் தொடர்.** தீர்ம—முன்னிலைப் பன்மை வினைமுற்று, தீர் + உம், 'உ' கெட்டது. தீர்—பகுதி; உம்—முன்னிலைப் பன்மைவினை முற்றுவிகுதி. தே—தெய்வம். தேவிர்—முன்னிலைப் பன்மைப் பெயர். தேவிர்கள் என்பது தேவிர்காள் என்றாகி விளியேற் றது. சாத்தற்கு மேவி : இது சாத்தனிடம் மேவி எனப் பொருள் படுதலின் ஏழாம் வேற்றுமை உருபு நிற்கவேண்டிய இடத்து நான்கனுருபு மயங்கிவந்த **உருபு மயக்கமாம்.**

இடாகினிப் பேயின் செயல்

ஏசும் படியோர் இளங்கொடியாய் ஆசிலாய்
செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
பொய்யுரையே யன்று பொருளுரையே கையில்
படுபிணந் தாவென்று பறித்தவள் கைக்கொண்டு
சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளிற் சென்றாங்கு
இடுபிணந் தின்னும் இடாகினிப் பேய்வாங்கி
மடியகத் திட்டாள் மகவை

பதவுரை

சுடுகாட்டுக் கோட்டத்து - சுடு காட்டுக் கோட்டம் என்ற பெயருடைய சக்கரவாளக் கோட்டத்தில்
தூங்கு இருளில் சென்று - மிகுந்த இருள் செறிந்த இரவில் போய்
ஆங்கு - அவ்விடத்தில்
இடுபிணம் தின்னும் - குழியில் இடப்படும் பிணங்களைத் தின்கின்ற
இடாகினிப் பேய் - இடாகினி என்ற பெண் பேய்
ஏசும்படி - பிறர் அழகைப் பழிக்கத்தக்க பேரழகுடைய வடிவம் கொண்ட
ஓர் இளங்கொடியாய் - ஒப்பற்ற இளங்கொடி போன்றவளாய் மாலதி முன்தோன்றி
ஆசு இலாய்-குற்றமற்றவளே!
செய்தவம் இல்லோர்க்கு - முற்பிறவியில் தவம் செய்யாதவர்கட்கு
தேவர் வரம் கொடார் - தேவரும் இப்பிறவியில் வரந்தர மாட்டார்;
பொய்யுரை அன்று - இது பொய் வார்த்தையன்று;
பொருள் உரையே - மெய்யான வார்த்தையே ஆகும்;
கையில் - உன் கையிலுள்ள
படு பிணம் தா என்று - இறந்த குழந்தையைப் பார்ப்பதற்குத் தருவாயாக என்று கூறி
அவள் - அப் பெண் பேய் மகள்
பறித்து வாங்கி - மாலதியிடமிருந்து குழந்தையை வலிந்து வாங்கி
கை கொண்டு - தன் கையில் கொண்டு
மகவை - அக்குழந்தையை
மடியகத்து இட்டாள் - தன் வயிற்றிலிட்டாள் (விழுங்கி விட்டாள்)

கருத்து: மாலதி வரங்கிடக்கும்போது நள்ளிரவில் சுடுகாட்டுக் கோட்டத்தில் குழியிலிடும் பிணங்களைத் தின்கின்ற இடாகினிப் பேயானது ஓர் அழகிய பெண்ணுருக்கொண்டு அவள் முன்தோன்றி, "குற்றமற்றவளே! முற்பிறவியில் நல்வினை செய்யாதவர்க்கு இப்பிறவியில் தேவரும் வரம் கொடார்" என்று கூறி, உன் கையிலுள்ள குழந்தையைக் கொடு, பார்த்துவிட்டுத் தருகின்றேன் என்று வலிந்து பறித்து விழுங்கிவிட்டது.

விளக்கம்

ஏசல் - பழித்தல்.

சுடுகாட்டுக் கோட்டம்: காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள சுடுகாடு. அதனைச் சக்கரவாளக கோட்டம் என்றும் கூறுவர். 'இடாகினிப் பேய் தூங்கிருளிற் சென்று,' என்று அந்வயப்

படுத்தி, பேய் மிக்க இருளில் மாலதியிடம் சென்று என்றும் பொருள் கூறலாம்.

மடியகத்திடுதல்: வயிற்றிலிடுதல், அஃதாவது விழுங்கி விடுதல். மடி - வயிறு.

தூங்கிருள்-மிக்க இருள்; யாவரும் தூங்கும் இருள் என்றும் கூறலாம்.

இடாகினிப்பேய் இளங்கொடியாய் வரங்கொடார் என்று சொல்லி மகவையூப் பறித்து வாங்கி மடியகத்திட்டாள் என்று கூட்டிப் பொருள் கொள்க.

இலக்கணம்: இளங்கொடி - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த **அன்மொழித்தொகை.** ஆசு + இலாய் = ஆசிலாய் (குற்றியலுகரப் புணர்ச்சி) செய்தவம், படுபிணம், சுடுகாடு, இடு பிணம், தூங்கிருள், என்பன **வினைத்தொகைகள்.** பொய் யுரையே — ஏ ஆசைநிலை. பொருளுரையே — ஏ — தேற்றம். காடு + கோட்டம் = காட்டுக்கோட்டம. நெடில் தொடர்க் குற்றிய லுகரம் வருமொழியோடு புணரும்போது 'ட ற ஒற்று இரட்டும்' என்ற விதியால் காடு என்பது காட்டு என ஆகி வல்லினம் மிக் குப் புணர்ந்தது. காட்டு வன்றொடர்க்குற்றியலுகரம். அதன் முன் வல்லினம் வரின் மிகும் என்பது விதி..

மாலதி மாயக் குழந்தையை எடுத்தேகல்

இடியுண்ட
மஞ்ஞைபோ லேங்கி அழுதாளுக் கச்சாத்தன்
"அஞ்ஞை! நீ யேங்கி யழல்" என்று. முன்னை
உயிர்க்குழவி காணுய்"என்று அக் குழவி யாயோர்
குயிற்பொதும்பர் நீழற் குறுக அயிர்ப்பின்றி
மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்துத்
தாய்கைக் கொடுத்தாளத் தையலாள்

பதவுரை

இடியுண்ட மஞ்ஞைபோல் - இடிக்குரல் கேட்ட மயில் அகவுவதுபோல

ஏங்கி அழுதாளுக்கு - கையில் இறந்து கிடந்த குழந்தை யையும் இழந்தமையால் ஏக் கங்கொண்டு அழுதவளாகிய மாலதிக்கு

அச்சாத்தன் - அந்தப் பாசண் டச்சாத்தன்

அஞ்ஞை - தாயே!
நீ ஏங்கி அழல் என்று - நீ மனம் வருந்தி அழாதே என்றும்
முன்னே - நீ செல்லும் வழியின் எதிரே
உயிர்க்குழவிகாணுய்-உயிரோடு குழந்தையைக் காண்பாய்;
என்று - என்றும்கூறி
அக்குழவியாய் - அந்தக்குழந்தையின் வடிவாய்
ஓர் குயில் பொதும்பர் - குயில்பாடும் ஒரு சோலையின்
நீழல் குறுக-மரநிழலை அடைய
அத்தையலாள் - அந்த மாலதி என்ற பெண்ணும்
அயிர்ப்பு இன்றி - சிறிதும் சந்தேகம் கொள்ளாமல்
மாயக் குழவி எடுத்து - மாயமாய் வந்த அக்குழந்தையை உண்மைக் குழந்தை எனவே நம்பி எடுத்து
மடிதிரைத்து - தன் வயிற்றில் அணைத்துக் கொண்டு சென்று
தாய் கைக்கொடுத்தாள் - தாயாகிய தன் மாற்றுளிடம் கொடுத்தாள்.

கருத்து: மாலதி குழந்தையைப் பேய் விழுங்கியதும் இடியோசை கேட்டு மயில் அகவுவதுபோல வருந்தி அழுதாள். அப்போது சாத்தனாகிய தெய்வம்! தாயே! வருந்தி அழவேண்டா, நீ செல்லும் வழியில் உயிர்க்குழவியைக் காண்பாய், என்று கூறி அங்ஙனமே தானே குழந்தையாய்க் கிடக்க, மாலதி அக்குழந்தையை இறந்த தன் குழந்தையே உயிர்பெற்று விட்டது என்று நினைத்து அன்போடு எடுத்து அணைத்துச் சென்று அத்தன் தாயாகிய மாற்றுளிடம் கொடுத்தாள்.

விளக்கம்

இடியுண்டமஞ்ஞைபோல்: இடியோசை கேட்டால் மயில் அகவும். மயில் அகவும் ஓசை அழுகுரலோசைபோல் இருக்கும். அவ்வோசையை மாலதியின் அழுகுரலோசைக்கு உவமையாகக் கூறினர். **உவமையணி.**

இடியுண்ட என்பது அடிக்கப்பட்டதனை 'அடி யுண்டது' என்று கூறுவதுபோல, இடிக்கப்பட்டதனை 'இடியுண்டது' என்று கூறியதாம். 'உண்டல்' என்பது 'உறுதல்' என்ற பொருளில் வந்தது.

சாத்தனாகிய தெய்வம் தன்னிடம் பாடுகிடந்த மாலதிக்கு இரங்கித் தானே இறந்த அக்குழவியின் வடிவமாய்த் தோன்றி அவள் கவலையை மாற்றினன் என்க. அக்குழவி என்பது இறந்த குழந்தையைக் குறிக்கும்.

மடிதிரைத்து என்பதற்குப் புடவையை மடியாக வைத்துக் கட்டும் ஒக்கலையில் (இடுப்பில்) வைத்துக்கொண்டு என்றும் பொருள் கூறலாம்.

இலக்கணம் : அழுதாள்-வினையாலணையும் பெயர். அஞ்ஞை-அண்மை விளி. அழல்-எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று. உயிர்க் குழவி—உயிரை உடைய குழவி என விரிதலின் இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. குயில் + பொதும்பர் = குயிற் பொதும்பர்: லகர ஈற்று மொழிக்கு முன் வல்லினம் வந்ததால் லகரம் றகரமாகத் திரிந்தது. பொதும்பர்: பொதும்பு என்ற சொல் ஈற்றுப்போலியாய்ப் பொதும்பர் என வந்தது. நீழல்: நிழல் என்பதன் நீட்டல் விகாரம். நீழல் + குறுக = நீழற்குறுக. அயிர்ப்பு + இன்றி = அயிர்ப்பின்றி.

சாத்தன் குழந்தையாய் வாழ்தல்

தூய
மறையோன்பின் மணியாய் வான்பொருட் கேள்வித்
துறைபோ யவர்முடிந்த பின்னர் இறையோனும்
தாயத்தா ரோடும் வழக்குரைத்துத் தந்தைக்குந்
தாயர்க்கும் வேண்டும் கடன் கழித்து மேயநாள்

பதவுரை

இறையோனும் - சாத்தனாகிய அத்தேவனும்
தூய மறையோன்பின் - பரிசுத்தமுடைய அந்த அந்தணனுக்குப்பின் (அவன் மரபில் வந்த)
மாணியாய் - பிரம்மசாரியாய்
வான்பொருள் - சிறந்த கல்விகளையும்
கேள்வி - அவற்றின் பொருள்களைக் கேட்டறியும் கேள்விகளையும்
துறைபோய் - நன்கு கற்றும் கேட்டும் தேர்ந்து
அவர் முடிந்த பின்னர் - அத் தாய் தந்தையர் இறந்த பிறகு
தந்தைக்கும் தாயர்க்கும் - தந்தையும் தாயருமாகிய அவர்கட்கு
வேண்டும்கடன்கழித்து-செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலியவைகளைச்செய்து
தாயத்தாரோடும் - தன்பங்காளிகளுடன்
வழக்குரைத்தும் - வழக்காடி வென்றும்
மேயநாள்- வாழ்ந்துவரும் நாளில்

கருத்து : குழந்தையாகிய சாத்தன் வளர்ந்து கல்விகேள்விகளில் தேர்ச்சி பெற்றான்; தாய் தந்தையர் இறந்த பின்னர் அவர்கட்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலியவற்றைச் செய்து முடித்தான். பின்னர்ப் பங்காளிகள் தன் பொருள் மீது வழக்குத் தொடர எதிர் வழக்காடி வென்றான். இவ்வாறு அவன் தன் மனைவியாகிய தேவந்தி என்பவளுடன் எட்டாண்டுகள் வாழ்ந்து வந்தான்.

விளக்கம்

வான் பொருட் கேள்வி என்பது வேதம், வேதாங்கங்களைக் கற்றலையும், அறிவுடையோர் வாய்க் கேட்டலையும் குறிக்கும்.

துறைபோதல் என்பது கற்றுத் தேர்ந்து கற்ற வழியில் ஒழுகுதலைக் குறிக்கும். கல்வியின் பயன் கற்ற வழியே நடத்தலேயாம்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

என்று வள்ளுவர் கூறியது காண்க.

தாயத்தாரோடும் வழக்குரைத்து என்றமையால் தாய்தந்தையர் இறந்த பின்னர்ப் பங்காளிகள் சாத்தனாகிய இம்மகன் அந்தணன் மகன் இல்லையென்றும், தாங்களே அவனுடைய பொருளுக்கு உரியவர்களென்றும் வாதிட்டனர். அப்போது சாத்தன் தான் அந்தணன் மகனே என்றும் தானே அவன் பொருளுக்கு ரிய வாரிசு என்றும் சான்று காட்டி வென்றான் என்பது குறிப்பாகத் தெரிகின்றது.

அங்ஙனம் வெற்றி பெற்று அடைந்த பொருளைத் தன் மனைவிக்கு ஆக்கினன் சாத்தன்.

வான் பொருட் கேள்வி என்றமையால் சாத்தன் பிரம்மசாரியாய்க் கல்வி கற்றமையும், மேல் 'தேவந்தி என்பாள் மனைவி' என்று கூறுகின்றமையால் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்வு நடத்தியமையும் விளங்குகின்றன. பின்னர்த் தேவந்தியை விட்டுப் பிரிய வேண்டியிருத்தலின் தாயத்தாரோடு வழக்காடி வென்று தன் மனைவிக்குப் பொருட் குறையில்லாமல் செய்தனன் என்க.

தாயர் என்பது பன்மை. தாயார் என்பது ஒருமை. தன்னுடைய தாயும், மாலதியாகிய தாயும் ஆகிய இருவரும் இறந்தமை

யின் அவர்கட்குரிய கடன்களைச் செய்தனன் என்பதை விளக்கத் 'தாயர்' என்று பன்மையால் கூறினர். சாத்தன் தேவந்தியை மணம் செய்து எட்டு ஆண்டுகள் வாழ்ந்திருந்தனன் என்பது சிலப்பதிகாரத்தில் 30-ஆம் காதையில் "தேவந்தியைத் தீவலம் செய்து, நாலீராண்டு கழிந்ததன் பின்னர்" என்று கூறப்பட்டுள்ளமையால் விளங்கும்.

இலக்கணம்: பொருள்+கேள்வி=பொருட் கேள்வி. (ளகர ஈற்று மொழிக்குமுன் வல்லினம்வரின் ளகரம் டகரமாகத் திரியும் என்பது விதி) தந்தைக்கும் தாயர்க்கும் உம்மைகள் இரண்டும் எண் உம்மைகள்.

சாத்தன் தேவந்திக்கு அருள்செய்து மறைதல்

தேவந்தி என்பாள் மனைவி யவளுக்குப்
பூவந்த உண்கண் பொறுக்கென்று மேவித்தன்
மூவா இளநலம் காட்டியெங் கோட்டத்து
நீவா எனவுரைத்து நீங்குதலும்

பதவுரை

தேவந்தி என்பாள் - தேவந்தி என்ற பெயருடைய வளாகிய
மனைவி அவளுக்கு - தன் மனைவியாகிய அவளுக்கு
பூவந்த உண்கண்-பூப்போன்ற மையுண்ட கண்கள்
பொறுக்க என்று - (இந்தத் தெய்வ வடிவத்தைக் காண) பொறுப்பனவாக என்று
மேவி - (அவள் கண்கள்காணுமளவுக்கு ஏற்பத் தன்னை நிருமாணித்துக்கொண்டு) அவளை அடைந்து (அவளுக்கு)
தன் மூவா இளநலம் காட்டி - தன்னுடைய என்றும் முதிராத இளமையான அழகினைக்காட்டி
எம் கோட்டத்து நீவா (அவள் எண்ணமறிந்த பின்) என்னுடைய கோயிலுக்கு நீ வருவாயாக
என உரைத்து - என்று கூறி
நீங்குதலும் - (ஏனையவர்க்குத் தீர்த்த யாத்திரை செல்வதாகக் கூறி) பிரிந்து செல்லுதலும்

கருத்து: சாத்தன் தன் மனைவியாகிய தேவந்திக்குத் தன் தெய்வ வடிவத்தைக் காட்டி அவளுடன் இனியும் தான் வாழ முடியாமையைக்கூற, அவள் பிரிவாற்றாமைத் துன்பமறிந்து அவ

னைத் தன் கோயிலுக்கு வருமாறு பணித்து, மற்றவர்கட்குத் தான் தீர்த்த யாத்திரைக்குச் செல்வதாகக் கூறிப் பிரிந்து சென்ருன்.

விளக்கம்

பூவந்த உண்கண் பொறுக்கென்று : மக்கள் கண்கள் தெய்வ வடிவத்தைக் காணும் ஆற்றலற்றன. ஆதலால் தேவந்தியின் கண்கள் காணக்கூடிய அளவில் தன் வடிவத்தை அமைத்துக் கொண்டு சாத்தன் தேவந்திக்குக் காட்சியளித்தனன்.

இனி இதனைப் பூவந்த உண்கண் என விளியாக்கி, 'பூப் போன்ற கண்களையுடையவளே! பொறுக்க என்று—என் பிரிவைப் பொறுத்துக்கொள்வாயாக என்று கூறி' எனவும் இத் தொடர்க்குப் பொருள் கூறலாம்.

தேவந்தியின் கண்கள் தெய்வ வடிவைக் காணப் பொறுக்கும் ஆற்றலை அளித்து என்றும் பொருள் கூறலாம்.

மூவா இளநலம் : தேவர்களுக்குத் தோற்றமும் அழிவும் இல்லையாகலின் அவர்கட்கு மூப்பும் இல்லையாம். என்றும் இளமையோடு இருக்கும் அவர்கள் இயல்பை 'மூவா இளநலம்' என்று கூறினர். "என்றும் இளையாய்" என்று நக்கீரர் முருகனைக் குறித்தது காண்க.

சாத்தன் மற்றையவர்கட்குத் தீர்த்த யாத்திரை செல்வதாகக் கூறிச் சென்றனன் என்பது மேல் 'போயெங்கும் தீர்த்தத் துறை படிவேன் என்றவன்' (37, 38 வரிகள்) என்று வருவதால் விளங்கும்.

இலக்கணம் : உண்கண் — **வினைத்தொகை** (விளியாகக் கொண்டால் **அன்மொழித்தொகை**) பொறுக்க + என்று பொறுக்கென்று (கவில் உள்ள அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது) மூவா — **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** இளநலம்— **பண்புத்தொகை.**

தேவந்தி சாத்தனை வணங்கி வாழ்தல்

தூமொழி

ஆர்த்த கணவன் அகன்றனன் போயெங்கும்
தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்ஙன்
மீட்டுத் தருவா யெனஒன்றன் மேலிட்டுக்
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்.

பதவுரை

தூமொழி - தூய்மையான மொழிகளைப் பேசுபவளாகிய தேவந்தி

ஆர்த்த கணவன் - (என்மனத்தைத் தன்பால்) கட்டுப்படுத்திய என் கணவன்

எங்கும் போய் - பல இடங்கட்கும் சென்று

தீர்த்தத் துறைபடிவேன் - புண்ணிய தீர்த்தங்களில் நீர்த்துறைகளில் நீராடுவேன்

என்று அகன்றனன் - என்று கூறி என்னைப் பிரிந்து சென்றனன்

அவனை - அத்தகைய என் கணவனை

பேர்த்து - மறுபடியும்

இங்ஙன்மீட்டு - இவ்விடத்திற்குவருமாறு மனத்தைத் திருப்பி

தருவாய் என - அழைத்துத் தருவாயாக என்று (கடவுளை வேண்டிக்கொள்வதுபோல்)

ஒன்றன மேலிட்டு - தான் சாத்தன் கோயிலுக்குப் போவதற்கு ஒரு காரியத்தைக் காரணமாகக் கூறிக் கொண்டு

கோட்டம் - சாத்தன் கோயிலை

வழிபாடு கொண்டிருப்பாள் — வழிபாடு செய்தலைத் தன் கடமையாகக் கொண்டுள்ளவள்.

கருத்து : தேவந்தி சாத்தன் பிரிந்தபின் தன்னைப் பிரிந்து தீர்த்தயாத்திரைக்குச் சென்றதன் கணவன் நலமாகத் திரும்பித் தன்னை அடைவதற்காகக் கடவுளை வழிபடுபவளைப்போல நாள் தோறும் சென்று சாத்தன் கோயிலை வழிபடுதலைக் கடமையாகக் கொண்டு வாழ்ந்து வந்தாள்.

விளக்கம்

சாத்தன் பிரிந்தபின் தேவந்தி அவனைப் பிரிந்திருக்க இயலாதவளாய் நாள்தோறும் அவன் கோயிலுக்குச் சென்று வழிபட்டுவந்தாள். சாத்தனே அவள் கணவன என்பது அவளுக்கு மட்டுமே தெரியும். ஏனையவர்க்கு அவள் கணவன் தீர்த்தயாத்திரை சென்றுள்ளான் என்பதுதான் தெரியும். ஆதலால் தேவந்தி தீர்த்த யாத்திரை சென்ற தன் கணவன் நலமாக மீட்டும் திரும்பிவந்து சேரவேண்டும் என்று இறைவனிடம் வேண்டிக் கொள்வதற்குச் செல்வதாகக் கூறித் தன் கணவனாகிய சாத்தன் கோயில் கொண்ட இடத்திற்குச் சென்று அவனை வழிபட்டுப் பிரியாமல் வாழ்ந்து வந்தாள்.

இலக்கணம் : தூமொழி = தூய்மை + மொழி — பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. ஆர்த்த—

இறந்தகாலப் பெயரெச்சம். (ஆர் + த் + த் + அ) ஆர்—பகுதி; த்—சந்தி; த்—இறந்தகால இடைநிலை; அ—பெயரெச்ச விகுதி. அகன்றனன்: (அகல் + ற் + அன் + அன்) அகல்—பகுதி, ற்—இறந்தகால இடைநிலை, அன் — சாரியை. அன் — ஆண்பால் வினைமுற்று விகுதி. இருப்பாள்—வினையாலணையும் பெயர்.

தேவந்தி கண்ணகியை வாழ்த்தல்

வாட்டருஞ்சீர்க்

கண்ணகி நல்லாளுக் குற்ற குறையுண்டென்(று)
எண்ணிய நெஞ்சத் தினையளாய் நண்ணி
அறுகு சிறுபூளை நெல்லொடுதூஉய்ச் சென்று
பெறுக கணவனோ டென்றாள்

பதவுரை

வாட்டருஞ்சீர் - குறையாத பெருமையினையுடைய
கண்ணகி நல்லாளுக்கு-கண்ணகியாகிய சிறந்த நங்கைக்கு
உற்ற குறை உண்டு என்று - ஏற்பட்ட துன்பம் ஒன்று உண்டு என்று
எண்ணிய நெஞ்சத்து-நினைத்த மனத்தில்
இனையளாய் - துன்பத்தை யுடையவளாய்
நண்ணி - சாத்தன் கோயிலை அடைந்து
அறுகு, சிறுபூளை-அறுகம்புல் சிறுபூளைப் பூ முதலியவைகளை
நெல்லொடு தூஉய்-நெல்லோடு கலந்து தூவிச்சாத்தனை வழிபட்டு (அவனருள்பெற்று)
சென்று - கண்ணகியை அடைந்து
கணவனோடு - உன் கணவனை
பெறுக என்றாள்—பெறுவாயாக என்று கூறி வாழ்த்தினாள்.

கருத்து: தேவந்தி, கண்ணகி கணவனைப் பிரிந்துவருந்துதல் அறிந்து, சாத்தன் கோயிலுக்குச் சென்று, கண்ணகி தன் கணவனைப் பெறவேண்டுமென அறுகும் சிறுபூளைப் பூவும், நெல்லொடு கலந்து தூவி வழிபட்டு, கண்ணகியை அடைந்து 'நீ நின் கணவனைப் பெறுவாயாக' என்று கூறி வாழ்த்தினள்.

விளக்கம்

தேவந்தி கண்ணகியின் உயிர்த்தோழி ஆதலின் அவளுக்கு ஏற்பட்ட துன்பத்திற்காக மிகவும் வருந்தித் தன் கணவனாகிய சாத்தனெனும் தெய்வத்தினிடம் கண்ணகியின் துன்பத்தைத்

தீர்க்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். பிறகு கண்ணகியை அடைந்து அவள் துன்பத்திற்குத் தேறுதல் கூறும் முறையில் 'நீ நின் கணவனைப் பெறுவாயாக' என்று வாழ்த்தினள்.

இலக்கணம் : வாடு+அருமை+சீர்=வாட்டருஞ்சீர். வாடு என்ற நெடில் தொடர்க் குற்றியலுகரம் வருமொழியோடு புணரும்போது வாட்டு என ஒற்று இரட்டித்தது. பின்னர்க் குற்றியலுகரப் புணர்ச்சிப்படி 'வாட்டரும்' என்றாயிற்று. அருஞ்சீர்—**பண்புத்தொகை.** வாடு—**முதனிலைத் தொழிற் பெயர்.** குறைதல் என்பது பொருள். கணவனோடு என்பது கணவனை எனப் பொருள் படுதலின் **உருபுமயக்கம்.** (இரண்டாம் வேற்றுமை உருபுக்குப் பதில் மூன்றும் வேற்றுமை உருபு வந்தது காண்க.) தூஉய்—சொல்லிசை அளபெடை. (தூவி என்ற சொல் தூஉய் எனத்திரிந்து அளபெடுத்தது.) ஈண்டு அளபெடை அலகு பெறவில்லை. பெறுக—**வியங்கோள் வினைமுற்று.**

கண்ணகி கனாத்திறம் கூறல்

பெறுகேன்

கடுக்குமென் நெஞ்சம் கனவினு லென்கை
பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டேம்
பட்ட பதியில் படாததொரு வார்த்தை
இட்டன ரூரார் இடுதேளிட் டென்றன்மேல்
கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன்; காவலனோ(டு)
ஊர்க்குற்ற தீங்குமொன் றுண்டால் உரையாடேன்
தீக்குற்றம் போலும் செறிதொடீஇ! தீக்குற்றம்
உற்றேனோ டுற்ற உறுவனோ டியானுற்ற
நற்றிறம் கேட்கின் நகையாகும்.

பதவுரை

செறிதொடீஇ - செறிந்த வளையல்களை அணிந்தவளே!
பெறுகேன் - நீ வாழ்த்தியமையால்நான் கணவனை அடைந்தாலும் அடைவேன்;
என் நெஞ்சம்- (எனினும்) என் மனமானது
கனவினுல் - நான் நேற்று கண்ட கனவினால்
கடுக்கும்-ஐயுறுகின்றது. (அக் கனவு யாது எனின்)

என் கை பிடித்தனன் போய்- என் கணவன் என் கையைப் பிடித்து அழைத்துச் செல்ல
ஓர் பெரும் பதியுள் பட்டேம் - யாங்கள் ஒரு பெரிய நகரத்தை அடைந்தோம்;
பட்ட பதியில் - அவ்வாறு நாங்கள் அடைந்த அந் நகரத்தில்
ஊரார் - அவ்வூரிலுள்ளோர்
இடுதேள் இட்டு - பொய்த் தேளை இடுவதுபோல
படாதது ஒரு வார்த்தை - எங்கட்குப் பொருந்தாத ஒரு பழிச்சொல்லை
என்றன்மேல் - என் மீது
இட்டனர் - சுமத்தினர் (கூறினர்)
கோவலற்கு ஓர் தீங்கு உற்றது - அதனால் கோவலனுக்கு ஒரு துன்பம் உண்டாயது
அதுகேட்டு-என் கணவனுக்கு உண்டாகிய தீங்கைக்கேட்டு
காவலன் முன்னர் - அவ்வூர் அரசன் முன்னிலையில்
யான் கட்டுரைத்தேன் - அரசவை அறியாத யான் சென்று வழக்குரைத்தேன்;
காவலனோடு - அந்த அரசனோடு
ஊர்க்கு உற்ற-அந்நகரத்திற்கு என்னால் ஏற்பட்ட
தீங்கு ஒன்றும் உண்டு - துன்பம் ஒன்றும் உள்ளது;
தீ குற்றம் போலும் - அது கொடிய குற்றம் போலும்;
உரையாடேன் - (தீயகனவாதலால்) அதனை நினக்குக் கூறமாட்டேன்
தீக்குற்றம் உற்றேனோடு - அத்தகைய தீய குற்றத்தை அடைந்த என்னோடு
உற்ற உறுவனோடு - பொருந்திய மிக்கோனாகிய என் கணவனுடன்
யான் உற்ற - நான் அடைந்த
நற்றிறம் கேட்கின் - நன்மையின் பகுதிகளை நீ கேட்பாயானால்
நகை ஆகும் - உனக்குச் சிரிப்பு உண்டாகும் (என்று கூற)

(ஆல் — அசை)

கருத்து: கண்ணகி தேவந்தியைப் பார்த்து, 'செறிந்த வளையல்களை அணிந்தவளே! நீ அன்போடு வாழ்த்தியமையால் யான் கணவனைப் பெற்றாலும் பெறுவேன். எனினும் நான் நேற்றுக் கண்ட கனவால் ஐயப்படுகின்றேன். அக்கனவு யாது எனின், என கணவன் என்னைக் கைப்பிடித்து அழைத்துச் செல்ல நாங்கள் இருவரும் ஒரு நகரத்தை அடைந்தோம். அவ்வூரார் பொய்த்தேளிடுவதுபோல எங்கட்குப் பொருந்தாத ஒரு பழி மொழியைக் கூறினர். அதனால் என் கணவனுக்கு ஒரு தீங்கு நேர்ந்தது. அரசவை ஏறியறியாத நான் அரசன் முன்னிலையில் சென்று வழக்குரைத்தேன். அதனால் அரசனுக்கும்

அந்நகரத்துக்கும் பெருந் தீங்கு நேர்ந்தது. அது தீக்கனவாதலால் உனக்குக் கூறேன். இத்தகைய தீவினையுடையவளாகிய நான் பின்னர் என் கணவனுடன் அடைந்த நன்மைகளைக் கேட்பாயானால் உனக்குச் சிரிப்புண்டாகும்' என்று கூறினாள்.

விளக்கம்

படாதது ஒரு வார்த்தை: பொருந்தாத பழிச்சொல். அஃதாவது கோவலன் கள்வனெனக் குற்றம் சாட்டியது.

இடுதேளிடுதல்: தேளல்லாத ஒன்றைத் தேளெனக் கூறி மறைவாகக் கொண்டுவந்து மேலே யிட்டுக் கலங்கச் செய்தல்.

இதனைப் பாய்ச்சுத்தேள்என்பாருமுளர். பாய்ச்சுத் தேளென்பது தேள்போலவே செய்த ஒன்றைப் பிறர்மீது எறிந்து அச்சுறுத்தல்.

தேளல்லாததைத் தேளெனக் கூறி இட்டுக் கலங்கச்செய்வதுபோல பழியல்லாத ஒன்றைப் பழியாகக் கூறி என்னைக் கலங்கச் செய்தனர் என்பதாம்; **உவமையணி.** இடுதேளிட்டாற்போல என்ற உவம உருபு மறைந்து இடுதேளிட்டு என நின்றது.

என்றன் மேலிட்டு: பழி கூறப்பட்டது கோவலன்மீது ஆயினும், பெண்ணியல் பால் கண்ணகி அதனைத் தன் மீதுகூறப்பட்ட பழியாகவே கொண்டாள்; ஆதலின் என்றன் மேலிட்டு என்று கூறினாள்.

மேலும் இவளை ஊரார் 'கள்வன் மனைவி' என்று ஏசுவர் என்ற காரணத்தால் இவ்வாறு கூறினாள் என்றும் கூறலாம்.

கோவலற்குற்றது ஓர் தீங்கு: கோவலன் கொலையுண்டமை

தீக்குற்றம்; கண்ணகி தன் மார்பைத் திருகி எறிந்து நகரத்தை அழித்தமை. நகரத்தை அழித்தது தீயகனவாதலால் கண்ணகி அதனைக் கூறாது விட்டாள் 'உரையார் இழித்தக்க காணிற் கனா' என்பது பழமொழி.

காவலனோடு ஊர்க்குற்றதீங்கு; அரசன் இறத்தல் – மதுரை எரியுண்ணுதல்.

நற்றிறம் கேட்கின் நகையாகும்: கோவலன் தெய்வ உருவில் வந்து கண்ணகியை விமானத்தில் சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்றமையை நற்றிறம் என்றாள். அது கிடைக்கக்கூடியது

அன்று என்று கருதியமையால் அஃது உனக்குச் சிரிப்பை உண்டாக்கும் என்று கூறுது விட்டனள்.

கண்ணகி கண்ட இக்கனவு உண்மையானமையை மேல் வரும் கதைப் பகுதி நன்கு விளக்குகின்றதன்றே!

இலக்கணம்: கடுக்கும் - கடி என்னும் உரிச் சொல்லடியாகப் பிறந்த வினைமுற்று. (கடி என்பதற்கு ஐயம் என்ற பொருளும் உண்டு.) பட்டேம் - தன்மைப் பன்மை வினைமுற்று. (படு+ஏம்) பாடு - பகுதி. அதுபடு என்ருகி ஒற்றிரட்டித்து இறந்த காலம் காட்டியது; ஏம் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி. படாதது - ஒன்றன் பால் வினையாலணையும் பெயர். ஊர்க்குற்ற தீங்கும்-உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை. (கோவலனுக்குற்ற தீங்கே யன்றி அரசனுக்கும் ஊர்க்கும் உற்ற தீங்கும் உண்டு எனப் பொருள் தருதல் காண்க) செறி தொடி இ-வினைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. தொடி என்பது ஓசை குறையாத இடத்துக் குறில் நெடிலாகி அளபெடுத்தமையின் இன்னிசையளபெடை. உறுவனோடு+யான் உற்ற= உறுவனோடியானுற்ற: இகரம் குற்றியலிகரம். நன்மை+திறம்= நற்றிறம். நன்மை என்ற பண்புச் சொல் ஈறுபோதல் என்ற விதியால் மைவிகுதி கெட்டு நன் என்று நின்றது. 'னல முன்றனவும் ஆகும் தநக்கள்' என்ற விதியால் வருமொழி 'தி' 'றி' ஆக மாறியது. 'ணன வல்லினம் வரடறவும்' என்ற விதியால் நிலைமொழி 'ன்' 'ற்' ஆகத் திரிந்தது.

தேவந்தி கூறிய அறிவுரை

பொற்றொடீ இ
கைத்தாயு மல்லை; கணவற் கொரு நோன்பு
பொய்த்தாய்; பழம்பிறப்பிற் போய்க்கெடுக வுய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின்
மடலவிழ் நெய்தலங் கானற் றடமுள
சோமகுண்டம் சூரிய குண்டந் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவ ருலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநாள்
ஆடுது மென்ற அணியிழைக்கவ் வாயிழையாள்
பீடன் றெனவிருந்தபின்னரே

பொற்றொடீஇ - பொன்னாலான வளையல்களை அணிந்தவளே!
கைத்தாயுமல்லை - (நீ கண்ட கனவினை எண்ணி வருந்த வேண்டா) நீ உன் கணவனால் வெறுக்கப்பட்டாயல்லை;
பழம்பிறப்பில் - முன் பிறப்பில்
கணவற்கு ஒரு நோன்பு - நின் கணவன் காரணமாகச் செய்யவேண்டிய ஒரு நோன்பினை
பொய்த்தாய் - செய்யாமல் விட்டாய்;
போய் கெடுக - அதனால் உண்டாகக் கூடிய துன்பமானது அழிந்து படுவதாக
காவிரி உய்த்து சென்று - காவிரி தன் மிக்க நீரைக் கொண்டு சென்று
கடலொடு அலைக்கும் - கடலோடுஎதிர்த்துஅலைக்கின்ற
முன்றில் - சங்க முகத்தின் பக்கத்தில் உள்ள
மடல் அவிழ் - மலர்களின் இதழ் விரியும்
நெய்தல் அம் கானல் - கடற்கரைச் சோலையில்
சோம குண்டம் - சோம குண்டம் என்றும்
சூரிய குண்டம்-சூரிய குண்டம் என்றும் பெயருடைய
தடம் உள - இரண்டு குளங்கள் உள்ளன
துறை மூழ்கி-அவற்றின் நீர்த் துறையில் நீராடி
காமவேள் கோட்டம்-மன்மதன் கோயிலை அடைந்து
தொழுதார்-மன்மதனை வணங்கியவராகிய
தையலார் - பெண்கள்
உலகத்து - இவ்வுலகத்தில் (இப்பிறவியில்)
தாம் கணவரொடு இன்புறுவர் - கணவரோடு கூடிப் பிரிவின்றி இன்புற்று வாழ்வர்;
போகம் செய் பூமியினும் -(மறுமையில்) போகபூமியிலும் (சொர்க்கலோகத்திலும்)
போய் பிறப்பர் - சென்று பிறந்து கணவரைப் பிரியாது இன்புற்று வாழ்வர்;
யாம ஒருநாள் ஆடுதும்-நாமும் ஒருநாள் அக்குளங்களில் நீராடுவோம்;
என்ற அணி இழைக்கு-என்று கூறிய, அழகிய ஆபரணங்களை அணிந்த தேவந்திக்கு
அ ஆயிழையாள் - அந்த ஆராய்ந்தெடுத்த அணி கலன்களை அணிந்த கண்ணகி
பீடு அன்று - (அங்ஙனம் நீராடி மன்மதனை வழிபடுதல்) சிறந்த கற்புடைய மகளிர்க்குப் பெருமை தருவதன்று;
என இருந்த பின்னர் - என்று கூறி இருந்த பிறகு

கருத்து: தேவந்தி கண்ணகி கூறியதைக் கேட்டு, "பொற்றொடீ! நீ கண்ட கனவினை எண்ணி வருந்தாதே. உன் கணவ

ளுல் நீ வெறுக்கப்பட்டாயல்லை. முற்பிறவியில் நின் கணவன் பொருட்டுச் செய்யவேண்டிய ஒரு நோன்பினை நீ செய்யாமல் விட்டாய். அதனாலேயே இப் பிரிவுத் துன்பம் உனக்கு ஏற்பட்டது. அத் துன்பம் உன்னைவிட்டு விரைவில் நீங்கும். காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் சோமகுண்டம், சூரியகுண்டம் என்று இரண்டு குளங்கள் உள்ளன. அவற்றில் நீராடி மன்மதனை வழிபட்ட பெண்கள் இப்பிறவியில் கணவனைப் பிரியாமல் வாழ்வதோடு மறுமையிலும் போகபூமியில் பிறந்து அவனைப் பிரியாது இன்புற்று வாழ்வர். அக்குளங்களில் நாமும் ஒரு நாள் நீராடுவோம்" என்று கூறினாள். அதுகேட்டுக் கண்ணகி அவ்வாறு நீராடுதல் கற்புடைய மகளிர்க்கு ஏற்ற செயலன்று என்று கூறினாள்.

சோம குண்டம், சூரிய குண்டம்: இவை காவிரிப்பூம்பட்டினத்தில் காவிரி கடலொடு கலக்கும் சங்க முகத்துறைக்குப் பக்கத்தில் ஒரு சோலையில் இருந்த இரண்டு குளங்களாம். இவற்றில் நீராடிய மகளிர் இம்மையிலும், மறுமையிலும் கணவனைப் பிரியாது இன்புற்று வாழ்வர் என்பது பழங்கால நம்பிக்கையாக இருந்தது.

சோம குண்டத்தில் மூழ்கியோர் இம்மையிலும், சூரிய குண்டத்தில் மூழ்கியோர் மறுமையிலும் கணவனைப் பிரியாமல் வாழ்வர் என நிரனிறையாகவும் பொருள் கூறுவர்.

பீடுஅன்று: சிறந்த கற்புடைய மகளிர்க்குக் கணவனே தெய்வமாவர். அத்தகைய பெண்கள் கணவனை அடைவதற்குக் குளங்களில் நீராடுதலும், வேறு தெய்வத்தை வழிபடுதலும் அவர்கள் கற்புக்குப் பெருமை தருவதன்று என்று கண்ணகி கூறினாள்.

நெய்தல்—கடற்கரையை அடுத்த நிலம்.

இலக்கணம்: பொற்றொடீஇ—மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைப் புறத்துப் பிறந்த **அன்மொழித் தொகை.** தொடீஇ—**இன்னிசை அளபெடை.** கைத்தாய்—**முன்னிலை வினையாலணையும் பெயர்.** அல்லை—**எதிர்மறை முன்னிலைக் குறிப்பு வினைமுற்று.** பழம்பிறப்பு — **பண்புத்தொகை.** கெடுக—**வியங்கோள் வினைமுற்று.** முன்றில் - **இலக்கணப்போலி.** அவிழ்கானல் — **வினைத்தொகை.** நெய்தல் + அம் + கானல். கானல்+தடமுள=கானற்றடமுள. ஆடுதும்—உளப்பாட்டுத்

தன்மைப் பன்மை வினைமுற்று. தும்—விகுதி. அணியிழை, ஆயிழை—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகள். பீடு + அன்று = பீடன்று.

கோவலன் வருகை

நீடிய
காவலன் போலுங் கடைத்தலையான் வந்துநம்
கோவல னென்றாளோர் குற்றிளையாள்

பதவுரை

ஓர் குற்றிளையாள் - (தேவந்தியும் கண்ணகியும் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது) ஒரு குற்றேவல்செய்யும் இளையபெண்
காவலன்போலும் கோவலன் - அரசனைப் போன்ற கோவலன்
வந்து நம் - வந்து நம்முடைய
நீடிய - நீண்ட
கடைத்தலையான் - வாயிலிடத்துள்ளான்
என்றாள் - 'என்று கூறினாள்.

கருத்து : கண்ணகியும் தேவந்தியும் இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கும்போது குற்றேவல் செய்வாளொருத்தி 'கோவலன் நம் வாயிலில் வந்துள்ளான்' என்று கூறினாள்.

விளக்கம்

காவலன் போலும்: அரசனைப் போன்றவன் கோவலன் என்று கூறியமையால் அவனுடைய செல்வச் சிறப்பு விளங்குகிறது.

அன்றி அவள் தூரத்தில் பார்த்தபோது காவலன்போலும் என்று ஐயுற்றாள். பின்னர் அவன் நெருங்கிவந்தபோது கோவலன் என உணர்ந்தமையால் ஐயந்தீர்ந்து கோவலன் என்று கூறினாளென்றும் கொள்ளலாம்.

இனி, நீடிய காவலன் போலும் என்றுகொண்டு, கோவலன் வாயிலிடத்து வந்துள்ளான். அவன் வருகையை நோக்கும் போது இனி நம்மைப் பிரியாமல் நீண்ட காலம் காப்பான்போல் உள்ளது என்று கூறினாள் எனக் கொள்ளலும் பொருந்தும்.

இலக்கணம் : நீடிய — பெயரெச்சம். (நீடு + இன் + அ) நீடு—பகுதி; இன்—இறந்தகால இடைநிலை 'ன்' கெட்டது;

அ—பெயரெச்ச விகுதி. குறுமை + இளையாள் = குற்றிளையாள்—பண்புத் தொகை. (ஈறுகெட்டுத் தன்னொற்றிரட்டியது)

கோவலன் தன் செயல்குறித்து வருந்துதல்

கோவலனும்
பாடமை சேக்கையுட் புக்குத்தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தங்கண் டியாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன

பதவுரை

கோவலனும் - வாயிலை வந்தடைந்த கோவலனும்
பாடு அமை - பெருமை பொருந்திய
சேக்கையுள் புக்கு - படுக்கையிடத்தை அடைந்து
தன் பைந்தொடி - தன்னுடைய மனைவியான பசுமையான வளையல்களை அணிந்த கண்ணகியின்
வாடிய மேனி - சோர்ந்த உடலையும்
வருத்தம் கண்டு - துன்பத்தையும் பார்த்து
யாவும் - எல்லாப் பொருள்களிலும்
சலம் புணர் கொள்கை - பொய்யையே மெய்யாகப் பொருந்துமாறு செய்து ஒழுகும்
சலதியொடு ஆடி - பொய்யளாகிய வேசையுடன் கூடி ஆடியமையால்
குலம் தரு - நம் குலத்திலுள்ளவர் தேடிய
வான்பொருள் குன்றம் - மிக்க மலைபோன்ற செல்வம் முழுவதும்
தொலைந்த - அழிந்தமையினால் உண்டாகிய
இலம்பாடு - வறுமையானது
எனக்கு நாணு தரும் என்ன - எனக்கு மிகுந்த வெட்கத்தைத் தருகின்றது என்று கூற

கருத்து : கோவலன் கண்ணகியின் படுக்கையறையை அடைந்து அவளுடைய மேனி வாட்டத்தையும் மன வருத்தத்தையும் கண்டு வருந்தி, பொய்யை மெய்யாகக் காட்டிவாழும் பொய்யளோடு கூடி வாழ்ந்து, அதனால் நம் குலத்தவர் தேடிய குன்றனைய செல்வத்தையெல்லாம் இழந்து வறுமையுற்ற இந்நிலை எனக்கு மிக்க நாணத்தைத் தருகின்றது என்று கூறினான்.

விளக்கம்

முன்னர் 'கொடியிடையார் நிகர் மலர் நெல்லொடு தூஉய் மணி விளக்கம் காட்டி இரவிற்கோர் கோலம் கொள்ள' என்று எச்சமாகக் கூறினர். அவ்வெச்சம் கோவலனும் பாடமை சேக்கையுட் புக்கு என்பதனோடியையும்.

அஃதாவது அத்தகைய மாலை நேரத்தில் கோவலன் மாதவியைப்பிரிந்து கண்ணகியை வந்து அடைந்தனன் என்பதாம். இடையில் வந்த கண்ணகி கனத்திறம் கூறியது அதற்கு முன்னர் நடந்த நிகழ்ச்சி. தேவந்தியைப்பற்றிக் கூற வந்த விடத்து அவள் வரலாற்றையும் ஒருங்கு கூறினர்.

சலம்புணர் கொள்கைச் சலதி: கோவலன் மாதவியின் மேல் ஐயுற்றுப் பிரிந்து வந்தமையால் அவள் மேல் கொண்ட வெறுப்பு நீங்காதவனாய் அவளைப் பழித்துரைக்கின்றான். பொய்யை மெய்போலக் காட்டி ஒழுகுதல் விலைமகளிர் இயல்பு என்றும் தான் அதனை நம்பிக் கெட்டதாகவும் நடந்த நிகழ்ச்சியைக் குறித்து வருந்துகின்றான. 'கெட்டால் மதி தோன்றும்' என்பது அநுபவ மொழியன்றோ? அதற்கு இலக்கியமாக உள்ளது கோவலன் கூற்று.

சலம்—வஞ்சனை; பொய். சலதி —பொய்யையுடையவள்.

ஆடுதல்—அவள் வயப்படுதல்.

குலம் தருபொருள்: தம் குடும்பத்தவர் தொன்று தொட்டுச் சம்பாதித்த பொருள்.

இலம்பாடு - வறுமை; இல்லாமை ப்டுதல் (உண்டாதல் ஆதலால் இலம்பாடு என்றாயிற்று. காரணப் பெயர்.

இலக்கணம்: பைந்தொடி (பசுமை + தொடி) பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த **அன்மொழித்தொகை.** மேனி வருத்தம்- மேனியும் வருத்தமும் என விரியும்; **உம்மைத்தொகை.** கண்டு + யாவும்= கண்டியாவும் 'இ' **குற்றியலிகரம்.** சலதி—**காரணப் பெயர்.** குலம்—ஆகுபெயராய்க் குலத்தாரைக் குறித்தது. பொருள் + குன்றம்=பொருட் குன்றம், உருவகம். ல, ள வேற்றுமையில் றடவும்' என்ற விதியால் 'ள்' 'ட்' ஆகத்திரிந்தது.

கண்ணகியின் பெருந்தன்மை

நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச்
சிலம்புள கொண்மென

பதவுரை

நகைமுகம் - (அவ்வுரைகேட்டுக் கண்ணகி) தன் ஒளி பொருந்திய முகத்திலே
நலம்கேழ் - அழகு விளங்குகின்ற
முறுவல் காட்டி - புன்சிரிப்பைத் தோற்றுவித்து
சிலம்பு உள - (என்னிடம்) இன்னும் இரண்டு சிலம்புகள் உள்ளன;
கொண்ம் என - வேண்டுமாயின் அவற்றையும் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூற

கருத்து: கோவலன் உரை கேட்ட கண்ணகி அவன் மாதவிக்குக் கொடுக்கப் பொருளில்லாமையால் வருந்தி அங்ஙனம் கூறுகின்றான் என நினைத்துத் தன் முகத்தில் புன் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு இன்னும் இரண்டு சிலம்புகள் என்னிடம் உள்ளன. அவற்றையும் வேண்டுமேற் பெற்றுக்கொள்க என்று கூறினள்.

விளக்கம்

கோவலன் பொருளின்றி வருந்துகின்ற நிலையில் தான் 'சிலம்புள' என்று மட்டும் கூறினால் தனக்குக் கொடுக்க விருப்பமில்லை என்று தவறாகக் கருதுவான், அதனால் தான் மகிழ்ச்சியோடு கொடுப்பதை உணர்த்துவதற்காகத் தன் முகத்தில் புன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள் கண்ணகி.

'சிலம்புள கொண்ம்' எனக் கூறியமையால் மற்றைய அணிகலன்கள் யாவும் முன்னமே கோவலனால் அழிந்து விட்டன என்பதும் குறிப்பாக உணரப்படும்.

'உள' என்றமையால் அவை கால்களில் இல்லை என்பதும் கணவனைப் பிரிந்த தனக்கு அழகு எதற்கு என்று கண்ணகி கழற்றி வைத்துள்ளமையும் அறிக.

இவ்வுரையால் கண்ணகியின் கற்பு மாண்பும், பெருந்தன்மையும் நன்கு விளங்கும்.

இலக்கணம்: நகைமுகம்—நகையையுடைய முகம் என விரியும், இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. கேழ் முறுவல்—உரிச்சொல் தொடர். கொண்ம்—கொள்ளும் என்னும் செய்யும் என்னும் எச்சம் திரிந்து நின்றது; மகரக்குறுக்கம்.

கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்படல்

சேயிழை கேளிச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனோ(டு)
உலந்த பொரு ளீட்டுத லுற்றேன்; மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச் சென்றென்னோடிங்(கு)
ஏடலர் கோதாய்! எழுகென்று நீடி
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயா முன்.

பதவுரை

சேயிழைகேள் - (கண்ணகி கூறியது கேட்டுக் கோவலன்) செம்மையான அணிகளை அணிந்தவளே! கேட்பாயாக
மலர்ந்தசீர் - விரிந்த புகழையுடைய
மாடமதுரையகத்துச் சென்று - மாடங்களையுடைய மதுரை நகருக்குப் போய்
இச்சிலம்பு முதலாக - இந்தச் சிலம்பையே வாணிகத்துக்குரிய முதற் பொருளாகக் கொண்டு (வாணிகம்செய்து)
சென்ற கலனோடு - முன்பு இழந்த ஆபரணங்களுடன்
உலந்த பொருள் ஈட்டுதல் - அழிந்த பொருளையும் சம்பாதிப்பதற்கு
உற்றேன - துணிந்தேன்
ஏடு அலர் கோதாய் - இதழ் விரிந்த மலர்களால் கட்டப்பட்ட மாலையை அணிந்தவளே !
இங்கு - இவ்விடத்திலிருந்து,
என்னோடு எழுக - என்னுடன் புறப்படுவாயாக
என்று - என்று உரைத்து
வினை - முற்பிறவியில் செய்த வினையானது
நீடி கடைக்கூட்ட - நெடுங்காலமாக நெஞ்சை வழிப்படுத்த
கனைசுடர் - மிக்க ஒளியுடைய சூரியன்,
கங்குல் கால் சீயாமுன் - இரவுப் பொழுதினை ஒழிப்பதற்கு முன்னே (விடிவதற்குள்)
வியங்கொண்டான் - அவ்வினையின் ஏவலை மேற்கொண்டான்

கருத்து: கண்ணகி கூறியது கேட்ட கோவலன் 'சேயிழையே!, நான் மதுரைமா நகருக்குச் சென்று இச் சிலம்பையே வாணிக முதலாகக் கொண்டு வாணிகம் செய்து அழிந்தபொருளை ஈட்டத் துணிந்தேன். நீயும் என்னுடன் வருவாயாக' என்று உரைத்து முற்பிறவியில் செய்த தீவினை வழிகாட்டுதலால் சூரியன் தோன்றுவதற்கு முன்னே அவ்வினையின் ஏவலை மேற்கொண்டு கண்ணகியுடன் புறப்பட்டான்.

விளக்கம்

கண்ணகி 'சிலம்புள கொண்ம்' எனக் கூறியவுடன் கோவனுக்கு ஒரு புதிய கருத்தும், தன்முயற்சியின் பெருமையும் தோன்றித்தூண்ட மதுரை சென்று இழந்தபொருளை ஈட்ட வேண்டும் என்று முடிவு செய்தான். தன் நிலை குறித்து ஏனையவர்கள் பார்த்துப் பழிப்பதற்கு முன்னே காவிரிப்பூம் பட்டினத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தால் உடனே புறப்பட்டனன்.

தன் பிரிவால் வாடிய மேனியும் வருந்திய நெஞ்சமுமாய் ஏங்கும் கண்ணகியின் நிலையை நேரில் கண்டானுகையால் அவளை விட்டு மீண்டும் பிரிந்து செல்லுதல் அறனன்று என நினைந்தமையால், ஏடலர் கோதாய் எழுக என்னோடு' என்று கூறினன்.

மேல் நடக்கப் போகும்நிகழ்ச்சிகளை மனத்துக்கொண்டு இத்தகைய துணிவிற்கு அவன் முற்பிறவியில் செய்த தீவினையே காரணம்என்று ஆசிரியர் காரணம் கற்பித்துக்கூறுகின்றார்.

கால்சீத்தல்—அடியோடு அழித்தல்.

வியம்—ஏவல், வியங்கொண்டான் ஏவலைக் கொண்டான்.

இலக்கணம் : சேயிழை—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த **அன்மொழித்தொகை** (செம்மை+இழை) உலந்த—இறந்தகாலப் பெயரெச்சம். (உல + த் + த் + அ) உல—பகுதி; த்—சந்தி; 'ந்' ஆனது விகாரம். த்—இறந்தகால இடைநிலை; அ—பெயரெச்ச விகுதி. அலர்கோதாய்—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை விளியேற்று நின்றது. எழுக + என்று=எழுகென்று : கவில் உள்ள அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. கனை சுடர்—**வினைத்தொகை.** கால்சீயா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

1. அகனகர் எல்லாம் 2. பகல்மாய்ந்தமாலை 4. கொடியிடையார் கோலம் கொள்ள 63. ஆடுதும் என்ற அணியிழைக்கு அவ்வாயிழையாள் 64. பீடன்று என இருந்த பின்னர், 66. குற்றிளையாள் கோவலன் கடைத்தலையான் என்றாள், 66 கோவலனும் 67. சேக்கையுட்புக்கு 68. பைந்தொடி வருத்தங் கண்டு, 71. இலம்பாடு நாணுத்தருமெனக்கென்ன, 73. சிலம்புளகொண்ம் என 74. சிலம்புமுதலா......ஈட்டுதலுற்றேன்.

77. எழுக என்று 78. வினைக்கடைக்கூட்ட 79. சுடர்கால் சீயா முன் 78. வியங்கொண்டான் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

வெண்பா

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்க—மூதை
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால்சீயா முன்

பதவுரை

காதலி கண்ட கனவு - கோவலனுடைய அன்புக்குரிய மனைவியாகிய கண்ணகி கண்ட கனவானது.
கருநெடுங்கண் - கருமையான பெரிய கண்களை யுடைய
மாதவிதன் சொல்லை - மாதவி கூறிய சொல்லை
வறிதாக்க - வீணாக்க
மூதை வினை - முன் பிறப்பில் செய்த தீவினையானது
கடை கூட்ட - வழிப்படுத்த
கனைசுடர் - மிக்க ஒளியையுடைய சூரியன்
கங்குல் - இரவுப் பொழுதை
கால் சீயாமுன் - அது இருந்த இடத்தை விட்டு அழிப்பதற்கு முன்பே (இருளிலேயே)
வியம் கொண்டான்-அவ்வினையின் ஏவலை ஏற்றுத் தன் மனைவியுடன் புறப்பட்டான் கோவலன்.

கருத்து: கண்ணகி கண்ட கனவு மாதவியின் சொல்லை வீணாக்குமாறு கோவலன் முற்பிறவியில் செய்த தீவினை வழி கூட்ட, சூரியன் உதிப்பதற்கு முன்பு இருளிலேயே தன் மனைவியுடன் அவ்வினையின் ஏவலை ஏற்றுப் புறப்பட்டுச் சென்றான்.

விளக்கம்

மாதவிதன் சொல்லை வறிதாக்க:- கோவலனைப் பிரிந்த மாதவி அவன் சினந்தணிந்து மீண்டு வருவான் என நினைத்தாள். அன்று மாலை வரை கோவலன் வராமையால் 'மாலை வாராராயினும் காலை காண்போம்' என்று கையற்ற நெஞ்சமொடு வருந்திக் கிடந்தாள். கோவலன் மதுரைக்குப் புறப்பட்டமையால் அவள் கூறிய அச்சொல் வீணானது என்பதாம். அதற்குக் கண்ணகி கண்ட கனவைக் காரணமாகக் கற்பித்துக்கூறினர். கண்ணகி கண்ட கனா பலிப்பதற்காகக் கோவலன் மதுரைக்குப் புறப்பட்டான் என்பது கருத்து.

இலக்கணம்:- கரு நெடுங்கண் - பண்புத்தொகை அடுக்கு. கங்குல் + கனைசுடர் = கங்குற்கனை சுடர்.

III. இடைக்காலச் செய்யுள்

(பிற்பகுதி)

கம்ப ராமாயணம்

பெயர்க் காரணம்: கம்பர் + ராமாயணம் = **கம்ப ராமாயணம்.** 'சில விகாரமாம் உயர்திணை' என்ற விதியினால் ரகரம் கெட்டது. கம்பரால் செய்யப்பட்ட ராமாயணம் என்றேனும், கம்பரது ராமாயணம் என்றேனும் பொருள் படும். ஆதலின், **மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.** (அல்லது) **ஆறும் வேற்றுமைத் தொகை** என்றேனும் கொள்ளலாம்.

ராமாயணம் = ராம + அயநம்; **வடமொழித் தொடர்.** இராமனை அறிவிப்பது என்பது இதன் பொருள். **இது தீர்க்க சந்தி** 'ராம' என்ற சொல்லுக்கு **'மகிழ்விப்பவன்'** என்பது பொருள்.

வடமொழி ராமாயணம்; இராமனது சரித்திரம் முதலில் **வால்மீகி முனிவரால்**-வடமொழியில் செய்யப்பட்டது. இவ்விராமாயணமே வடமொழியில் **ஆதி காவியம்** ஆகும். இதுவே ஏனைய இராமாயணங்கட்கெல்லாம் **முதல் நூல்.** இது 24,000 சுலோகங்களை உடையது. இதிகாசம், புராணம் என்ற வடநூற் பகுப்புக்குள் இஃது **இதிகாசத்தின்** பாற்படுவது.

தமிழ் இராமாயணம்: வடமொழியிலுள்ள இராம கதையைத் தமிழிலும் புலவர் பாடலுற்றனர். இவற்றுள் பழமையானது **சங்கத்து இராமாயணம்.** இந்நூல் இப்போதில்லை. சிற்சில பாடல்களுளவாம். பிரசித்தியாகத் தற்போது தமிழிலுள்ள ராமாயணம் **கம்பராமாயணம்** தான்.

காண்டங்கள்; கம்ப ராமாயணத்தி லுள்ள காண்டங்கள் ஏழு. அவை: பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம் என்பவை. இவற்றுள் முதல் ஆறு காண்டங்களும் கம்பரால் பாடப்பட்டவை. உத்

தர காண்டம் ஒட்டக்கூத்தர் பாடியது என்பர். ஏழு காண்டங்களும் 24, 000 பாடல்களை உடையன. அவற்றுள் கம்பர் பாடியவை 10, 500 பாடல்களாம்.

பெயர்; கம்பர் தாம் இயற்றிய ராமாயணத்திற்கு **'இராமாவதாரம்'** என்று பெயரிட்டனர். அது வழக்கிலில்லை. வழங்குவது **கம்ப ராமாயணம்** என்ற பெயரே.

நூலாசிரியர் - கம்பர்

பிறப்பு: கம்பர் **சோழ நாட்டில் தேரழுந்தூரில்,** உவச்ச ஜாதியில் தோன்றியவர் என்றும் வேளாளர் என்றும், கூறுவர்.

பெற்றோர்: தந்தை பெயர் **ஆதித்தன்** என்பது. இவரை இளமை முதலே ஆதரித்தவர் **திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல்** எனபவர்.

பெயர்க் காரணம்: ஏகம்பர் என்ற பெயர் கம்பர் என மருவிற்று என்பர் ஒரு சிலர். 'கம்ப நாடுடைய வள்ளல்' என்பதால் நாட்டின் பெயர் இவர்க்கு வழங்கலாயிற்று என்றும் கூறுவர் சிலர்; இப்பெயர் கல்வெட்டுக்களில் இவ்வாறே காணப்படுதலால், இஃது இயற்பெயரே என்றும் சொல்லுவர். இப்பெயர்க்குக் காரணங்கள் கூறும் வேறு சில கர்ண பரம்பரையான கட்டுரைகளும் உள.

சிறப்பு மொழிகள் 'கல்வியிற் பெரியன் கம்பன்' 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியுங் கவி பாடும்', 'கம்ப நாடன் கவிதையிற் போல் கற்றோர்க் கிதயங் களியாதே', 'விருத்த மென்னும் ஒண் பாவுக்கு உயர் கம்பன்', 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு' முதலியன கம்பரைப்பற்றி வழங்கும் சிறப்பு மொழிகளாம். கம்பரைக் கவிச் சக்கரவர்த்தி என்றும் பாராட்டிக் கூறுவதுண்டு.

கம்பரின் தமிழ்ப்பற்று: இவர் தமிழ் மொழியை 'என்றுமுள தென்றமிழ்', 'தமிழெனும் அளப்பருஞ் சலதி', 'ஏழுலகும் புகழ் முந்து முத்தமிழ்' என்றெல்லாம பாராட்டிக் கூறியிருக்கிறார்.

நூலியற்றக் காரணம்: வடமொழி ராமாயணம் போலத் தமிழிலும் பாடவேண்டும் என்ற ஆசைபற்றி இவர் இந்நூலை இயற்றினர்; தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளல் கேட்டுக் கொண்டபடி பாடினர் என்றும் கூறுவர்.

இயற்றியுள்ள விதம்: வடமொழி ராமாயணத்தை இவர் தமிழில் மொழி பெயர்த்து விடவில்லை. முதல் நூலின் கதைப் போக்கைத் தழுவிக் கொண்டு தமிழ் நாட்டுப் பழக்க வழக்கம் நாகரிகம் இவைகட்கு ஏற்ற விதமாய்ச் சில பகுதியை மாற்றியும், சிலவற்றை விடுத்தும், சிற்சில கூட்டியும், விரித்தும் தம் காப்பியத்தைத் தமிழிலக்கணத்துக்கேற்ற முறையில் சுவை படப் பாடியுள்ளார். மற்றும் தமது காலத்துக்கு முந்தியுள்ள ஆன்றோர் நூற்கருத்துக்களையும் பாடல்களையும் ஏற்ற பெற்றி ஆண்டிருக்கிறார்.

அரங்கேற்றம்: தமது நூலைத் திருவரங்கத்தில் அரங்கேற்றினர் என்பர்.

நன்றியறிவு: இவர் தாம் பாடிய ராமாயண நூலில், தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைப் பத்து இடங்களில் கவியிலமைத்துப் பாராட்டியுள்ளார்.

சமயம்: இவர் வைணவ சமயத்தவர். பிறவாறும் கூறுப.

இவர் செய்த வேறு நூல்கள்: சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கை வழக்கம், சரஸ்வதி யந்தாதி என்பன.

காலம்: இவர் காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று சிலரும், கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று ஒரு சிலரும் கூறுகின்றனர்.

சமகாலப் புலவர்கள்: ஔவை, புகழேந்தி, ஒட்டக் கூத்தர், பேராசிரியர் முதலியோர்.

சுந்தரகாண்டம்

இது மற்றைய காண்டங்களில் கூறப்பட்ட கதைப்பகுதிகளைக் காட்டிலும் அழகான கதையைக் கூறும் பிரிவாக விளங்குகின்றமையால் சுந்தரகாண்டம் எனப் பெயர் பெற்றது. சுந்தரன் என்பது அநுமனுடைய பெயர்களில் ஒன்று. அநுமனுடைய பேராற்றலை விவரிக்கும் பகுதியாதலால் இஃது இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். காண்டம் - பெரும் பிரிவு.

காட்சிப் படலம்

அநுமன் இலங்கையில் அசோக வனத்தில் சீதா தேவியைக் கண்ட கதைப் பகுதியைக் கூறும் சிறு பிரிவு. (படலம் - சிறு பிரிவு)

பாடப்பகுதிச் சுருக்கம்

இராவணனால் அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்ட சீதா தேவி அரக்கியர்களுக் கிடையில் வலிய கல்செறிந்த இடத்தில் தோன்றி ஒரு துளி நீரும் காணாத் சிறந்த மருந்துச் செடியைப்போல உடல் மெலிய, புலிக்கூட்டத்தினிடையே அகப்பட்ட பெண்மானைப் போல வருந்திச் செய்வதறியாது திகைத்து உழன்றாள். இராமபிரானை நினைந்து திசை நோக்கித் தொழுதலும், கீழே விழுந்து அழுதலும், உடல் தளர்ந்து மெலிதலும் போன்ற நிலைகளையடைந்த சீதை உயிர்விடத் துணிந்தும் விதியின் வலிமைக்கு அஞ்சி உயிர்விட முடியாமல் துன்புற்றாள்; தன்பொருட்டு இராமபிரான் வராவிட்டாலும் தம் குலத்துக்கு நேர்ந்த பழியை நீக்கவேனும் நிச்சயமாக வருவார் என்று வழி பார்த்துக் கிடந்தாள். அவள் அழுக்கேறிய ஆடை ஒன்றன்றி வேறறியாள்; நீராடியறியாள்; ஆதலால் மன்மதன் பாற்கடலிற் தோன்றிய அமிழ்தத்தைக்கொண்டு செய்த சித்திரப்பதுமை புகையுண்டு விளங்குவதுபோலக் காணப்பட்டாள்.

சீதா தேவி, என்னை இராவணன் கவர்ந்து வந்தபோது கண்ட சடாயு என்ற கழுகின் வேந்தனும் இறந்துபோயிருப்பான். என்னிலையை இராம இலக்குமணர்க்கு உணர்த்துவார் யாவர்? ஆதலால் நான் இராமபிரானைப் பார்ப்பது என்பது இப்பிறவியில் முடியாது என்றும், இலக்குவன் எவ்வளவோ எடுத்துக் கூறியும் கேளாமல் அவன் நெஞ்சம் புண்படப் பழித்துரைத்த என அறியாமையை நினைத்து இராமபிரான் என்னை வெறுத்து விட்டாரோ? அன்றி என் ஊழ்வினையோ இது என்றும், இராமபிரான் இலைக்கறி உணவினை யாரிட்டு உண்பார் என்றும், விருந்து கண்டபோது அவர் என்ன நினைந்து வருந்துவாரோ என்றும், ஒரு சமயம் அவருடைய தாயரும் தம்பி பரதனும் மீண்டும் வந்து இராமபிரானை அயோத்திக்கே அழைத்துச் சென்றிருப்பார்களோ? அங்ஙனமாயினும் சொன்ன சொல் கடவாத ஒப்புயர்வற்ற வீரனாகிய இராமபிரான் பதினான்காண்டும் கானகத்தில் கழித்தல்லாமல் அயோத்தி செல்லாரே! ஒருவேளை அவருக்கு ஏதேனும் பெருந்தீங்கு நேர்ந்திருக்குமோ? என்றும் எண்ணி எண்ணி ஏங்கினாள். தசரத சக்கரவர்த்தி அரச பதவியை அளித்தபோதும், கைகேயி காட்டுக்குச் செல்க என்று கட்டளை இட்டபோதும் சிறிதும் விருப்போ வெறுப்போ கொள்ளாமல் சித்திரத்தில் எழுதிய செந்தாமரைபோல மலர்ந்து

உருள்பெருந் தேருக்கு அச்சாணி போல

விளங்கிய முகத்தினை நினைத்தும், கங்கையில் நாவாய் செலுத்திய எளிய வேடனுக்கு இரங்கி அவனைத் தன் தம்பியாகவும், இளவலை அவனுக்குத் தம்பியாகவும், தன்னைக் கொழுந்தியாகவும் கூறி உறவு முறை கொண்டாடிய நட்பின் திறத்தை எண்ணியும் சிந்தை நைந்துருகி வருந்தினாள் சீதை.

இங்ஙனம் கருநிறத் தரக்கியர்களுக் கிடையில் மேகத்தைக் கிழித்துக்கொண்டு ஒளி வீசும் மின்னலைப் போலப் பேரழகுடன் விளங்கும் சீதா தேவியை அநுமன் கண்டனன். அரக்கியர் கட்கு இடையில் காணப்படுகின்ற அந்நங்கை தன் கண்களிலிருந்து பெருகும் கண்ணீராகிய குளத்தில் அன்னம் காணப்படுவதுபோல விளங்குகின்றமையின் அவ்வம்மையே சீதா தேவியாக இருத்தல்வேண்டும் என்று அநுமன் துணிந்தனன். அதனால் அவன்கொண்ட மகிழ்ச்சிக்கு அளவுமுண்டோ? 'அறன் அழியவில்லை; சீதாதேவியைக் கண்டுபிடித்துவிட்டமையால் நானும் இறக்க வேண்டுவதில்லை', என்று கூறி ஆடினான்; பாடினான்; அங்கும் இங்கும் தாவிக் குதித்து ஓடினான்.

"சீதாதேவி இலக்குமியே! இராமபிரானும் திருமாலே! இதில் சிறிதும் ஐயமே இல்லை. மூவுலகத்துக்கும் தீங்குசெய்த பாவியாகிய இராவணன் தன்னுயிருக்கு அழிவைத் தேடிக் கொள்வதற்கே இத்தெய்வ மகளைச் சிறை செய்தான். மாசுண்ட மணிபோல விளங்கும் இந்நங்கை தேய்ந்த சந்திரனைப்போல் உடல் மெலிந்து காணப்படுகின்றாள். இவளுடைய கற்புக்கு அழிவில்லை. அறத்துக்கு அழிவு நேருமோ! இராமபிரானுடைய புயவலிமையைப புகழ்வேனோ? மாதர்களுக்குள் திலகம்போல விளங்கும் சீதா தேவியின் மனவலிமையைப் புகழ்வேனோ? இச்சீரிய மகளைப் பெற்ற சனகமகாராசனின் குலத்தைப் புகழ்வேனோ? தேவரும், முனிவரும், ஏனைய மண்ணவரும் பிழை செய்திலர்! நானும் பிழை செய்யவில்லை. நெருப்பிடை நின்றும், நீரில் மூழ்கியும், உண்ணும் உணவையும் பருகும் நீரையும் துறந்தும் அரிய தவம் செய்யும் துறவிகளின் தவமும் இந்நங்கையின் மனத் தவத்திற் கீடாகுமோ? சீதா தேவி இவ்வுலகில் தோன்றியமையால் குடிப்பிறப்பும், பெண் தன்மையும், நாணமும் பெருமை பெற்றன. தேவியின் இந்நிலையைத் தன் கண்களால் காண இராமபிரான் கொடுத்து வைக்கவில்லையே! அன்னையைத் தருமம்தான் காத்ததோ? சனகன் செய்த புண்ணியம் தான் காத்ததோ? அல்லது தேவியின் கற்புதான் காத்ததோ?

நான் என்னென்று கூறுவேன். இராவணனோ அமரரும் ஏவல் செய்யச் செல்வச் செருக்கில் திளைத்து வாழ்கின்றான். அரக்கியர் செய்யும் கொடுமைக்கோ ஓரளவில்லை. இத்தகைய நிலையில் அன்னையைத் தவிர, தன் கற்பைக் காத்து வாழ்வதும் வேறு ஒருவர்க்கு எளிதோ? தீவினை அறத்தை வெல்லுமோ? அறமே வடிவமாகிய அன்னையைத் தீமையே உருக்கொண்ட இராவணன் நெருங்கவும் முடியுமோ," என்று பலவாறு கூறிக் கொண்டாடினான் அநுமன்.

1. அசோக வனத்தில் சீதையின் நிலை

பதவுரை

கல் மருங்கு - கல்லின் இடையில்
எழுந்து - தோன்றி
என்றும் - எப்பொழுதும்
ஓர் துளி - ஒரு துளி நீரும்
வர காணா - (தன்னிடம்) அடையப் பெறாத
நல் மருந்துபோல்-நல்ல மூலிகையாகிய மருந்தைப் போல
நலன் அற - அழகு கெட
உணங்கிய நங்கை - வாடிய சீதை
மென் மருங்குல்போல் - (தன்) மெல்லிய இடையைப்போல
வேறு உள அங்கமும்-மற்றைய கைகால் முதலிய உறுப்புக்களும்
மெலிந்தாள் - இளைத்தவளாகி
வன் மருங்குல்-வலிமை பொருந்திய இடையை உடைய
வாள் அரக்கியர்- வாள் ஏந்திய அரக்கமாதர் பலர்
அங்கு - அவ்வசோக வனத்தில்
நெருக்க-அச்சமுறுத்தி வருத்த
இருந்தாள் - வருந்தி உயிர் வாழ்ந்து வந்தாள்.

கருத்து: அசோக வனத்தில் இருந்த சீதை கல்லின் இடையே தோன்றி ஒரு துளி நீரும் காணப்பெறாது வாடும் சிறந்த மூலிகைகளைப் போலத் தானும் வாடினாள். மேலும் தன் மெலிந்த இடையைப் போல ஏனைய அவயவங்களும் மெலிந்து இளைத்தவளாய் அரக்கியர் அச்சுறுத்த வருந்தி உயிர் வாழ்ந்து வந்தாள்.

விளக்கம்

கன்மருங்கெழுந்து........நன்மருந்துபோல்: நல்ல மருந்துச் செடி செழித்து விளைவதற்கு நல்ல நிலமும் நீரும் வேண்டும். கல்லின் பக்கத்திலே முளைத்தால் அது செழித்து வளராது; மேலும் அதற்கு மழை நீரும் இல்லை; மழை நீர் தான் இல்லையென்றால் மக்களாவது நீர் ஊற்ற வேண்டாவோ?

அதுவும் இல்லை. ஒரு துளி நீரும் காணாத அச்செடி வாடி வதங்கி உலர்வதுபோலச் சீதையின் நிலை இருந்தது.

நல்ல மருந்துச் செடிபோன்றவள் சீதை; மருந்துச் செடி கல்லின் பக்கத்திலே முளைத்ததுபோல அவள் கல்லினும் வலிய உள்ளம் வாய்ந்த அரக்கியரிடையே வாழ்ந்தனள் ஒரு துளி நீரும் காணாது செடி வாடுவதுபோல இரக்கமெனும் தன்மை சிறிதும் இல்லாத அரக்கியர் கூட்டத்திடையே அருளோடு கூடிய சொல் கூறுவார் ஒருவரும் இன்றி வருந்தினள் சீதை. மருந்துச் செடி மழையின் வரவையே எதிர்நோக்கி இருப்பது போலச் சீதையும் இராமன் வரவையே எதிர்நோக்கிக் காத்திருந் தனள் என அழகாக உவமிக்கப்பட்டுள்ளது அறிக. **உவமையணி.**

வாடிய மருங்குல்போல்....மெலிந்தாள்: பெண்களுக்கு இடை சிறியது; உண்டோ இல்லையோ என்று ஐயுறத்தக்கது என்றெல்லாம் கவிஞர்கள் கூறுவர். இடைமட்டுமன்று; இராமன் பிரிவால் ஏனைய கைகால் முதலிய உறுப்புக்களும் மெலிந்து இளைக்க வருந்திக் கிடந்தாள் சீதை என்று இடையில் இருந்த மெலிவு ஏனைய அங்கங்கட்கும் பரவியதாகப் புலவர் கூறும் கற்பனைத்திறம் பாராட்டற்குரியது.

இலக்கணம்: வன்மருங்குல் - **பண்புத்தொகை.** வாளரக்கி யர்—வாளையுடைய அரக்கியர் எனவிரியும்; **இரண்டன் உருபும் பய னும் உடன் தொக்க தொகை.** கல் + மருங்கு = கன்மருங்கு 'ல ள ஈற்றுக்கு முன் மெல்லினம் வரின் ன ண ஆகத்திரியும்' என்ற விதிப்படி 'ல்' 'ன்' ஆகத் திரிந்தது. கல்லினது மருங்கு எனவிரியும். ஆறும் வேற்றுமைத்தொகை. **காணா — ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** நன்மருந்து - பண்புத்தொகை.

2. அரக்கியர் கூட்டத்தில் சீதையின் துன்பம்

பதவுரை

மயில் இயல் - மயில் போன்ற சாயலையும்
குயில் மழலையாள் - குயில் போன்ற இனிய குதலைச் சொற்களையு முடைய சீதை
துயில் என - தூங்குவதற்கு என்று
கண்கள் முகிழ்த்தலும் - கண் களை மூடுதலையும்
இமைத்தலும் துறந்தாள் - விழித்தலையும் விட்டவளும் (உறக்க மற்றவளும்)
வெயிலிடை தந்த - வெயிலில் ஏற்றிவைக்கப் பெற்ற
விளக்கு என - விளக்கைப்போல
ஒளிஇலா மெய்யாள் - பிரகாசம் இழந்த உடலை உடையவளு மாகி

மான் இளம் பேடை - இளைய பெண்மான் ஒன்று
அயில் எயிறு - கூர்மையான பற்களையுடைய
வெம் புலி குழாத்து - கொடிய புலிக்கூட்டத்தின் இடையில்
அகப்பட்டது அன்னள் - அகப் பட்டுக்கொண்டதைப் போன்று காணப் பட்டாள்.

கருத்து: சீதை அசோகவனத்தில் இராமன் பிரிவால் வருந்தி உறக்கமும் இன்றி வருந்தினாள்; வெயிலில் ஏற்றி வைத்த விளக்கு ஒளியிழந்து தோன்றுவது போலப் பொலி வற்றிருந்தாள். அவள் புலிக் கூட்டத்திடையே அகப்பட்ட ஒரு பெண் மானைப்போல அரக்கியர் கூட்டத்திடையே அகப்பட்டு மனங் கலங்கினாள்.

விளக்கம்

துயிலென... துறந்தாள்: கண்ணை மூடுதலும் திறத்தலும் மக்கட்கு இயல்பாக நேரக்கூடியன. இயல்பாக நேரிடும் அவையே யன்றி உறங்குதற்கென்று சீதை தானே கண்களை மூடுதலும், உறங்கி விழிப்பதற்கென்று கண்களைத் திறத்தலும் ஆகியவை களைத் துறந்தாள் என்பதை விளக்கத் 'துயில்என' என்று அடைமொழி கொடுத்துக் கூறினார்.

இமைத்தல் : கண்ணை மூடித்திறத்தல். பின்னர் மூடுதலை 'முகிழ்த்தல்' எனக் கூறுகின்றமையால், இமைத்தல் என்பது திறத்தலை மட்டும் குறித்து நின்றது.

முகிழ்த்தல் : குவிதல் என்று பொருள்படும். குவிதலாவது இங்கு மூடுதலைக் குறித்தது.

வெயிலிடைத் தந்த விளக்கென: பேரொளியுடைய வெயிலில் விளக்கை ஏற்றிவைத்தால் அது ஒளி குன்றித் தோன்றுவது போலச் சீதையும் ஒளிகுன்றி இருந்தாள் என்பதாம். இவ்வுவமையை ஒளிகுன்றியமைக்கு மட்டுமே கொள்க. **உவமையணி.**

மானிளம் பேடை புலிக் குழாத்தகப்பட்ட தன்னாள்: ஒரு புலியிடம் பல மான்கள் அகப்பட்டாலே அவைகளின் வருத்தம் அளவிடற் கரியனவாம். புலிக் கூட்டத்திடையே ஒரு மான் - அதிலும் பெண்மான் அகப்பட்டால் அதன் நிலையை உரைக்கவும் கூடுமோ? புலி போலும் கொடிய அரக்கியரிடையே அகப்பட்ட சீதை மான் போல மிகவும் வருந்தினாள்; செய்வதறியாது திகைத்தனள் என்க. **உவமை யணி.**

பேடை - பெண்

இலக்கணம் : இமைத்தலும் முகிழ்த்தலும் - உம்மைகள் எண்ணும்மைகள். இமைத்தல், முகிழ்த்தல் - தொழிற் பெயர்கள். (ஒளி) யிலா - ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம், மயில் + இயல் + குயில் + மழலையாள்: மயிலியற்குயின் மழலையாள். இளம் பேடை, வெம் புலி - பண்புத்தொகைகள். புலிக்குழாம் - ஆறும் வேற்றுமைத் தொகை.

3. சீதையின் பெருந்துன்ப நிலை

பதவுரை

இராமனை எண்ணி - (சீதை) இராமபிரானை நினைத்து
தொழுதல் - (திசை நோக்கி) வணங்குதலும்
விழுதல் - கீழே விழுதலும்
விம்முதல் - பொருமுதலும்
மெய் - உடல்
உறவெதும்புதல் - மிக வெப்ப மடைதலும்
வெருவல் - பயமடைதலும்
எழுதல்-(விழுந்து கிடந்த நிலை யிலிருந்து) எழுந்திருத்தலும்
ஏங்குதல் - வாய் விட்டு அரற் றுதலும்
இரங்குதல் - கவலையுறுதலும்
சோருதல் - தளர்ச்சி யடைதலும்
துளங்குதல் - உடல் நடுங்குதலும்
துயர் உழந்து - துன்பத்தால் வருந்தி
உயிர்த்தல் - பெருமூச்சு விடுதலும்
அழுதல் - (இடையிடையே) கண்ணீர் விட்டழுதலும்
அன்றி - என்ற இவைகளே யல்லாமல்
மற்று அயல் ஒன்றும் - வேறு யாதொன்றும்
செய்குவது அறியாள் - செய் வதை அறியாதவள் ஆனாள்.

கருத்து : சீதை இராமபிரானைத் திசை நோக்கித் தொழுது கீழே விழுந்து புலம்புதல், உடல் வெதும்புதல், அரக்கியரால் என்ன நேருமோ என்று அஞ்சுதல், வாய் விட்டு அரற்றுதல், கவலை கொண்டு வருந்துதல், உடல் தளர்ந்து நடுங்குதல், துன்பத்தால் பெருமூச்சு விடுதல், இடையிடையே கண்ணீர் விட்டழுதல் ஆகிய நிலையை யுற்று வேறொன்றும் செய்ய இயலா தவளாய்த் துன்புற்றாள்.

விளக்கம்

இராமனைப் பிரிந்து சீதை வருந்திய துன்ப நிகழ்ச்சிகளை யெல்லாம் கவிஞர் ஒருசேர எடுத்துக் கூறிச் சீதையின் பெருந்

துன்பத்தைப் படிப்பவர்க்கு உள்ளம் உருகும் வகையில் எடுத்து விளக்குகின்றார். இங்ஙனம் தலைவனைப் பிரிந்து வருந்திய சீதா தேவியின் நிலையைக் கண்டமையாலேயே உடனே அநுமன் "காசுண்ட கூந்தலாள் கற்புங் காதலும் ஏசுண்ட தில்லையால்" என்றும் "நங்கையர் மனத்தவம் நவிற்பாலதோ" என்றும் பாராட்டிக் கூறினன்.

பலசமயங்களில் பலவாறு நிகழ்ந்த துன்ப நிகழ்ச்சிகளை யெல்லாம் ஒருங்கு திரட்டி ஓரிடத்துக் கூறியமையின் இது **கூட்ட அணியாம்.**

இலக்கணம்: விழுதல், விம்முதல் முதலியன தொழிற் பெயர்களாம். இவ்விடங்களில் எல்லாம் உம்மைகள் தொக்கன. ஒன்று - எண்ணுகு பெயராய் ஒரு செயலை உணர்த்தியது.

4. குலப்பழி துடைக்கக் கொற்றவன் வருவான்

பதவுரை

போகவோ - (மேலும் அச்சிதை தான்) உயிர் விடத் துணிந் தாலோ,
விதிவலி - ஊழின் வலிமையை
கடத்தல் அரிது - மீறுதல் முடியாத செயலாம்
என்று அஞ்சி - என்று உயிர் விடப் பயந்து
சுருதி நாயகன் - வேதங்களின் தலைவனாகிய இராமபிரான் (எனக்காக இங்கு வரா விடினும்)
பரிதி வானவன் குலத்தையும் - தான் (அவதரித்த) சிறந்த சூரிய குலத்தின் பெருமையையும்
பழியையும் - (அக்குலத்திற்கு இப்பொழுது நேர்ந்த) பழியின் இழிவையும்
பாரா - ஆராய்ந்து பார்த்து (அதை நீக்குவதற்காக வேனும்).
வரும் வரும் - விரைவில் வருவான்
என்பது ஓர் துணிவால் - என்ற ஓர் உறுதியால்
கருதி - (அவன் வருகையையே) எண்ணி
மாதிரம் அனைத்தையும் - எல்லாத் திசைகளையும்
அளக்கின்ற - அளாவிக்காண்கின்ற
கண்ணாள் - கண்களையுடைய வளானாள்.

கருத்து: சிதை உயிர் விடத்துணிந்தும் அஃது ஊழ் வினையின்படியே நடக்கக் கூடியது என்று உணர்ந்தமையால் அதனைக் கைவிட்டாள். ஸ்ரீராமபிரான் தன்னைக் காக்க வரா விட்

டாலும் தன் குலத்துக்கு நேர்ந்துள்ள இப்பெரும் பழியை நீக்கு தற்கேனும் நிச்சயமாக வருவார் என்று கருதி அவர் வருந் திசையையே நோக்கி இருந்தாள்.

விளக்கம்

விதிவலி கடத்தல் அரிது: உயிரை விடுதலும் விதி முடிந்த வர்க்கே இயலும். முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைப் பயன்களை இப்பிறவியில் அனுபவித்தே தீர வேண்டும். அவ்விதியின் ஆற்றலைக் கடந்து உயிர் விடுதல் என்பது அரி தாதலின் சீதை 'உயிர் விடலாமென்றாலோ விதிவலி கடத்தல் அரிது' என்று கருதி அதற்கு அஞ்சினாள்.

பரிதி வானவன் குலத்தையும் பழியையும் பாரா வரும் வரும்: 'தன்னைப் பிரிந்து இவ்வளவு நாட்களாகியும் இராமன் வாராமை யால் தன் மீது வெறுப்படைந்திருப்பானோ?' என்று சீதை அஞ்சினாள். தன்மீது வெறுப்பிருந்தாலும், தன்னுடைய குலத்திற்கு இதனால் நேரக் கூடிய பெரிய பழியை ஒப்பற்ற வீர னாகிய இராமன் ஒரு நாளும் ஏற்றுக் கொள்ளமாட்டான். அப் பழியை நீக்கவேனும் இலங்கை வந்து இராவணனைக் கொன்று தன்னைச் சிறை விடுவிப்பான் என்று உறுதியாக நம்பினாள் சீதை.

வரும் வரும் என்ற அடுக்கு இராமன் வரவில் அவளுக் கிருந்த உறுதியைத் தெரிவிக்கின்றது.

இராமன் வருகையில் அவளுக்கிருந்த பேராவலை 'மாதிரம் அளக்கின்ற கண்ணாள்' என்ற தொடர் விளக்கும்.

இலக்கணம்: அரிது - **குறிப்புவினை முற்று.** பாரா - பார்த்து எனப்பொருள் தருதலால் **செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச் சம்** உடன் பாட்டுப் பொருளில் வந்தது. சுருதி - **காரணப் பெயர்** (காதுகளால் கேட்கப் படுவதாகிய காரணத்தால் பெற்ற பெயர்.) வரும் வரும் - **அடுக்குத் தொடர்;** விரைவு, துணிவு ஆகிய பொருள்களில் வந்தது. அனைத்தையும் - உம்மை **முற்றும்மை.** பரிதிவானவன் - இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

எரிகின்ற புண்ணில் ஈட்டியைச் செருகியது போல

5. புகையுண்ட ஓவியம் போல விளங்கினுள் சீதை

பதவுரை

புனைவது - (சீதை) தான் அணிந்திருப்பதாகிய
ஆவி - புகைபோல் மென்மையான
அம் துகில் - அழகிய ஆடை
ஒன்று அன்றி - ஒன்றையே அல்லாமல்
வேறு அறியாள் - மற்றுமோர் ஆடையைக் கண்டறியாதவள் ;
தூவி - சிறகுகளையுடைய
அன்னம் - அன்னப்பறவைகள் தங்குவதற்கு ஏற்ற
மென் புனலிடை - மென்மையான நீரில்
தோய்கிலா - படிந்து எழாத (நீராடாத)
மெய்யாள் - உடலையுடையவள்; (ஆதலால்)
அனங்கவேள் - அனங்கன் என்னும் பெயர் கொண்ட மன்மதன்
தேவு - தெய்வத் தன்மை வாய்ந்த
தெள் கடல் - தெளிந்த பாற்கடலில் தோன்றிய
அமிழ்து கொண்டு - தேவாமிர்தத்தினுல்
செய்த ஓவியம் - எழுதப் பெற்ற சித்திரம்
புகையுண்டது ஒக்கின்ற - புகை படிந்திருப்பதைப்போன்ற
உருவாள் - உருவத்தை உடையவளாக இருந்தாள்.

கருத்து: தான் அணிந்திருந்த புகைபோன்ற மென்மையான ஆடையைத் தவிர வேறு ஆடையில்லாதவளும், நீராடாத உடலினை உடையவளுமாக விளங்கிய சீதை மன்மதன் பாற்கடலில் தோன்றிய அமிழ்தத்தால் செய்த ஓவியம் புகை படிந்து விளங்குவதுபோன்ற உருவத்தை உடையவளாய் இருந்தாள்.

விளக்கம்

ஆவி.. வேறறியாள் : சீதை இராமனைப் பிரிந்த வருத்த மிகுதியாலும், அவனைப் பற்றியே எண்ணி எண்ணி ஏங்கி இருத்தலாலும் தான் அணிந்திருந்த ஓராடையைத் தவிர வேறு ஆடை இல்லாதவளாய் இருந்தாள் ; அதுவும் அழுக்கேறிப் புகை படிந்தது போன்று இருந்தது என்பதை விளக்க "ஆவியந் துகில் புனைவதொன்றன்றி வேறு அறியாள்" என்று கூறினர்.

ஆவி என்பதனை உயிர் எனக்கொண்டு உயிர் ஒன்றுதல் போல் அவள் அணிந்திருந்த ஆடையும் ஒன்றன்றி வேறு இல்லாதவளாய் இருந்தாள் என்றும் பொருள் கூறலாம்.

ஓவியம் புகை உண்டதே ஒக்கின்ற உருவாள் : மன்மதன் பாற்கடலில் தோன்றிய தெய்வத் தன்மை பொருந்திய அமிழ்தத்தைக்கொண்டு செய்த பதுமை யொன்று புகைபடிந்து காணப் படுவதுபோல மாசுண்ட மேனியளாகச் சீதை விளங்கினள்.

சீதையின் உடலுக்கு அமிழ்தத்தாற் செய்த பதுமையும், அவள் உடல் மாசுபடிந்து விளங்கியமைக்குப் பதுமை புகை படிந்து விளங்குவதும் உவமைகளாயின. **உவமை அணி.**

அமிழ்தம் இனிமையும், கருத்தைக் கவரும் தன்மையும், உண்டவரை நீண்ட நாள் வாழச்செய்யும் சிறப்பும், தன்னை உண் டவர் வேறொன்றையும் விரும்பாமல் செய்யும் தகுதியும் உடைமையின் அதனைத் தெய்வத் தன்மை பொருந்திய அமிழ்தம் என்றார்.

சீதா தேவியும், இனிமை, கண்டவர் மனத்தைக் கவரும் பேரழகு, தன்னை அடைந்து வழிபட்டவரை வீடுபேறடையச் செய்யும் சிறப்பு, அத்தகைய பேரானந்த நிலையுற்றவர் வேறு இன்பம் விரும்பாமல் செய்யும் பண்பு ஆகியன உடைமையின் அமிழ்தால் செய்த பாவை என்று கூறினர்.

அனங்கவேள் : வேள - விரும்பப்படும் தன்மையுடைய வன். வேள் என்பது முருகனுக்கும் மன்மதனுக்கும் பொதுப் பெயராதலால் மன்மதனை மட்டும் குறிப்பதற்காக அனங்கவேள் என்றார்.

அனங்கன் : அங்கமில்லாதவன் ; உருவமற்றவன். மன்ம தன், சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்டு உருவமிழந்தமையின் அனங்கன் என்று பெயர் பெற்றான்.

இலக்கணம் : அறியாள் – **வினையாலணையும் பெயர்.** மென் புனல் - **பண்புத்தொகை.** தோய்கிலா - **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** புகையுண்டதே - புகையுண்டதனையே போன்ற உருவுடையாள் எனத்துணிவுப்பொருளில் வந்தமையால் **தேற்றே காரம்.**

6. என்னிலை யுரைப்பார் யாரென வருந்தல்

பதவுரை

எருவைகட்கு அரசன்-(என்னை இராவணன் எடுத்துச் சென்றதைக் கண்ட) கழுகு கட்கு அரசராகிய சடாயு

மாண்டு போயினன் மன்-இறந் துபோயினர் போலும்!

மற்றோர் - அவர் தவிர ஏனைய வர்

என் நிலை - என் நிலைமையை (இராவணன் எடுத்து வந்த மையை)
யாண்டை – எவ்வாறு
அறிவுறுப்பார்கள் -(இராமலட் சுமணருக்கு) அறிவிக்கக் கூடியவராவர்? (அவ்வாறு அறிவிப்பவர் எவரும் இல்லை ஆதலால்)
இப் பிறப்பில் - இந்தப்பிறவி யில்
காண்டலோ அரிது - இரா மனைக் காணுதலோ அரிய தாகும்;
என்று என்று விம்முறும் - என்று பலவாறு எண்ணி அழுவாள்;
கலங்கும் - மனம் கலங்குவாள்;
மீண்டு மீண்டு - மறுபடியும் மறுபடியும்
எரிபுக்கு நுழைந்தால் என - (புண்ணில்) தீ புகுந்து நுழைந்தாற்போல
மெலிவாள் - (சீதை) வருந்து வாளாயினள்.

கருத்து: இராவணன் என்னைக் கவர்ந்து வந்தபோது கண்ட ஜடாயு என்ற கழுகரசன் இறந்து போயிருப்பான். அவனைத் தவிர என் நிலையை இராமனுக்குக் கூறுவார் வேறு யாருளர்? ஆதலால் இப்பிறவியில் இராமனைக் காண்பது அரிதே என்று கலங்கி, சீதை வெந்த புண்ணில் தீநுழைந்தது போல் வருந்துவாளாயினள்.

விளக்கம்

எருவைகட்கு அரசன் - கழுகுகட்குத் தலைவனாகிய சடாயு என்ற பறவை. சடாயு தசரதனுக்கு நண்பன். அதனால் இராம இலக்குமணர் சடாயுவைத் தந்தையாகப் போற்றி வந்தனர். இராம இலக்குமணர் இல்லாதபோது இராவணன் சீதையைக் கவர்ந்து செல்லுதல் கண்டு சடாயு இராவணனுடன் போரிட்டான். இராவணன் சடாயுவின் சிறகுகளை வெட்டி வீழ்த்தி வலியற்றவனாக்கிச் சீதையைத் தூக்கி வந்தான். அத்தகைய படுகாயமடைந்தமையால் சடாயு இறந்திருப்பான். ஆகையால் இராம இலக்குமணர்க்குத் தன்னை இராவணன் கவர்ந்து வந்தமையை அறிவிப்பார் ஒருவருமில்லை. எனவே இராமனை இப்பிறப்பில் காணுதல் அரிது என்று எண்ணிச் சீதை மனம் கலங்கினாள்.

சீதை தன் நீண்ட வாழ்வைப் பலப்பல எண்ணி வருந்தியே கழித்து வந்தாள். அதனால் அவள் மனம் வெந்த புணபோல நொந்திருந்தது. ஒவ்வொரு சம்பவத்தையும் அவள் நினைக்குந்

தோறும் அதனல் உண்டாகும் துன்பம் முன்னமே நொந்த மனத்தை மேலும் வருத்துகின்ற தாதலின் வெந்த புண்ணில் மீண்டும் மீண்டும் எரி நுழைந்தது போல வருந்தினள் என்று கூறுகின்றூர்.

காண்டலோ அரிது என்பதற்கு இராம இலக்குமணர் என்னைக் காண்பது அரிது என்றும் பொருள் கூறலாம்.

இலக்கணம்: மன் - **இடைச்சொல்.** இங்கு ஐயப்பொருளில் வந்தது. யாண்டு என்பது ஐகாரச்சாரியை பெற்று **யாண்டை** என நின்றது. அறிவுறுப்பார்கள்: அறிவுறு - பகுதி; ப் - சந்தி; ப் - எதிர்கால இடைநிலை; ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி; கள் - விகுதிமேல் விகுதி. என்று என்று, மீண்டு மீண்டு - **அடுக்குத்தொடர்கள்;** பன்மைப் பொருளில் வந்தன. மாண்டு - இறந்த காலத் தெரிநிலை வினையெச்சம்: மாள் - பகுதி; ட் – இறந்தகால இடைநிலை; உ - வினையெச்சவிகுதி; 'ள்' 'ண்' ஆக மாறியது சந்தி.

7. அறிவிலள் எனத் துறந்தானே ?

பதவுரை

வினையேன் - தீவினையை உடைய நான்
இளவலை - இராமனுக்குத் தம்பியாகிய இலக்குவனை
எண்ணலா - (சற்றும்) மதியாமல்
சொன்ன வார்த்தை - கூறிய கடுஞ்சொற்களை
கேட்டு - (இலக்குவன் கூற) கேட்டு
அறிவிலள் என - இவள் அறிவற்றவள் என்று எண்ணி
நாயகன் - தலைவராம் இராமபிரான்
என்னை துறந்தானே - என்னை வெறுத்தனரோ!
(அல்லது)
முன்னை ஊழ்வினை - முற்பிறப்பிற் செய்த விதியின் செயலால்
முடிந்ததோ - (இவ்விதம்) நிகழ்ந்ததோ!
என்று என்று - என்று பலவிதமாக
முறையால் - ஒன்றன்பின் ஒன்றாக
ப்ன்ன - கூறியதனல்
வாய் புலர்ந்து - வாய் உலர்ந்து
உணர்வு தேய்ந்து - அறிவு இழந்து
ஆர் உயிர் பதைப்பாள் - அரிய உயிர் துடித்தனள்

கருத்து : சீதை 'நான் இலக்குமணனைக் கடிந்து, கூறிய வார்த்தைகளைக் கேட்டு இராமபிரான் இவள் அறிவில்லாதவள் என்று எண்ணி, என்னை வெறுத்து விட்டாரோ? என் விதி இதுதானோ? என்று பலவாறு நினைந்து நினைந்து தனக்குள்ளே கூறிக்கொண்டிருப்பதால் வாய் உலர்ந்து அறிவு மங்கி உயிர் துடிதுடித்து வருந்தினாள்.

விளக்கம்

இராமபிரான் மாயமானைத் துரத்திச் சென்று அதன் மாயத்தை உணர்ந்து அதனைக் கொல்ல அம்பெய்தார். அவ்வம்பு பாய்ந்து உயிர் விடும்போது மானாகிய மாரீசன் என்ற அரக்கன் இராமபிரான் குரலைப்போலவே 'சீதா, இலக்குமணா,' என்று கூறி இறந்தான். அக்கூக்குரல் கேட்டு நடுங்கிய சீதை இலக்குவனை உடனே சென்று பார்த்து வருமாறு கூறினாள். இலக்குவன் இஃது அரக்கர் மாயம் என்றும், இராகவனுக்கு எத்தகைய துன்பமும் நேராது என்றும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் சீதை கேளாமல் இலக்குவன் மனம் புண்பட, 'உன் நோக்கம் என்ன? இராகவன் இறந்தால் என்னைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று கருதுகின்றாயா? நீ செல்லாவிட்டால் நான் உடனே நெருப்பில் வீழ்ந்து உயிர் துறப்பேன்' என்று கூறினாள். அதனால் மனம் வருந்தியே இலக்குவன் சீதையைத் தனியே விட்டுச் சென்றான். அவ்வமயம் பார்த்து இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான்.

இச்சம்பவத்தை நினைத்துச் சீதை வருந்துகின்றாள். 'நான் அறிவிலி; நாட்டில் சுகமாக வாழவேண்டிய வாய்ப்பிருந்தும் தமையனுக்காகத் தன் வாழ்வையே தியாகம் செய்து காட்டிற்கு வந்து இராமபிரானையும் என்னையும் நிழல்போல் காத்துவந்த இலக்குவன்மீது ஐயுற்றேனே! இத்தகைய அறிவிலிக்குத் தக்க தண்டனையே கிடைத்தது என்று கருதி இராமபிரான் வாளா இருந்து விட்டனரோ,' என்று எண்ணி ஏங்குகின்றாள் சீதை.

எண்ணலா வினையேன் என்பதற்கு அளவற்ற தீவினையையுடைய நான் என்றும் பொருள் கூறலாம்.

இலக்கணம் : துறந்தாரோ, முடிந்ததோ - ஓகாரங்கள் ஐயப் பொருளில் வந்தன. முறையால் + பன்ன = முறையாற்பன்ன.

ஆருயிர் - **பண்புத்தொகை.** (அருமை+உயிர்) ஈறுகெட்டு, ஆதி நீண்டது. புலர்ந்து, தேய்ந்து என்பன வினையெச்சங்கள்; பதைப்பாள் என்ற வினைமுற்றைக் கொண்டு முடிந்தன. கேட்டு: கேள்—பகுதி.

8. விருந்து கண்டபோது வருந்துவாரோ என வருந்தல்

பதவுரை

இருந்த மாநிலம்- தான் அமர்ந்திருந்த பெரிய நிலம் முழுவதும்
செல் அரித்திடவும்-கறையான் அரிக்கவும்
ஆண்டு - அவ்விடத்திலிருந்து
எழாதாள் - எழுந்திருக்காதவளாகிய சீதை
அருந்தும் - உண்பதற்கு உரிய
மெல் அடகு - மென்மையான இலையுணவு முதலியவற்றை
ஆர் இட - எவர் சமைத்துப் பரிமாற
அருந்தும் - (இராமர் காட்டில்) அமுது செய்வார்?
என்று – என்று நினைத்து
அழுங்கும் - வருந்துவாள்;
விருந்து - விருந்தினரை
கண்டபோது - பார்த்த பொழுதில்
என் உறுமோ - (உபசரிப்பவர் இல்லாமையால்)என்ன துன்பமடைவாரோ?
என்று விம்மும் - என்று எண்ணி அழுவாள்;
யான் கொண்ட நோய்க்கு-நான் பெற்றுள்ள மனநோய்க்கு
மருந்தும் - (தீர்க்கும்) மருந்தும்
உண்டுகொல் - இருக்கின்றதோ?
என்று மயங்கும் - என்று எண்ணி அறிவு கலங்குவாள்.

கருத்து: தான் இருக்கும் (இலக்குவன் அமைத்த) பர்ணசாலை செல்லரிக்கவும் அதனைவிட்டு நீங்காதவளாக வாழ்ந்த சீதை இராமபிரான் எவர் உணவு இட உண்பார் என்றும் விருந்தினர் வரின் அவரை உபசரிக்க முடியாமையால் எவ்வளவு துன்பமடைவரோ என்றும் எண்ணி வருந்துவாள். நான் பெற்ற மனநோய்க்கு மருந்தும் உண்டோ என்று எண்ணி மயங்குவாள்.

விளக்கம்

விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்: சீதை இராமபிரான் தன்னைப் பிரிந்தமையால் அவருக்கு வேளையறிந்து உணவு அளிப்பவர் யார் என்றும், விருந்தினர் வரின் என்ன நினைத்து வருந்துவாரோ என்றும் எண்ணி ஏங்கினாள்.

கணவனும் மனைவியுமாக வாழும் இல்லறத்தினரே விருந்தினரை உபசரித்தல் வேண்டும். விருந்தினரை உபசரித்தல் இல்வாழுவார் கடமையாம்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.
"துறந்தார்க்கும் துவ்வாத வர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை.

என இல்லறத்தார் கடமைகளை வள்ளுவரும் கூறினர். தாம் திருமணம் செய்துகொண்டிருந்தும் மனைவியைப் பிரிந்து வசிப்பதனால் விருந்தினரைப் போற்ற முடியாத நிலை ஏற்பட்டதே என்று கருதி இராமபிரான் வருந்துவாரே என்று எண்ணிச் சீதை வருந்தினள் என்க.

இங்ஙனமே கணவனைப் பிரிந்த மனைவியும் விருந்தினரைப் போற்றமுடியாது வருந்தநேரும் என்பதனைக் கோவலன் தன்னைப் பிரிந்திருந்தபோது கண்ணகி விருந்தினர் முதலியவர்களைப் போற்ற முடியாமல் இருந்தமையே தனக்கிருந்த பெருங்குறை என்று கோவலனிடம் கூறியமையால் விளங்கும்.

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

என்பது அவள் கூற்று.

இருந்த மாநிலம் செல்லரித்திடவும் ஆண்டெழாதாள்: இராவணன் சீதையைக் கவர்ந்து வந்தபோது இலக்குவன் அமைத்த பர்ணசாலையோடு பெயர்த்தெடுத்து வந்து அசோக வனத்தில் சிறை வைத்தான். சீதாதேவி தான் சிறைமீளும் வரை அவ்விடத்தைவிட்டு நீங்காமல் அரக்கர் பூமியில் கால் வையாமல் இருந்தாள் என்பதனைக் கூறும் முகத்தால் அவள் கற்பின் பெருமையை விளக்கக் கவிஞர் இங்ஙனம் கூறுகின்றார். செல்லரித்திடவும் என்பதனால் அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்டு நெடுங்காலமாகியது என்பது விளங்கும். இச்செய்தி பின்னர், சீதாதேவி அநுமனிடம் 'ஆண்டு நின்றும் அரக்கன் அகழ்ந்துகொண்டு, ஈண்டு வைத்தது இளவல் இயற்றிய நீண்ட சாலையொடு நிலைநின்றது காணடி' எனக் கூறுவதாலும் விளங்கும்.

அடகு — இலைக்கறியுணவு. காய், கனி முதலியவற்றையும் கொள்க.

இலக்கணம்: மெல்லடகு—(மென்மை + அடகு) பண்புத் தொகை. ஆர்: யார் என்பதன் மரூஉ. அழுங்கும், விம்மும், மயங்கும் என்பன செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்றுக்கள். (பெண்பாலில் வந்தன) உண்டுகொல்— இடைச்சொல்; ஐயப் பொருளில் வந்தது. மாநிலம்—உரிச்சொல்தொடர். எழாதாள்- வினையாலணையும் பெயர்.

9. இராமபிரானுக் குற்ற துன்பமுண்டோ என ஏங்கல்

பதவுரை

பெற்ற தாயரும் - பெற்ற தாய்மார்களும்
தம்பியும் -அடுத்த தம்பியாகிய பரதனும்
பெயர்த்தும் - மீண்டும்
வந்து எய்தி - (இராமபிரானிருக்குமிடம்) வந்து சேர்ந்து
கொற்றம்-வெற்றி பொருந்திய
மாநகர் - சிறந்த அயோத்தியா நகரத்திற்கு
கொண்டு எழுந்தார்களோ - (இராமபிரானை) அழைத்துச் சென்றார்களோ? (ஆனால் இராமபிரான்)
குறித்து சொற்ற - (கைகேயி) குறிப்பிட்டு உரைத்த
ஆண்டு எலாம் - பதினான்கு வருடங்களும்
உறைந்து அன்றி - (காட்டில்) வசித்து அல்லாமல்
அந்நகர் - அவ்வயோத்தி நகரை
துன்னான் - அடையமாட்டார்;
உற்றது உண்டு - (என்னைப் பகைவரிடமிருந்து மீட்காமையால்) அவருக்குப் பெருந் துன்பமொன்று நேர்ந்திருத்தல் கூடும்;
என படர் உழந்து - என்று எண்ணித் துன்பத்தால் வருந்தி
உறாத நோய் - எவரும் அடையாத கொடிய மனத்துயரை
உறுவாள் - அடைந்தவளானாள்.

கருத்து: தாய்மார்களும் தம்பியாகிய பரதனும் மீண்டும் வந்து இராமபிரானை அயோத்திக்கு அழைத்துச் சென்றனரோ? அங்ஙனமாயினும் இராமபிரான் தான் உரைத்த வாக்குத் தவற மாட்டாரே. வாக்குப்படி பதினான்கு ஆண்டுகள் கழிந்த பிறகன்றோ அயோத்தி செல்வார். ஆதலால் அவர் என்னை மீட்க வாராமைக்கு வேறு காரணம் இருக்கவேண்டும். ஒருவேளை

அவருக்கு ஏதேனும் பெருந் தீங்கு நேர்ந்திருக்குமோ? என்று இவ்வாறெல்லாம் பலப்பல எண்ணி வருந்தினள் சீதை.

விளக்கம்

முன்பு பரதன் வந்து இராமபிரானை அயோத்திக்கு அழைத்தபோது சீதையும் உடனிருந்தமையால் மீண்டும் வந்து அழைத்துச் சென்றனரோ என்று கருதுகின்றாள்.

இராமபிரானது வாய்மை தவறாக் குணம் சீதைக்கு நன்கு தெரியுமாதலால் இராமபிரான் அயோத்தி சென்றிருக்கமாட்டார் என்று தானே துணிகின்றாள்.

தன்மேல் பேரன்புகொண்ட - தன்னைப் பிரிந்து வாழ்ந்தறியாத - இராமபிரான் இத்துணை நாட்களாகியும் தன்னை விடுவிக்க வாராமையால் அவருக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்திருக்குமோ என்று எண்ணி ஏங்கினள்.

இங்ஙனம் துன்புற்றார் மனத்தில் படிப்படியாகத் தோன்றும் எண்ணங்களை உளநூல் முறையில் எடுத்து அழகாகக் கூறும் கவிஞரின் ஒப்புயர்வற்ற திறமை பாராட்டுதற் குரியதன்றோ?

இலக்கணம்: தாயர்—பலர்பாற் பெயர். தாயரும் தம்பியும் - உம்மைகள் எண் உம்மைகள். எடுத்தார்களோ: ஓகாரம் ஐயப் பொருளில் வந்தது. உற்றது—ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்.

10. இராமபிரானின் விருப்பு வெறுப்பற்ற நிலையை எண்ணி ஏங்கல்

பதவுரை

மெய் - உண்மையான (நிலையான)
திரு பதம் - மேன்மை பொருந்திய அரச பதவியை
மேவு - நீ அடைவாயாக;
என்ற போதினும் - என்று (தசரதர்) கூறிய பொழுதும்
இத்திரு துறந்து - இவ்வரசாட்சிச் செல்வத்தைநீக்கி
ஏகு - காட்டிற்குச் செல்;
என்ற போதினும் - என்று (கைகேயி) கூறியபொழுதும்
சித்திரத்தின் - சித்திரிக்கப்பட்ட உருவத்தில் அமைக்கப்பட்ட
அலர்ந்த செந்தாமரை - மலர்ந்த சிவந்த தாமரை மலரை
ஒத்து இருக்கும் - போன்று ஒரே நிலையாக விளங்கும்
முகத்தினை - (இராம பிரானின்) திருமுகத்தை
உன்னுவாள் - நினைப்பவள் ஆனாள்.

கருத்து: தசரத சக்கரவர்த்தி அரசபதவியை அளித்த சமயத்திலும், சிற்றன்னையாகிய கைகேயி அவ்வரசுரிமையைத் துறந்து காட்டுக்குச் செல்க என்று கட்டளையிட்ட சமயத்திலும் விருப்போ வெறுப்போ இன்றிச் சித்திரத்தில் எழுதப்பட்ட செந்தாமரை மலர் போல மலர்ந்து திகழ்ந்த இராமபிரானின் இனிய முகத்தை எண்ணி எண்ணி ஏங்கினாள் சீதை.

விளக்கம்

தசரத சக்கரவர்த்தி இராமபிரானை அழைத்து இவ்வரசியலுரிமையை ஏற்று என்னை இச்சுமையிலிருந்து விடுவிப்பாயாக என்று கேட்டுக் கொண்ட பொழுது இராமபிரான் ஒன்றும் கூறாமல் வாளா இருந்தார். அரசாட்சியில் விருப்பமில்லையேனும் தந்தையின் கட்டளையை மறுக்க அஞ்சியே ஒன்றும் கூறாமல் இருந்தார். கைகேயி அரசியலுரிமையைத் துறந்து காட்டுக்குச் செல்க என்று கட்டளை இட்டபோது அன்றலர்ந்த செந்தாமரைபோல் முகமலர்ந்து ஏற்றுக் கொண்டார். வண்டியில் பூட்டப்பட்ட காளையை அருளுடையொருவன் அவிழ்த்து விட்டால் அஃது எங்ஙனம் மகிழுமோ அத்தகைய மகிழ்ச்சியை அடைந்தார் அரசியல் விடுதலைபெற்ற இராமபிரான். இத்தகைய விருப்பு வெறுப்பற்ற மனநிலை முற்றும் துறந்த முனிவர்க்கும் வாய்த்தல் அரிது. ஆதலின் அத்தகைய ஒப்பற்ற குணத்தினை எண்ணிச் சீதாதேவி வருத்தங் கொண்டாள்.

எப்பொழுதும் வாடுதலில்லாமல் ஒரே தன்மையாக விளங்கும் மலர்ந்த முகத்திற்கு ஓவியத்தில் எழுதப்பட்டு என்றும் ஒரே தன்மையாக விளங்கும் மலரை உவமையாகக் கூறிய அழகு அறிந்து இன்புறத்தக்கதாம்.

இலக்கணம் : சித்திரத்தின்: இன்-சாரியை. செந்தாமரை - பண்புத்தொகை (செம்மை + தாமரை)

11. நட்பின் நலத்தை எண்ணிச் சீதை வருந்துதல்

பதவுரை

ஆழும் நீர் - ஆழமான தண்ணீரை உடைய
கங்கை — கங்கையாற்றின்கண்
அம்பி — படகுகளை
கடாவிய - செலுத்திய
ஏழை வேடனுக்கு - எளிய வேடர்குலத்தில் பிறந்த குகனுக்கு
எம்பி - என் தம்பி

நின் தம்பி - உனக்கும் தம்பி ஆவன்;
நீ தோழன் - நீ என் நண்பன் ஆவாய்;
மங்கை - சீதை
கொழுந்தி - அண்ணன் மனைவி ஆவாள்;
என சொன்ன - என்று இராம பிரான் கூறிய
வாழி நண்பினை - நட்புத் தன்மையை
உன்னி - நினைத்து
மயங்குவாள் - துன்பமுறுவாள்.
(வாழி - முன்னிலை அசை)

கருத்து: இராமபிரான் வேடர் தலைவனும் படகோட்டியுமாகிய குகனிடம், 'என் தம்பி இலக்குமணன் உன் சகோதரனே ஆவான்; நீ என் நண்பன்; சீதை உன் அண்ணி,' என்று கூறிய ஒப்பற்ற நட்பின் தன்மையை எண்ணிச் சீதா பிராட்டி வருந்தலானாள்.

விளக்கம்

அம்பி கடாவிய ஏழை வேடன்: இராமபிரான் தான் சக்கர்வர்த்தி திருமகனாய்த் தோன்றிய உயர்வை நோக்காது படகோட்டியும் தன்னைவிடச் செல்வத்தில் எளியவனுமாகிய குகனிடம் பெரு நட்புப் பூண்டார். இஃது அவருடைய எளிமையை விளக்குவதாம்.

எம்பி நின் தம்பி; நீ தோழன்; மங்கை கொழுந்தி: இவை இராமபிரான் குகனிடம் கூறிய மொழிகளாம். தாம் குகனுடன் நட்புக் கொண்டது மட்டுமன்றித் தம் உறவினரும் குகனுடைய உறவினரே எனக் கூறிய நட்பின் திறம் பாராட்டற்குரியதாம். அதனை எண்ணியே சீதை வருந்துகிறாள். இது மட்டுமன்றி, "இதுவரை நாங்கள் உடன் பிறந்தார் நால்வராகவே இருந்தோம். இப்போது உன்னுடன் நாம் ஐவரானோம்," என்றும், குகன் இராமபிரானுடன் காட்டுக்கு வந்து அவருக்குப் பலவாறு தொண்டு புரிவதாகக் கூறியபோது, 'இங்குள்ள உன் சுற்றத்தார் என் சுற்றத்தாரே யாவர்; அவர்கள் உன்னைப் பிரிந்து வருந்த நான் பொறுக்கமாட்டேன். பரதன் எனக்காக நாடாள்கிறான்; நீ என் பொருட்டு இக் காட்டை ஆள்வாய்,' என்றும் கூறிச் சென்றான். இந் நிகழ்ச்சிகள் யாவும் சீதையின் மனக்கண் முன் நிற்கின்றன. அத்தகைய உயர் குணம் படைத்த இராமபிரானைப் பிரிந்தமைக்காக அவள் வருந்துகிறாள்.

'ஆழி நண்பினை' எனப் பாடங்கொண்டு கடல் போன்ற நட்பின் சிறப்பினை என்றும் பொருள் கூறுவர்.

இலக்கணம்: ஆழும்—தொழிற்பெயர். நீர்க்கங்கை—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. கடாவிய—இறந்தகாலப் பெயரெச்சம்; கடாவு—பகுதி. ஏழை வேடன்—**இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.** எம்பி—என் தம்பி என்பதன் மரூஉ. (ஆழி நண்பினீன்—**உவமத் தொகை.**) அழுங்குவாள்; அழுங்கு—பகுதி; வ்—எதிர்கால இடை நிலை; ஆள்—பெண்பால் விகுதி.

12. அனுமான் சீதையைக் கண்டமை

பதவுரை

குரு நிறத்து - தன் உடலின் சிறந்த நிறத்தினல்
தனி ஒரு கொண்டல் ஆம்எனு - தனிப்பட்டதொரு மேகமோ என்று கூறுமாறு விளங்கும்
கருநிறத்தழகனுக்கு - கரிய நிறத்தோடு விளங்கும் பேரழகனுகிய இராமபிரானுக்கு
அமைந்த காந்தையை - ஏற்ற மனைவியான சீதா தேவியை
விரி மழைக்குலம்-பரவுகின்ற கரிய மேகக் கூட்டத்தை
கிழித்து ஒளிரும்-நடுவே கிழித்துக் கொண்டு தோன்றி ஒளி வீசுகின்ற
மின் என - மின்னலைப் போல
கரு நிறத்து அரக்கியர் - கரிய நிறத்தையுடைய அரக்கியரின்
குழுவில் கண்டனன் - கூட்டத்துக் கிடையில் பார்த்தான் அநுமான்.

கருத்து: மேகம்போன்ற கரிய நிறத்தோடு பேரழகனுகிய இராமபிரானுக்கு ஏற்ற மனைவியாக வாய்த்த சீதாதேவி கரிய நிறத்தையுடைய அரக்கியர் கூட்டத்திலே இருந்தைக் கிழித்துக் கொண்டு புறப்படும் மின்னலைப் போல் விளங்குவதை அநுமான் கண்டனன்.

விளக்கம்

சீதாதேவி கரிய நிறத்தையுடைய அரக்கியர் கூட்டத்திடையே இருந்தமைக்கு மேகத்தைக் கிழித்துக் கொண்டு ஒளி வீசும் மின்னலை உவமையாகக் கூறினர். மேகம் போன்றவர் கருநிற அரக்கியர். மின்னலைப் போன்றவள் பேரழகுடைய சீதாதேவி. இச்செய்யுள். **உவமையணி.**

இலக்கணம் : விரிமழை - **வினைத்தொகை.** மழை என்பது மழைக்குக் காரணமான நீருண்ட மேகத்தைக் குறித்தது. **காரிய**

ஆகு பெயர். கருநிறம் - பண்புத் தொகை. நிறத் தரக்கியர்- இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

13. அரக்கியர் இடையில் இருப்பவள் அன்னை சீதையே

பதவுரை

தொடற்கு அரும் - அருகில் நெருங்குவதற்கும் கூடாத (பயங்கரமான அல்லது அருவருப்பான)
அரக்கியர் - அரக்கமாதர்களால்
சுற்றும் - நாற்புறத்தும்
காவல் உள்ளாள் - பாதுகாவல் செய்யப் பட்டவளாகிய
மடக் கொடி - இளமை பொருந்திய பூங்கொடி போன்ற இந் நங்கை
கடல் துணை - கடல் அளவு உள்ள
நெடிய - (காதளவு) நீண்ட
தன் கண்ணின் நீர் - தன் கண்களிலிருந்து பெருகிய கண்ணீராகிய
பெருந்தடத்திடை - பெரிய தடாகத்தின் நடுவில்
இருந்தது - இருந்ததாகிய
ஓர் அன்னத் தன்மையாள்-ஒப்பற்ற அன்னப் பறவை போன்ற தன்மை உடையவளாகக் காணப்படுகிறுள்; (ஆதலின் இவள்)
சீதை ஆம் - சீதை ஆகிய
மாதரே கொல் - நங்கையே ஆவாள்.
(ஆம்-அசை)

கருத்து: அஞ்சத்தக்க அரக்கியர் காவலில் விளங்கும் பூங்கொடி போன்ற இந் நங்கை தன் கண்ணீர்க் குளத்தின் இடையில் அன்னப் பேடு போல் விளங்குகின்றமையால் சீதாதேவியே யாவாள் என்று அனுமான் முடிவு செய்தனன்.

விளக்கம்

சீதாதேவி கண்ணீர் சொரியும் நிலையில் கொடுமைக் குணம் வாய்ந்த அரக்கியர்களுக் கிடையில் காணப்படுகின்றமையால் அவள் தான் சீதை என்று அனுமான் முடிவு செய்தான். கொடுமையே வடிவமான, தொடுதற்கும் விரும்பத்தகாத அரக்கியர்க் கிடையில் சாந்தமே உருவமான, பேரழகுடைய நங்கை ஒருத்தி காணப்படுகின்றமையாலும், அவள் எப்பொழுதும் அழுது கொண்டே இருக்கின்றமையாலும் சீதையே அங்ஙனமிருத்தல் கூடுமாதலால் அனுமான் அங்ஙனம் முடிவு செய்தனன்.

பின்னர் அனுமான் இராமபிரானிடம் சென்று கண்டனன் கற்பினுக் கனியைக் கண்களால் (அவளுடைய நீரொழுகும் கண்

களைக் கொண்டு என்பது பொருள்) என்றும், 'கண்ணினீர்க் கடலில் கண்டேன்' என்றும் இதனையே வற்புறுத்திக் கூறுதல் காண்க.

சீதாதேவி எப்பொழுதும் அழுது கொண்டே யுள்ளமையால் அவள் கண்ணீர் பெருகிக் குளம் போல விளங்குகின்றதென்றும், அக்குளத்துக்கிடையில் பெண் அன்னம் போன்று அவள் திகழ்கிருள் என்றும் கூறியது உயர்வு சிறப்பைக் கொண்டு வந்த **உவமையணி**

இலக்கணம்: சுற்றுளாள் - **வினையாலணையும் பெயர்.** மடக்கொடி - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைப் புறத்துப் பிறந்த **அன்மொழித்தொகை;** பண்புத் தொகை அன்மொழி யாகவும் கூறலாம். கடல் + துணை = கடற்றுணை. (லள வேற்றுமையில் றடவும் என்ற விதியால் ல் ற் ஆகத்திரிந்தது,'னல முன்றனவும் ஆகும் தநக்கள்' என்பதனுல் 'து' 'று' ஆயிற்று. கண்ணின் நீர் - இன்ஐந்தனுருபு (நீங்கல் பொருள்) பெருந்தடம் -**பண்புத் தொகை.** இருந்தீது + ஓர் = இருந்தோர்.

14. சீதையைக் கண்ட அநுமன் மகிழ்ச்சி

பதவுரை

அறன் விடினது அன்று - தருமம் அழிந்து விடவில்லை;
யானும் வீகலென் - (இனி) நானும் இறக்க மாட்டேன்;
தேடினென்-(ஏனெனில்), சீதையைத் தேடித்திரிந்து
கண்டனன் - (இப்பொழுது) பார்த்தேன்;
தேவியே - (இவள்) சீதையே யாவள்;
எனு - என்று துணிந்து
உவகை தேன் உண்டான்- மகிழ்ச்சியாகிய மதுவைப் பருகியவனுகி
ஆடினன் - கூத்தாடினுன்;
பாடினன் - பாடல்களைப் பாடினுன்;
ஆண்டும் ஈண்டும் - அங்கும் இங்கும் (எங்கும்)
பாய்ந்து - தாவிக்குதித்து
ஓடினன் உலாவினன் - ஓடி உலவினுன்.

கருத்து: அநுமன் சீதாதேவியைக் கண்டு, 'தருமம் அழியவில்லை. பலவிடங்களிலும் தேடியலைந்து தேவியைக் கண்டறிந்து விட்டமையால் இனி நானும் இறக்க மாட்டேன்; இவள் சீதாதேவியே' என்று மகிழ்ச்சி மிகப் பெற்றவனுனுன். இம்

மகிழ்ச்சி மிகுதியால் ஆடியும் பாடியும் அங்கும் இங்கும் பாய்ந்து ஓடியும் களிப்படைந்தான்.

விளக்கம்

அனுமான் சீதையை இலங்கையின் மாடமாளிகைகள், மூலை முடுக்குகள் ஆகிய எங்கும் தேடியும் காணப்பெருமையால் முடிவாக அசோகவனத்தில் தேடிப்பார்ப்பேன் என்றும், அங்கும் காணமுடியாவிட்டால் இலங்கையை அழித்துத் தானும் உயிர்விடுவேன் ('வீடுவேன் மற்றிவ் விலங்கல்மேல் இலங்கையை வீட்டி') என்றும் முடிவு செய்தமையால் சீதையைக் கண்டவுடன் 'இனி நான் இறக்க மாட்டேன்' என்று கூறினன்.

இலக்கணம்: வீகலேன் - **தன்மை ஒருமை வினைமுற்று:** வீ - பகுதி; கு - சாரியை; அல் - எதிர்மறை இடைநிலை ஏன - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி. தேடினென்-முற்றெச்சம். கண்டனன் - தன்மை ஒருமை வினைமுற்று. காண்-பகுதி; ட் - இடை நிலை; அன் - சாரியை; அன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி. தேவியே - ஏகாரம் துணிவுப் பொருளில் வந்தது. உண்டான் - முற்றெச்சம்.

15. அரவினீங்கிய தேவனே அவுள் கமலச் செல்வியே

பதவுரை

இது-(சீதையைச் சிறைவைத்த) இச்செயல்
மூவகைஉலகையும்-(சுவர்க்கம், மத்தியம், பாதலம் ஆகிய) மூன்று உலகங்களையும்
முறையின் நீக்கிய - நல்லொழுக்க நெறியினின்று நீங்கச் செய்த
பாவி - கொடுஞ்செயல் புரியும் இராவணன்
தன் உயிர் கொள்வான் - தன்னுடைய உயிரை (இராமபிரான்) வாங்கும் பொருட்டு
இழைத்த பண்பு - செய்த செயலாகும்;

ஆவதே - அவ்விதம் நடைபெறப்போவதேயாம்,
ஐயம் இல் - (சிறிதும் சந்தேகமில்லை; (ஏனெனில்)
அவன் - அந்த இராமபிரான்
அரவின் நீங்கிய - ஆதிசேடனினின்றும் நீங்கி வந்துள்ள
தேவனே - திருமாலே ஆவார்;
இவள் - இச்சீதை
கமலச் செல்வியே - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமியே யாவாள்.
(ஆல் - அசை)

கருத்து: இராவணன் சீதையைச் சிறைவைத்துள்ளமை அவன் தன்னுயிரை இழக்கும் பொருட்டுச் செய்த செயலேயாகும். இராமபிரான் திருமாலேயாவார். இவள் இலக்குமியேயாவாள். ஆதலால் அவ்வாறு நடைபெறப் போவதில் சிறிதும் சந்தேகமேயில்லை என்று அனுமன் கூறினன்.

விளக்கம்

இராவணன் மண், விண், பாதலம் என்ற மூவுலகிலும் உள்ளவர்க்குத் தீங்கு செய்தானுகையால் அவனைப் பாவி என்று கூறுகின்ருர்.

இராபிரான், சீதை இவர்கள் இயல்புகளை நோக்கும்போது இவர்கள் திருமால், இலக்குமி அமிசமாகவே விளங்குகின்றனர். அத்தகைய இவர்கட்குத் தீங்கு செய்தமையால் இராவணன் தன்னுயிரிழப்பதில் சிறிதும் ஐயமில்லை என்று அனுமன் எண்ணினன் என்க.

இலக்கணம்: உலகையும் - முற்றும்மை உலகு - இடவாகு பெயர். தொள்வான் - வானீற்றுவினையெச்சம். தேவனே, செல்வியே - ஏகாரங்கள் தேற்றப் பொருளில் வந்தன.

16. கற்பும் காவலும் ஏசுண்டதில்லை

பதவுரை

மாசு உண்ட - (இச் சீதை) அழுக்குப் படிந்த
மணி அனள் - இரத்தினம் போன்று விளங்குகின்ருள்;
வயங்கு - விளங்குகின்ற
வெங்கதிர் - வெப்பமான கிரணங்களையுடைய சூரியனது
தேசு உண்ட - ஒளி தன் மீது பொருந்தப் பெற்ற
திங்களும் என்ன - சந்திரனையும் போல
தேய்ந்து உளாள் - ஒளிமழுங்கிக் காணப்படுகின்ருள்;
காசு உண்ட-அழுக்குப்படிந்த
கூந்தலாள் - கூந்தலை உடையளாக விளங்குகின்ருள்;
கற்பும் - (ஆதலால் இவளுடைய) கற்பு நிலையும்
காவலும் - கற்பினின்று வழுவாமல்) தன்னைக் காத்துக் கொள்ளும் வல்லமையும்
ஏசு உண்டது இல்லை - சிறிதும் குற்றம் அடைந்ததாக இல்லை;
அறத்துக்கு - தருமத்திற்கு
ஈறு - அழிவு
உண்டோ - உண்டாகுமோ?
(ஒருநாளும் உண்டாகாது).
(ஆல் - அசை)

கருத்து: இச் சீதாதேவி அழுக்குப்படிந்த இரத்தினம் போலவும், சூரியன் ஒளிதோயப் பெற்றமையால் ஒளி மங்கித் தோன்றுகின்ற சந்திரனைப் போலவும் ஒளி குன்றிக் காணப்படுகின்றாள். ஆதலால் இவளுடைய கற்பு நெறியும் கற்பினைக் காத்துக்கொள்ளும் வல்லமையும் சிறிதும் குற்றமடையவில்லை; என்று விளங்குகிறது. அறத்துக்கு அழிவு நேருதலும் உண்டோ ? என்று அனுமன் எண்ணினன்.

விளக்கம்

இரத்தினம் மிக்க ஒளியுடையது. அஃது அழுக்குப் படிந்தமையால் அதன் ஒளி அடங்கி மங்கித்தோன்றும். சந்திரன் ஒளியுடையது; சூரியன் சந்திரனின் மீது படும்போது அதனுடைய ஒளி மங்கித் தோன்றும். இவைபோல இயற்கையில் பேரழகும் மிக்க ஒளியும் வாய்ந்த சீதை நீராடாத உடலை யுடையவளாய், அழுக்கேறிய ஒரே ஆடையை அணிந்தவளாய், சடையாகிய கூந்தலையுடையவளாய், இராமனைப் பிரிந்த ஏக்கத்தை முகத்தில் கொண்டு காணப்படுவதால் ஒளிகுன்றித் தோன்றினள்.

புழுதி படிந்த ஒளிகுன்றிய மேனியும், அழுக்கேறிய கூந்தலுமே சீதையின் கற்பும் காவலும் அழியவில்லை என்பதை நன்கு விளக்குகின்றன. கற்பு நிலை குன்றியிருந்தால் இவள் இந்நிலையில் வருந்தியிருக்கவேண்டிய அவசியம் இராது என்று அநுமன் எண்ணினன்.

ஏசுண்ணல்—பழிக்கப்படுதல். கற்பு அழிதலும், கற்பைக் காத்துக்கொள்ளும் வல்லமை யில்லாமையும் பிறரால் பழித்தற் குரியன.

பெண்களுக்குக் கற்பு மட்டும் போதாது; அதனைக் காத்துக் கொள்ளும் ஆற்றலும் வேண்டும். ஆகவேதான் ஜானகியின் கற்பு மாத்திரம் அன்று; அதனைக் காக்கும் அவளுடைய மனவலிமையும் பாராட்டற்குரியது என்று அனுமன் புகழ்கின்றான்.

தான்கூறிய சீதையின் கற்பும் காவலும் அழியவில்லை. என்ற உண்மையை நிலைநாட்டுவதற்கு 'அறத்திற்கு அழிவு நேருவதும் உண்டோ' என்ற வேறொரு கருத்தைக் கூறி வற்புறுத்திக் காட்டுவதால் இது **வேற்றுப் பொருள் வைப்பணியாம்.**

வேற்றுப்பொருள் வைப்பணி கவி தான் கூறக்கருதிய பொருளை வேறொரு கருத்தைச் சான்றாகக் கூறி நிலைநாட்டிக்

காட்டுவதாம். அங்ஙனம் கூறும்போது பொதுப் பொருளைச் சிறப்புப் பொருளாலும், சிறப்புப் பொருளைப் பொதுப் பொருளாலும் வற்புறுத்துவது முறை.

இலக்கணம்: மாசு + உண்ட = மாசுண்ட. அனாள்: அன்னாள் என்பதன் **தொகுத்தல் விகாரம்**. வயங்கு, வெங்கதிர்—**வினைத்தொகை**. வெங்கதிர்-**பண்புத்தொகை**. கதிர்த்தேசு, ஆறும் வேற்றுமைத் தொகை. திங்களும்—உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை; இசை நிறையென்றும் கொள்ளலாம். தேசு + உண்ட, காசு + உண்ட, ஏசு + உண்ட. கற்பும் காவலும்—உம்மைகள் எண்ணும்மைகள். ஈறுண்டோ—ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது. ஈறு + உண்டோ.

17. இராமன் புயத்தையோ, சீதையின் மனத்தையோ சனகரின் குலத்தையோ எதைப் புகழ்வேன் எனல்

பதவுரை

கழல் புனை - வீரக்கழலை அணிந்த
இராகவன் - இராமபிரானின்
பொன் புயத்தையோ - அழகிய தோள்களையோ?
புகழ் - (யாவராலும்) புகழத் தகுந்த
வனிதையர் திலகத்தின் - மாதர்களுள் திலகம் போன்ற சீதையின்
மனத்தின் மாண்பையோ—மன வலிமையின்பெருமையையோ
கழல் வனை - வீரக்கழலை அணிந்த
அரசரின் வண்மை -அரசர்க்கு வேண்டிய ஈகைக்குணத்தை
மிக்கிடும்-(தம்மிடம்) மிகுதியாக்க் கொண்டுள்ள
சனகர் தம்- (சீதையின் தந்தையாகிய) சனகராம் பேரரசரின்
குலத்தையோ -மரபையோ?
யாதை சாற்றுகேன் -இவற்றுள் எதனைப் புகழ்ந்து சொல்வேன்!

கருத்து: அனுமன், 'சீதாதேவியை மனைவியாக அடையும் பேறு பெற்ற இராமபிரானின் தோள்களைப் புகழ்வேனோ! எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் தன் கற்பைக் காத்து நிற்கும் அன்னையின் மனவலிமையைப் புகழ்வேனோ? இத்தகைய பெண்ணின் நல்லாளைப் பெற்ற ஜனகமகாராசனின் குலத்தைப் புகழ்வேனோ! எதைப் புகழ்வேன்,' என்று மகிழ்ச்சியால் பூரித்தனன்.

விளக்கம்

அருங்குணங்களும் கற்புக் காவலும் நிறைந்த சீதையை மனைவியாக அடையும் பேறு பெற்றமையால் இராமபிரானுடைய தோள்களும், இராவணன் அச்சுறுத்தியும், ஆசைகாட்டியும் இச்சை பேசியும் சிறிதும் கலங்காத கற்பு நெறியுடையவளாய் விளங்குவதற்குச் சீதையின் மனவலிமையே காரணமாதலால் அவள் மனவலிமையும், இத்தகைய உயர்குணம் குடிப்பிறப்பாலேயே அமையக் கூடியதொன்று ஆதலின் சீதையின் தந்தையாகிய ஜனகரது குலமும் புகழ்ச்சிக்குரியனவாயின. தன் மகிழ்ச்சி மிகுதியால் எதனைப் புகழ்வேன் என்று அனுமன் கூறினன்.

இலக்கணம்: புனைகழல், வனைகழல் — **வினைத்தொகைகள்.** வனிதையர் திலகம் — ஐந்தாம் வேற்றுமைத் தொகை. (வனிதையரில் திலகம் எனவிரியும்; உறழ்ச்சிப் பொருள்) சாற்றுகேன் — தன்மை ஒருமை வினைமுற்று. சாற்று—பகுதி ;க்—இடைநிலை எதிர்காலம் காட்டியது; ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

18. என் அடிமை பிழைத்திலது என அனுமன் மகிழ்தல்

பதவுரை

தேவரும் - தேவர்களும்
பிழைத்திலர் - ஒரு குற்றமும் செய்தார் அல்லர்;
தெய்வ வேதியர் - கடவுள் பக்தி வாய்ந்த அந்தணர்
ஏவரும்-எவரும்
பிழைத்திலர் - ஒரு குற்றமும் செய்தார் அல்லர்!
அறமும் - தருமமும்
ஈறு இன்று-அழிவில்லாதது;
எம் பிராற்கு - எம் தலைவராகிய இராமபிரானுக்கு
இனி இங்கு - இனி இவ்வுலகில்
செயல் அரியது - செய்வதற்கு இயலாத செயல்
யாவது - யாது உள்ளது ?
இனிஆவ-இனி எல்லாச்செயல்களும் கை கூடுவனவாம்;
என்அடிமையும் - என் அடிமைத் தன்மையும்
பிழைத்தின்று ஆம்-தவறுதது ஆகும்
அன்றே - அல்லவா ?
(ஆல் - அசை)

கருத்து: சீதாதேவி கற்பு நெறி வழுவாமையால் தேவரும் முனிவரும், குற்றம் செய்தனரில்லை என்பது விளங்கும். தருமம்

என்றும் அழியாதது என்பதும் நிலைநாட்டப் பெறும். இராம பிரானுக்கு இனிச் செய்ய இயலாத செயல் யாது? எல்லாச் செயல் களும் முடியும். என் அடிமைத்தனமும் சிறக்கும் என்று அநு மன் கருதினன்.

விளக்கம்

தேவரும் முனிவரும் இராவணன் கொடுமைக்கு அஞ்சிப் பிழை செய்தவர்களைப் போல நடுங்கி வாழ்கின்றனர். சீதாதேவி கற்பு நெறி குன்றாமல் வாழ்வதால் இராமன் இலங்கை வந்து, இராவணனைக் கொல்வது உறுதி. ஆதலால் அவர்கள் பிழை செய்திலர் என்பது விளங்கும் என்று கூறினன். இராமபிரான் இராவணனைக் கொன்று அதர்மத்தை அழித்துத் தருமத்தை நிலை நாட்டுவான் ஆதலால் அறமும் ஈறின்று என்றார்.

'புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை'

என்று வள்ளுவர் கூறியதற்கேற்ப ஒருவன் தன்பகைவன் முன் னும் தலைநிமிர்ந்து ஏறுபோல் நடக்கக் கூடிய பெருமித நிலையை அவனுடைய மனைவியின் கற்புநெறியே அவனுக்கு அளிக்கின் றது. சீதாதேவியார் கற்பு நெறி குன்றாமல் தன்னைக் காத்து வாழ்வதால் இராமபிரான் பெருமிதங்கொண்டு இராவணனைக் கொல்லல் உறுதி என்றும், இராமபிரானுக்கு இனிச்செய்ய அரியது என்று சொல்லக் கூடியது ஒன்றுமே இல்லை என்றும், இராமபிரானின் ஒப்பற்ற வீரத்துக்குச் சீதையின் கற்பையே காரணமாகக் கூறுகின்றான் அநுமன். சீதை யைக் காணவிட்டால் அநுமானது ஆற்றல் பயனற்றதாகி இருக் கும். அவன் வலிமை என்றும் புகழ்ச்சிக்குரியதாகி விட்டமையால் அடிமையும் பிழைத்திலது என்று கூறினன்.

இலக்கணம்: தேவரும், ஏவரும், அறமும்-உம்மைகள் **எண்ணும் மைகள்** பிழைத்திலர் - **பலர்பால் எதிர்மறை வினைமுற்று:** (பிழை + த் + த் + இல் + அர்) பிழை-பகுதி; த் - சந்தி த்-எழுத்துப்பேறு இல் - எதிர்மறை இடைநிலை; அர் - பலர்பால் வினைமுற்று விகுதி. எம் பிரான் + கு = எம்பிராற்கு.

19. மாதவர் நோன்பினும் மங்கையர் நோன்பே மாண்புடையது

பதவுரை

குலனின் வந்து - நற்குலத்தில் பிறந்து
இல்லின் மாண்பு உடை - இல்லறத்திற்கு உரிய நற்குண நற்செயல்களை மேற்கொண்ட
நங்கையர் - மாதர்களின்
மனத் தவம் - சிறந்த மனவுறுதியாகிய தவத்தின் பெருமை
நவிலற் பாலதோ - நம்மால் கூறி முடியுந் தன்மைத்தோ? (முற்றிலும் கூறல் இயலாது; இத்தகையவர்கட்குமுன்)
வெங்கனல் வீக்கியும் - (கோடையில்) கொடிய தீயினை வளர்த்தும்
புனலில் மூழ்கியும் - (மழைக் காலத்தில்) தண்ணீரில் மூழ்கி இருந்தும்
நுங்குவ - பருகத்தக்க நீர் முதலியவற்றையும்
அருந்துவ - உண்ணத் தக்க உணவு முதலியவற்றையும்
நீக்கி - துறந்து
நோற்பவர் - தவம் புரிபவர்
எங்கு உளர் - எங்கு இருக்கத் தக்கவராவார்? (சிறிதும் இணையாகார்.)

கருத்து: சிறந்த குடியில் பிறந்து நல்லொழுக்கமுடைய மகளிரின் மன உறுதியாகிய தவம், நெருப்பிடை நின்றும், நீரில் மூழ்கியும், உண்ணும் உணவையும் பருகும் நீரையும் துறந்தும் தவம் செய்யும் துறவிகளின் தவத்தினும் மாண்புடையதாகும்.

விளக்கம்

பெண்களின் மன ஆற்றலானது துறவிகளின் தவத்தைக் காட்டிலும் சிறந்தது ஆகும் என்று கூறியமையால் சீதாதேவியின் கற்பாற்றல் சிறந்த துறவிகளின் தவ வலிமையைக் காட்டிலும் சிறந்தது என்பதை விளக்கினர்.

துறவிகளின் தவ வலிமையினும் பெண்களின் கற்பு வலிமை சிறந்தது என்பதனைக் கொக்கெரித்த கௌசிகன் என்னும் அந்தணன் கதையால் உணர்க.

இலக்கணம்: வெங்கனல் — பண்புத்தொகை. நுங்குவ, அருந்துவ—பலவின்பால் வினையாலணையும் பெயர்கள். நோற்பவர்—பலர்பால் வினையாலணையும் பெயர். நவிலற் பாலதோ — ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

20. காணநோற்றிலன் கமலக்கண்ணனே

பதவுரை

நங்கை தோன்றலால் - சீதை பிறந்தமையால்
மனைப்பிறவி - உயர்குடிப் பிறப்பும்
பெண்மை - பெண் பிறப்பும் (ஆகிய இவை)
பேண - (யாவரும்) விரும்புமாறு
நோற்றதுபோல் - தவம் செய்து உயர்ந்தமைபோல
நாணம் - (பெண்களுக்கே உரிய) நாணம் என்னும் பெருங்குணமும்
நோற்று உயர்ந்தது - தவம் செய்து மேன்மை பெற்றது;
இவள் - இந்தச் சீதை
ஈண்டு - இவ்வசோகவனத்தில்
மாண - சிறப்பாக
நோற்று இருந்த - (கணவனையே எண்ணியிருத்தல் ஆகிய) தவத்தைச் செய்து கொண்டிருந்த
ஆறு எலாம் - வகைகளை எல்லாம்
அவன் - அவ்விராமபிரான்
கமலக் கண்களால் - செந்தாமரைபோன்ற தம் கண்களால்
காண நோற்றிலன் - பார்ப்பதற்குத் தவஞ் செய்திலன்.

கருத்து : சீதா தேவி இவ்வுலகில் அவதரித்தமையால் குடிப்பிறப்பும், பெண் தன்மையும், நாணமும் ஆகிய இவைகள் உயர்வு பெற்றன. இவ்வசோக வனத்தில் தேவி நோற்கும் இவ்வரிய நோன்பினை இராமபிரான் காணத் தவம் செய்யவில்லையே! 'என்று அனுமன் கருதினன்.

விளக்கம்

சீதையின் கற்புச் சிறப்பால் பெண் குலத்துக்கே பெருமை ஏறபட்டது. உயர்குடிப் பிறப்பிற்கும், பெணகளின் சிறந்த பண்பாகிய நாணத்திற்கும் சிறப்பு உண்டாயிற்று. ஆதலால் அக்குணங்கள் தவம் செய்து அவ்வுயர்வைப் பெற்றன என்று கூறுகின்றார்.

இராமபிரான் தன்னைப் பிரிந்த சீதை வருந்தித் தன் நினைவாகவே தவம் செய்யும் இந்நிலையைக்காணின் பெருமகிழ்ச்சி கொள்வார், அப்பெரு மகிழ்ச்சியை அவர் அடைவதற்கு வாய்ப்பு இல்லாமையால் 'காண நோற்றிலன்' என்று அனுமன் கூறினன்.

இலக்கணம் : நோற்று + ஈண்டு + இவள் + இருந்த = நோற்றீண்டிவளிருந்த. நோற்றிலன் — எதிர் மறைவினைமுற்று. நோல்-

பகுதி; ல் ற் ஆகத்திரிந்தது சந்தி; ற்—இறந்த கால இடைநிலை இல்—எதிர்மறை இடைநிலை; அன்—விகுதி. கமலக்கண்கள்—உவமத்தொகை.

21. சீதையின் கற்பின் காவலைப் புகழ்தல்

பதவுரை

தருமமே காத்ததோ - (சீதையின் மனநிலை தவறுமல்) அறம்தான் பாதுகாத்ததோ?
சனகன்- (அல்லது) சீதையின் தந்தையாகிய சனகமகாராசனது
நல்வினைக்கருமமே - நல்வினைச் செய்கையே
காத்ததோ -பாதுகாத்ததோ? (இவையன்றி)
கற்பின் காவலோ -(சீதையின்) கற்பினால் காக்கும் காவல் தானோ?
அருமையே அருமையே - (இத்தகையதொரு காவல்) மிக்க அருமையானதே!
ஆர் இது ஆற்றுவார் - யார் இவ்விதம் பொறுக்கவல்லவர்?
எம்மனோர்க்கு - எம்போன்றவரால்
ஒருமையே - யாதொருவிதத்தாலாவது
உரைக்கற்பாலதோ - புகழ்ந்து கூறுதல் இயலுமோ? (இயலாதாம்.)

கருத்து: சீதையின் மனநிலை கெடாமல் அறம்தான் காத்ததோ? அன்றிச் சனக மகாராசன் செய்த நல்வினைதான் காத்ததோ? அல்லாமல் சீதையின் மனவலிமைதான் காத்ததோ? யார் இத்தகைய நோன்பினை ஆற்றவல்லவர்! இவளுடைய தவவலிமையை எம்போன்றவரால கூறல் இயலுமோ? (இயலாது)

விளக்கம்

சீதாதேவியின்மீது ஆசைகொண்டு தூக்கிவந்த இராவணன் அவளை நெருங்கவும் முடியாதபடி தருமம்தான் பாதுகாத்திருக்க வேண்டும் என்று அனுமன் கருதினன். அவ்வாறு அறம் காப்பதற்குச் சீதையின் தந்தையாகிய சனக மகாராசன் செய்த நல்வினையே காரணமாகும். ஆதலால் சனகன் நல்வினைக் கருமம் காத்தது என்று அடுத்தபடியாக நினைத்தான். சனகன் நல்வினை செய்திருந்தாலும் சீதையின் மனம் திரும்பியிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நினைத்தவுடன் அறம், சனகன் நல்

வினை இவற்றிற் கெல்லாம் மேலாகச் சீதாதேவியின் மனத்திண்மையே அவளைக் காத்தது என்றும் அனுமன் கருதினன். அனுமனின் மனநிலைமையைப் படிப்படியாகக் கவிஞர் கூறும் திறம் அறிந்து இன்புறத் தக்கது.

இலக்கணம்: முதல் மூன்று ஓகாரங்கள் ஐயப்பொருளில் வந்தன. அருமையே அருமையே—அடுக்குத்தொடர் (மிகுதிப்பொருளில் வந்தது) உரைக்கற்பாலதோ - ஓகாரம் எதிர் மறைப் பொருளில் வந்தது.

22. தீவினை அறத்தை வெல்லுமோ?

பதவுரை

அல்லினும் பகலினும் - இரவிலும் பகலினும் (எப்பொழுதும்,
அமரர் - தேவர்கள்
ஆள் செய்வார் - அடிமைத் தொழில் புரிவர்;
செல்வமோ - இராவணனின் செல்வச் சிறப்போ
அது - அப்படிப்பட்டது;
இவர் தீமையோ - (இராவணனால் ஏவப்பட்ட) இவ்வரக்கியர் செய்யும் கொடுமையோ
இது - இப்படிப்பட்டது;
ஒருவர்க்கு- (சீதையைத் தவிர) வேறொருவருக்கு இத்தகைய சூழ்நிலையில்
ஈது - இவ்வாறு கற்புத்தவறு திருத்தல்.
ஒல்லுமோ - இயலுமோ? (இயலாது)
இனி - இனிமேல்
உறுகண் - (சீதைக்கு நேரக்கூடிய) துன்பம்
யாது - யாது உள்ளது? (ஒன்றும் இல்லை)
தீவினை - பாவம்
அறத்தை - தருமத்தை
மெய்ம்மையால் - உண்மையாக
வெல்லுமோ - வெற்றிகொள்ள வல்லதோ? (அன்று)

கருத்து; இராவணன் தேவரையும் ஏவல் கொள்ளும் செல்வச்சிறப்புடையவன்; அவனால் ஏவப்பட்ட அரக்கியர்களோ மிகவும் கொடியவர்கள். இச் செல்வச் சிறப்பையும் மதியாமல், கொடுமையையும் பொருட்படுத்தாமல் கற்பைப் போற்றி வாழும் உயர் பண்பு சீதாதேவியைத் தவிர வேறொருவருக்கு இயலுமோ? இதைவிடச் சீதாதேவிக்கு ஏற்படக்கூடிய துன்பம் இனி உண்டோ? அறத்தைத் தீவினை வெல்ல முடியுமோ? (முடியாது) அதுபோல அறவடிவினளாகிய தேவியைத் தீவினையாளனாகிய இராவணன் ஒன்றும் செய்ய இயலாது என்று அனுமன் கருதினன்.

விளக்கம்

இராவணன் பெருஞ் செல்வச் சிறப்புடையவன். தேவர்கள் அவன் அரண்மனையில் அவன் ஏவிய பணிகளைச் செய்யும் பணியாளராயுள்ளனர். இத்தகைய செல்வச் சிறப்பு பெண்களின் மனத்தை நெகிழச் செய்யும் இயல்பு வாய்ந்தது. அத்தகைய நிலையிலும் தேவி தன் கற்புத் தன்மையைக் காத்து வாழ்ந்தது அவள் மனவலிமையை நன்கு விளக்குகின்றது.

அரக்கியர் இராவணன் எண்ணத்துக்கு இயையுமாறு சீதாதேவியைக் கொடுமைப் படுத்துவதற்கோ எல்லையே இல்லை. இவ்வளவு கொடுமைகளைச் சகிக்க முடியாமல் இறத்தலோ அன்றி இணங்குதலோ செய்வதே பெண்களுக்கியற்கையாக இருக்க, புலிக்கூட்டம் போன்ற அரக்கியரிடையே தனியளாய்த் துன்புற்று அக்கொடுமைகளைச் சகித்துக்கொண்டு இராமபிரானின் வரவை எதிர் நோக்கி உயிர் வாழ்ந்து கற்பைப் போற்றுதல் மிகவும் அரியதாதலின் அனுமன் சீதாதேவியின் மனவலிமையைப் புகழ்வதுடன் இனி எத்தகைய துன்பமும் அன்னையை ஒன்றும் செய்ய இயலாது என்றும் கூறுகின்றான்.

அது, இது என்று அனுமன் தான் நேரில் கண்ட செல்வச் சிறப்பையும், கொடுமையையும் சுட்டிக் கூறுகின்றான்.

இலக்கணம்: ஆள் + செய்வார் = ஆட்செய்வார், ஒல்லுமோ வெல்லுமோ — ஓகாரங்கள் எதிர்மறைப் பொருளில் வந்தன, அமரர் — **காரணப்பெயர்** (மரணமில்லாதவர் என்ற காரணம் பற்றி வந்தது) செல்வமோ—ஓகாரம் **உயர்வு சிறப்பு.** தீமையோ—ஓகாரம் இழிவு சிறப்பு.

IV. இக்காலச் செய்யுள்

1. குசேலோ பாக்கியானம்

பெயர்க்காரணம் : குசேல + உபாக்கியானம் = குசேலோபாக்கியானம். குசேலருடைய சரித்திரத்தைக் கூறும் நூல் என்பது இதன் பொருள். குசேலன் — கிழிந்த ஆடையை அணிந்தவன். உபாக்கியானம் - கிளைக்கதை. பாகவதம் என்ற கண்ணபிரானின் வரலாற்றைக் கூறும் நூலில் இது கிளைக்கதையாகக் கூறப்

பட்டிருக்கிறது. அக்கதையே விரிவாக எழுதப்பட்ட நூலாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது.

ஆசிரியர்: வல்லூர்த் தேவராசப் பிள்ளை.

தந்தையார்: வீராசாமிப் பிள்ளை.

ஊர்: தொண்டைநாட்டில் உள்ள வல்லூர்

மரபு: கருணீகர் மரபு (கணக்காயர்)

காலம்: சுமார் நூறு வருடங்களுக்குமுன் வாழ்ந்தவர்.

(கி. பி. பத்தொன்பதாம் நூற்றூண்டின் இடைப் பகுதி)

இப்புலவர் பாகவதத்தில் உள்ள குசேலர் சரித்திரத்தையும், தெலுங்கு மொழியில் வரகவி என்பவர் இயற்றிய குசேலோபாக்கியானத்தையும் தழுவித் தமிழில் நவரசமும் அமைய இந்நூலை 773 பாடல்களால் பாடியுள்ளனர். இந்நூல் சொற்சுவை, பொருட்சுவைகளுடன் கற்பவர்க்கு எளிமையும் இனிமையும் அமைந்தது. இந்நூல் மனைவி கணவனை எத்தகைய நிலையிலும் வெறுத்தல் கூடாது. பயனை விரும்பாது இறைவனிடம் பக்தி செலுத்தவேண்டும். பெருஞ்செல்வராயிருந்தாலும் தம் முடைய இயல்பிலிருந்து மாறக்கூடாது என்பன போன்ற உண்மைகளைச் சுசிலை, குசேலர், கண்ணபிரான் ஆகியவர்களைக் கொண்டு முறையே விளக்கிக் காட்டும் அரிய நூலாம்.

இது 1. குசேலர் மேல்கடலடைந்த அத்தியாயம், 2. குசேலர் தம் நகர்ப்புற மடைந்த அத்தியாயம், 3. குசேலர் வைகுந்த மடைந்த அத்தியாயம் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. நம்பாடப் பகுதி முதற் பிரிவில் வந்துள்ளது.

குசேலரது இல்லற வாழ்க்கை

குசேலர் தம் மனைவி சுசிலை என்பவளுடன் நடத்திய இல்லற வாழ்க்கையைப் பற்றியும், அதில் ஏற்பட்ட இன்னல்களைப் பற்றியும் கூறும் பாடல்கள் நமக்குப் பாடமாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளன.

1. சுசீலையின் குண நலன்கள்

பதவுரை

மாசு இலா - (குசேலர் மனைவியான சுசிலை என்பவள்) குற்றம் சிறிதும் இல்லாத

குலத்து வந்தாள் - உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவள்;

வரு விருந்து - தம்மை நாடி

வரும் விருந்தினரை
உவப்ப - மகிழ்ச்சியடையுமாறு
ஊட்டும் - அவர்களுக்கு உண வளித்து உபசரிக்கின்ற
நேசம் மிக்குடையாள்-பேரன்பு மிகக் கொண்டவள்;
கொண்கன் - தன் கணவ னுடைய
நினைப்பு அறிந்து - எண்ணத் தைத் தெரிந்துகொண்டு
ஒழுகு நீராள் - நடந்துகொள் ளும் உயர்ந்த ஒழுக்க முடை யவள்;
தேசு உறு - புகழ் பொருந்திய (புகழுக்குரிய)
வாய்மை உள்ளாள்-உண்மைக் குணம் நிறைந்தவள்;
சினந்திடல் என்றும்இல்லாள்- எப்பொழுதும் கோபம் என் பது சிறிதும் இல்லாதவள்;
பேசு திண் கற்பு வாய்ந்தாள் - உயர்வாகப் பேசுகின்ற உறு தியான கற்பு நெறியுடை யவள்;
பெற்றதே கொண்டு - தன் கணவன் விரும்பி அளிக்கத் தான் பெற்றதையே பெரி தாகக் கருதி
உவப்பாள் - மன மகிழ்ச்சி கொள்பவள்.

கருத்து: குசேலருடைய மனைவியான சுசீலை என்பவள் குற்ற மற்ற உயர்குலத்தில் பிறந்தவள்; விருந்து போற்றும் பண்புடைய வள்; கணவன் கருத்தறிந்து நடக்கும் ஒழுக்கம் உடையவள்; உண்மைக்கு உறைவிடமானவள்; கோபம் அறியாதவள்; உறுதியான கற்புவாய்ந்தவள்; வருவாயறிந்து செலவுசெய்யும் மாண்புடையவள்.

விளக்கம்

இல்லற வாழ்க்கையை ஏற்று நடத்தும் பெண்டிர் வாய்மைக் குணம், சகிப்புத்தன்மை, கணவன் கருத்தறிந்து நடக்கும் இயல்பு, விருந்ினரை உபசரிக்கும் பண்பு ஆகிய நற்குணங்கள் யாவும் வாய்ந்தவராய் இருத்தல்வேண்டும். இத்தகைய உயர் பண்புகள் யாவும் உயர்குடிப்பிறந்த பெண்களுக்கே அமைவதாம்.

சுசீலை மேற்கூறிய நற்குணங்கள் யாவும் ஒருசேரப்பெற்றுச் சிறந்த இல்லறத் துணைவியாக விளங்கினள் என்பதாம்.

இலக்கணம்: மாசு + இலா = மாசிலா. இலா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். விருந்து-பண்பாகுபெயர் (விருந்தினரைக் குறித்தது) உவப்ப - எதிர்கால வினையெச்சம். தேசு + உறு = தேசுறு. திண்கற்பு - பண்புத்தொகை. பெற்றது - ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்.

2. பிறரிடம் சென்று யாசிப்பதன் இழிவு

பதவுரை

பல் எலாம் தெரியக்காட்டி - பற்கள் எல்லாம் தெரியும்படி காட்டிக் கெஞ்சி
பருவரல் - தம் துன்பத்தினை
முகத்தில் கூட்டி - தம் முகத்திலேயே தெரியுமாறு தோற்றுவித்து
சொல் எலாம் சொல்லி - எவ்வளவு ஒருவனைப் புகழ்ந்து கூற முடியுமோ அவ்வளவும் கூறி
நாட்டி - அவன் புகழை நிலை நிறுத்திப் பேசி
துணைக்கரம் - தம்முடைய இரண்டு கைகளையும்
விரித்து நீட்டி - விரித்து நீட்டிக் கேட்டு
மல் எலாம் - தம்முடைய பெருமை முழுவதையும்
அகல ஓட்டி - தம்மைவிட்டு நீங்குமாறு செய்து
மானம் என்பதனை - மானம் என்ற அருங்குணத்தை
வீட்டி - கொன்று (மானமிழந்து)
இல் எலாம் இரத்தல் - வீடுகள் தோறும் சென்று யாசித்தல்
அந்தோ - ஐயோ
எந்த ஞான்றும் - எப்பொழுதும்
இழிவு இழிவு - மிக்க இழிவைத் தருவதாகும்.

கருத்து: தம் பற்கள் எல்லாம் தெரியுமாறு தம் துன்பத்தினை முகத்தில் தோற்றுவித்து, அவர்களைப் பலவாறு புகழ்ந்து பேசிக் கைகளை நீட்டி; பெருமை, மானம் இவைகளை இழந்து வீடுதோறும் சென்று பிறரிடம் யாசிப்பது மிகவும் இழிந்த செயலாகும்.

விளக்கம்

இச்செய்யுள் இரத்தலின் கொடுமையை நன்கு சித்திரிக்கின்றது. ஒருவரிடம் சென்று ஒரு பொருளை யாசிப்பவர் தம் பற்கள் தோன்றக் கெஞ்சி, முகத்தில் தம் வறுமைத் துன்பத்தைத் தோற்றுவித்து அவர்களைப் பலவாறு புகழ்ந்து பேசித் தம் மானத்தையும் பெருமையையும் இழந்து நிற்க வேண்டியுள்ளது. அது மிக மிக இழிவானதாகும். 'ஈ யென இரத்தல் இழிந்தன்று' என்று பண்டைப் புலவர் கூறியதும், 'ஏற்பது இகழ்ச்சி' என்று ஔவையார் கூறியதும் இங்கு நினைவுகூரத்தக்கன. சொல் எலாம் சொல்லி நாட்டி - தன் வறுமைத் துன்பத்தைப் பலவாறு எடுத்துக்கூறி அதனை நிலைநிறுத்திக்காட்டி என்றும் பொருள் கூறலாம்.

இலக்கணம்: பருவரல் - தொழிற் பெயர். விட்டி - வினையெச்சம். விட்டு - பகுதி. அந்தோ - இரக்கப்பொருள் தரும் **இடைச் சொல்.** இழிவு இழிவு - **அடுக்குத் தொடர்** மிகுதிப்பொருளில் வந்தது.

3. குசேலர் குடும்பம் அடைந்த வறுமை

பதவுரை

இருநிலத்து - இப் பெரிய உலகத்தில்
யாவர்கண்ணும் - யாவரிடத்தும் சென்று
ஏற்பதை - யாசிப்பதை
இகழ்ச்சி என்ன - இழிவான செயல் என்று கருதி
ஒருவிய - நீக்கிய
உளத்தான் - மனதையுடைய வணுகிய குசேலன்
காட்டில் உதிர்ந்து - வனத்தில் தானாக உதிர்ந்து
கொள்வாருமின்றி - எடுத்துச் செல்வார்ஒருவரும்இல்லாமல்
அருகிய - காய்ந்து சுருங்கிக் கிடக்கின்ற
நீவாரப் புல் தானியம் - வனநெல்லாகிய புல்லரிசியை
ஆராய்ந்து ஆராய்ந்து - நன்றாகத் தேடி
உருவ ஒண்ணகத்தால் - அழகிய தன் ஒளிபொருந்திய நகங்களால்
கிள்ளி எடுத்து - ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்து
உடன் சேரக் கொண்டு-எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து எடுத்துக் கொண்டு

கருத்து: இவ்வுலகில்பிறரிடம் சென்று யாசிப்பதை இழிவெனக்கருதிய குசேலமுனிவர் காட்டில்கொள்வாரின்றிக்காய்ந்து உதிர்ந்து போகும் புல்லரிசிகளைத் தேடிக்கொண்டு வந்தார்.

விளக்கம்

காட்டில் தாமாக உதிரும் தானியங்களைச் சேகரித்துவந்தார் என்பதிலிருந்து குசேலர் ஓரறிவுயிர்களாகிய செடி கொடிகளிடத்தும் கொண்டிருந்த அருள் உள்ளம் நன்கு விளங்கும்.

கொள்வாரின்றி உதிர்ந்த தானியங்களைப் பொறுக்கிக் கொண்டுவந்தார் என்றமையால் அவருடைய தன்னலம் கருதாத் தன்மையும் நன்கு விளங்குகிறது. பிறர்க்குப் பயன்படுகிறதாயின் அதனையும் ஒழித்திருப்பார் என்க.

உருவ என்பதற்குத் தன் நகத்தால் உருவி எடுத்தார் என்னும் பொருள் கூறலாம்.

நீவாரப்புல்: குளங்கட்கு அருகில் விளைவிப்பார் ஒருவரும் இன்றித் தாமாவே முளைத்து நெல்லையளிக்கும் ஒருவகைப்பயிர். இப்பயிரினின்றும் தோன்றும் நெல்லைக் குளநெல் என்றும் கூறுவர்.

இலக்கணம்: இருநிலத்து+யாவர் = இருநிலத்தியாவர்: இ—**குற்றியலிகரம்;** ஒருவிய—பெயரெச்சம்; (ஒருவு+இன்+அ) ஒருவு—பகுதி; இன்—இறந்தகால இடைநிலை; ('ன்' கெட்டு 'இ' மட்டும் நின்றது.) அ—பெயரெச்ச விகுதி. உளத்தான்—**குறிப்பு வினையாலணையும் பெயர்.** கொள்வாரும்-உம்மை **இழிவுசிறப்பு;** நீவாரப்புல்—நீவாரமாகிய புல் என விரியும்; **இருபெயரொட்டுப் பண்புத் தொகை;** ஆராய்ந்து ஆராய்ந்து—அடுக்குத்தொடர்; (பன்மைப் பொருளில் வந்தது) ஒண்மை+நகம் = ஒண்ணகம்—**பண்புத் தொகை.** சேரக்கொண்டு வந்து என்று அடுத்த பாட்டோடு இயைதலின் இப்பாட்டு **குளகம்.**

4. குசேலரின் கவலையற்ற வாழ்வு

பதவுரை

வந்து - குசேலர் அப் புல்லரிசியைக் கொண்டு வந்து
மனை கை நீட்ட - மனைவியின் கையில் தர
அந்த மெல்லியல் -அந்த மென்மைத் தன்மை வாய்ந்த மனைவியாகிய சுசீலை
வாங்கி - அதனைப் பெற்று
அவற்றைக் குற்றி - அத்தானியங்களைக் குற்றி உமிநீக்கி
பாகம் செய்து - சுவையான உணவு சமைத்து
அதிதிக்கு ஓர் பாகம் வைத்து- தம்மை நாடிவரும் விருந்தினர்க்கு ஒரு பகுதிவைத்துவிட்டு
தந்த தன்பங்கு - தனக்கு அளித்த தன் பங்கு உணவை
அயின்று - உண்டு
தவல் அரும் - கெடுதல் இல்லாத
உவகைபூத்து - மகிழ்ச்சி நிரம்பப் பெற்று
மந்திர மறைகட்கு - மந்திரங்களுக்கும், வேதங்களுக்கும்
எட்டா - எட்டாத (அவைகளால் அடைய முடியாத)
மாலடி - திருமாலின் திருவடிகளை
நினைந்து இருப்பான்-(குசேலர்) வழிபாடு செய்து கொண்டு வாழ்ந்து வருவாராயினர்.

கருத்து: குசேலர் அப் புல்லரிசியைக் கொண்டுவந்து மனைவியினிடம் அளிக்க, அவ்வம்மையார் அதனை வாங்கிப் பக்குவப் படுத்தி உணவு சமைத்து விருந்தினர்க்கு ஒரு பங்கு வைத்து

விட்டுத் தனக்கென்று கொடுத்த பங்கை உண்டு, மிக்க மகிழ்ச்சியோடு இறைவனை வழிபட்டு வாழ்ந்து வருவாராயினர்.

விளக்கம்

தம் குடும்பம் வறுமையால் வருந்துகின்ற மிக்க துன்ப நிலையிலும் தம்மை நாடிவரும் அதிதிகளைக் காப்பாற்ற வேண்டிய கடமையை மறவாமல் அதிதிக்கோர் பங்கு வைத்து மிகுந்ததை உண்டனர் என்றமையால் குசேலர், சுசிலை என்பவர் தம் உயர் குணம் நன்கு விளங்கும்.

தமக்குக் கொடுத்த சிறு பகுதி உணவையே உண்டு திருப்தி கொண்டுசிறிதும் மனக்கவலையின்றித் திருமாலிடம் பக்தியில் மூழ்கிக்கிடந்தார் குசேலர் என்றதால் அவருடைய பற்றற்ற தன்மையும், திருப்தியான மனமும், கடவுட் பக்தியும் நன்கு விளங்கும். எத்தகைய் வறுமை நிலையிலும் திருமாலை வழிபடுதலை மறத்தலாகாது என்ற உண்மையைக் குசேலருடைய இக்குணத்தால் நாம் நன்கு உணரலாம்.

இலக்கணம்: மனை கை—ஆறும் வேற்றுமைத் தொகை. கை நீட்ட—கையில் நீட்ட என விரிதலின் **ஏழாம் வேற்றுமைத் தொகை.** மெல்லியல்—பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த **அன்மொழித் தொகை;** அயின்று — வினையெச்சம்; அயில்—பகுதி; ற்—இடை நிலை; உ—வினையெச்ச விகுதி; மந்திரமறை - மந்திரமும் மறையும் எனவிரிதலின் **உம்மைத்தொகை.** எட்டா-ஈறுகெட்ட **எதிர்மறைப் பெயரெச்சம்.**

5. சுசீலையின் பெருந் துன்பம்

பதவுரை

ஒருமகவுக்கு- ஒரு குழந்தைக்கு
அளித்திடும்போது - உணவு கொடுக்கும்போது
ஒரு மகவு - வேறொரு குழந்தை
கை நீட்டும்- தனக்கும் உணவு வேண்டு மென்று கை நீட்டிக் கேட்கும்;
முந்தி மேல் வீழ்ந்து - அந்தக் குழந்தையைத் தள்ளி முந்திக்கொண்டு மேலேவிழுந்து
இருமகவும் கை நீட்டும் - வேறு இரு குழந்தைகளும் உணவுக்காகக் கை நீட்டும்;
மும் மகவும் கைநீட்டும் - மற்றும் மூன்று குழந்தைகளும் உணவு கேட்கும்;
என் செய்வாள் - பாவம் சுசிலை எளிய அந்த உணவைக் கொண்டு யாது செய்வாள்?
ஒரு மகவு - ஒரு குழந்தை

பொருமி அழும் - (உணவு கிடைக்காமையால்) விம்மி விம்மி அழும்;
மற்று ஒரு மகவு - மற்றொரு குழந்தை
கண் பிசைந்து அழும் - கண் களைக் கையால் பிசைந்து அழும்;
மற்று ஒரு மகவு - வேறொரு குழந்தை
பெருநிலத்தில் - பெரிய பூமி யில்
புரண்டு விழா - புரண்டு வீழ்ந்து
கிடந்து அழும் - அங்ஙனமே கிடந்து அழும்;
எங்ஙனம் சகிப்பாள் - சுசீலை இந்தத் துன்பத்தை எவ் வாறு பொறுத்துக்கொள் வாள்?
பெரிதும் பாவம் - அவள் நிலை மிகவும் வருந்தக்கூடியதாம். (ஆல் - ஆசை)

கருத்து: சுசீலை ஒரு குழந்தைக்குச் சிறிது உணவு கொடுக்க முற்பட்டால் மற்றொரு குழந்தை கை நீட்டும்; வேறு இரு குழந் தைகள் தள்ளிக்கொண்டு மேல் விழுந்து உணவு பெறத் துடிக் கும்; மற்றும் மூன்று குழந்தைகள் அவர்களினும் முற்பட்டுக் கைநீட்டும். பாவம் சுசீலை என் செய்வாள்! உணவு கிடைக்கா மையால் ஒரு குழந்தை விம்மி அழும்; மற்றொன்று கண்களைப் பிசைந்துகொண்டு அழும்; வேறொன்று பூமியில் விழ்ந்து புரண்டழும். சுசீலை இத் துன்பங்களை எங்ஙனம் சகிப்பாள்! அவள் நிலை மிகவும் வருந்தத்தக்கதாகும்.

விளக்கம்

சுசீலை வறுமையின் மிகுதியால் தன் குழந்தைகளுக்கும் போதிய அளவு உணவு அளித்துக் காக்க முடியாத நிலையில் உள்ளதைக் கவிஞர் உள்ள முருக எடுத்துக் கூறுகிறார். குழந்தைகளின் இயல்பை உள்ளது உள்ளவாறு எடுத்துக் கூறும் திறம் பாராட்டற்குரியதாம். இது **தன்மை நவிற்சியணி யாம்.**

தன்மை நவிற்சி யணியாவது உள்ளதை உள்ளவாறே புனைந்துரை கலவாமல் எடுத்துக் கூறுவதாகும்.

இலக்கணம்: இரண்டு + மகவு—இருமகவு; மூன்று + மகவு = மும்மகவு. விழா— **செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்;** உடன் பாட்டுப் பொருளில் வந்தது. (வீழ்ந்து என்று பொருள் படும்) பெருநிலம்—பண்புத்தொகை.

6. சிறுவர் செயல்

பதவுரை

ஓர் சேய் - ஒரு குழந்தை
அந்தோ - ஐயோ!
என் வயிற்று எழுந்த - என் வயிற்றில் ஏற்பட்ட
பசி அடங்கிற்று இல்லை என - பசி சிறிதும் அடங்கவில்லை என
அழும் (ஆல்) - வருந்தியழும்;
ஓர் சேய் - மற்றொரு குழந்தை
அன்னாய் - தாயே!
சிந்தாத கஞ்சி—கீழே சிந்தாத கஞ்சியாகிய உணவினை
எனக்கு வார்க்கிலை என-எனக்கு வார்க்கவில்லை என்று
பொய் செப்பும் - பொய் கூறும்!
ஓர் சேய் - மற்றொரு குழந்தை
முந்து ஆர்வத்து - (மற்றொரு முறை)முன்னேவாங்கவேண்டும் என்ற விருப்பத்தால்
மிசையப் புகும்போதினில்-தன் கையில் உள்ள உணவினை உண்ணத் தொடங்கும் போது
ஒரு சேய் - மற்றொரு குழந்தை
முடுகி ஈர்ப்ப - (அதனை) விரைந்து இழுக்க
மற்று அச்சேயும்-அந்த (உணவினை உண்ணத் தொடங்கிய குழந்தையும்
நந்தா - சிறிதும் இளைக்காமல்
எதிர் ஈர்ப்ப - எதிரே பற்றி இழுக்க
சிந்துதற்கு - இரண்டு குழந்தைகட்கும் கிடைக்காமல் கீழே சிந்தும் கஞ்சிக்கு
ஓர் சேய் - வேறொரு குழந்தை
நயக்கும் - ஆசைப்படும்.

கருத்து: ஒரு குழந்தை தன் தாயை நோக்கி ஐயோ, என் பசி அடங்கவில்லையே என்று அழும்; மற்றொரு குழந்தை எனக்குக் கஞ்சி வார்க்கவில்லையே என்று பொய் கூறும்; மற்றொரு குழந்தை தான் பெற்ற கஞ்சியை ஆசையுடன் உண்ணும்போது வேறொரு குழந்தை அதனைத் தான் உண்ண ஆசைப்பட்டுக் கையைப் பிடித்து இழுக்கும். அந்தக் குழந்தையும் அதற்குச் சளைக்காமல் தன்பக்கம் இழுக்கும். இவ்வாறு இரண்டு குழந்தைகளும் போட்டியிடுவதனால் கீழே சிந்தும் கஞ்சியை வேறொரு குழந்தை விரும்பியுண்ணும்.

விளக்கம்

இங்ஙனம் குழந்தைகளின் வயிறு நிரம்ப உணவளிக்க முடியாத நிலையில் சுசீலை பலநாட்கள் துன்புற்றாள். அத்துன்ப மிகுதியே அவள் குசேலரைக் கிருஷ்ணபரமாத்மாவிடம் பொருள்

பெற்று வரத் தூண்டக் காரணமாயிருந்தது என்பதை விளக்கவே கவிஞர் குழந்தைகளின் இவ்வறுமை நிலையை உருக்கமாகக் கூறுகிருர்.

இலக்கணம்: அந்தோ—இரக்கப் பொருள் தரும் **இடைச்சொல்.** வயிறு + எழுந்த = வயிற்றெழுந்த ('நெடிலோடு உயிர்த் தொடர்க்குற்றுகரங்களுள், டற வொற்றிரட்டும் வேற்றுமை மிகவே' என்ற விதியால் வயிறு என்பது வயிற்று என்ருகிப் புணர்ந்தது) அடங்கிற்று + இல்லை = அடங்கிற்றில்லை; அன்னை என்ற சொல் விளியேற்று **அன்ஞய்** என நின்றது. ஈர்ப்ப—வினையெச்சம்; ஈர்—பகுதி; ப்—சந்தி; ப்—எதிர்கால இடைநிலை; அ—வினையெச்ச விகுதி; நந்தா—**ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்** (நந்தாது என்பதில் 'து' கெட்டு வந்தது) சிந்துதற்கு—**தொழிலாகு பெயர்.**

7. ஒரு குழந்தையைச் சுசீலை சமாதானப்படுத்தல்

பதவுரை

அன்ஞய் - தாயே!
அடுத்த மனேச்சிருன்-அடுத்த வீட்டுச் சிறுவன் ஒருவன்
இன்று நுமது அகம் - இன்று உங்கள் வீட்டில்
கறி என் அட்டார் என்று - என்ன கறி சமைத்தார்கள் என்று
தொடுத்து வினவினன் - தொடர்ந்து பலமுறை கேட்டனன்;
அச்சொல் பொருள்யாது - கறி என்ற அந்தச் சொல்லின் பொருள்யாது?
அதுதான் எச்சுவைத்து-அது எந்த ருசியையுடையது?
நீ எடுத்து உரை-நீ எடுத்துக் கூறுவாயாக;
என்றிடும் மகவுக்கு - என்று கூறுகின்ற இளங் குழந்தைக்கு
உரைக்கில் - கூறினல்
அது செய் எனில் - அதனை எனக்குச் செய்து தருக என்று கேட்டால்
என் செய்வோம் என்று-என்ன செய்வோம் என்று எண்ணி
மடுத்த அஃது - அவர்கள் சமைத்த அக்கறியாது என
அறிந்திலேன் என - தெரிந்திலேன் என்று
மற்று ஒன்று உரைத்து - (அக்குழந்தையின் கவனம் திரும்புமாறு) வேருென்றைப் பற்றிப் பேசி
அதனை மறக்கச் செய்வாள் - அவ்வெண்ணத்தை மறக்குமாறு செய்வாள் சுசீலை.

(ஆல் - அசை)

கருத்து: ஒரு குழந்தை, தாயே! அடுத்த வீட்டுச் சிறுவன் இன்றுஉங்கள் வீட்டில் என்ன கறி என்று அடிக்கடி கேட்கின்றான். கறி என்றால் என்ன? அஃது எந்தச் சுவையை உடையது? என்று கேட்டது. அக்குழந்தைக்கு விவரம் கூறினால் அஃது அக்கறியைச் செய்து தருமாறு கேட்டால் என்ன செய்வது என்று அஞ்சிய சுசீலை அஃது எனக்குத் தெரியாது என்று உரைத்து வேறு விஷயத்தைப் பற்றிப் பேசிக் குழந்தை அதனை மறந்து விடுமாறு செய்வாள்.

விளக்கம்

இம்மூன்று செய்யுட்களும் சுசீலை வறுமைத் துன்பத்தால் வருந்தியதனை விளக்கிக்கூறுவனவாம். கறி என்றால் என்ன என்றும் தெரியாத அளவுக்கு அவ்வீட்டில் வறுமை நிலவியது என்பதனை ஆசிரியர் குழந்தையின் செயல்மூலம் அழகாக விளக்கியுள்ளார்.

குழந்தை பிடிவாதம் பிடிக்கும்போது அதன் கவனத்தை மாற்ற வேறொன்று கூறி மறக்கச்செய்யும் உலக இயல்பை ஆசிரியர் இச்செய்யுளில் அமைத்துள்ள திறம் பாராட்டற்குரியது.

இலக்கணம்; என் + அட்டார் = என்னட்டார்; (தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்பதுவிதி) அன்னாய்-விளி. மழ - இளமை என்னும் பொருள் தரும் உரிச்சொல். 'மழவும் குழவும் இளமைப்பொருள' என்பது தொல்காப்பியம். அறிந்திலேன் - தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று.

2. பாஞ்சாலி சபதம்

இது பாஞ்சால தேசத்து அரசன் மகளும், பாண்டவரின் மனைவியுமான பாஞ்சாலி (திரௌபதி) துரியோதனனுடையரால் அரசவைக்கு இழுத்துச் செல்லப்பட்டுத் துச்சாதனனால் துகிலுரியப்பட்டபோது சினந்து கூறிய சபதத்தினை விளக்கும் ஒரு காவியமாகும். மகாபாரதத்தில் வரும் இக்கதைப்பகுதி மட்டும் ஒரு காவியமாகப் பாடப் பட்டுள்ளது.

ஆசிரியர்: வரகவி. சுப்பிரமணிய பாரதியார்.

பிறப்பிடம்: எட்டயபுரம்

தந்தை: சின்னசாமி ஐயர்

தாய்: இலக்குமி அம்மாள்

குலம்: அந்தணர்

காலம்: 1882-ஆம் ஆண்டில் பிறந்தார். 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் தேதி இறந்தார்.

கல்வி: தந்தையார் சமஸ்தான வித்துவானக இருந்த எட்டயபுரத்தில் இளமையில் சிலகாலம் கல்வி பயின்றார். பின்னர், திருநெல்வேலியில் ஆங்கிலக் கல்வி கற்றார். ஆயினும் இவரது மனம் ஆங்கிலக் கல்வியில் ஈடுபடவில்லை. திடீரென்று இவர் தந்தையார் காலமாயினமையால், காசியிலிருந்த தம் உறவினரோடிருந்து வட மொழியையும் பயின்று முதல்வராகத் தேறினர். அங்கு நீண்டகாலம் தங்காமல் மீண்டும் எட்டயபுரம் திரும்பினர்.

பெயர்க் காரணம்: அவர் பன்னிரண்டாம் வயதிலேயே கவி பாடும் திறமையுற்றிருந்தார். புலவர் ஒருவர் இவரது திறமையை வியந்து, 'நீ சாதாரணமானவனல்லன்! நீ ஒரு பாரதியே!' என்று புகழ்ந்தமையால் அன்று முதல் இப்பெயர் பெற்றார்.

வாழ்க்கை: இவர் சில காலம் 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியராக இருந்தார். பின்னர் 'இந்தியா, 'பால பாரதம், முதலிய பத்திரிகைகளையும் இவர் தாமே நடத்தினர். சுதந்திரக் கிளர்ச்சியில் இவர் ஈடுபட்டமையால் அரசாங்கத்தார் கோபத்துக்கு ஆளாகிப் புதுச்சேரியில் வசிக்கவும், சிலகாலம் சிறையில் வசிக்கவும் நேர்ந்தது.

இவர் பெருமை: இவர் தமிழிடம் மிகப்பற்றும், நாட்டுப் பற்றும் வாய்ந்தவர். மக்களிடையே சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உணர்ச்சிகளைப் பரவச்செய்தவர் இவரே; கேட்போர் மனதைப் பரவசப்படுத்தி வீராவேசம் ஊட்டும் பாடல்களை இயற்றுவதில் இணையற்றவர்.

வேறு நூல்கள்: செய்யுள்: பாரதநாடு, செந்தமிழ் நாடு, தமிழ்த்தாய், முருகன் பாட்டு, கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, குயில் பாட்டு, முதலியன. உரை நடை: ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலியன.

நூலின் பெருமைகள்: புரட்சிக் கவிஞராகிய பாரதியார் இயற்றிய காவியம் இஃது ஒன்றேயாம். பெண்ணின் பெருமை,

அவர்கள் விடுதலை இவைகளில் நாட்டங்கொண்ட பாரதியார் பெண்ணின் ஆற்றல் எத்தகையது என்பதை விளக்கவே இக் காவியத்தை எழுதினார்போலும்! இந்நூல் எளிய இனிய உணர்ச்சி வாய்ந்த நடையில் ஒப்பற்ற காவிய அழகுகளோடு விரிவாக அமைந்துள்ளது. பாரதியாரின் சிறந்த தமிழ்ப்புலமை, கற்பனு சக்தி, உவமைத்திறம், கவி யியற்றும் வன்மை இவைகளை நன்கு விளக்கும்நூல் பாஞ்சாலி சபதம் என்று சுருங்கக்கூறலாம். பாரதியார் வெறும் ஆவேசக் கவிஞர் மட்டுமல்லர்; கம்பனைப்போல் இளங்கோவைப்போல் ஒப்பற்ற காவியக் கவிஞருமாவர் என்ப தற்கு இந்நூல் தக்க எடுத்துக்காட்டாகும்.

நம் பாடப் பகுதி: பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தம் என்னும் நகரில் அழகிய அரண்மனை அமைத்துச் சிறப்பாக வாழ்வது கண்டு பொறாமை கொண்ட துரியோதனன் எங்ஙனமேனும் அவர்களை அழிக்க வேண்டும் என்று திட்டமிட்டான். அதற்கு அவன் மாமனான மாயச் சகுனி பாண்டவர்களைப் போர் புரிந்து வெல்ல முடியாது. அவர்கள் ஒவ்வொருவரும் அளவற்ற வன் மையுடையவர்கள். தந்திரத்தினாலேயே அவர்களை வெல்ல வேண்டும். அவர்களைத் தந்திரமாக வரவழைத்து என்னோடு சூதாட ஏற்பாடு செய்தால் சூதாட்டத்தில் அவர்களைத் தோற் கடித்து அவர்கள் நாடுநகரங்களை எல்லாம்கவர்ந்து கொள்ளலாம்' என்று கூறினான். அதுவே சரி என்று கொண்ட துரியோதனன் தன் தந்தை திருதராட்டிரனிடம் தன் ஏற்பாட்டைக் கூறி னான். அது கேட்டு மனம் வருந்திய திருதராட்டிரன் துரியோத னனுக்குப் பலவாறுஅறிவுரை கூறினான். அதற்குத்துரியோத னன் கூறிய மறுமொழிகளே நமக்குப் பாடமாக வந்துள்ள பாடல் களாம்.

1. 'உழைப்பின்றி உறங்குபவர் மூடர்'

பதவுரை

ஆங்கு - அவ்வாறு
தலைவன் - தலைமை வகித்துள் ளவன் (திருதராட்டிரன்)
பிறர் கையில் - மற்றவர் கை யிலகப்பட்ட
பொம்மை-பொம்மை போன்று (சுதந்திரம் இன்றி உளான்;)
சார்ந்து நிற்பவர்க்கு - அவனை அண்டி இருப்பவர்க்கு
உய்ந்நெறி - பிழைக்கும் வழி
உண்டோ-உளதோ? (இல்லை)
திருதராட்டிர வர்க்கத்து-திரு தராட்டிரனுடைய கூட்டத் தில்

உள்ளவர்க்கு - இருப்பவர்களுக்கு
உலைவு அலால் - அழிவு அல்லாமல்
நலம் என்பது இல்லை - நன்மை எனப்படுவது உண்டாகாது;
நிலை இலாதன - நிலையற்றனவாகிய
செல்வமும் - பொருளும்
மாண்பும் - பெருமையும்
நித்தம் தேடி - நாள்தோறும் அலைந்து திரிந்து
வருந்தல் இலாமே - உழைக்காமலேயே
விலை இலா நெறி - ஒன்றை ஈடாகக் கொடுத்துப் பெறாத எளிய வழியில்
கொண்டனம் - (புகழையும் பொருளையும்) சம்பாதித்து விட்டோம்
என்றே - என்று கருதி
மெய் குழைந்து - சோம்பல் உற்று
துயில்பவர் - உறங்குபவர்கள்
மூடர் - அறிவிலிகளாவார்கள்.

கருத்து: தலைவனாகிய திருதராட்டிரன் பிறர் கையில் பொம்மை போல் சுதந்திரம் இன்றி வாழ்கிறான். அவனை அண்டியவர்களுக்குப் பிழைப்பேது? இந்நிலையில் திருதராட்டிரனது கூட்டத்தினருக்கு அழிவே யன்றி நன்மை யாதொன்றும் கிட்டாது. பொருளையும் பெருமையையும் நாள்தோறும் வருந்தித் தேடாமல் உறங்கு பவர்கள மூடரே யாவர்!

விளக்கம்

தலைவனுங்குப் பிறர் கையிற் பொம்மை: தலைவனாகிய திருதராட்டிரன் சுதந்திரமாகச் செயலாற்றாமல் விதுரன் முதலியோர் கூறுவதைக் கேட்டு நடக்கிறான் என்பதைத் துரியோதனன் குறிக்கிறான்.

பொம்மை தானாகவே ஒரு செயலும் புரியாது. அதைப் பிறர் எங்ஙனம் ஆட்டினாலும் அங்ஙனமே ஆடும். அது போன்றே திருதராட்டிரன் பிறர் கூறுவதைக் கேட்டு நடக்கிறான் எனத் துரியோதனன் தந்தையை இகழ்கிறான்.

தலைவன் சிறந்த குணங்களுடன் இருந்தால் மட்டுமே அவனைச் சார்ந்து நிற்பவர் வாழ்வு பெற்று நலம் பல அடைவர் என்னும் உயர் கருத்து அறியற்பாலது.

இலக்கணம்: உய் நெறி - வினைத்தொகை. உண்டோ - ஓகார இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் வந்தது. அலால்-

அல்லால் என்பதன் தொகுத்தல் விகாரம். விலைபிலா - இலா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கொண்டனம் - தன்மைப் பன்மை வினைமுற்று. கையில் + பொம்மை: கையிற் பொம்மை. உலைவு + அலால் + உலைவலால்.

2. 'குழைதல் என்பது மன்னவர்க் கில்லை'

பதவுரை

பழைய - முன்னோர் தேடிய
வான் நிதி - உயர்ந்த செல்வம்
போதும் - (தமக்கு) போதுமானது
என்று எண்ணி - என்று கருதி
பாங்கு காத்திடும் - மேன்மையுடன் காத்து வருகின்ற
மன்னவர் - அரசர்களுடைய
வாழ்வை - இன்ப வாழ்க்கையை
விழையும் - (மிக்க பொருளைப் பெற) விரும்பும்
அன்னியர் - பகையரசர்
ஓர் கணத்து - ஒரு நொடியில்
உற்று - படையெடுத்து வந்து
வென்று - (அவ்வரசர்களை) வெற்றி கொண்டு
அழிக்கும் - அழியுமாறு செய்யும்
விதி - அரச முறையை
அறியாயோ - அறிந்து கொள்ளவில்லையோ ?

மன்னவர்க்கு - அரசர்களுக்கு
குழைதல் என்பது - (பிறர்மீது போர் மேற் செல்ல) அஞ்சுதல் என்பது
இல்லை - இருத்தலாகாது ;
கூட கூட - பொருள் சேரச் சேர
பின் - மேலும்
கூட்டுதல் வேண்டும் - (அப் பொருளை) பெருக்குதல் வேண்டும் ;
பிறரை தாழ்த்துவதில் - பிற அரசர்களைத் தமக்கு அடங்கி இருக்குமாறு செய்வதில்
சலிப்பு எய்துதல் - தளர்ச்சி அடைதலாகிய
பிழை ஒன்றே - குற்றம் ஒன்று தான்
அரசர்க்கு உண்டு - அரசர்களுக்கு உளதாகும்;
கண்டாய் - இதனை நீ அறிவாயாக.

(ஏ-அசை)

கருத்து: முன்னோர் தேடிய பொருளே போதுமென்று திருப்தியடைந்து அரசர்கள் இன்ப வாழ்க்கை நடத்தினால் மேலும் மேலும் பொருளை ஈட்ட விரும்பும் பகையரசர்கள் ஒரு நொடியில் அவரை வென்று அழிப்பார்கள். இதுவே அரச தர்மமாகும். பிற அரசர் மேல் போர் செய்ய அஞ்சியிருத்தல் என்பது அரசர்க்குத் தகாது. அவர்கள் பொருளை மேலும் மேலும் தேடி

சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போல

வழீத முறையாம். பிற அரசரை வெல்லுவதில் சலிப்படைதலே அவரிடம் காணத்தகும் குற்றமாகும். இதனை நீ அறிவாயாக.

விளக்கம்

இங்குத் துரியோதனன் அரசர் கடமைகளைக் கூறுகிறான். முன்னோர் தேடிவைத்த அரசினை மேலும் மேலும் பெருக்க முயல்வதே பேரரசர்க்கு ஆண்மைதரும். இது போதும் என்று அரசர் சோம்பி இன்ப வாழ்க்கையை மேற்கொண்டிருந்தால் பகையரசர் அதுவே தக்க தருணம் என்று அவர் மேல் படையெடுப்பர். அதனால் மக்கட்குப் பலவகைத் துன்பங்கள் நேரும். மற்றும் "குந்தித் தின்றால் குன்றும் மாளும்," என்னும் பழமொழிப்படி மிக்க செல்வமேயாயினும் அதை மேலும் மேலும் வளர்க்க முயலாதவன் பொருளும் இன்ப வாழ்க்கையும் அழிந்து விடும். போர் மேல் செல்ல அஞ்சுதல் என்பது அரசர்க்கு அழகன்று. பிற அரசர்களை வெல்வதில் தளர்ச்சி யுறுவரேயாயின் அது பெருங் குற்றமாம்.

இலக்கணம்: அறியாயோ—ஓகார இடைச் சொல் வினாப் பொருளில் வந்தது. குழைதல், கூட்டுதல், எய்தல் - தொழிற் பெயர்கள்; எய்தல்: எய்து—பகுதி. வான் + நிதி : வாணிதி.

3. 'பகைவரை அழித்திடல் அரசர்க்கு அழகு'

பதவுரை

வெல்வது - (பிற அரசரை) வெற்றிகொள்வது
எம் குலத்தொழிலாம் - எங்கள் அரசர் மரபின் கடமையாகும்;
எந்த விதத்தினில் - (அவ் வெற்றி) எந்த வகையில்
இசையினும் - கைகூடினாலும்
தவறு இலை - குற்றம் இல்லை;
காண் - இதனை அறிவாயாக;
அதில் நாம் - அவ் வெற்றியில் நாம்
நல்வழி - நல்ல வழியால் வந்ததா?
தீய வழி - கெட்ட வழியால் வந்ததா?
என - என்று
சோதனை செய தகுமா - ஆராய்ந்து பார்த்தல் கூடுமோ? (கூடாது)
செல்வழி யாவினும் - (அரசர்) நாட்டைச் சிறப்பாகக் காக்க மேற்கொள்ளும் எல்லா வழிகளைக் காட்டிலும்
பகை தீர்த்திடல் - பகைவரை அழித்தல்
சாலும் - மிகச் சிறந்ததாகும்
என்றனர் பெரியோர் - என்று பெரியோர் கூறியுள்ளனர்.

கொல்வதுதான் - (பகையரசர்) உயிரை அழிப்பதுதான்
படையோ - (சிறந்த) ஆயுதமோ?
பகை - பகைவர்களை
குமைப்பன யாவும் - அழிப்பன எல்லாம்
நல்படை அலவோ - சிறந்த ஆயுதங்கள் ஆகாவோ? (ஆகும்)

கருத்து: பகைவரை வெல்வது பேராண்மையுற்ற அரசமரபினரின் கடமையாகும்; அவ்வெற்றி எவ்வகையில் கிட்டினும் யாதொரு குற்றமுமில்லை. நல்வழியில் கிட்டியதா தீயவழியில் கிட்டியதா என ஆராய்தல் அறியாமையாம்; எவ்வகையிலேனும் பகைவரை அழிப்பதே நன்றாம். பகைவர் உயிரைக் கொள்ளும் ஆயுதங்கள் மட்டுமே சிறந்தனவாகா. அவர்கள் தாமே அழியுமாறு செய்யும் சூழ்ச்சிகளும் சிறந்த ஆயுதங்களேயாம்.

விளக்கம்

வெற்றி ஒன்றே தம் குறிக்கோளாகக் கொண்ட அரசர்கள் எம்முறையையேனும் கையாண்டு அதனைப் பெறவேண்டும். அம்முறை நன்மையானதா தீமையானதா என்பவற்றை ஆராய்ந்து கொண்டிருந்தால் அவர்கள் கருதிய வெற்றி கிட்டாது. ஒருவர்க்குப் பகைவர் இருப்பின் அவர்களை முற்றிலும் அழித்தல் வேண்டும். பகைவரிடம் இரக்கங் காட்டினால் அவர் வலியவராகி நம்மையே அழிப்பர்.

பகை குமைப்பன யாவும் நற்படையலவோ: "பகைவர் உயிரைக் கொள்ளும் ஆயுதங்களே அன்றி அவர்தாமே அழிந்துவிடுமாறு செய்யும் சூழ்ச்சிகளும் சிறந்த படைகளேயாம். அத்தகைய சூழ்ச்சி யொன்றால் பாண்டவரை இப்போது வெல்ல வேண்டும். உன் வார்த்தை இன்றி அப்பாண்டவர் இங்கு வாரார். எனவே நீயும் எமக்கு உதவி புரிய வேண்டும், என்று துரியோதனன் தன் தந்தைக்குக் கூறுகிறான். **எம் குலத்தொழில்** என்று துரியோதனன் தான் பேராண்மையுடைய அரசர் மரபைச் சார்ந்தவன், தந்தையைப்போல் கோழையல்லன், எனத் தன்னை வேறுபடுத்திக் கூறுகிறான்.

இலக்கணம்: தவறில்லை—தவறு + இல்லை; இலை— இல்லை என்பதன் தொகுத்தல் விகாரம். நாமதிற் சோதனை—நாம் + அதில் + சோதனை. தருமோ; —ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது; செல்வழி — வினைத்தொகை நற்படை — பண்புத் தொகை.

4. 'தீமை புரிவோர் உறவினர் ஆகார்'

பதவுரை

ஐயா - ஐயனே!
இவர் - இப்பாண்டவர்
சுற்றத்தார் - நம் உறவினர்
என்றனை - என்று கூறினாய்;
உலகினில் - இவ்வுலகில்
யாரும் - எவர்களும்
தோற்றத்தாலும் - உருவ அமைப்பினாலும்
பிறவியினாலும் - பிறப்பினாலும் (ஒருவரை)
பற்றலார் என்றும் - பகைவர் என்றும்
நண்பர்கள் என்றும்,
பார்ப்பது இல்லை - கருதுவதில்லை;
மற்று - வேறு
எத்தாலும் - எதனாலும்
பகை உறல் இல்லை - பகைமை அடைதல் இல்லையாம்;
வடிவில் இல்லை - உருவத் தோற்றத்தினாலும் இல்லை;
அளவினில் இல்லை - அவர் பெற்றுள்ள செல்வம் முதலிய தகுதியினால் இல்லை.
ஓர் தொழில் - ஒரே தொழிலை
பயில்வார் தமக்குள் - மேற்கொண்டுள்ளவர் தங்களுக்குள்ளே
உற்ற துன்பத்தினால் - (அவர்களால்) அடையும் துன்பங்களினால்
பகை உண்டு ஆம் - பகைமை உண்டாகிறது.

கருத்து : இப் பாண்டவர் நம் சுற்றத்தார் என்று கூறுகின்றாய். இவ்வுலகில் எவரும் உருவ அமைப்பாலும் பிறப்பினாலுமே எவரையும் நண்பரென்றும் பகைவரென்றும் கருதுவதில்லை. வேறு எதனாலும் பகைமை கொள்ளுதல் இல்லை. ஒரே தொழிலில் ஈடுபட்டவர்களுக்கிடையில் மற்றவர் புரியும் துன்பத்தினால் மட்டுமே பகைமையுண்டாகும்.

விளக்கம்

'பாண்டவர் நம் உறவினர் என்கிறாய். அவர்கள் எம்முடன் பிறந்த காரணத்தாலும், எம்மைப் போன்ற சாயலைப் (தோற்றத்தை) பெற்றிருத்தலாலும் அங்ஙனம் கூறுகிறாய். எனக்கு உறவினர் என்பது பற்றிக் கவலையில்லை. அவர் நண்பரா பகைவரா என்பது தான் நான் ஆராய்வது. தோற்றத்தாலோ வடிவினாலோ பகைவர் என்றும் நண்பர் என்றும் ஆராய்வது இயலாது. நானும் அரசன்; அவர்களும் அரசர்களே. எமக்கு அவர்கள் நன்மை செய்கிறார்களா தீமை செய்கிறார்களா என்பதை நோக்க வேண்டும். ஒரே தோற்றமும் பிறப்பும்

...NEMARA PUBLIC LIBR...

உள்ளவரேனும் அவர்கள் தீமை செய்வராயின் பகைமையே உண்டாகுமன்றோ ! பாண்டவரைச் சுற்றத்தாரென்று எவ்வாறு கருதுவேன்', எனத் துரியோதனன் சுற்றத்தாரேனும் தீமை புரியும் பகைவரை வெல்லுதலே முறை என்பதைத் தந்தைக்கு எடுத்துரைக்கிறான்.

இலக்கணம் : தோற்றத்தாலும் பிறவியினாலும் - **எண்ணும்மைகள்.** பகையுறவில்லை - பகை + உறல் + இல்லை. துன்பத்தினாற் பகை - துன்பத்தினால் + பகை. என்றனை— **முன்னிலை ஒருமை வினைமுற்று.** பயில்வார்—**வினையாலணையும் பெயர்.**

5. 'பகை சிறிதேனும் மாய்த்திடும் விரைவில்'

பதவுரை

பகை காய்கிலர் - பகைவர்களை அழிக்காதவர்களாகிய
புரவலர் தம்மை - அரசர்களை
பூமி தெய்வம் - பூமியாகிய தெய்வம்
விழுங்கிடும் - விழுங்கிவிடும்;
கண்டாய் - (நீ) இதனை அறிவாயாக;
நாம் - கௌரவர்களாகிய நாம்
இப்பூதலத்தே - இவ்வுலகில்
குறைவு எய்த - இழிவு அடைந்து வர
பாண்டவர் - பாண்டவர்கள்
நாளும் - நாள்தோறும்
ஏறுகின்றார் - மேன்மையடைந்து வருகின்றனர்;
சாமி - ஐயனே !
நேமி மன்னர் - ஆணைச் சக்கரமுடைய அரசர்கள

பகை - (தம்) பகைவர்கள்
சிறிது என்றே - அற்பமானவர்கள் என்று கருதி
நினைவு அயர்ந்து இருப்பார் எனில் - (அவரை அழிக்கும்) எண்ணத்தில் தளர்ச்சியடைந்து இருப்பார்களாயின்
நோய் போல் - நோயைப் போல்
அப்பகை - அப் பகைவர்
மிகல் உற்று - மிகுதியாக ஆகி
சடிதி - விரைவில்
மாய்த்திடும் என்பதும் - (அவர்களை) அழித்து விடுவர் என்பதையும்
காணாய் - ஆராய்ந்து பார்ப்பாயாக. (ஆல் - அசை)

கருத்து: பகைவர்களை அழிக்காத அரசர்களைப் பூமித் தெய்வம் விழுங்கிவிடும். நாம் நாள்தோறும் இழிவடைந்து வருகிறோம்; பாண்டவரோ நாளுக்கு நாள் உயர்வடைகின்றனர். பகைவர்கள் அற்பமானவர்கள் என்று கருதி அவரை அழிப்ப

தில் கவலை கொள்ளாமல் இருப்பின் நோய் சிறிதென்று அசட்டை செய்வோரை அஃது அழித்தல் போல் அவ்வரசர்களைப் பகைவர்கள் அழித்து விடுவர். இதனை ஆராய்வாயாக.

விளக்கம்

பூமித் தெய்வம் விழுங்கிடும்: தெய்வ பக்தியில் சிறந்த விதுரர் சொற் கேட்டு நடக்கும் தந்தை திருதராட்டிரனுக்கு மனத்தில் படுமாறு துரியோதனன், "பகைவர்களை அழிக்காத அரசர்களைப் பொறுமையிற் சிறந்த பூதேவியும் விழுங்கி விடுவாள்" என்கிருன். பூமித்தெய்வம் விழுங்கிடும் என்பதால் அவர்கள் அழிவது திண்ணம் என்று பொருள்படும்.

நோய் மிகவும் அற்பமானதேனும் அதனை அசட்டை செய்தால், அது வலிமையுற்று ஒருவரைக் கொன்று விடும். அது போன்றே பகைவர் வலிமையற்றவர் என்று காலம் தாழ்த்திஞல் அவர்களே வலிமையுற்றுப் பொறுத்திருந்தோரை அழிப்பர். 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்னும் முதுமொழிக்கேற்ப, பாண்டவர் உடன் பிறந்தோராயினும் அவரை வெல்லாவிடின் தம்மை அழித்து விடுவர் என்ற குறிப்பு இதில் விளங்குகிறது.

இலக்கணம்: பூமித்தெய்வம் . இருபெயரொட்டுப் பண்புத் தொகை. காய்கிலர் . வினையாலணையும் பெயர். நேமி மன்னர்- இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை. சடிதி-தற்பவ வடசொல்.

6. 'மாமன் துணையால் ஐவரை வெல்வோம்'

போர் செய்வோம் எனில் - (பாண்டவருடன்) போர் புரியலாம் என்றுலோ
நீ தடுக்கின்ருய் - நீ (அது கூடாது) என்று தடுக்கிருய்;
புவியினோரும் - உலகிலுள்ளவர்களும்
பல பழி-பல்வான பழிச் சொற்களை
சொல்வார் - கூறுவார்கள்;
தார் செய் தோள் - பூமாலையை அணிந்த தோள்களையுடைய
இளம் பாண்டவர் தம்மை - இளமை பொருந்திய பாண்டவர்களை
சமரில் - போரில்
வெல்வதும் - வெற்றி கொள்வதும்
எளிது அன்ரும் - எளிய காரியமன்று;
யார் செய் புண்ணியத்தோ - (நம்மில்) எவர்கள் செய்த

புண்ணியத்தினுலோ
எங்கள் - எம்முடைய
ஆருயிர் போன்ற - அருமை யான உயிரைப் போன்ற
இம் மாமன் - இம் மாமனுகிய சகுனி
நமக்கு உற்ருன்-நமக்குத் துணை வனுக வாய்த்துள்ளான்;
நேர்செய்-(நமக்கு) நன்மையைத் தருகின்ற
சூதினில் - சூதாட்டத்தினுல்
வென்று தருவான் - (அப் பாண்டவரை) ஜயித்துக் கொடுப்பான்;
நீதி தருமனும் - அறவழியில் நடக்கும் தருமபுத்திரனும்
சூதில் - சூதாட்டத்தில்
அன்புள்ளான் - பற்றுடைய வனுக உள்ளான்.

கருத்து: 'பாண்டவருடன் போர் செய்யலாமென்ருலோ அதையும் தடுக்கின்ருய்; உலகினரும் நம்மைப் பழிப்பர்; பாண் டவரைப் போரில் வெல்வதும் எளியதன்று. யார் செய்த தவப் பயனுலோ உயிரினும் சிறந்த எம் மாமன் நமக்குத் துணையாக வாய்த்துள்ளான். அவன் நமக்குப் பாண்டவரைச் சூதாட்டத் தில் வென்று தருவான். நற்கால வசமாக அறவழியில் நடக்கும் தருமனும் சூதாட்டத்தில் விருப்பமுடையவனுக உள்ளான்' என்று துரியோதனன் திருதராட்டிரனிடம் எடுத்துக் கூறினுன்.

விளக்கம்

எங்களாருயிர் மாமன்: "பாண்டவருடன் போர் செய்ய முயன் ருலும், 'அவர் உடன் பிறந்தோராயிற்றே; அவர்களோடு போர் செய்தலாகாது,' என்று நீ தடுக்கின்ருய்; உலகத்தினரும் பழிப் பர்; மற்றும் அவரைப் போரில் வெல்வதும் அரிதாம். ஆத லால் அவரைச் சூழ்ச்சியினுலேயே வெல்லல் வேண்டும்" என் கிருன் துரியோதனன்.

சகுனி: துரியோதனன் தாய் காந்தாரியின் உடன்பிறந தோன்; வஞ்சனையில் வல்லான். அவன் வஞ்சனையால் சூதில் பிறரை வெல்வதில் இணையற்றவன். வஞ்சனையால் வெல்லும் சூதாட்டத்தை நேர் சூதென்பது துரியோதனனின் மனப்பான் மையைக் காட்டுவதாம்.

இலக்கணம்: புவியினேரும்- **இறந்தது தழுவிய எச்சஉம்மை.** ஆருயிர் - அருமை + உயிர்; **பண்புத் தொகை.** செய்புண்ணியம்- **வினைத்தொகை.** ஆங்கு - அசை நிலை.

செய்யுட்பகுதி வினு விடைகள்

பழஞ் செய்யுள்

புறநானூறு

1. புறநானூறு—குறிப்பு வரைக

இது புறப்பொருளைப் பற்றிய நானூறு பாடல்கள் அடங்கிய தொரு நூல். சங்க நூல்களாகிய எட்டுத் தொகையில் ஒன்று. இந் நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர் பலரால் பாடப்பட்ட தனித்தனிப் பாடல்களாகும். இப் பாடல்களின் மூலம் நம் பண்டைத் தமிழ் மக்களின் பழக்கவழக் கங்கள், நாகரிக மேம்பாடு, கலைச்சிறப்பு, அரசியல், போர்த்திறம் வாணிக வளம், ஈகைப்பெருமை முதலியவைகளை நாம் அறிந்து மகிழ்கின்றோம். ஆகையால் இந்நூல் சிறந்த தமிழ்க் கருவூலம் என்று சொல்லத் தக்க பெருமையுடையதாகும். இந்நூல் தொகுக்கப்பெற்ற காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

2. எட்டுத் தொகை நூல்கள் எவை?

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத் தொகை நூல்களாம்.

3. ஔவையார், இளம்பெருவழுதி, பொன்முடியார்—சிறு குறிப்பு வரைக.

(விடை புறநானூற்று முன்னுரைப் பகுதியில் காண்க.)

4. பாடாண்திணை, பொதுவியல், வாகை, பரிசில்கடா நிலை, பொருண் மொழிக்காஞ்சி, மூதின்முல்லை—இவைகளை விளக்குக.

பாடாண்திணை : பாடு + ஆண் + திணை. பாடப்படும் ஆண் மகனது ஒழுக்கம் என்பது தொடர்ப்பொருள். திணை - ஒழுக்கம்.

அஃதாவது பரிசில் பெற விரும்பிச் செல்வோர் ஒரு தலைவ னுடைய வீரம், ஈகை, அறிவு, பெருமை போன்ற பண்புகளைப் புகழ்ந்து பாடுதலாம். இது புறப்பொருள் திணைகளில் ஒன்று.

பொதுவியல் : புறப்பொருள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழு திணைகளாகப் பிரித்

துக் கூறப்படும். இத்திணைகளில் அடங்காத பொருளையுடையன வாய்ப் பொதுவாகவருவன பொதுவியல் எனப்படும்.

வாகை: பகைவரை வென்று வெற்றி மாலை சூடி ஆரவாரித் தல் என்பது பொருள். வாகை ஒருவகைப் பூ. போரில் வென்ற வர் வாகைப்பூ மாலையைச் சூட்டிக்கொள்வது பண்டைய வழக்க மாதலால் இது வாகை எனப்பட்டது.

பரிசில் கடாநிலை: பரிசில் பெற விரும்பி வந்தவர் வள்ளலை அடைந்து பரிசிலைத் தருக என்று கேட்கும் நிலையாம். பரிசில் அளிப்போன் சிறிது காலம் தாழ்க்கப் பரிசிலர் தம் சுற்றத்தா ரின் துன்பங்களை எடுத்துக்கூறி அத்துன்பம் தீர்க்க விரைந்து செல்ல வேண்டுமாதலால் விரைவில் பரிசு தருக என்று கேட்ப தாம்.

பொருண்மொழிக்காஞ்சி: உயிருக்கு இம்மை மறுமைகளில் இன்பம் பயக்கும் உறுதிப் பொருள்களை அறிவுடையோர் எடுத் துக் கூறுதலாம்.

மூதின்முல்லை: முதுமை + இல் + முல்லை; பழைய வீரக்குடி யில் பிறந்த பெண்களின் வீரத்தைச் சிறப்பித்துக் கூறுதல். சிறந்த வீரர்களுக்கேயன்றி வீரக் குடியில் பிறந்த பெண்களுக் கும் வீரம் உண்டெனக் கூறலாம்.

5. அதியமானின் கொடைப் பெருமையை ஔவையார் எங்ஙனம் விளக்கினர்?

'அதியமான் தன்னை நாடிவரும் பரிசிலர்கள் ஒரு நாள் மட்டுமல்லாமல் பல நாட்கள் வந்தாலும், தனியாக அன்றிப் பல ரோடு வந்தாலும் அவர்களை முதல் நாள் கண்டபோது மகிழ்ச்சி கொண்டு உபசரித்தது போலவே எப்பொழுதும் உபசரிக்கும் இயல்புடையவன். அவன் பரிசிலர்க்கு உடனே பரிசில் வழங்கா மல் சிறிது காலம் தாழ்த்துவானாயினும் யானை உண்ணுவதற் காகத் தன் தந்தங்களுக் கிடையே வைத்துள்ள உணவு அதன் வாயினுட் செல்வது தவறாதது போலப் பரிசில் கிடைப்பது என்பது உறுதியாம்' என்று ஔவையார் அதியமான் தன்னை நாடிவந்தவர்க்குத் தப்பாது ஈயும் ஈகைக்குணம் உடையவன் என்பதை விளக்கிக் கூறுகின்றார்.

6. 'ஒரு நாட் செல்லலம்' என்ற செய்யுளில் அதியமானின் வீர மும் ஈரமும் ஒருங்கு புகழப் பெற்றுள்ளன என்பதை விளக்குக.

அதியமானைப் பற்றிக் குறிப்பிடும்போது 'அணி பூண் அணிந்த யானை இயல்தேர் அதியமான்' என்று அவனுடைய யானைப்படை, தேர்ப்படை ஆகியவற்றின் சிறப்புக்களைப் பாராட்டிக் கூறியுள்ளமையால் அவனுடைய வீரத்தையும்,

அவன் பலநாட் சென்றாலும் முதல்நாள் கண்டது போலவே அன்பு பாராட்டும் இயல்புடையவன் என்றும், அவன் அளிக்கும் பரிசில் யானையின் கோட்டகத்துள்ள உணவு அதன் வாயினுட்புகுவது தவறாதது போலத் தப்பாமல் கிடைப்பது உறுதி என்றும் கூறியுள்ளமையால் அவனுடைய ஈரத்தையும் ஒருங்கு பாராட்டியுள்ளமை விளங்கும்.

7. 'யானை தன் கோட்டிடை வைத்த கவளம்போல'—இவ்வுவமையை விளக்கி இதன் பொருத்தத்தையும் கூறுக.

யானை உண்ணுவதற்காக வாங்கித் தன் தந்தங்களுக்கு இடையில் வைத்துள்ள உணவு சிறிது காலம் தாழ்த்தாகிலும் அதன் வாயினுட் செல்வது தப்பாது. அதுபோல அதியமான் பரிசில் தரச் சிறிது காலம் தாழ்த்தினாலும் அது கிடைப்பது என்பது உறுதியாகும். எக்காரணத்தை முன்னிட்டும் அதியமான் பரிசில் வழங்காமல் அனுப்பமாட்டான் என்பதாம்.

யானை கொண்ட உணவு வாயினுட் புகுவது தவறாது என்பதை அதியமான் பரிசில் தவறாது கிடைக்கும் என்பதற்கு உவமையாகக் கூறியது மிகவும் பொருத்தமாகும். இதற்கு யானையின் கையத்து உணவு உள்ளது. அது உண்ண வேண்டியதே இனிச் செய்ய வேண்டிய செயல். அதுபோல அதியமான் பரிசில் கொடுக்கக் காலம் தாழ்த்தினாலும் அது நம் கையில் உள்ளது மாதிரியேயாம். இனி நாம் அனுபவிக்க வேண்டியதே என்றும் பொருத்தம் கூறலாம்.

8. 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்று கூறுதற்கு இளம்பெருவழுதி கூறும் காரணங்கள் யாவை?

1. தேவர்கள் உண்ணும் அமிழ்தமே கிடைப்பதாயினும் அது இனிமையானதென்று கருதித் தாம் மட்டும் தனித்து உண்ணாதவர்களும்,

2. யாரிடத்தும் வெறுப்புக் கொள்ளாதவர்களும்,

3. பிறர் அஞ்சக்கூடிய துன்பச் செயல்களைச் செய்வதற்குத் தாமும் அஞ்சி வாழ்ந்து அவ்வச்சம் நீங்குதற் பொருட்டுச் சோம்பி யிருத்தலை அறியாதவர்களும்,

4. புகழ் கிடைப்பதாயின் உயிரைக் கொடுத்தேனும் அதை அடைய விரும்புகின்றவர்களும்,

5. பழி வருவதாயின் உலகமே கிடைப்பதாயினும் அதனைப் பெற விரும்பாதவர்களும்,

6. மனச்சோர்வு இல்லாதவர்களும் ஆகிய இத்தகைய மாட்சிமைப் பட்ட குணங்களையுடைய, தமக்கென்று வாழாமல் பிறர் நலம் கருதியே வாழும் பெரியோர்கள் இவ்வுலகில் வாழ்வதனாலேயே இவ்வுலகம் நடைபெற்று வருகிறது என்று இளம் பெருவழுதி கூறுகின்றார்.

9. உண்டாலம்ம என்ற செய்யுள் எத்துறையின் பாற்படும்? எங்ஙனம்?

இச்செய்யுள் **'பொருண்மொழிக்காஞ்சி'** என்ற துறையின் பாற்படும்.

உலகியல் நன்கனம் நடைபெற வேண்டும் என்று கருத்துடையவர்கள் இச்செய்யுளில் கூறப்பட்ட உயரிய குணங்களைத் தப்பாமல் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்ற உண்மையை இச்செய்யுள் மக்களுக்கு வற்புறுத்திக் கூறுவதால் இது மேற்கூறிய துறைக்குப் பொருத்தமான இலக்கியமாம்.

10. தாய், தந்தை முதலியோர் கடமைகளாகப் பொன்முடியார் கூறுவன எவை?

1. குழந்தையைப் பெற்றுத் தக்க முறையில் வளர்த்தல் தாயின் கடமையாகும்.

2. தன் மகனைக் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த சான்றோனாகச் செய்தல் தந்தையின் கடமை.

3. போர்க்களத்தில் பயன்பட்டு முறிந்தும், வளைந்தும் மழுங்கியும்போன வேலாயுதத்தைச் சீர் செய்து கூர்மையாக்கித் தருதல் கொல்லன் கடமை.

4. சிறந்த ஒழுக்க முறைகளைக் கற்பித்தல் அந்நாட்டு அரசனின் கடமை.

5. போர்க்களத்தில் சென்று தன் வாளாயுதத்தால் பகைவர்களைக் கொன்று அழித்து வலிய ஆண் யானையைக்கொன்று மீளல் அவ்வீர மகனின் கடமை.

இவ்வாருகப் பொன்முடியார் ,தாய் ,தந்தை முதலியவர்களின் கடமைகளை எடுத்துக் கூறுகின்ருர்.

11. நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே என்பது எங்ஙனம் பொருந்தும்?

(விடை புறநானூறு விளக்கவுரை காண்க. பக்கம் 16)

12. ஒரு வீரனுக்கு இன்றியமையாதன யாவை? அவற்றிற்கு யார் எங்ஙனம் உதவுகின்றனர்?

ஒரு வீரனுக்கு உடல் வலிமை, அறிவு வலிமை, படைக் கலம், கட்டுப்பாடான நல்லொழுக்க வாழ்வு ஆகியன இன்றிய மையாதன.

(1) உடல் வலிமையை உண்டாக்கக் கூடிய உணவு முதலி யன அளித்து வளர்ப்பதால் ,தாய் உடல் வலிமை பெறுவதற்கு உதவி செய்கின்ருள். (2) தக்க பருவத்தில் கல்வி கேள்விகளில் வல்லவனுக்கி அறிவுடையவனுகச் செய்வது தந்தையின் பொறுப் பாதலால் தந்தை அறிவு வலிமைக்கு உதவி செய்கின்ருர். (3) வேல் வடித்துக் கொடுப்பதால் கொல்லன் படைக்கலப் பயிற் சிக்கு உதவுகின்ருன். (4) அரசனது நல்லாட்சியே நாட்டில் ஒழுக்கமிக்க மக்களை வளர்க்கின்றது. ஆதலால் கட்டுப் பாடான வாழ்க்கையை யளிப்பதில் அரசன் உதவுகின்ருன். இந் நால்வ ரும் வீரனின் இன்றியமையாப் பண்புகளை வளர்க்க உதவுகின்ற வர்களாவர்.

13. 'ஈன்று புறந்தருதல்' என்ற செய்யுளுக்குரிய திணை துறைகள் யாவை? விளக்குக.

திணை—வாகை. துறை—மூதின்முல்லை.

இச்செய்யுளில் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே என்று காளையின் வெற்றியை வற்புறுத்திக் கூறுவதால் இது வாகைத் திணையாகும்.

சிறந்த வீரக்குடியில் பிறந்த வீரத்தாயின் வீர உள்ளத்தை இச்செய்யுள் நன்கு எடுத்து விளக்குதலின் இது மூதின்முல்லை என்ற துறையின் பாற்படும்.

14. இலக்கணக் குறிப்பு வரைக :—

1. ஒருநாட் செல்லலம் - தன்மைப் பன்மை வினைமுற்று.

2. அதியமான் பரிசில் பெறூஉம் காலம் - செய்யுளிசை யளபெடை; இன்னிசையளபெடையுமாம்.

3. வாழ்கவன்றாளே - வியங்கோள் வினைமுற்று; கவில் உள்ள அகரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது.

4. புகழெனின் உயிரும் கொடுக்குவர் - உம்மை உயர்வு சிறப்பு.

5. தமக்கென முயலா நோன்றாள் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

5. ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி - வினைத்தொகை, பண்புத் தொகை.

15. பிரித்து எழுதுக:—

கோட்டிடை ; கோடு + இடை.

இயறேர் : இயல் + தேர்.

வாழ்கவன்றாளே : வாழ்க + அவன் + தாளே.

நன்னடை : நன்மை + நடை.

16. உறுப்பிலக்கணம் கூறுக.

செல்லலம் : செல் - பகுதி, ல் - சந்தி; அல் - எதிர்மறை இடைநிலை; அம் - தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி.

உண்டல் : உண் - பகுதி; ட் - இடை நிலை; அல் - தொழிற் பெயர் விகுதி.

கொள்ளலர் : கொள் - பகுதி; ள் - சந்தி; அல் - எதிர் மறை இடைநிலை; அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

புறந்தருதல் ; புறந்தா - பகுதி; புறந்தரு எனத் திரிந்தது விகாரம்; தல் - தொழிற்பெயர் விகுதி.

17. இயறேர், கோட்டிடை, நோன்றாள், அருஞ்சமம்—புணர்ச்சி விதி கூறுக.

இயல் + தேர் = இயறேர்.

(1) நிலைமொழி ஈற்றில் ன், ல் நிற்க வருமொழியில் தக ரத்தை முதலாக உடைய சொல் வந்தால் வருமொழி தகரம் றகர மாக மாறும் (னல்முன் றனவும் ஆகும் தநக்கள்) என்ற விதி யால் 'தே' 'றே' என்று திரிந்தது.

(2) குற்றெழுத்தை அடுத்துவராத ல, ள என்ற எழுத்துக் கள் வருமொழியில் தகரம் திரிந்தபின் கெடும் (குறில் செறியா

ள அல்வழி வந்த தகரம் திரிந்த பின் கேடும்) என்ற விதியால் இயல் என்பதில் 'ல்' கெட்டு இயறேர் என்ருயிற்று.

கோடு + இடை = கோட்டிடை.

(1) நெடிற்ருெடர்க் குற்றியலுகரம் வேற்றுமையில் வருமொழியோடு புணரும்போது ட, ற வொற்று இரட்டிக்கும் ('நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டறவொற்றிரட்டும் வேற்றுமை மிகவே') என்ற விதியால் கோடு என்ற நெடிற்ருெடர்க்குற்றியலுகம் கோட்டு என்ருயிற்று.

(2) உயிர்வரின் குற்றியலுகரத்தில் உள்ள உகரம் கெட்டு மெய்மட்டும் நின்று வருமொழி உயிரோடு சேர்ந்து உயிர்மெய்யாகும் ('உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்') என்ற விதியால் கோட்டு என்பதில் உகரம் கெட்டுக் 'கோட்ட்' என நின்றது.

(3) 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவதியல்பே' என்ற விதியால் வருமொழி உயிர் சேர்ந்து 'கோட்டிடை' என்ருயிற்று.

நோன் + தாள் = நோன்ருள்.

'னலமுன் றனவும் ஆகும் தநக்கள்' என்ற விதியால் தா என்பது ரு என்ருகி நோன்ருள் என்ருயது.

அருமை + சமம் = அருஞ்சமம்.

(1) 'ஈறுபோதல்' என்ற விதியால் 'மை' விகுதி கெட்டது.

(2) இனமிகல் என்ற விதியால் சகரத்துக்கு இனமாகிய 'ஞ்' தோன்றி 'அருஞ்சமம்' என்ருயிற்று.

II. இடைக்காலச் செய்யுள்

(முற்பகுதி)

சிலப்பதிகாரம்

1. சிலப்பதிகாரம்—பொருளும் இலக்கணமும் தருக.

சிலம்பு பெண்கள் காலிலணியும் ஆபரணமாம். அதிகாரம்—அதிகரித்தலை உடைய நூல்; அதாவது முதன்மையாகக் கொண்டுள்ள நூல் என்பதாம். (கண்ணகியின்) சிலம்பினது செய்திகளை முதன்மையாகக் கொண்டுள்ள நூல் என்பது இத்தொடரின்

பொருளாம். ஆறும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

2. **சிலப்பதிகாரம் என இந்நூலுக்குப் பெயர் வரக் காரணம் என்ன ?**

3. **இந்நூலின் வேறு பெயர்கள் யாவை ?**

4. **நூல் வகைகளில் இது எவ்வகையினைச்சார்ந்தது ?**

5. **இந்நூல் அறிவிக்கும் மூன்று நீதிகள் யாவை ?**

6. **இந்நூலின் பெருமையை விளக்குக.**

7. **இந்நூலின் பிரிவுகளைப் பற்றி எழுதுக.**

(விடைகள்: பக்கங்கள் 14, 15-இல் காண்க)

8. **இந்நூலாசிரியர் யார்? அவரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.**

இந்நூலாசிரியர் இளங்கோவடிகள் ஆவார். இவர் சேர இளவரசர். பெற்றோர் சேரலாதனும் நற்சோணையும் ஆவர். சேர மன்னன் செங்குட்டுவனின் தம்பியாதலால் இளங்கோ என்றும், சமண மதத்தில் சார்ந்து துறவு பூண்டமையால் அடிகள் என்றும் வழங்கப்பட்டார். ஊர் வஞ்சிமா நகர். காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு. இவர் சைன மதத்தைச் சார்ந்தவர். சீத்தலைச் சாத்தனார், கபிலர், பரணர் ஆகியோர் இவர் காலத்து வாழ்ந்த புலவராவர்.

9. **இந்நூலாசிரியர் காலத்தைப் பற்றிய சான்று தருக.**

(விடை: பக்கம் 15 காண்க)

10. **இந்நூலியற்றக் காரணம் யாது ?**

11. **இந்நூலாசிரியரின் பெருமைகளை விளக்குக.**

(விடை: பக்கம் 16 காண்க)

12. **கனாத்திறம் உரைத்த காதை—பொருளை விளக்குக.**

கண்ணகி தான் கண்ட தீய கனவினைத் தேவந்தி என்னும் பார்ப்பனத் தோழிக்கு உரைத்த கதையை உடைய பாட்டு என்பது இதன் பொருளாம்.

13. **மாலை நேரத்தில் புகார் நகர மங்கையர் புரிந்த செயல்கள் யாவை ?**

புகார் நகரில் பட்டினப்பாக்கத்தில் வாழ்ந்த கொடி போன்ற இடையையுடைய பெண்கள் மாலை நேரத்தில் தங்கள் பெரிய வீடுகளிலெல்லாம் மலர்ந்த முல்லை மலர்களையும் நெல்லையும் தூவித்

தம் மனையுறை தெய்வத்தை வழிபட்டனர். பின்பு அவர் வீடெங்கும் அழகிய விளக்குகளை ஏற்றி வைத்தனர்; அதன் பின் இரவுக்கேற்ற மென்மையான ஆடை அணிகளை அணிந்தனர்.

14. மாலதி என்பாள் யார்? அவளுக்கு நேர்ந்த துன்பம் யாது ?

மாலதி என்பாள் ஒரு பார்ப்பன மங்கை. அவளுக்கு மகப்பேறு இன்மையால் கணவன் மற்றொருத்தியை மணம் செய்து கொண்டான். அவளுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். ஒரு நாள் தாய் குழந்தையை வீட்டில் விட்டு வெளியே சென்றிருந்தாள். அப்போது குழந்தை அழுதது. மாற்றாள் குழந்தையினிடம் பேரன்பு பூண்ட மாலதி அப்பாலகனுக்குப் பால் புகட்டினாள். குழந்தை பால் புரைக்கேறி இறந்தது. மாலதி தன் கணவனும் மாற்றாளும் தன் மீது அடாத மொழிகளைக் கூறுவார்களே என்று மிகவும் துன்பம் அடைந்தாள்

15. தனக்கு நேர்ந்த துன்பத்தைப் போக்க மாலதி யாது செய்தனள்?

எதிர்பாராத வகையில் மாற்றாள் குழந்தை மரித்து விடவே மாலதி மதி மயங்கினாள். மாற்றாளும் கணவனும் வருமுன் அக்குழந்தையை எங்ஙனமேனும் உயிர் பெறுமாறு செய்ய விரும்பினாள். அக்குழந்தையை எடுத்துக் கொண்டு மாலதி தேவருலக மரங்களாகிய கற்பகம், மந்தாரம், பாரிஜாதம், ஸந்தானம், ஹரிசந்தனம் ஆகியவை உள்ள கோயிலுக்கும், ஐராவதத்தின் கோயிலுக்கும், அழகிய பலதேவரின் கோயிலுக்கும், சூரியன், சிவபெருமான், முருகப்பிரான் கோயில்களுக்கும், வச்சிராயுதம் நிலைபெற்ற கோயிலுக்கும், சாதவாகனன், அருகன், சந்திரன் ஆகியோர் கோயில்களுக்கும் சென்றாள்; தன்னுடைய துன்பத்தைப் போக்குமாறு வேண்டினாள். அத்தெய்வங்கள் அவளுடைய இன்னலைப் போக்கவில்லை.

6. (i) வெள் யானைக் கோட்டம். (ii) புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம், (iii) பகல் வாயில் உச்சிக் கிழான் கோட்டம் (iv) ஊர்க்கோட்டம். (v) நிக்கந்தக்கோட்டம்—இவை எவற்றைக் குறிக்கின்றன.

(i) வெண்மையான நிறத்தையுடைய ஐராவதத்தின் கோயில்.

(ii) அழகிய வெண்ணிறமுடைய தேவராகிய பலதேவரின் கோயில். பலதேவர் கிருஷ்ணனின் மூத்த சகோதரர்.

(i) பகல்வாயில் - கிழக்குத் திசை; உச்சிக்கிழான் - உச்சிக்கு உரிய சூரியன் : கிழக்குத் திசையில் தோன்றும் உச்சிக்கு உரிய சூரியனின் கோயில்.

ii) ஊர் என்பது சிவபெருமான் வீற்றிருக்கும் இடமாகிய கைலாயத்தைக் குறிக்கும். கோட்டம் - கோயில்.

(iii) நிக்கந்தன் - கந்தங்களற்றவன். அதாவது உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் ஆகிய ஐந்தும் அற்றவனாகிய அருகக் கடவுளை இது குறிக்கும். எனவே நிக்கந்தக் கோட்டம் அருகக் கடவுளின் கோயிலைக் குறிக்கும்.

17, மாலதி பாசண்டச் சாத்தன் கோயிலடைந்த போது நேர்ந்த மற்றொரு துன்பம் யாது ?

மாலதி இறந்த குழந்தையுடன் பாசண்டச் சாத்தன் கோயிலடைந்து அதனை உயிர் பிழைப்பிக்குமாறு செய்யவேண்டினள். அப்போது அங்கு இடாகினிப் பேய் மிகுந்த அழகு வாய்ந்த பெண்ணுருவில் தோன்றியது. அப்பேய் சக்கரவாளக் கோட்டம் என்னும் இடுகாட்டில் நள்ளிரவில் சென்று குழிகளில் புதைக்கப்பட்ட பிணங்களைத் தின்பது வழக்கம். அழகிய பெண்ணாக அங்கு வந்த அப்பேய் மாலதியை நோக்கி, "முற்பிறப்பில் தவம் செய்யாதவர்களுக்குத் தேவர்கள் வரந்தரார். இஃது உண்மை. அக்குழந்தையைக் கொடு," என்று கூறி மாலதியிடமிருந்து குழந்தையை வலிந்து பெற்றுத் தின்றுவிட்டது. இதுவே பாசண்டச் சாத்தன் கோயிலில் மாலதிக்கு நேர்ந்த மற்றொரு துன்பமாகும்.

18. "அஞ்ஞை ! நீ ஏங்கி அழல்; முன்னை உயிர்க் குழவி காணாய்"— சந்தர்ப்பம் கூறி விளக்குக.

மாலதி மாற்றாள் குழந்தைக்குப் பால் புகட்டுகையில் குழந்தை பால் புரைக்கேறி இறந்தது. மிக்க துயரடைந்த மாலதி அக்குழந்தையை உயிர்ப்பிக்கும் பொருட்டுக் கோயில்கள் பலவற்றிற்கும் சென்று வேண்டியும் பயன் உண்டாகவில்லை. இறுதியில் அவள் பாசண்டச் சாத்தன் கோயிலுக்குச் சென்று வழிபடுகையில் இடாகினிப்பேய் இளம்பெண்ணுருவில் வந்து அக்குழந்தையை வாங்கித் தின்றுவிட்டது. அப்போது மாலதி இடிக்குரல் கேட்ட மயில்போல் ஏங்கி அழுதாள்.

மாலதியின் துன்பமிக்க நிலேயைக் கண்ட பாசண்டச் சாத்தன் மனமிரங்கி, " தாயே! வருந்தி அழாதே. நீ செல்லும் வழியெதிரில் உயிரோடு குழந்தையைக் காண்பாய்," என்று அவளுக்கு அருளினன். அவன் கூறியவாறே சாத்தன் தானே குயில் பாடும் சோலே நிழலிலே அக் குழவியாய்த் தோன்றினன்.

19. **பூவந்த உண்கண் பொறுக்கென்று மேவித்தன்**

மூவா இளநலம் காட்டியெங் கோட்டத்து

நீவா எனவுரைத்து நீங்குதலும்

(i) **இவ்வடிகட்குப் பதவுரை தருக.**

(ii) **இவற்றின் பொருளே நன்கு விளக்குக.**

(iii) **தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக.**

(iv) **இவ்வடிகளில் உள்ள மோனே எதுகைகளேக் குறிப்பிடுக.**

(i) **(விடை பக்கம் 31-இல் காண்க.)**

(ii) பாசண்டச் சாத்தன் தன் மனேவியாகிய தேவந்தியின் பூப்போன்ற மென்மையுடைய மையுண்ட கண்கள் தன் தெய்வ வடிவைப் பொறுக்கும் வண்ணம் அமைத்துக்கொண்டு தன் அழியாத பேரழகைத் தேவந்திக்கு வெளிப்படுத்தி,"என்னுடைய கோயிலுக்கு வா," என்று கூறி, பிறருக்குத்தான் தீர்த்த யாத்திரைக்குச் செல்வதாய்க் கூறி அவ்வீட்டைவிட்டு நீங்கினன்.

(iii) உண்கண் - வினேத் தொகை. பொறுக்கென்று - பொறுக்க + என்று 'க'வில் உள்ள அகரம் தொக்கது தொகுத்தல் விகாரம். மூவா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இளநலம் - பண்புத் தொகை.

(iv) முதலடியில் முதல் சீரிலும் மூன்றும் சீரிலும் 'பூ' 'பொ' என்னும் எழுத்துக்கள் ஒன்றி வந்தமை **சீர்மோனேயாம்.** மூன்றுமடியிலும் முதல் மூன்றும் சீர்களில் நீ என்ற எழுத்துக்கள் ஒன்றி வந்தமை **சீர்மோனேயாம்.**

இரண்டாமடியிலும் மூன்றுமடியிலும் முதலெழுத்துக்கள் அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்துக்களாகிய 'வா' ஒன்றி வந்தமை **அடி யெதுகையாம்.**

20. "அவனைப் பேர்த்திங்ஙன் மீட்டுத் தருவாய்" – இடம் சுட்டி விளக்குக.

மாலதி என்பாள் துன்பத்துக்கிரங்கிக் குழந்தையாய் வடிவெடுத்த பாசண்டச் சாத்தன் மறையவர் வீட்டில் கல்வி கேள்விகளில் சிறந்து வளர்ந்து வந்தான்; தக்க பருவம் வந்ததும் தேவந்தி யென்பாளை மணந்து எட்டாண்டுகள் இல்லற வாழ்க்கை நடத்திய பின் ஒரு நாள் தேவந்திக்குத் தன் அழிவற்ற பேரழகை வெளிப்படுத்தி உண்மையை உரைத்துத் தன் கோயிலுக்கு வருமாறு அவளிடம் கூறி அகன்றனன். மற்றையோரிடம் சாத்தன் தீர்த்த யாத்திரை செல்வதாகக்கூறி யிருந்தனன். தேவந்தியும் "என் கணவன் தீர்த்த யாத்திரை செய்து வருவேன்", என்று கூறிச் சென்றனன். அவன் மறுபடியும் இங்கு வந்து என்னை அடையுமாறு அருள்வாய்" என்று வழிபாடு செய்வாள் போல் நாள்தோறும் பாசண்டச் சாத்தன் கோயிலுக்குச் சென்று வருதலைக் கடமையாகக் கொண்டிருந்தாள்.

21. பாசண்டச் சாத்தன் குழந்தையாகத்தோற்றிய வரலாற்றைச் சுருக்கி வரைக.

காவிரிப்பூம் பட்டினத்தில் மாலதி என்னும்மறையவள் மகப்பேறின்றி இருந்தமையால் அவள் கணவன் மற்றொரு பெண்ணை மணந்து கொண்டனன். சில நாட்களுக்குப் பின் அவளுக்கு ஒரு மைந்தன் பிறந்தான். ஒரு நாள் அவள் வெளியே சென்றிருக்கையில் குழந்தை அழத் தொடங்க, மாலதி அன்புகொண்டு அதற்குப் பால் ஊட்டினாள். பால் புரைக்கேறிப் பாலன் இறந்தான். அது கண்டு பெருந் துயருற்ற மாலதி கணவனும் மாற்றாளும் பொறாமையால் தானே குழந்தையைக் கொன்று விட்டதாக அடாத பழி கூறுவரே என்று பெரிதும் ஏங்கினள். மாலதி அக்குழந்தையைப் புகார் நகரிலுள்ள எல்லாக் கோயில்களுக்கும் எடுத்துச் சென்று இறையவரை உயிர்ப்பிச்சை நல்குமாறு வேண்டியும் பயனுண்டாகவில்லை.

இறுதியில் அவள் பாசண்டச்சாத்தன் கோயிலில் வேண்டி நிற்கையில் இடாகினிப் பேய் இளநங்கை வடிவில் தோன்றி அக்குழந்தையை வாங்கி உண்டது. அப்போது அவள் பெருந்துயரடையவே சாத்தன் மனமிரங்கி, "தாயே! வருந்தாதே; வழியில் உயிருடன் குழந்தையைக் காண்பாய்," என அருளினன். மனமகிழ்ந்த மாலதி வீடு நோக்கிச் செல்லச் சாத்தன் வழியிலிருந்த மரச் சோலையின் நிழலில் அக்குழந்தை வடிவுடன் தோன்றினன்.

மாலதியும் குழந்தையை வீட்டுக்கு எடுத்துச் சென்றனள். சாத்தனே குழந்தையாகத் தோன்றினன் என்பதை அறியாது, இறந்த குழந்தையே உயிர் பெற்றது என்று மாலதி மனமகிழ்ந்தாள். இங்ஙனம் பாசண்டச் சாத்தன் மாலதியின் துன்பத்தைப் போக்கக் குழந்தையாய்த் தோன்றி மறையோர் வீட்டில் வாழ்ந்து வந்தனன்.

22. தேவந்தி யார்? அவள் வரலாற்றைச் சுருக்கி வரைக.

புகார் நகரில் மறையவர் வீட்டில் குழவியாய் வளர்ந்த பாசண்டச் சாத்தன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினன். தக்க பருவம் வந்ததும் சாத்தன் தேவந்தி என்னும் நங்கையைத் திருமணம் செய்து கொண்டான். எட்டாண்டுகள் தேவந்தி சாத்தனுடன் இல்லறம் நடத்தி வந்தாள். இதற்கிடையில் சாத்தனின் தந்தையும், பெற்ற தாயும், வளர்த்த தாயும் இறந்து விடவே அவர்க்குச் செய்ய வேண்டிய ஈமக்கடனை ஆற்றினன். பின்னர், சாத்தன் தாயத்தார்களுடன் வழக்குச் செய்து தன்னுடைய தாய பாகத்தைப் பெற்றுத் தன் மனைவிக்குப் பொருள் தேடி வைத்தினன்.

பின்னர் ஒரு நாள் பாசண்டச் சாத்தன் தேவந்திக்குத் தன் பேரழகையும் உண்மையையும் வெளிப்படுத்தித் தன் கோயிலுக்கு வருமாறு கூறி, அவ்வீட்டினின்று அகன்றனன். மற்றவர்களுக்கோ சாத்தன் தான் தீர்த்த யாத்திரைக்குச் செல்வதாக்க கூறிச் சென்றனன். தேவந்தி யாத்திரை சென்ற கணவன் விரைவில் மீளுமாறு வேண்டுவதுபோல் நாள்தோறும் சாத்தன் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்தனள்.

தேவந்தி என்பாள் கண்ணகியின் தோழியாவாள். கண்ணகியின் கணவனாகிய கோவலன் அவளை விட்டுப் பிரிந்து அவள் மிகவும் மனம் வருந்துவதை அறிந்த தேவந்தி, சாத்தன் கோயிலுக்குச் சென்று அருகம்புல்லும் மலரும் நெல்லும் தூவி வழிபட்டு அவனருளைப் பெற்றனள். பின்னர் அவள் கண்ணகியின் வீட்டுக்கு வந்து "நீ உன் கணவனைப் பெறுவாயாக," என்று வாழ்த்தினள்.

23. பெறுக கணவனோடென்றாள்—இடஞ் சுட்டி விளக்குக!

(சென்ற கேள்வியின் விடையில் இறுதிப் பத்தியே இவ்வினாவிற்கு விடையாம்.)

24. கண்ணகி கண்ட தீய கனா யாது

கோவலன் கண்ணகி கையைப் பிடித்துக்கொண்டு ஒரு நகரத்தை அடைந்தனன். அங்கு மக்கள் அவர்மீது அடாத பெரும் பழியைச் சுமத்தினர்; அதனால் கோவலனுக்குப் பெருந் தீங்கு (மரணம்) நேர்ந்தது. எனவே அரச சபைக்கு அதுவரையில் சென்றிராத கண்ணகி அரசனிடம் சென்று வழக்குரைத்தனள். அரசனுக்கும் அந்நகரத்துக்கும் துன்பம் நேர்ந்தது. இறுதியில் இறந்த கணவன் வந்து அழைத்துச் செல்லக் கண்ணகி அவனுடன் சுவர்க்கம் புக்கனள். இதுவே கண்ணகி கண்ட கனவாகும்.

25. நற்றிறம் கேட்கின் நகையாகும்—இடஞ்சுட்டி விளக்குக.

தேவந்தி என்னுந் தோழி கண்ணகியின் துயர் நீங்கும்படி கோவலன் மீண்டுவர அருளுமாறு சாத்தனை வழிபட்டுக் கண்ணகியின் வீட்டை அடைந்தாள். அவள் கண்ணகியை நோக்கி 'விரைவில் கணவனை அடைக' என வாழ்த்தினள். அது கேட்ட கண்ணகி தேவந்தி கூறியவாறு தான் கணவனை மீண்டும் அடைதல்கூடுமேனும் தான் தீய கனா ஒன்றைக் கண்டதால் தன் மனம் கவலையடைவதாகக் கூறித் தான் கண்ட கனவை அவளுக்கு அறிவித்தனள்.

கணவன் கொலையுண்ட பின் கண்ணகி தான் பல நன்மைகளைப் பெற்றதாகக் கனாக் கண்டாள். கணவன் தெய்வ உருவில் வந்து கண்ணகியை விமானத்தில் சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்றதாகக் கண்ட அத்தகைய பேறு தனக்குக் கிட்டாது என்று கண்ணகி கருதியதால் அதனைக் கேட்டால் தேவந்தி நகைப்பாள் என்று இங்ஙனம் கூறினள்.

26. இட்டனர் ஊரார் இடுதேளிட்டென்றன்மேல்—பொருளை விளக்குக.

கோவலனும் கண்ணகியும் ஏதோ ஒரு நகருக்குச் சென்றதாகவும், அவ்வூரார் அவர் மீது அடாத பழி வார்த்தையைச் சுமத்தியதாகவும் கண்ணகி தேவந்தியிடம் கூறினாள். அவர் இட்ட பழிச்சொல் தன்மேல் இடு தேளிடுவது போன்றிருந்தது என்றாள். இடுதேளிடுவதாவது தேளல்லாத ஒன்றைத் தேளெனக் கூறி ஒருவர் மேலே போட்டு அவர்களைக் கலங்கச் செய்தலாம். இங்கு அவள்மீது சுமத்திய பழியால் அவள் மிகவும் மனங்கலங்கினள். ஆதலின் அவர்கள் கூறிய

பழிச்சொல் இடுவதைப் போன்றிருந்தது என்று கண்ணகி கருதினள்.

27. கண்ணகிக்குத் தேவந்தி கூறிய அறிவுரையை எழுதுக.

தேவந்தி கண்ணகியின் தீய கனவைப் பற்றி அறிந்தாள். அவள் தன் தோழியை நோக்கி, "பொன்னுலான வளையல்களை அணிந்த கண்ணகி! நீ கண்ட கனவைப் பற்றி வருந்தாதே. உன்னை உன் கணவன் வெறுத்து நீங்கவில்லை. முற்பிறவியில் நீ கணவனுக்குச் செய்ய வேண்டிய நோன்பைச் செய்யத் தவறி விட்டாய். அதனால் நேரத்தக்க துன்பம் கெடுவதாக. காவிரி கடலொடு கலக்கு மிடத்திலுள்ள சோலையில் சோம குண்டம், சூரிய குண்டம் என்னும் இரண்டு குளங்கள் உள்ளன. அவற்றில் நீராடி அருகிலுள்ள மன்மதன் கோயிலில் சென்று அவனை வழிபட்டவர் இம்மையில். கணவனைப் பிரியாது வாழ்வார்; மறுமையிலும் வானுலகத்தில் இன்புற்று வாழ்வர். நாம் ஒரு நாள் அங்குச் சென்று அக்குளங்களில் நீராடிக் காம வேளை வழி படுவோம்," என்று அறிவுரைகள் கூறினள்.

28. கண்ணகியின் கற்புத்தன்மைக்கு ஒரு சான்று தருக.

கணவனைப் பிரிந்து துயருற்ற கண்ணகியைத் தேற்றி அவள் தோழி தேவந்தி, முற்பிறவியில் கண்ணகி கணவனுக்குச் செய்யவேண்டிய கடமையில் தவறியதாகவும், காவிரி கடலொடு கலக்கு மிடத்திலுள்ள சோம குண்டம் சூரிய குண்டம் என்னும் குளங்களில் நீராடிக் காமவேளை வழிபட்டால் இம்மையிலன்றி மறுமையிலும் வானுலகில் கணவனுடன் இன்பவாழ்க்கையை எய்து வாள் என்றும் கூறினள். அது கேட்ட கண்ணகி அங்ஙனம் புரிவது கற்புடைய மகளிருக்குப் பெருமை தராது என்றனள். இதனால் கண்ணகி கணவனையே தெய்வம் என்று தொழுதனள் என்பதும் மற்றைய கடவுளரைத் தொழுவதை மனத்தாலும் கருதவில்லை என்பதும் விளங்கும்.

29. இலம்பாடு நாணுத் தருமெனக் கென்ன-இடம் சுட்டி விளக்குக.

கண்ணகி தேவந்தியினிடம் தான் கண்ட தீய கனவைப் பற்றிக் கூறி வருந்தினள். அது கேட்ட தேவந்தி அவளைத் தேற்றிக் கொண்டிருக்கையில் குற்றேவல் புரியும் பெண்

ணொருத்தி கோவலன் தலைவாயிலில் வந்துள்ளதாக அறிவித்தனள். கோவலனும் மனையினுட் புகுந்து மனைவியின் சோர்வையும் துன்பத்தையும் கண்டு, "பொய்யான வாழ்க்கையையுடைய மாதவியுடன் வாழ்ந்து நம் முன்னோர் தேடிய மலைபோன்ற செல்வத்தையும் தொலைத்து வறியவனானேன். இவ்வறுமை எனக்கு மிக்க வெட்கத்தைத் தருகிறது," என்று கூறினன்.

30. கண்ணகியின் பெருந்தகைமையை ஓர் உதாரணம் தந்து விவரிக்க.

கோவலன் முன்னோர் தேடிய பொருள் முழுவதையும் வஞ்சனை நிறைந்த மாதவியினிடம் இழந்தமைக்காகத் தான் மிகவும் வெட்கமடைவதாகக் கூறினன். அது கேட்ட கற்புத் தெய்வமாம் கண்ணகி கணவன் தன்னைப் பிரிந்த குற்றத்தை மறந்து, கணவன் துன்பமுற்றபோது உறுதுணையாவதே மனைவியின் கடமை என்பதை உணர்ந்தாள். மாதவிக்குப் பொருள் தருவதற்கு மேலும் பொருளில்லையே என்று கருதிக் கணவன் வருந்துவதாக எண்ணிய கண்ணகி, புன்முறுவலுடன் "என்னிடம் இரு சிலம்புகள் உள்ளன. அவற்றைப் பெற்றுக் கொள்ளுக." என்று கூறினள். இதுவே கண்ணகியின் பெருந்தன்மைக்குச் சான்றாகும்.

31. ஏடலர் கோதாய் எழுக என்னோடு—இடஞ் சுட்டி விளக்குக.

கோவலன் மாதவியை விட்டு நீங்கித் தன் மனைவியிடம் தான் பொருளிழந்து வறுமையுற்றமை தனக்கு மிக்க அவமானத்தை விளைப்பதாகக் கூறினன். அதுகேட்ட பெருந்தன்மை மிக்க கண்ணகி மன மகிழ்ச்சியுடன் தன் இரு சிலம்புகளையும் அவனிடம் கொடுத்தாள். சிலம்புகளைப்பெற்ற கோவலன் அவற்றை முதற்பொருளாகக் கொண்டு இழந்தபொருளை ஈட்ட விரும்பினான். செல்வச்சிறப்புடன் வாழ்ந்த புகார் நகரில் இனி ஒரு கணமும் வாழலாகாது என்று கருதிய கோவலன் மதுரைக்கு மனைவியுடன் செல்லத் துணிந்து கண்ணகியிடம், "இதழ்கள் விரிந்த மலர்மாலையை அணிந்த மாண்புடையாய்! இங்கிருந்து இப்போதே புறப்படுவாயாக," என்று கூறினான். கண்ணகியின் துன்ப நிலையை நேரில் கண்ட கோவலன் மீண்டும் அவளை விட்டுப் பிரிதல் அறமன்று என்று கருதிக் கண்ணகியை உடனழைத்துச் சென்றான்.

32. வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடார் கால்சீயா முன்.

(i) இவ்வடிகளின் பொருளை விளக்குக.

(ii) இவ்வடிகளில் அமைந்த மோனை எதுகைகளைக் குறிப்பிடுக.

(i) கோவலன் முற்பிறவியில் செய்த தீவினை தூண்டுதலால் அதன் வசப்பட்டு மிக்க ஒளியையுடைய சூரியன் இரவுப் பொழுதை அடியோடு அழிப்பதற்கு முன் அத்தீவினையின் ஏவலை மேற்கொண்டான் என்பது இவ்வடிகளின் பொருளாம்.

(ii) முதலடியில் முதற் சீரிலும் மூன்றும் சீரிலும் 'வி' என்ற எழுத்துக்கள் ஒன்றி வந்தமை சீர்மோனையாம். இது **பொழிப்புமோனை** எனப்படும். இரண்டாம் அடியில் முதற் சீரிலும் இரண்டாம் சீரிலும் க, கா என்ற எழுத்துக்கள் ஒன்றிவந்தமை சீர்மோனையாம்,. இஃது **இணை மோனையாம்.** முதலடியிலும் இரண்டாமடியிலும் முதற் சீரில் இரண்டாவது எழுத்து 'னை' ஒன்றி வந்தமையால் **அடியெதுகையாம்.**

33. தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக.

1. நிகர் மலர் நெல்லொடு **தூஉய்**—சொல்லிசையளபெடை
2. பாடு **கிடந்தாளுக்கு**—வினையாலணையும் பெயர்
3. எசும்படியோர் **இளங்கொடியாய்**—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை
4. குயிற் **பொதும்பர் நீழற்**குறுக—ஈற்றுப்போலி, நீட்டல் விகாரம்
5. **மூவா இளநலம்** காட்டி—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், பண்புத்தொகை
6. **பெறுக கணவனோடு** என்றாள்—வியங்கோள் வினைமுற்று. மூன்றும் வேற்றுமை உருபு மயக்கம்.
7. இட்டனரூரார் **இடுதேளிட்** டென்றன்மேல்—வினைத்தொகை.

8. தீக்குற்றம் போலும் செறி தொடீஇ—இன்னிசையளபெடை.

9. காவிரி சென்றலைக்கு முன்றில்—இலக்கணப்போலி.

10. யாமொருநாள் ஆடுதும்—உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று.

11. அகன்றனன் போயெங்கும்—இறந்த காலத் தெரிநிலை வினைமுற்று. முற்றெச்சமாகவும் பொருள் கொள்ளலாம்.

34 பிரித்து எழுதுக;—

சேயிழை—செம்மை + இழை
கானற்றடமுள—கானல் + தடம் + உள
வேற்கோட்டம்—வேல் + கோட்டம்
நற்றிறம்—நன்மை + திறம்.

35. உறுப்பிலக்கணம் கூறுக:—

காட்டி: காண்—பகுதி; ட்—இறந்தகால இடைநிலை; இ—வினையெச்ச விகுதி; காண் என்ற பகுதியில் 'ண்' 'ட்' ஆக மாறியது சந்தி.

அகன்றனன்: அகல்—பகுதி; ற்—இறந்தகால இடைநிலை; 'ல்' 'ன்' ஆனது விகாரம்; அன்—சாரியை; அன்—ஆண்பால் வினைமுற்று விகுதி.

பெறுகேன்: பெறு—பகுதி; க்—வேறு இடைநிலை எதிர் காலம் காட்டியது; ஏன்—தன்மை ஒருமை வினை முற்று விகுதி.

உற்றேன்: உறு—பகுதி; உறு என்ற பகுதி உற்று என்று ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது;ஏன்-தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

உலந்த: உல—பகுதி; த்—சந்தி; ந் ஆனது விகாரம்; த்—இறந்தகால இடைநிலை; அ—பெயரெச்சவிகுதி

36. புணர்ச்சி விதிகூறுக:

கங்குற்கனைசுடர்—கங்குல் + கனைசுடர்

'லள வேற்றுமையிற்றடவும்' என்ற விதியால் 'ல்' 'ற்' ஆகத் திரிந்தது.

முறுவனகை — முறுவல் + நகை

(1) 'னல முன்றனவும் ஆகும் தநக்கள்' என்ற விதியால் வருமொழி 'ந்' 'ன்' ஆகத் திரிந்தது.

(2) 'குறில் செறியாலள வருநத் திரிந்தபின் மாய்வும்' என்ற விதியால் நிலைமொழி 'ல்' கெட்டது.

சேயிழை: செம்மை + இழை

(1) ஈறுபோதலால் மை விகுதி கெட்டது.

(2) ஆதிநீடலால் 'செ' 'சே' என்றாயிற்று.

(3) இனையவும் என்பதால் 'ம்' கெட்டது.

(4) ஏமுன் உயிர்வரின் யகரமும் வகரமும் உடம்படு மெய் யாக வரும் என்பதால் 'ய்' உடம்படு மெய்யாகவந்தது.

பைந்தொடி: பசுமை + தொடி

(1). ஈறுபோதலால் மை விகுதி கெட்டது

(2) அடியகரம் ஐயாதல் என்பதால் 'ப' 'பை' என்றாயிற்று

(3) இனையவும் என்பதால் 'சு' கெட்டது

(4) இனம்மிகல் என்பதால் வருமொழி தகரத்திற்கு இன மான 'ந்' தோன்றியது.

பொற்றொடி: பொன் + தொடி

(1) 'னல முன்றனவும் ஆகும் தநக்கள்' என்பதால் வரு மொழி 'தொ' 'றொ' ஆயிற்று.

(2) 'ணன வல்லினம் வர டறவும்' என்ற விதியால் நிலை மொழி 'ன்' 'ற்' ஆகத் திரிந்தது.

காட்டுக்கோட்டம்: காடு + கோட்டம்

(1) 'நெடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டறவொற் றிரட்டும்' என்ற விதியால் காடு என்பது காட்டு என்றாயிற்று.

(2) வன்றொடர்க் குற்றியலுகரத்துக்கு முன் வல்லினம் மிகும் என்ற விதியால் 'க்' இடையே தோன்றியது.

37. வெண்பாவின் இலக்கணம் யாது? உதாரணம் தந்துவிளக்குக.

வெண்பாவின் இலக்கணம்:

1. அடிக்கு நான்கு சீர்களை யுடையதாய் இருத்தல்
2. ஈற்றடி முச்சீராய் இருத்தல்
3. ஈற்றுச்சீர் நேரசை, நிரையசை, நேர்பு,நிரைபுஅசைகளில் ஒன்ருயிருத்தல்
4. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை பிழையாமல் இருத்தல்
5. நேரிசை வெண்பாவாயின் இரண்டாமடியில் நான்காம் சீர், முதல் இரண்டடிகளின் எதுகை ஒத்த தனிச் சொல்லாயிருத்தல்
6. நான்கு அடிகளும் ஒரே எதுகையுடனேனும் முன் இரண்டடியும் ஓர் எதுகையும் பின் இரண்டடியும் மற்ருேர் எதுகையுடனேனும் இருத்தல்

உதாரணம்: காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவி தன் சொல்லை வறிதாக்க—மூதை
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சியா முன்.

இச்செய்யுளில் முதல் மூன்றடிகளும் நாற் சீரடிகளாகவும் ஈற்றடி முச்சீரடியாயும், ஈற்றுச்சீர் நேரசையாயும், இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்று, இரண்டாமடியில் தனிச் சொல்பெற்று முன்னிரண்டடியும் ஓர் எதுகையுடனும் பின்னிரண்டடியும் மற்ருேர் எதுகையுடனும் வந்துள்ளமை காண்க.

38. 'காதலி கண்ட' என்ற வெண்பாவில் அமைந்த சீர்களையும் தளை களையும் குறிப்பிடுக. முன்னிரண்டு அடிகளில் அமைந்த மோனை எதுகைகளையும் விளக்குக.

சீர்.

காதலி—(நேர் நிரை—கூவிளம்) விளச்சீர்
கண்ட—(நேர் நேர்—தேமா) மாச்சீர்
கனவு—(நிரைநேர்—புளிமா) மாச்சீர்
கருநெடுங்கண்—(நிரை நிரை நேர்—கருவிளங்காய்) காய்ச்சீர்.
மாதவி தன்—(நேர் நிரை நேர்—கூவிளங்காய்) காய்ச்சீர்
சொல்லை—(நேர் நேர்—தேமா)—மாச்சீர்
வறிதாக்க (நிரை நேர் நேர்—புளிமாங்காய்) காய்ச்சீர்

மூதை (நேர் நேர்—தேமா) மாச்சீர்
வினைகடைக் (நிரை நிரை—கருவிளம்) விளச்சீர்
கூட்ட (நேர் நேர்—தேமா) மாச்சீர்
வியங்கொண்டான் (நிரை நேர் நேர்—புளிமாங்காய்) காய்ச்சீர்
கங்குல்—(நேர் நேர்—தேமா) மாச்சீர்
கனைசுடர்—(நிரை நிரை—கருவிளம்) விளச்சீர்
கால்சியா—(நேர் நேர் நேர்—தேமாங்காய்) காய்ச்சீர்
முன்—(நேர்—நாள்) ஓரசைச்சீர்.

தளை :

1— 2=	விளமுன் நேர்—	இயற்சீர் வெண்டளை
2— 3=	மாமுன் நிரை—	இயற்சீர் வெண்டளை
3— 4=	மாமுன் நிரை—	இயற்சீர் வெண்டளை
4— 5=	காய்முன் நேர்—	வெண்சீர் வெண்டளை
5— 6=	காய்முன் நேர்—	வெண்சீர் வெண்டளை
6— 7=	மாமுன் நிரை—	இயற்சீர் வெண்டளை
7— 8=	காய்முன் நேர்—	வெண்சீர் வெண்டளை
8— 9=	மாமுன் நிரை—	இயற்சீர் வெண்டளை
9—10=	விளமுன் நேர்—	இயற்சீர் வெண்டளை
10—11=	மாமுன் நிரை—	இயற்சீர் வெண்டளை
11—12=	காய்முன் நேர்—	வெண்சீர் வெண்டளை
12—13=	மாமுன் நிரை—	இயற்சீர் வெண்டளை
13—14=	விளமுன் நேர்—	இயற்சீர் வெண்டளை
14—15=	காய்முன் நேர்—	வெண்சீர் வெண்டளை

மோனை எதுகை :

1. முதல் அடியில் நான்கு சீர்களிலும் கா என்ற எழுத்தும் அதற்கு இனமாகிய க என்ற எழுத்தும் முதலெழுத்துக்களாக ஒன்றி வந்தமையால் **முற்றுமோனை.**
2. இரண்டாம் அடியில் 1, 3 சீர்களில் மா என்ற எழுத்தும் அதற்கு இனமாகிய வ என்ற எழுத்தும் முதலெழுத்துக்களாக ஒன்றி வந்தமையால் **பொழிப்பு மோனை.**
3. முதலடியிலும் இரண்டாவது அடியிலும் கா, மா என்ற எழுத்துக்கள அளவொத்துநிற்ப 'த' என்ற இரண்டாம் எழுத்து ஒன்றி வந்தமையால் **அடியெதுகை.**
4. இரண்டாமடியில் 1—4 சீர்களில் முதலெழுத்துக்கள் அளவொத்து நிற்ப 'த' என்ற எழுத்தும் அதற்கு இனமாகிய 'தை' என்ற எழுத்தும் இரண்டாம் எழுத்துக்களாக ஒன்றி வந்தமையால் **ஒரூஉ எதுகை.**

III.. இடைக்காலச் செய்யுள்

(பிற்பகுதி)

கம்பராமாயணம்

(சுந்தர காண்டம்)

1. கம்பராமாயணம்—பொருளும் தொடரிலக்கணமும் கூறுக.
2. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் யாது ? அவர் இயற்றிய வேறு நூல்கள் யாவை ?
3. கம்பர் பிறப்பிடம், குலம், தந்தையார், ஆதரித்தவர், சமயம்,காலம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.
4. சுந்தரகாண்டம்: பெயர்க் காரணம் கூறுக.
(விடை கம்பராமாயண முன்னுரைப் பகுதியில் காண்க)
5. அரக்கியர் கூட்டத்திடையே வருந்தி வாழ்ந்த சீதையின் நிலையை 30 வரிகளில் எழுதுக.

இராவணனால் அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்ட சீதை கல்லின் பக்கத்தில் முளைத்து ஒரு துளி நீரும் காணாத சிறந்த மருந்துச் செடியைப் போல வாடி வருந்தினாள்; புலிக் கூட்டத்தி டையே அகப்பட்ட இளம் பெண் மானைப்போலச் செய்வதறியாது திகைத்தாள்; ஊணும் உறக்கமும் இன்றி வருந்தினாள். வெயி லிடை ஏற்றிய விளக்குப்போல ஒளி குன்றிச் சோர்ந்தாள். இராம பிரானை எண்ணி ஏங்கி உள்ளம குமுறியும் வாய் விட்டழுதும் உடல் ஒடுங்கியும எல்லையில்லாத்துயர்க் கடலில் ஆழ்ந்து துன் புற்று வருந்தினாள் சீதை.

அவள் உயிர் விடத் துணிந்தும் விதியின் வலிமையை எண்ணி அது செய்ய முடியாமல் உழன்றாள். தன் பொருட்டு இராகவன் வராவிட்டாலும் தன் குலத்துக்கு நேர்ந்த பெரும் பழியைத் துடைக்கவேனும் அவசியம் வருவான் என்ற நம்பிக் கையே அவளுயிரைக் காத்து வந்தது. அணிந்திருந்த அழுக் கேறிய ஆடை ஒன்றினைத் தவிர வேறு ஆடையை அணிந்தறி யாதவளும், நீரில் படாத உடலினை உடையவளுமாகிய பேரழகு டைய சீதை, மன்மதன் அமிழ்தத்தால் செய்த பாவை புகை படிந்து விளங்குவது போலக் காட்சியளித்தாள்.

இராவணன் என்னை எடுத்து வந்தபோது கண்ட சடாயு என்ற கழுகரசனும் இறந்து போயிருப்பான். என் துன்ப

பசுமட் கலத்துள் நீர் போல

நிலையை இராமபிரானுக்கு அறிவிப்பவர் யாவர்? இராமபிரானை இப்பிறவியில் காண்பது எது? இலக்குவனின் மனம் புண்படப் பேசிய என்னை அறிவிலி என்று கருதி இராமபிரான் துறந்து விட்டாரோ? அல்லது தாயரும் பரதனும் வந்து மீண்டும் அயோத்திக்கு அழைத்துச் சென்றனரோ? அன்றி ஏதேனும் பெருந்துன்பம் நேர்ந்திருக்குமோ? இராமபிரான் இதுவரை வாரா மைக்குக் காரணம் யாதாக இருக்கும் என்று பலப்பல எண்ணி ஏங்கினாள் சீதை.

இராமபிரான் இலைக்கறி உணவினை யாரிட உண்பார்? விருந் தினரைக் கண்டால் அவர் உள்ளம் எப்படித் துன்புறுமோ? தசரத சக்கரவர்த்தி அரசுரிமையை ஏற்குமாறு கூறிய போதும், கைகேயி காட்டிற்குச் செல்லுமாறு கட்டளையிட்டபோதும் சித் திரத்தில் எழுதிய செந்தாமரை போல் விளங்கிய முகத்தை நான் என்று காண்பேன் என்று ஏங்குவாள். ஏழை வேடனாகிய குகனுக்கு 'நீ என் தம்பி; இலக்குவன் நின் தம்பி; இவள் நின் கொழுந்தி' என்று கூறி நட்புரிமை பாராட்டிய இராமபிரானின் பேரருளை எண்ணி மயங்குவாள். இவ்வாறெல்லாம் சீதை இராம னைப் பிரிந்து பெரிதும் துன்புற்று அசோக வனத்தில் வாழ்ந்து வந்தாள்.

6. 'கன்மருங்கெழுந்து என்று மோர் துளிவரக் காணா நன்மருந்து போல்'—இவ்வுவமையைவிளக்கி இதன்பொருத்தத்தையும் கூறுக.

கல் செறிந்த வலிய நிலத்திலே தோன்றி ஒரு துளி நீரும் காணாத மருந்துச் செடிபோலச் சீதை வருந்தினாள் என்பது இதன் பொருள்.

கல் செறிந்த வலிய நிலத்தில் தோன்றியமையால் மருந்துச் செடி மண்ணின் சத்தைக் கிரகித்துக் கொண்டு வளர முடியாமல் வாடுகின்றது. அவ்வாறு வாடுகின்ற செடிக்கு மழை நீராவது உயிரூட்டும் என்றால் அதுவும் இல்லை. மழை நீர் இல்லா விட் டாலும் சிறிது நீர் ஊற்றுவாரும் யாரும் இல்லை. அத்தகைய நிலையில் அச்செடி எங்ஙனம் வாடுமோ அங்ஙனம் வாடினாள் சீதை.

கல் செறிந்த நிலம் என்றது கல்லினும் வலிய உள்ளம் படைத்த அரக்கியர்களைக் குறிக்கின்றது. மழைநீரை விரும்பி வாழும் மருந்துச் செடி என்றது இராமபிரானின் அருளை எண்ணி ஏங்கும் சீதையைக் குறிக்கின்றது. ஒரு துளி நீரும் காணாது ஏங் கும் செடி என்றது ஆதரவாக ஒரு வார்த்தை கூறுபவரும் இல்

லாமல் அல்லற்படும் சிதையின் துன்ப நிலையை விளக்குகின்றது. மருந்துச் செடி என்றது சிதையைக் குறிக்கும். மக்களை நீண்ட நாள் வாழ்விக்கக் கூடிய சஞ்சீவி என்ற அரிய மூலிகையைப் போல மக்களின் பாவப்பிணிக்கு மருந்தாக விளங்குபவள் திருமகளின் அமிசமாகிய சிதை என்பதாம். இவ்வளவு கருத்துக்களும் செறியக் கம்பர் இவ்வுவமையை அழகாகக் கூறியுள்ளமை நினைந்து நினைந்து இன்புறத்தக்கதாம்.

7. அரக்கியர் கூட்டத்திடையே அகப்பட்டு வருந்திய சீதைக்குக் கூறப்பட்ட உவமை யாது? விளக்குக.

கொடிய புலிக் கூட்டத்துக்கிடையே அகப்பட்ட இளம் பெண் மானை அரக்கியர் கூட்டத்திடை அகப்பட்டு வருந்திய சிதைக்கு உவமையாகக் கூறியுள்ளார் கவிஞர்.

ஒரு புலியிடம் பல மான்கள்—ஆண்மான்கள் அகப்பட்டுக் கொண்டாலும் செய்வதறியாமல் திகைத்து வருந்தும். ஒரு புலிக் கூட்டத்தினிடையே ஒரு மான், அதிலும் பெண்மான் அகப்பட்டுக் கொண்டால் அதன் நிலை என்னும்! அது போலப் புலியினும் கொடிய அரக்கியரிடையே மிகவும் மென்மைத் தன்மை வாய்ந்த சிதை தனியளாய் அகப்பட்டுத் திகைத்து வருந்தினள் என்பது இவ்வுவமையின் கருத்தாம்.

8. இராமபிரான் நிச்சயமாகத் தன்னைமீட்க வருவார் என்பதற்குச் சீதை கொண்டிருந்த நம்பிக்கை யாது ?

சிறந்த வீரராகிய இராமபிரான் தன் குலத்திற்குப் பழி ஏற்படுவதை ஒரு பொழுதும் சகித்துக்கொள்ள மாட்டார். அதனால் மனைவியை மீட்கவேண்டுமே என்று கருதி வராவிட்டாலும் இராவணன் செயலால் தன் சூரியகுலத்துக்கு ஏற்பட்டுள்ள பெரும் பழியை நீக்கவேனும் அவனைக் கொன்று என்னை விடுதலை செய்யவேண்டுவது அவர் கடமை. ஆதலின் நிச்சயமாக இராமபிரான் வருவார் என்று சிதை நம்பினள்.

9. அனங்கவேள் செய்த ஓவியம்—புகையுண்டதேஒக்கின்ற உருவாள் இவ்வுவமையை விளக்கி இதன் பொருத்தத்தையும் கூறுக.

மன்மதன் பாற்கடலில் தோன்றிய தெய்வத்தன்மை பொருந்திய அமிழ்தத்தைக் கொண்டு செய்த அழகிய ஓவியம் ஒன்று புகை படிந்து காணப்பெற்றால் எப்படியிருக்குமோ அது போல நீராட்டாமையால் புழுதி படிந்த உடலும், அழுக்கேறிய ஆடையும் கொண்டு விளங்கிய சிதைக்குப் புகைபடிந்த ஓவியம்

பொருத்தமான உவமையாம். பேரழகுடைய சீதையின் உருவத்துக்கு அமிழ்தாற் செய்த ஓவியமும், புழுதிபடிந்த கோலத்திற்குப் புகைபடிந்திருத்தலும் உவமைகளாகக் கூறப்பட்டன.

அனங்கவேள் அழகிற் சிறந்தவன். அழகிற் சிறந்து அழகுத் தெய்வமாக விளங்கும் அவன் செய்த பாவை யென்றுல் அது பேரழகுடையதாகத் திகழுமன்ரோ. சீதையின் வடிவழகிற்குக் கூறிய இவ்வுவமையால் அவளுடைய அழகின் பெருமை விளங்கும்.

அமிழ்தம் சாவாமருந்து; மிகவும் இனிமைவாய்ந்தது; உண்டவரை வேறென்றும் நுகர விரும்பாமற் செய்யும் தன்மையுடையது. அதுபோலச் சீதையும் இலக்குமியின் அமிசமாதலால் அழியாப் பேரின்பத்தை அளிக்கவல்லவள்; இனிமை நிறைந்தவள்; அவளிடம் பக்தி கொண்டவர் வேறு தெய்வத்தை விரும்பமாட்டார்கள். இத்தகைய பண்புகளால் அமிழ்தால் செய்தபாவையைச் சீதைக்கு உவமை கூறினர்.

10. 'காண்டலோ அரிது' என்றும், 'அறிவிலள் எனத் துறந்தானே' என்றும் சீதை எண்ணியமைக்குக் காரணங்கள் யாவை?

1. சீதையை இராவணன் வஞ்சகமாகக் கவர்ந்து வந்தபோது கண்டவன் சடாயு எனும் கழுகரசனே யாவான். அவன் சீதையை மீட்க இராவணனுடன் கடும்போர் செய்து இராவணன் வாளால் வெட்டுண்டு விழ்ந்தான். அதனல் அவன் இறந்துபோயிருப்பான் என்றும், தன்னிலையை இராமபிரானுக்குக் கூறுவார் ஒருவரும் இல்லையாதலால் இராமபிரான் தான் இருக்குமிடம் அறிந்து இலங்கைக்கு வரமாட்டார் என்றும் எண்ணிய சீதை 'காண்டலோ அரிது,' என்று எண்ணினள்.

2. மாயமானைத் துரத்திச் சென்ற இராமபிரானுக்குத் துன்பம் நேர்ந்துவிட்டது என்று உளம்பதைத்து இலக்குவனைத் தேடிச் செல்லக் கூறினள் சீதை. இலக்குவன் அஃது அரக்கர் மாயமென்றும் இராகவனுக்கு ஒன்றும் நேராது என்றும் எடுத்துக் கூறியும் சீதை தன் அறியாமையால் அவன் மனம் புண்படுமாறு பேசி அவனை அனுப்பிவைத்தாள். அதனை இலக்குவன் கூறக் கேட்டமையால் இராமபிரான் தன்னை அறிவற்றவள் என்று கருதிக் கைவிட்டாரோ என்று கவலை கொண்டாள் சீதை.

11. இராமபிரானுடைய துன்ப நிலை குறித்துச் சீதை ஏங்கி எண்ணி யன யாவை ?

இராமபிரானுக்குப் பசிவேளையறிந்து காய் கனி கிழங்கு களையும் இலைக் கறியுணவினையும் யார் தந்து உபசரிப்பார்கள் என்றும், விருந்தினர் வந்தால் அவர்களை உபசரிக்கக் கூடிய நிலை யில் தான் இல்லாமல் மனைவியைப் பிரிந்து வாழ்வதால் இராம பிரான் என்ன நினைத்து ஏங்குவாரோ என்றும் சீதை இராம பிரானின் துன்ப நிலை குறித்து வருந்தி ஏங்கினள்.

12. சீதை இராமபிரானுடைய எத்தகைய அருங்குணங்களை எண்ணி வருந்தினள் ?

தசரத சக்கரவர்த்தி அரசுரிமையை ஏற்றுக் கொள்ளுமாறு கூறியபோதும், கைகேயி காட்டிற்குச் செல்லுமாறு பணித்த போதும் விருப்போ வெறுப்போ கொள்ளாமல், சித்திரத்தில் எழுதப்பட்ட மலர்ந்த செந்தாமரை எப்பொழுதும் ஒரே தன்மை யாக விளங்குவது போல மலர்ந்த முகத்தையுடையவனாய் விளங் கிய இராமபிரானின் விருப்பு வெறுப்பற்ற அருங்குணத்தையும், கங்கையாற்றில் நாவாய் செலுத்தும் எளியவனாகிய குகன் பிரிய மனமின்றி வருந்தியபோது 'நீ என் தம்பி, இலக்குவன் நினக்குத் தம்பியாவான், சீதை உனக்குக் கொழுந்தியாவாள்' என்று கூறி உறவு முறை பாராட்டிய அருங்குணத்தையும் சீதை எண்ணி எண்ணி வருந்தினள்.

13. அரக்கியரிடையே விளங்கியவள் சீதையே என்று அனுமன் எங்ஙனம் துணிந்தனன் ?

கொடுமையே உருவமான கொடிய அரக்கியர்களால் நாற் புறத்தும் சூழப்பெற்றுக் காவல் செய்யப் பெற்றமையாலும் கடல்போன்ற தன் கண்ணினின்றும் கண்ணீரைப் பெருக்கி எப்பொழுதும் அழுது கொண்டே (கண்ணீர்த் தடத்திடை அன் னம்போல்) இருந்தமையாலும் அரக்கியரிடையே தான் கண்ட நங்கையே சீதை எனத் துணிந்தனன் அனுமன்.

14. 'வீடினதன்றறன்; யானும் வீகலேன்'— இங்ஙனம் அனுமன் கூறக் காரணம் என்ன ?

அனுமன் சீதையைக் காணாத நிலையில் 'தருமம் பொய்த் ததோ' என்றும் 'இவ்விலங்கையை அழித்து நானும் இறப் பேன்' என்றும் உறுதி பூண்டிருந்தான். இப்பொழுது சீதை

கிடைத்து விட்டாளாகையால் அதருமம் புரிந்த அரக்கர் அழி யத் தருமம் தலையெடுக்குமெனவும், தானும் இனி இறக்க வேண் டியதில்லை என்றும் கருதினன்.

15. சீதையைக் கண்ட அனுமன் சீதையின் நிலையையும் பெருமையையும் குறித்துத் தன்னுள் எண்ணியவற்றை 25 வரிகளில் எழுதுக.

(பாடச் சுருக்கம் பக்கம் 52-இல் சீதா தேவி இலக்கு மியே என்று தொடங்கும் பத்தி முழுவதும் இதற்கு விடையாம்.)

16. சீதையின் மனத்தவத்தின் மாண்பினை அனுமன் எங்ஙனம் பாராட்டினன்?

இராமபிரானைப் பிரிந்து அசோக வனத்தில் அவரையே எண்ணி ஏங்கி வருந்திக் கொண்டிருக்கும் சீதையின் தவநிலை வெயிற் காலத்தில் நெருப்பருகில் நின்றும், மழைக் காலத்தில் நீரில் மூழ்கியும், உண்ணும் உணவையும் பருகும் நீரையும் துறந்தும் அருந்தவம் புரியும் துறவிகளின் தவத்தினும் சிறந்த தாகும் என்று கூறிச் சீதையின மனத் தவத்தை அனுமன் பாராட்டினன்.

17. சீதையின் கற்பு மாண்பினுல் பெருமை யுற்றன எவை என்று அனுமன் கூறுகின்ருன்?

உயர்குடிப் பிறப்பு, பெண் தன்மை, நாணம் ஆகிய இப் பண்புகள் சீதா தேவி இவ்வுலகில் தோன்றிக் கற்பு நெறியோடு வாழ்ந்த மாண்பினுல் பெருமை பெற்றன என்று அனுமன் கூறுகின்ருன்.

18. வேற்றுப் பொருள் வைப்பணியின் இலக்கணம் யாது? உதா ரணம் தந்து விளக்குக.

வேற்றுப் பொருள் வைப்பணியாவது கவிஞர் தாம் கூறக் கருதும் பொருளை நிலைநாட்ட வேருெரு சிறந்த பொருளைச் சான் ருகக் காட்டி வற்புறுத்துவதாம். அவ்வாறு கூறும் போது பொதுப் பொருளைச் சிறப்புப் பொருளாலும், சிறப்புப் பொருளைப் பொதுப் பொருளாலும் வற்புறுத்திக் கூறுதல் முறையாகும்.

சீதாதேவியின் கற்புக்கும் மனவலிமைக்கும் எத்தகைய இடுக்கும் நேரவில்லை, என்ற உண்மையை நிலை நாட்ட விரும்

பிய கவிஞர் அறத்துக்கு அழிவு நேருதலும் உண்டோ என்று கூறி, அறத்துக்கு அழிவு ஏற்படாதது போல அறவடிவினளாகிய சீதையின் கற்புக்கும் அழிவு ஏற்படாது என்று வற்புறுத்திக் கூறுகின்றார்.

அறத்துக்கு அழிவில்லை என்பது பொதுப்பொருள். அதைக் கொண்டு சீதையின் கற்பும் காவலும் அழிய வில்லை என்ற சிறப்புப் பொருளை வற்புறுத்திக் கூறியமையின் இது வேற்றுப் பொருள்வைப்பணியாம்.

19. 'கற்பும் காவலும் ஏசுண்ட தில்லை' என்று அனுமான் எங்ஙனம் முடிவு செய்தனன்?

சீதை மாசுண்ட மணிபோலப் புழுதிபடிந்த மேனியளாய், சூரியனுடைய ஒளியினால் ஒளிகுன்றித் தோன்றும் சந்திரனைப் போலப் பொலிவு குன்றியவளாய், அழுக்குப் படிந்து சடையாகிய கூந்தலையுடையவளாய், கவலையே ஓர் உருக்கொண்டு விளங்குவது போலத் தோன்றுதலால் அவள் கற்பும் காவலும் ஏசுண்ட தில்லை என அனுமன் முடிவு செய்தனன்.

20. "தருமமே காத்ததோ சனக னல்வினைக்
கருமமே காத்ததோ கற்பின காவலோ
அருமையே அருமை ஆரி தாற்றுவார்
ஒருமையே யெம்மனோர்க் குரைக்கற் பாலதோ!

இச்செய்யுளில் அமைந்த மோனை எதுகைகளைப் புலப்படுத்துக,

முதல் வரியில் 1, 3 சீர்களில் 'த' என்ற முதலெழுத்தும் 'ச' என்ற அதன் இன எழுத்தும் ஒன்றி வந்தமையால் பொழிப்பு மோனை.

இரண்டாம் வரியில் நான்கு சீர்களிலும் 'க' என்ற எழுத்தும் 'கா' என்ற அதன் இனவெழுத்தும் முதல் எழுத்துக்களாக ஒன்றி வந்தமையால் முற்று மோனை.

மூன்றும் வரியில் நான்கு சீர்களிலும் 'அ' என்ற எழுத்தும் 'ஆ' என்ற அதன இனவெழுத்தும் முதலெழுத்துக்களாக ஒன்றி வரத் தொடுத்தமையால் முற்று மோனை.

நான்காம் வரியில் 1, 3 சீர்களில் ஒ என்ற எழுத்தும் அதற்கு இனமாகிய உ என்ற எழுத்தும் முதலெழுத்துக்களாக ஒன்றி வந்தமையால் பொழிப்பு மோனை.

நான்கு அடிகளிலும் முதலெழுத்துக்கள் அளவொத்த குற்றெழுத்துக்களாக இருக்க 'ரு' என்ற இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளமையால் அடி எதுகை.

மூன்றும் வரியில் 1, 2 சீர்களில் 'அ' என்ற முதலெழுத்து அளவொத்து நிற்க 'ரு' என்ற இரண்டாம் எழுத்து ஒன்றி வந்தமையால் இணை யெதுகையாம்.

21. கம்பரின் உவமைத்திறமையை விளக்க இரண்டு உதாரணங்கள் தருக.

(6, 9 வினுக்களுக்குரிய விடைகளை இதற்கு விடையாகக் கொள்க.)

**22. 'விரிமழைக் குலங்கிழித் தொளிரு மின்னெனக்
கருநிறத் தரக்கியர் குழுவிற் கண்டனன்'
அலகிட்டு வாய்பாடு கூறுக.**

விரிமழைக்	...	நிரை நிரை-கருவிளம
குலங்கிழித்	...	நிரை நிரை - கருவிளம்
தொளிரும்	...	நிரை நேர் - புளிமா
மின்னெனக்	...	நேர் நிரை - கூவிளம்
கருநிறத்	...	நிரை நிரை - கருவிளம்
தரக்கியர்	...	நிரை நிரை - கருவிளம்
குழுவிற்	...	நிரை நேர் - புளிமா
கண்டனன்	...	நேர் நிரை - கூவிளம்

23. இலக்கணக் குறிப்பு வரைக.

1. துளிவரக் காணு நன் மருந்து —1. ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், 2. காரிய ஆகு பெயர்.
2. பரிதி வெங்குலத்தையும் பழியையும் பாரா
சுருதி நாயகன் வரும் வரும்.
   1. உம்மைகள் எண்ணும்மைகள்
   2. செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்
   3. அடுக்குத்தொடர்
   4. செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.
3. வெம்புலிக் குழாத் தகப்பட்ட தன்னுள் : பண்புத்தொகை.

4. **விரிமழைக்** குலம் - வினைத் தொகை
5. பாவி தன்னுயிர் **கொள்வான்** இழைத்த பண்பிதால் - வானீற்று வினையெச்சம்.
6. அறத்துக் கிறுண்டோ—ஓகாரம் எதிர்மறை.
7. **நுங்குவ** அருந்துவ நீக்கி—வினையாலணையும் பெயர்.
8. அவன் **கமலக் கண்க**ளால் - உவமத் தொகை.
9. இவள் **கமலச் செல்வியே** - ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

24. பிரித்தெழுதுக:—

ஆட் செய்வார்=ஆள் + செய்வார்
நோற்றீண்டிவள்=நோற்று+ஈண்டு+இவள்
பொற்புயம்=பொன்+புயம்
மடக்கொடி=மடம்+கொடி
கடற்றுணை=கடல்+துணை
செந்தாமரை=செம்மை+தாமரை
ஆருயிர்=அருமை+உயிர்

25. உறுப்பிலக்கணம் கூறுக:—

துன்னுன்=துன் - பகுதி; ன் - சந்தி; ஆ - எதிர் மறை இடை நிலை புணர்ந்து கெட்டது; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

துறந்தான் : துற - பகுதி; த் - சந்தி; ந் - ஆனது விகாரம்; த் - இறந்த கால இடை நிலை; ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

வீகலேன் வி - பகுதி; கு - சாரியை; அல் - எதிர்மறை இடைநிலை; என் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

கண்டனென் : காண் - பகுதி; ட் - இறந்த கால இடை நிலை; அன் - சாரியை; என் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி; காண் என்பது கண் என்று ஆனது விகாரம்.

சாற்றுகேன் : சாற்று - பகுதி; க் - (வேறு) இடை நிலை எதிர்காலம் காட்டியது; என் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

நோற்றிலன் : நோல் - பகுதி; 'ல்', 'ற்' ஆனது விகாரம்; ற் - இறந்த கால இடை நிலை; இல் - எதிர் மறை இடை நிலை; அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி.

26. புணர்ச்சி விதி கூறுக:—

பொற்புயம்=பொன்+புயம்

னகர ஈற்று மொழிக்கு முன் வல்லினம் வரின் 'ன்' 'ற்' ஆக மாறும் (ணன வல்லினம் வர டறவும்) என்ற விதியால் பொற்புயம் என்றாயிற்று.

ஆட்செய்வார்=ஆள்+செய்வார்.

ளகர ஈற்றுச் சொல்லுக்கு முன் வருமொழியில் வல்லினம் வந்தால் 'ள்' 'ட்' ஆகமாறும் (லள வேற்றுமையில் றடவும்) என்ற விதியால் ஆட் செய்வார் என்றாயிற்று.

மடக்கொடி=மடம்+கொடி

(1) மகர ஈற்றுச் சொல் வருமொழியோடு புணரும் போது 'ம்' கெட்டு உயிர் ஈறாக நின்று புணரும் (மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்) என்ற விதியால் 'ம்' கெட்டது.

(2) உயிரீற்றுச் சொல்லுக்கு முன் வல்லினம் வந்தால் மிகும் (இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க, ச, த, ப மிகும்) என்ற விதியால் 'க்' தோன்றி மடக்கொடி என்றாயிற்று.

ஆருயிர்=அருமை+உயிர்.

1. ஈறு போதல் என்ற விதியால் 'மை' கெட்டது (அரு+உயிர்)

2. ஆதி நீடல் என்பதால் 'அ' என்ற குற்றெழுத்து 'ஆ' என்ற நெட்டெழுத்தாகத் திரிந்தது. (ஆரு+உயிர்)

3. முற்றியலுகர ஈற்றுச் சொல்லும் சில சமயங்களில் குற்றியலுகரம் போல வருமொழியில் உயிர் வரும்போது உகரம் கெட்டுப் புணரும் என்ற விதியால் 'ரு'வில் உள்ள உகரம் கெட்டது. (ஆர்+உயிர்)

4. 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதியால் வருமொழி உயிர் சேர்ந்து 'ர்' ரு ஆக மாறியது. **ஆருயிர்**

IV. இக்காலச் செய்யுள்

1. குசேலோ பாக்கியானம்

1. குசேலோ பாக்கியானம் — பொருள் கூறுக.

குசேல + உபாக்கியானம். குசேலன் என்பதற்குக் கந்தலான ஆடையை அணிந்தவன் என்பது பொருள். உபாக்கியானம் என்பதற்குக் கிளைக் கதை என்பது பொருளாம். குசேல முனிவரது சரித்திரத்தைக் கூறும் நூல் என்பது இதன் பொருளாம்.

2. இந்நூலாசிரியர் யார்? அவரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

இந்நூலாசிரியர் தேவராஜப் பிள்ளை என்பவராவர். இவர் தொண்டை நாட்டிலே வல்லூரென்னும் ஊரில் பிறந்தவர். தந்தையார் வீராசாமிப் பிள்ளை என்பவராம். இவர் கருணிகர் மரபில் தோன்றியவர். இற்றைக்குச் சற்றேறக் குறைய 100 ஆண்டுகளுக்கு முன் இவர் வாழ்ந்தார்.

3. இந்நூலின் முதனூல்கள் யாவை ?

வேப்பத்தூர்ச் சங்கப் புலவர்களில் ஒருவராகிய ஆரியப்பப் புலவர் இயற்றிய செந்தமிழ்க் காப்பியமான பாகவதமும் ஆந்திர மொழியில் வரகவி என்பார் இயற்றிய குசேலோ பாக்கியானமும் இதன் முதனூல்களாம்.

4. சுசீலையின் உயர் குணங்கள் எவை ?

சுசிலை குற்றமற்ற உயர் குலத்தில் தோன்றியவள்; தன் வீட்டுக்கு வரும் விருந்தினர் மனம் மகிழ உபசரிக்கும் உள்ளன்பு மிக்கவள். அவள் கணவன் மனத்தை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்ளும் தன்மை யுடையவள்; வாய்மையினின்று சிறிதும் தவறாதவள். கோபம் என்பதே ஒரு சிறிதும் அவளிடம் காண்பது அரிதாம். அனைவராலும் புகழ்ந்து பாராட்டத்தக்க கற்பைத் தனக்கு அணிகலமாகக் கொண்டவள் சுசிலை. அவள் கணவன் தேடிக்கொணர்ந்ததையே பெற்று மகிழ்ச்சி யடைவாள்.

5. இரத்தலின் இழிவை விளக்கி எழுதுக.

வாயிலுள்ள முப்பத்திரண்டு பற்களும் தெரியுமாறு காட்டிக்கொண்டு, முகத்தில் துன்பக் குறிகளுடன் தன் வறுமையைப் பற்றிப் பலவாறு சொல்லித் தன் ஏழ்மையை நிலை நாட்டித்

பாம்பின் வாய்த் தேரை போல

தன் இரு கரங்களையும் விரித்துக்காட்டி, தன் தற்பெருமையை முற்றிலும் போக்கிக்கொண்டு மானத்தை நீக்கி வீடு தோறும் சென்று இரத்தல் எக்காலத்திலும் மிகவும் இழிவான செயலாகும்.

6. குசேலர் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தனர் என்பதைச் சான்றுடன் விளக்குக.

குசேலர் எத்துணை வறுமை நிலையை அடைந்தபோதும் பிறரிடம் சென்று யாசித்தலை மிகவும் இழிவான செயல் என்று அறிந்து அதனை அறவே அகற்றி வாழ்ந்தார். அவர் காட்டுக்குச் சென்று அங்கு எடுப்போர் இன்றிக் கிடந்த குளநெல்லை வருந்தித் தேடித் தேடித் தன் நகங்களால் கிள்ளிச் சேர்த்து எடுத்துக்கொண்டு வந்து தன் மனைவியிடம் கொடுத்தார். அவளும் அதை வாங்கிக் குற்றி உணவு சமைத்தாள். அவ்வுண வில் ஒரு பகுதியைக் குசேலர் வந்த விருந்தினருக்கு அளித்து விட்டுத் தனக்குக் கிடைத்த பகுதியை உண்டு மிக்க மகிழ்ச்சி யுடன் வேதங்களும் தேடி அறிய முடியாத திருமாலின் இணையடி களைத் தம் மனத்தில் துதித்து வாழ்ந்து வந்தார். இதனால் குசேலர் வறுமையிலும் செம்மையுற வாழ்ந்தார் என்பது விளங்கும்.

7. குசேலரின் குழந்தைகளின் துன்ப நிலையை ஆசிரியர் எங்ஙனம் வருணிக்கிறார் ?

குசேலரின் மனைவியான சுசீலை கஞ்சியை ஒரு பானையில் கொணர்ந்து அகப்பையினால் தன் இருபத்தேழு குழந்தை களுக்கும் வார்க்கலானாள். ஒரு குழந்தைக்குக் கஞ்சி வார்க்கும் போது மற்றொரு குழந்தை கை நீட்டும். அவள் வயிற்றின்மீது வீழ்ந்து வேறு இரு குழந்தைகளும் கை நீட்டும். மூன்று குழந்தைகளும் கை நீட்டும். ஒரு குழந்தை விம்மி யழும்; மற் றொன்று கண் பிசைந்தழும்; மற்றொன்று தரையில் புரண்டழும். இவற்றைச் சுசீலை எங்ஙனம் பார்த்துச் சகிப்பாள்.

இவ்வாறிருக்கையில் மற்றொரு குழந்தை, "ஐயோ! என் வயிற்றில் எழுந்த பசி இன்னும் அடங்கவில்லையே," என்று அழும். மற்றொன்று, "தாயே! கஞ்சி எனக்கு ஒரு சொட்டும் வார்க்கவில்லை," என்று பொய் சொல்லும். கஞ்சியை முன்னே பெறவேண்டும் என்ற கருத்துடன் ஒரு குழந்தை உண்ணப் புகும்போது மற்றொரு குழந்தை பிடித்திழுக்க இளைக்காமல்

அக்குழந்தை எதிரே இழுக்கக் கீழே சிந்தும கஞ்சியைப் பெறு வதற்கு மற்றொரு குழந்தை ஆசைப்படும்.

இவ்வாறு சுசீலையின் குழந்தைகள் பலவாறு துன்பமுற்ற தாக ஆசிரியர் அழகுபட வருணிக்கிறார்.

8. மடுத்த அஃது அறிந்திலேன்—இடஞ் சுட்டி விளக்குக.

குசேலரின் கற்பிற் சிறந்த மனைவியாம் சுசீலை தன் மக்களுக்கு உணவளிக்கையில் குழந்தைகள் ஒன்றின் மீது ஒன்று விழுந்து கை நீட்டிப் பலவாறு துன்பமடைந்து கஞ்சியைப் பெற்று வந்தன. அப்போது ஒரு குழந்தை, அடுத்த வீட்டுச் சிறுவன், 'உங்கள் வீட்டில் என்ன கறி சமைத்தார்கள்' என்று என்னைக் கேட்டான். கறி என்றால் என்ன? அஃது எச்சுவையுடையது? தாயே! எனக்குக் கூறுவாய்' என்று சுசீலையைக் கேட்டான். அக் குழந்தைக்குக் கறி யென்பதென்னவென்று கூறினால், "அதனைச் செய்து தா," என்று கேட்பானே; என் செய்வது என்று கருதிச் சுசீலை, "சமையல் செய்யப் பெற்ற அதனை நான் இன்னதென் றறியேன்," என்று உரைத்து மற்றொரு செய்தியைக் கூறிஅதனை மறக்குமாறு செய்தனள்.

9. குசேலர் குடும்பத்தின் வறுமை நிலையை 20 வரிகளில் எழுதுக.

குசேலர் இரத்தலின் இழிவை நன்கு அறிந்தவராதலால் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து வந்தார். அவர் காட்டில் கொள்வாரின்றிக் கிடைக்கும் குள நெல்லை வருந்தித் தேடி நகங் களால் கிள்ளிச் சேகரித்து வந்து மனைவியிடம் கொடுக்கச் சுசீலை அதனைப் பெற்றுக் குற்றி உணவாக்கினள். குசேலர் அவ்வுணவில் ஒரு பகுதியை விருந்தினருக்கு அளித்துத் தனக் குக் கிடைக்கும் பகுதியை உண்டு மகிழ்ச்சியுடன் திருமாலின் இணையடிகளை மனத்தால் துதித்து வந்தார்.

சுசீலை கஞ்சியைத் தன் குழந்தைகளுக்குத் தருகையில் அவள் பட்ட துன்பங்கள் கணக்கிலடங்கா. ஒரு குழந்தை கை நீட்டும், மற்றும் இரண்டு குழந்தைகளும், மூன்று குழந்தைகளும் கை நீட்டும். ஒரு குழந்தை விம்மியும், மற்றொன்று கண் பிசைந் தும், மற்றொன்று புரண்டும் அழும். இதனைப் பார்த்துச் சுசீலை தாங்க முடியாத துன்பத்தை அடைந்தாள்.

"என் வயிற்றிலெழுந்த பசி தீரவில்லையே, என்று ஒரு குழந்தை அழும், "எனக்குக் கஞ்சி வார்க்கவில்லையே," என்று

பால் நினைந்து ஊட்டும் தாய் போல

ஒரு குழந்தை பொய் கூறும். கஞ்சியைப் பெறுவதற்காக ஒரு குழந்தை கை நீட்டும்போது மற்றொரு குழந்தை அதைப் பிடித்திழுக்க முதற் குழந்தை இளைக்காமல் இழுக்கக் கீழே சிந்தும் கஞ்சியைப் பெற மற்றொரு குழந்தை ஆசைப்படும்.

ஒரு குழந்தை ஓடி வந்து "அடுத்த வீட்டுப் பையன், 'உங்கள் வீட்டில் என்ன கறி சமைத்தார்கள்?' என்று கேட்டான். தாயே! கறியென்றால் என்ன? எச்சுவையுடையது? கூறுவாய்," என்று கேட்டது. அது கேட்ட சுசீலை அஃது எத்தன்மையது என்று கூறினால் அதைச் செய்து கொடு என்பானே என்று கருதி "அவ்வுணவுப் பொருளை நான் அறியேன்" என்று கூறி வேறொன்றினைச் சொல்லி அதனை மறக்கச் செய்தாள்.

இங்ஙனம் குசேலர் குடும்பத்தினர் வறுமை நோயால் வாடி வருந்தினர்.

10. **பிரித்தெழுதுக:-**

மாசிலா—மாசு + இலா. இருநிலம் இருமை + நிலம். ஒண்ணகம்—ஒண்மை + நகம். மும் மகவு—மூன்று + மகவு.

11. **இலக்கணக் குறிப்பு வரைக:**

(i) வரு **விருந்து.** (ii) **பெற்றதே** கொண்டுவப்பாள்.

(iii) **இழிவிழிவு** என்த ஞான்றும். (iv) **மந்திரமறைகட்கு எட்டா மாலடி,**

(v) புரண்டு **வீழாப்** பெருநிலத்திற் கிடந்தழும்.

(vi) **நந்தா** மற்றச் செயும் எதிரீர்ப்ப.

(i) விருந்து – பண்பாகு பெயர். (ii) பெற்றதே—குறிப்பு வினையாலணையும் பெயர். (iii) இழிவிழிவு — அடுக்குத் தொடர். (iv) மந்திரமறை-உம்மைத் தொகை. எட்டா-ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். (vi) நந்தா- ஈறுகெட்ட எதிர் மறை வினையெச்சம்.

12. **உறுப்பிலக்கணம் வரைக:-**

வீட்டி: (வீடு + ட் + இ) வீடு—பகுதி; இ-வினையெச்ச விகுதி. ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது.

ஒருவிய: (ஒருவு + இன் + அ) ஒருவு—பகுதி; இன் - இறந்த கால இடை நிலை. ன் கெட்டது; (ய்-உடம்படு மெய்) அ-பெயரெச்ச விகுதி.

அயின்று: (அயில்+ற்+உ) அயில்-பகுதி. 'ல்' 'ன்' ஆகத் திரிந்தது விகாரம்; ற்—இறந்தகால இடைநிலை; உ—வினை எச்ச விகுதி.

புரண்டு: (புரள்+ட்+உ)—புரள்—பகுதி; 'ள்' 'ண்' ஆனது விகாரம்; ட்+இறந்த கால இடைநிலை; உ—வினையெச்ச விகுதி.

ஈர்ப்ப: (ஈர்+ப்+ப்+அ) ஈர்—பகுதி; ப்—சந்தி; ப்—எதிர் கால இடைநிலை; அ—வினையெச்ச விகுதி.

அட்டார்: (அடு+ஆர்) அடு — பகுதி; ஆர்— பலர்பால் வினைமுற்று விகுதி; ஒற்றுஇரட்டித்து இறந்தகாலம் காட்டியது.

அறிந்திலேன்: (அறி+த்(ந்)+த்+இல்+என்) அறி—பகுதி; த்—சந்தி; ந் ஆகியது விகாரம்; த்—இறந்த கால இடைநிலை; இல்-எதிர் மறை இடை நிலை; என்—தன்மை ஒருமை வினை முற்று விகுதி.

2. பாஞ்சாலி சபதம்

1. பாரதியாரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

வரகவி சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி அறியாத தமிழரே இலர் என்னலாம். அவர் 1881-ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த எட்டயபுரத்தில் சின்னசாமி அய்யரும் இலக்குமி அம்மையாரும் செய்தவப் பயனாகத் தோன்றினார். இவர் அந்தணர் மரபைச் சார்ந்தவர். இவர் சிறு வயதிலேயே கவிபாடும் திறமை பெற்றிருந்தார். புலவர் ஒருவர் இவர் திறமையை வியந்து "நீ ஒரு பாரதியே," என்று புகழ்ந்தமையால் பாரதி என்ற பெயர் பெற்றார். இவர் சுதேசமித்திரன், இந்தியா, பாலபாரதம் முதலிய பல பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்தார். இந்தியாவின் சுதந்திரக் கிளர்ச்சியில் இவர் ஈடுபட்டு அரசாங்கத்தார் கோபத்துக்கு ஆளாகிப் புதுச்சேரியில் வாழவும் நேர்ந்தது. இந்திய மக்களிடையே சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய உணர்ச்சிகளைப் பரவச் செய்தவர் பாரதியாரே ஆவார். கேட்போர் மனதைப் பரவசமாக்க வல்ல வீராவேசமிக்க இனிய தமிழ்ப் பாடல்கள் பலவற்றை இயற்றித் தமிழ் மக்களிடையே சுதந்திர தாகத்தை இவர் ஊட்டினார். செந்தமிழ் நாடு, தமிழ்த் தாய், முருகன் பாட்டு, கண்ணன்

புலி முழக்கம் கேட்ட புல்வாய் போல

பாட்டு, பாப்பாபாட்டு, குயில் பாட்டு முதலியன பாரதியார் இயற்றிய செய்யுட்களில் வேறு சிலவாம்.

2. பாஞ்சாலி சபதம்—பொருள் தருக. இந்நூலின் சிறப்புக்கள் யாவை?

பாஞ்சால தேசத்தை ஆண்ட துருபதன் மகளே பாஞ்சாலி ஆவாள். அவள் துரியோதனன் சபையில் செய்த சபதத்தைப் பற்றிக் கூறும் நூலாதலின் இஃது இப் பெயர் பெற்றது.

பாஞ்சாலி சபதம் என்ற நூல் மிக எளிய நடையில் உணர்ச்சி தோன்றுமாறு இயற்றப் பெற்றுள்ளது. துரியோதனன் முதலியோரின் புன்மைக் குணங்களையும் சூழ்ச்சிகளையும், பாண்டவர்தம் நேர்மையையும் கடவுட் பக்தியையும் இது மிகவும் அழகாக எடுத்துக் கூறுகிறது.

3. 'தலைவனுங்குப் பிறர் கையிற் பொம்மை எனத் துரியோதனன் எச் சந்தர்ப்பத்தில் கூறினுன்? விளக்குக.

துரியோதனன் பாண்டவரை வெல்லக் கருதிப் பலவாறு ஆலோசனைகள் புரிந்தான். அப்போது தந்தை திருதராட்டிரன் உடன் பிறந்தோராம் பாண்டவரை அழிக்க நினைத்தல் தகாதெனவும், அவ்வெண்ணத்தை விட்டொழிக்குமாறும் கூறினன். அதுகேட்ட துரியோதனன் தந்தை விதுரன் கூறுவதை மறைமொழியாகக் கொள்வது முறையன்றென்று இவ்வார்த்தைகளைக் கூறினுன்.

4. மூடர் என்று துரியோதனன் எத்தகையவர்களைக் குறிப்பிடுகிருன்?

" செல்வத்தையும் பெருமையையும் நாள்தோறும் வருந்தித் தேடாமல் ஒழுக்கநெறியில் நடப்பதாகக் கருதிக்கொண்டு உடல் குழைந்து உறங்குபவர்கள் மூடர்," என்று துரியோதனன் கூறினன்.

5. அரசர்கள் பொருள்தொகுக்கும் வழிபற்றித் துரியோதனன் குறிப்பிடுவது யாது?

முன்னோர் தேடிய பொருளே போதுமென்று மன்னர் இன்ப வாழ்க்கையை மேற்கொண்டிருப்பின் அவர் வாழ்வைப் பகைவர் அழித்துவிடுவர். எனவே போர் செய்வதற்கு அஞ்சுதல் என்பது அரசர்க்குப் பொருந்தாததாம். பொருள் சேரச் சேர

மேலும் மேலும் அதனைக் கூட்டுதலே அரசர் பொருள் சேர்க்கும் வழியாம்.

6. அரசரிடம் காணப்படும் பிழை என்று துரியோதனன் குறிப்பிடுவது யாது ?

அரசர்கள் பிறரைத் தாழ்த்துவதில் சலிப்படைதல் கூடாது. அங்ஙனம் சலிப்படைவது அவரிடம் காணப்படும் பிழையாம் என்று துரியோதனன் குறிப்பிடுகிறான்.

7. பகைவரை அழிக்கும் முறைபற்றித் துரியோதனன் கூறுவன யாவை ?

"எவ்வகையிலேனும் பகைவரை அழித்துவிடவேண்டும் அம்முறை நல்லதா கெட்டதா என்று ஆராய்தல் கூடாது. எல்லா வகைகளிலும் பகைவரை முற்றிலும் அழித்தலே முறையாகும் என்று சான்றோர் கூறியுள்ளனர். பகைவரை அழிப்பன வற்றில் வில், வாள் முதலியன மட்டுமே சிறந்தனவாகா. பகை மனத்தைப் புண்படுத்தி அழிக்கும் வஞ்சனைகளும் சிறந்த படைகளாம். பகைவர்களை அழிக்காதவர்களைப் பூமியாகிய தெய்வம் அழித்துவிடும். மன்னர் தம் பகை சிறிதென்று மனத்தில் எண்ணி முயற்சியற்றிருப்பவர்களை அப்பகையே நோய்போல் வளர்ந்து விரைவில் அழிக்கும்.

8. பாண்டவர்களைப் பகைவர் என்று துரியோதனன் கருதக் காரணம் என்ன ?

சுற்றத்தாரைத் தோற்றத்தாலும் பிறப்பினாலும் மட்டுமே உலகினர் அறியமாட்டார்கள். உறவினர் பகைவர் என்பது அவர் செயலால் மட்டுமே அறியப்படும். அவ்வாறு பார்க்கில் தோற்றத்தாலும் பிறவியாலும் பாண்டவர் நமக்கு உறவினராயினும் நான் அவரைப் பகைவரென்றே கருதுகிறேன். ஏனெனில் அவர்கள் நமக்குத் துன்பங்களே செய்து வருகிறார்கள் என்று துரியோதனன் கூறினன்.

9. பாண்டவர்களுடன் சூதுபோர் செய்வதே தகுதி என்பதற்குத்துரியோதனன் காட்டிய காரணங்கள் யாவை ?

பாண்டவர்கள் நாள்தோறும் உயர் வடைவதைக் கண்டு பொறாத துரியோதனன் அவர்கள் தாழ்வடைவதற்கு ஏற்ற வழிகளைத் தேடலானான். அவர்களைப் போரில் வெல்லலாம் என்றால் உடன் பிறந்தோருடன் போர் செய்தானென உலகத்தினர் பழிப்

பார்களே என்றும் அவனுக்குத் தோன்றியது. மற்றும் இளமை வாய்ந்த பாண்டவர்களைப் போரில் வெல்வதும் மிகவும் அரிய செயலாம். எனவே தவப் பயனாய்த் தமக்குக் கிடைத்த மாமன் சகுனியின் சூதாடும் திறமையைப் பயன்படுத்திப் பாண்ட வரைச் சூதாட்டத்தில் வெல்லத் துரியோதனன் கருதினான். அறவழியில் பற்றுடையரேனும் தரும புத்திரருக்குச் சூதாட்டத் தில் பெரு விருப்பம் இருந்தமையால் பாண்டவரைச் சூது போ ரில் வெல்வதே தக்கதெனத் துரியோதனன் துணிந்தான்.

10. நோய்போல் அந்தப்பகை மிகலுற்றே சடிதி மாய்த்திடும்—விளக் குக. இஃது என்ன அணி ?

நோய் மிகவும் அற்பமானதென்று கருதி அதைப் போக்கு வதற்கு யாதொரு முயற்சியும் ஒருவர் புரியாமல் இருந்தால் அந் நோய் நாளுக்கு நாள் முற்றி வலிமைபெற்று அவரைக் கொல்லும். அதுபோன்றே பகைவர் வலிமையற்றவர் என்று அரசர் கருதி அவரை வெல்வதற்குக் காலம் தாழ்த்திக் கொண்டிருப்பின் அவர்கள் நாளடைவில் மிக்க வலிமை பெற்று அவ்வரசரை விரைவில் அழிப்பர். இஃது உவமை யணியாம்.

11. நீதித் தருமனும் சூதில் அன்புள்ளான்—இடம் சுட்டி விளக்குக.

பாண்டவரை வெல்லக் கருதிய துரியோதனன் அவர்க ளுடைய வலிமையைக் கண்டு அவர்களுடன் போர் புரிய விரும்பவில்லை. மற்றும் தந்தையும் போர் புரிய வேண்டா வென்று தடுத்துவந்தார். உலகத்தினரும் பழிப்பரா தலால் வேறு வகையில் வெல்வதே தக்கதென்று துரியோ தனன் கருதினன். தாங்கள் செய்த தவப்பயனாய்த் தங்களுக்குக் கிடைத்த மாமன் சூதாட்டத்தில் வல்லவனாகத் திகழ்ந்தமையால் அவன் துணைகொண்டு பாண்டவரை அழிப்பதே சிறந்த தென்று அவனுக்குத் தோற்றியது. இம்முயற்சி கை கூடுவ தற்கு அனுகூலமாக, அறநெறியில் நடக்கும் தருமபுத்திரரும் சூதாட்டத்தில் மிக்க விருப்பமுடையவராக இருத்தல்பற்றி மிக வும் மகிழ்ச்சி கொண்டனன்.

12. இலக்கணக் குறிப்பு வரைக:—

உய்நெறி - வினைத்தொகை. **நிற்பவர்** - வினையாலணையும் பெயர். **குழைதல்** - தொழிற் பெயர். **பூமித் தெய்வம்** - இருபெய ரொட்டுப் பண்புத் தொகை. **நேமி மன்னர்** - இரண்டனுருபும்

பயனும் உடன் தொக்கதொகை. **சடிதி** - தற்பவ வடசொல். **ஆருயிர்** - பண்புத் தொகை. உண்டோ—ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது. **பாஞ்சாலி சபதம்**—ஆறும் வேற்றுமைத் தொகை. **கொண்டனம்**—தன்மைப் பன்மை வினைமுற்று. **விலை யிலா: இலா**—இல்லா என்பதன் தொகுத்தல் விகாரம்; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். **செல்வழி**—வினைத்தொகை. **பயில்வார்**—வினையாலணையும் பெயர். **பாண்டவர்** — தத்திதாந்த நாமம். **குமைப்பன**—பலவின் பால் வினையாலணையும் பெயர்.

13. **பிரித்து எழுதுக:—**

உலைவலால்: உலைவு + அலால்

வானிதி : வான் + நிதி

நினைவயர்ந்திருப்பார் : நினைவு + அயர்ந்து + இருப்பார்.

இளம்பாண்டவர் : இளமை + பாண்டவர்

ஆருயிர்: அருமை + உயிர்

14. **உறுப்பிலக்கணம் கூறுக:—**

கொண்டனம் : (கொள + ட் + அன் + அம்)

கொள்—பகுதி ; ட்—இறந்தகால இடை நிலை; அன்—சாரியை ; அம்—தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி ; கொள் என்பதில் 'ள்' 'ண்' ஆகத் திரிந்தது விகாரம்.

குமைப்பன : (குமை + ப் + ப் + அன் + அ)

குமை—பகுதி; ப்—சந்தி; ப்—எதிர்கால இடைநிலை; அன்—சாரியை; அ—பலவின் பால் வினைமுற்று விகுதி.

பயில்வார் : (பயில் + வ் + ஆர்)

பயில்—பகுதி ; வ்—எதிர்கால இடை நிலை; ஆர்—பலர் பால் வினைமுற்று விகுதி.

கண்டாய் : (காண் + ட் + ஆய்)

காண்—பகுதி ; ட்—இறந்தகால இடை நிலை; ஆய்—முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி ; காண் என்ற பகுதி கண் எனத் திரிந்தது விகாரம்.

உற்றான் : (உறு + ஆன்)

உறு—பகுதி ; ஆன்—ஆண் பால் வினைமுற்று விகுதி ; உறு என்ற பகுதி உற்று என ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது.

25 MAR 1956
MADRAS

நீதிகள்

புறநானூறு

நல்லோர் உண்மையால் நாநிலம் நிலைக்கும்.

சிலப்பதிகாரம்

1. கற்பெனப்படுவது சொல் திறம்பாமை.
2. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
 பெய்யெனப் பெய்யும் மழை.

கம்ப ராமாயணம்

1. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
 திண்மையுண் டாகப் பெறின்.
2. அறத்திற்கு அழிவு அவனியில் இல்லை.

குசேலோ பாக்கியானம்

1. ஈயென இரத்தல் இழிந்தது.
2. வறுமையில் செம்மையாய வாழ்வதே வாழ்க்கை.

பாஞ்சாலி சபதம்

1. அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
 தீயுழி உய்த்து விடும்.

இறையனார் அகப்பொருள்

1. கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.
2. உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
 அச்சாணி யன்னா ருடைத்து.

ஆய் அண்டிரன்

1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
 துணைவலியும் தூக்கிச் செயல்
2. நன்றி மறப்பது நன்றன்று.

பாரதியார் தமிழ்ப் புலமை

1. பாட்டுக் கொருபுலவன் பாரதி.
2. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
 ஆய்தல் அறிவுடையார் கண்ணது.

நலங்கிள்ளியும் கோவூர் கிழாரும்

1. ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே—நம்மில்
 ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே.
2. அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
 பேணித் தமராக் கொளல்.

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை-1.

CONN... MADRAS 25 MAR 195

உரைநடைப் பகுதி

1. இறையனர் அகப்பொருள்

உரைகண்ட வரலாறு

அரும்பதமும் குறிப்பும்

பக்கம்: 14

அக்காலத்து — கடைச் சங்க காலத்து
பன்னீரியாண்டு—பன்னிரண்டு வருடங்கள்
வற்கடம்—பஞ்சம்
சென்றது—நீடித்தது
கடுகுதல்—வருத்துதல்
சிட்டர்—கல்வி நிரம்பிய சான்றோர்
நம்மின்—வாருங்கள்
கூவி—அழைத்து
புறந்தரகில்லேன்—காப்பாற்ற இயலாதவனுயுள்ளேன்
தேயம்—நாடு
புக்கு—சென்று
நாடு நாடாயின ஞான்று—பஞ்சத்தால் வாடிய நம் நாடு வளமிகுந்த நாடான காலத்தில்
உள்ளி—நினைத்து
பின்றை—பிறகு
மலிய—நிறைய, வளப்பமுற
நூல்வல்லார்—நூல்களைக் குற்றமற உணர்ந்த அறிஞர்
ஆள் + போக்க = ஆட்போக்க ஆட்களை அனுப்ப
எழுத்திகாரம்—எழுத்திலக்கணத்தைக் கூறும் பகுதி
சொல்லதிகாரம்—சொல்லிலக்கணத்தைக் கூறும் பகுதி
பொருளதிகாரம்—அகப்பொருள், புறப் பொருள் இலக்கணங்களைப் பற்றிய பகுதி
தலைப்பட்டு—சந்தித்து
தலைப்பட்டிலேம்—சந்தித்திலேம்; தேடிக் கண்டுபிடிக்க இயலாதவராளேம்
புடைபட—மிகுதியாக
கவன்று—வருந்தி
சொல்லாநிற்ப—சொல்ல
ஆலவாய்—மதுரை நகரின் எல்லையை அறிய விரும்பிய வங்கிய சேகர பாண்டியன் சோமசுந்தரக் கடவுளை வேண்ட, அவர் தம் கரத்தில் அணிந்த நாகத்தை எல்லையை வரையறுக்குமாறு பணித்தார். அச்சர்ப்பம் நகரைச் சுற்றி வந்து தன் வாயும் வாலும் பொருந்தும்படி உடலை வளைத்து எல்லை காட்டிற்று. இதனல், அப்பாம்பின் பெயரே நகருக்கு ஆயது.
அழல் நிறக் கடவுள்—நெருப்புப் போன்ற செந்நிறமுடைய சிவபெருமான்: சோமசுந்தரக் கடவுள்
கவற்சி—மனக் கவலை
ஞானத்திடையது—அறிவின்பாற் பட்டது
தீர்க்கற்பாலம்—நீக்குவோம்
சூத்திரம்—சுருங்கிய சொற்களால் விரிந்த பொருளை இனிது விளக்கும் ஒருவகைப் பாட்டு
இவ்வறுபது சூத்திரம் — 'அன்பினைந்திணை' என்று தொடங்கும் அறுபது சூத்திரம்

வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல

செப்பு + இதழ் + அகத்து —செப்புத் தகடுகளின் மீது
பீடம்—ஆசனம்
பிற்றை ஞான்று—மறுநாள்
தேவர்குலம் வழிபடுவான்—கோயிலில் பூசை செய்பவன்
பண்டு—முன்பு
அலகிடாதான்—பெருக்கிச் சுத்தம் செய்யாதவன்
தெய்வத்தவக்குறிப்பினால்—தெய்வத் தன்மைவாய்ந்த மேலான எண்ணத்தால்

பக்கம்: 15

அலகு—துடைப்பம்
இதழ்—செப்பேடுகள்
போந்தன - வந்தன
நோக்கினாற்கு ... காட்டிற்று: பார்த்த அவனுக்குப் பெரும் பேறு எனத்தக்க ஒப்பற்ற பொருளதிகாரமாய்த் தோன்றியது.
அரசன்...செய்தானாகும்: அரசன் பொருளதிகாரம் கிடைக்கப் பெறாமையின் மனம் வருந்துகின்றான் என்பது கருத்தில் கொண்டு நிகழ்ந்தவற்றை அறிந்து இதனை இறையனார் (சோமசுந்தரக் கடவுள்) இயற்றித் தந்தனர்போலும்.
அகம்—வீடு
கோயில்—அரண்மனை
தலைக்கடை—வாயில்
கடைகாப்பார்—வாயிற்காவலர்
புகுதருக—உள்ளே வரவிடுக
சென்று புக்குக் காட்ட கொண்டு நோக்கி—அந்தணன் அரண்மனையுட் சென்று, அவையுட் புக்கு, செப்பேடுகளை அரசனுக்குக் காட்ட, அரசன் அவற்றைப் பெற்றுக் கொண்டு, அவற்றிலுள்ள சூத்திரங்களைப் படித்து அறிந்து

இடுக்கண்—துன்பம்
அருளிச் செய்தானாகற்பாலது—அருளிச் செய்திருக்கவேண்டும்
சங்கத்தாரை—சங்கப்புலவர்களை
கூவுவித்து—அழைப்பித்து
கொண்டு போந்து—கொண்டு சென்று
கன்மாப் பலகை—சங்கப் பலகை
ஆராய்வுழி — ஆராய்ச்சி செய்யும் போது
ஒருதலைப் படாது — நிச்சயப் படாது
காரணிகன்—நடுநிலையாளன்; காரணங்களை ஆராய்ந்து கூறுபவன்
அவனால்...காண்டும்: அவனால் உண்மையான பொருள் என்று கூறப்பட்டதை உண்மைப் பொருளாகவும், பொருளன்று என்று கூறப்பட்டதைப்பொருளல்லாததாகவும் கொண்டு உண்மை காண்போம்.
ஒருப்பட்டு—சம்மதித்து
நாடுகேன்—தேடுவேன்
நிகராவார்—ஒப்பாகக் கூறக் கூடியவர்
இம்மையின் இன்றே — இவ்வுலகில் இல்லையே
என்னை கொல்—எவ்விதம்?
சிந்தித்திருப்புழி — நினைத்துக் கொண்டு இருக்கும் போது
ஆலவாயில்அவிர் சடைக்கடவுள்-மதுரையில் கோயில் கொண்டு விளங்குகின்ற ஒளி விளங்கும் சடையை யுடைய சிவ பெருமான்
வரங்கிடத்தும் — வரம் வேண்டுவோம்
இடையாமத்து—நள்ளிரவில்

பக்கம்: 16

பைங்கண்ணன்—பசுமையான கண்களை உடையவன் (பசுமை—இளமை)

புன்மயிரன்—சிறிதளவு மயிருடையவன்
ஐயாட்டைப் பிராயத்தான்—ஐந்தாண்டு வயதுடையவன்
மூங்கை—ஊமை
இரீஇ—அமர்வித்து
வார்ந்து—வழியவிட்டு
மெய்ம்மயிர் சிலிர்க்கும்—உடலில் உள்ள மயிர் கூச்செறிய நிற்பான்
வாளா—சும்மா
குமாரதெய்வம்—முருகக்கடவுள்
சாபத்தால் தோன்றினுன் :—சிவபெருமான் ஒரு சமயம் உமாதேவியாருக்கு அற உபதேசம் செய்யும் போது உமா தேவி பராமுகமாக இருக்கக் கண்டு வலைச்சியாகப் பிறக்குமாறு சாபமிட்டார். இச்சாபம் கேட்ட குமாரக்கடவுள் மனம் பொருது சாஸ்திரங்களைக் கடலிலே வாரியெறிந்தனர். அதனுல் சிவபெருமான் அவரை ஊமையாகப் பிறக்குமாறு சாபமிட்டனர். உருத்திரனுடைய (சிவபெருமானுடைய) சாபத்தால் சன்மத்தை (பிறத்தலை) அடைந்தமையின் உருத்திர சன்மன் எனப் பெயர் பெற்று முருகன் மூங்கைப் பிள்ளையாய்ப் பிறந்தனன்.
முக்கால் இசைத்த—மூன்று முறை அசரீரியாய்க் கூறிய
உடன்பாடாயிற்று — சம்மதமாயிற்று
உப்பூரிகுடி கிழாருழை — உப்பூரிகுடி கிழாரிடம்
சங்கம் எல்லாம் — சங்கப்புலவர்கள் யாவரும் (இடவாகு பெயர்)
ஐயனுவான்—தலைவனுகிய
கொடுபோந்து—அழைத்து வந்து
வெளியது உடீஇ—வெண்மையான ஆடையை உடுத்தி
வெண்சாந்தணிந்து — வெண்மையான சந்தனம் பூசி
ஏற்றி இரீஇ—ஏற்றி அமர்வித்து
மருதனிள நாகனுர் :—இவர் மதுரையில் வாழ்ந்த புலவர். இளநாகன் என்பது இவர் இயற்பெயர். மருதம் பற்றிப் பாடுவதில் வல்லவராதலால் மருதனிள நாகன் என்று பெயர்பெற்ருர். அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய நூல்களில் இவர் பாடல்கள் காணப்படுகின்றன.
ஒரோவழி—ஒவ்வோர் இடத்தில்
கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் :—இவரது ஊர் மதுரை. கணக்காயனுர் என்பார் இவர் தந்தை. (கணக்காயனுர்-நூலாசிரியர்) கடைச் சங்கப் புலவர்களில் நக்கீரர் முதன்மையானவர். திருமுருகாற்றுப்படை, நெடுநல் வாடை என்பன இவர் பாடிய நூல்களாம். இவை தவிர அகநானூறு முதலிய நூல்களில் இவர் பாடிய பாடல்கள் பல உள்ளன. மதுரை மேலை மாசி வீதியில் இவரது கோயில் உள்ளது. திருப்பரங் குன்றத்தில் உள்ள இவரது திருவுருவத்துக்கு இன்றும் திருவிழா நடைபெறுகிற தாம். இவரது மகனுர் கீரங்கொற்றனுர்.
பதம்—சொல்
ஆர்ப்பெடுத்து — ஆரவாரம் செய்து

பாட விளக்கம்

[இறையனுர் அகப் பொருள் உரை:—மதுரையம்பதியாம் திருவால வாயில் கோயில் கொண்டுள்ள சோமசுந்தரக் கடவுள் அருளிச்செய்த அகப்பொருள் இலக்கணத்திற்கு நக்கீரர் செய்த உரை வரலாற்றுப் பகுதி என்பது இதன் பொருள்.]

1. **பாண்டியனுக்கு மனக் கவலை:**—பண்டைக்காலத்தில் பாண்டிய நாட்டில் பன்னிரு வருடங்கள் பஞ்சம் நிலவியது. அறிஞர் அனைவரையும் அரசன் அழைத்து, 'உங்களை இப்பஞ்சத்தின் கொடுமைகளினின்றும் காக்க இயலாதவனுயுள்ளேன். நீவிர் அறிந்த இடங்கட்குச் சென்று துன்பத்தைப் போக்கிக்கொண்டு நாடு வளம் பெற்றபின் மீண்டு வருக,' என விடை கொடுத்தனுப்பினன். அவர்களும் அங்ஙனமே பிற நாடுகளில் வதிந்தனர். பஞ்சம் நீங்க நாட்டில் பயிர்கள் செழித்தன. ஆதலின் மன்னன் கற்ருேரைக் கொணருமாறு நாலா பக்கங்களிலும் ஆட்களையனுப்பினன். அவர்கள் எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் வல்லவர்களை அழைத்துவந்தனர். ஆனுல், 'பொருளதிகாரம் வல்லரர் எங்கணும் காணப்படவில்லை' எனக் காவலனுக்கு அறிவித்தனர். பாண்டியன், 'எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் கற்பது பொருளிலக்கணம் உணரும் பொருட்டன்ருே! பொருளிலக்கணம் வல்லாரைப் பெருவிடின் எழுத்தும், சொல்லும் கற்றும் என்னபயன்' என மிகவும் வருந்தினன்.

2. **இறைவன் அகப் பொருள் அருளல்**:—பரமன் பக்தர்க்கிரங்குபவனன்ருே! மன்னனது மனக்கவலையை மாற்றத் திருவுளங்கொண்ட சோமசுந்தரக் கடவுள் அகப்பொருள் அறுபது சூத்திரங்களையும் அருளிச் செப்பேடுகள் மூன்றில் எழுதித் தமது பீடத்தின் கீழிட்டார். மறுநாள் கோயிலில் பூசை செய்யும் மறையோன் கடவுள் அருளால் அன்று பீடத்தினடியில் சுத்தம் செய்ய, அச்செப்பேடுகளைக் கண்டெடுத்து, இறையவன் கருணைகூர்ந்து உதவிய பொருளதிகாரச் சூத்திரங்கள் என அறிந்து, அவற்றை அரசனிடம் சமர்ப்பித்தனன்.

3. **உரை காணப் புலவர்க்கு உற்ற துயர்**:—புரவலன் புலவர் அனைவரையும் அழைத்து இறைவன் அருளிய அகப்பொருளை ஈந்து, 'இந் நூலுக்குப் பொருள் காண்மின்,' என்றனன். புலவர் சங்கப் பலகை மீதிருந்து ஆராய்ந்தனர். ஒவ்வொருவரும் தாம் உரைத்த உரையே சரியெனவும், பொருத்தமான தென்றும் கூறி வாதிட்டமையால் யாதொரு முடிவுக்கும் வர இயலவில்லை. இங்ஙனம் சிலநாட் சென்றபின் புலவர்கள் வேந்தனிடம் சென்று, "எம் உரைகளில் எது சிறந்ததெனத் தீர்மானிக்கக் காரணிகன் (பரீட்சகன்) ஒருவனைத் தந்தருளல் வேண்டும்" என வேண்டினர். அரசன், 'நன்று! நன்று! காரணிகனை நான் எங்குத் தேடுவேன்? நாற்பத்தொன்பதின்மராகிய நுமக்கு நிகர் இவ்வுலகில் வேறு யாருளர்? போமின்' என விடை கொடுத்தனுப்பினன்.

4. உருத்திர சன்மன் உரை கூறல் :—பின்னர், புலவர் காரணிகனைப் பெறுவதெங்ஙனம் என நீண்டநாள் சிந்தித்து, இறுதியில் இச் சூத்திரங்களை நமக்கு அருளிய ஆலவாய் அண்ணலையே காரணிகனையும் தருமாறு வேண்டுவோம் என்று தீர்மானித்துக் கோயிலில் சென்று வரங் கிடந்தனர். நள்ளிரவில், 'இவ்வூரில் உப்பூரிகுடிகிழார் மகன் உருத்திர சன்மன் என்று ஓர் ஊமைச் சிறுவன் உளன். அவன் ஐந்து வயதினன். குமாரக்கடவுள் ஒரு சாபத்தால் அவ்வாறு பிறந்துளான், ஆதலின் ஊமை என நீங்கள் பாராது அவனை அழைத்துச் சென்று சூத்திரப் பொருளுரைத்தால், உண்மையான பொருள் கேட்டபோது கண்ணீர் வடித்து, உடல்சிலிர்ப்பான். மற்ற சமயங்களில் வாளா இருப்பான். என ஒரு குரல் மும்முறை இசைத்ததை அனைவரும் கேட்டனர். உடனே அவர்கள் உப்பூரிகுடிகிழார் மனை சென்று அவர் ஆணை பெற்று அவரது மகனை அழைத்தேகி அலங்கரித்துச் சங்கப் பலகையின்மீது அமரும்படி செய்து கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தனர். உருத்திரசன்மனே மற்றவர் பொருள் உரைக்கும்போது வாளா இருந்து மருதனிள நாகனுர் உரைத்தபோது ஒருசமயம் மெய்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் வடித்தும், கணக்காயர் மகனுர் நக்கீரர் பொருளுரைத்தபோது பதந்தொறும் கண்ணீர் வடித்து உடல் சிலிர்த்தும் நின்றனன். அதுகண்ட புலவர் மகிழ்ந்து இந்நூலுக்கு மெய்யுரை பெற்றேம் என ஆரவாரித்தனர்.

வினு விடைகள்

1. பாண்டிய அரசன் புலவர்களை நோக்கி யாது கூறினன்? அவ்வாறு கூறக் காரணம் என்ன?

பாண்டிய அரசன் நூல்வல்ல புலவர்களை நோக்கி 'என் நாடு மிகவும் வருந்துகின்றது ; ஆதலால் நான் உங்களையெல்லாம் காக்க இயலாதவனுக இருக்கின்றேன். நீங்கள் அனைவரும் உங்கட்குத் தெரிந்த இடங்களுக்குச் சென்று வாழ்ந்திருங்கள். என் நாடு செழித்த பிறகு என்னை நாடி வாருங்கள் என்று கூறினன்.

பாண்டிய நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் கடும் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் உணவில்லாமையால் பசி நோயால் பெரிதும் துன்புற்று வாழ்ந்து வந்தமையே பாண்டிய மன்னன் புலவர்களை நோக்கி அங்ஙனம் கூறக் காரணமாயிருந்தது.

2. அரசன் தன் பணியாளர்க்கு என்ன கட்டளையிட்டான்?

அரசன் தன் பணியாளர்களைப் பார்த்து 'நாடு நிறைய மழை பெய்து நம் நாடு செழித்து முன்போலச் சிறந்த நாடாக ஆயிற்று. ஆதலின் நூல்வல்ல புலவர்கள் எங்கிருப்பினும் அவர்களைத் தேடி அழைத்து வாருங்கள்' என்று கட்டளையிட்டான்.

3. அரசனுக்கு ஏற்பட்ட கவலை யாது? அதனைப் போக்கியவர் யார்? போக்கக் காரணம் என்ன?

அரசன் நூல்வல்ல புலவர்களை அழைத்து வருமாறு எல்லாப் பக்கங் கட்கும் ஆட்களை அனுப்ப அவர்கள் எழுத்தும், சொல்லும் வல்ல புலவர் களையே தேடிக் கண்டறிந்து வந்து பொருளதிகாரம் வல்ல புலவர்களை எங்கும் காணமுடியவில்லை என்று கூறினர். அது கேட்ட அரசன் மிக வும் வருந்தி எழுத்தும், சொல்லும் கற்பது பொருளிலக்கணத்தை உணர் வதற்காக அன்றோ? பொருளதிகாரம் வல்ல புலவர்கள் கிடைத்திலர் எனின் எழுத்தும் சொல்லும் வல்ல புலவரைப் பெற்றும் பயனில்லையே என்று வருந்தினன். இதுவே பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட கவலை யாம்.

மன்னன் கவலையை உணர்ந்து அதனை நீக்கியவர் ஆலவாயில் எழுந் தருளியுள்ள சிவபெருமான்.

அரசனுக்கு ஏற்பட்ட இக்கவலை அறிவு வளர்ச்சியைக் குறித்தது ஆதலின் அதனை நீக்கக் கடவோம் என்று கருதியே சிவபெருமான் அதனைப் போக்க அகப்பொருளிலக்கணத்தை அறுபது சூத்திரங்களில் ஆக்கித் தந்தனர்.

4. அந்தணன் இறையனார் அகப்பொருளை எங்ஙனம் பெற் றனன்?

கோயிலைத் தூய்மை செய்து வழிபடுதலையே தொழிலாகக் கொண்ட அந்தணன், கோயிலைத் துடைத்து நீர் தெளித்துத் தூய்மை யாக்குபவன், அன்று பீடத்தின் கீழும் அலகிடத் தொடங்கினான். என்றும் பீடத்தின் கீழ் அலகிடாத அவன் அன்று அங்ஙனம் செய்தமைக்குக் கடவுளின் தூண்டு கோலே காரணம் என்னலாம். அவன் அங்ஙனம் அலகிடும் போது அலகினோடு செப்பேடுகளும் உடன் வர அந்தணன் அவற்றைப் பார்த்தனன். அவை யாவும் அரசன் விரும்பும் பொருளதிகாரப் பாடல்க ளாக இருக்கக்கண்டு அரசனுடைய கவலையை அறிந்து இறைவனே இப் பாடல்களை இயற்றியிருக்க வேண்டு மென்று அவற்றை எடுத்துக் கொண்டு சென்று அரசனிடம் அளித்தனன்.

5. அரசன் சங்கப்புலவர்களிடம் வேண்டிக்கொண்டது யாது?

அரசன் தான் பெற்ற பொருளதிகாரத்திற்கு விரிவான உரை காண விரும்பிச் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரையும் அழைத்து அவர்க ளிடம் கொடுத்து அந்நூலுக்கு உரை காணுமாறு வேண்டிக் கொண் டான்.

6. சங்கப் புலவர்கள் காரணிகனை வேண்டக் காரணம் என்ன?

சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் அரசன் வேண்டுகோட் படி அகப்பொருளுக்கு உரைகாண விரும்பிச் சங்கப்பலகையில் ஏறி

இருந்து ஆராய்ந்தபோது அவரவர்கள் கூறிய உரைகளே சிறந்தன என்று அவர்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட, ஒரு முடிவும் ஏற்படாமல் வீண்காலம் கழிவதாயிற்று. பின்னர் அவர்கள் நாமனைவரும் இங்ஙனமே வாதிட்டுக் கொண்டிருந்தால் நமக்குள் ஒரு முடிவும் ஏற்படாது நம் உரையைக் கேட்டு நடுவு நிலையோடு முடிவுகூற ஒரு காரணிகனை அளிக்கு மாறு வேண்டிக் கொள்வோம் என்று எண்ணி அரசனிடம் சென்று தங்க ளுக்கு ஒரு காரணிகனை அளிக்குமாறு வேண்டினர்.

7. காரணிகனை வேண்டிய புலவர்கட்கு அரசன் அளித்த மறுமொழி யாது?

அரசன் சங்கப்புலவர்களை நோக்கி 'நீங்கள் நாற்பத்தொன்பதின்மர் இருக்கின்றீர்கள்? உங்கட்கு ஒப்பாகக் கூறத்தக்க புலவர் இவ்வுலகில் எங்கிருக்கின்றனர்? இத்தகைய சிறப்புற்ற உங்கள் உரையைக் கேட்டு முடிவு கூறத்தக்க காரணிகனை நான் எங்குத் தேடுவேன்! என்று கூறினன்.

8. சங்கப் புலவர்கள் காரணிகனைப் பெற யாது செய்தனர்?

சங்கப் புலவர்கள் அனைவரும் நன்கு சிந்தித்து, நூலைச் செய்தவர் ஆலவாயில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுகையால் அவுரையே நம் உரையை ஆராய்ந்து நடு நிலையோடு முடிவு கூறத்தக்க காரணிகனையும் தருமாறு வேண்டுவோம் என்று முடிவு செய்தனர். அம்முடிவின்படி அனைவரும் கோயிலுக்குச் சென்று தங்கட்கோர் காரணிகனைத் தரு மாறு வரங்கிடந்தனர்.

9. இறைவன் அசரீரியாய்ப் புலவர்கட்குக் கூறியது யாது?

'இவ்வூரில் உப்பூரிகுடி கிழான் மகன் உருத்திர சன்மன் என்ற ஐந்து வயது இளைஞன் ஒருவன் இருக்கின்றான். அவன் பசுமையான கண்களையுடையவன்; அற்பமான மயிரையுடையவன்; ஊமையன்; முருகனே ஒரு சாபத்தினால் அங்ஙனம் பிறந்திருக்கின்றான். ஆதலால் அவனை இகழாமல் அழைத்துக் கொண்டுவந்து உயர்வான ஆசனத்தில் அமர்த்தி நீங்கள் அனைவரும் கீழிருந்து உங்கள் உரைகளைக் கூறிவாருங்கள். யாருடைய உரையைக் கேட்கும்போது அவன் கண்ணீர் வழிய மெய்ம்மயிர் சிலிர்க்க நிற்கின்றானோ அதுவே உண்மையான உரையென்று கொள்ளுங்கள்' என்று இறைவன் அசரீரியாகப் புலவர்கட்குக் கூறினர்.

10. சங்கப் புலவர்கள் இறையனார் அகப்பொருளுக்கு எங்ஙனம் மெய்யுரை கண்டனர்?

சங்கப்புலவர்கள் இறைவன் ஆணைப்படி சென்று உப்பூரிகுடி கிழாரை அடைந்து அசரீரி கூறியன யாவும் கூறி உருத்திர சன்மனை

அழைத்து வந்தனர். அவனுக்கு வெண்மையான ஆடை உடுத்தி, வெண்மையான பூக்களைச் சூட்டி, வெண்சாந்து பூசி உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தினர். பின்னர் அனைவரும் கீழே அமர்ந்து ஒவ்வொருவராகத் தம் உரையைக் கூறிவந்தனர். உருத்திர சன்மன் எல்லார் உரைகளையும் கேட்கும்போது ஒன்றும் செய்யாமல் இருந்து மருதனிளநாகன் என்ற புலவர் உரை கூறும்போது சிற்சில இடங்களில் கண்ணீர் வடித்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப நின்றான். இறுதியாகக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரை கூறும்போது சொல்தோறும் கண்ணீர் வழிய மெய்ம்மயிர் சிலிர்த்து விளங்கினான். உடனே சங்கப் புலவர் அனைவரும் மெய்யுரை பெற்றும் இந்நூற்கு என்று ஆரவாரித்தனர்.

11. "அது தானும் ஞானத்திடையதாகலின் யாம் அதனைத் தீர்க்கற் பாலம்"—இடம் சுட்டி விளக்குக.

அரசன் நூல்வல்ல புலவர்களை அழைத்து வருமாறு அனுப்பிய ஏவலர் எழுத்தும் சொல்லும் வல்ல புலவர்களை அழைத்து வந்தனர். அவர்கள் பொருளதிகாரம் வல்ல புலவர்களை எங்கும் காண இயலவில்லை என்று கூறினர். அதுகேட்ட மன்னன் எழுத்தும் சொல்லும் கற்பது பொருளதிகாரத்தை அறிதற் பொருட்டன்றோ ? பொருளதிகாரம் பெறுவிடின் இவைகளைப் பெற்றும் பயனில்லையே என்று மிகவும் வருந்தினான். அவனுடைய கவலையை உணர்ந்த சிவபெருமான் 'அவன் கவலை அறிவை வளர்ப்பது பற்றியதாகலின் அதனைப் போக்கவேண்டும்' என்று எண்ணி 'அன்பினைந்திணை' என்று தொடங்கும் அறுபது அகப்பொருள் இலக்கணச் சூத்திரங்களை மூன்று செப்பேடுகளில் எழுதிப் பீடத்தின் கீழிட்டனர்.

3. ஆய் அண்டிரன்

(திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை)

அரும்பதமும் குறிப்பும்

பக்கம் : 17

இயல்—நாடகத்தின் பெரும்பிரிவு
காட்சி—சிறு பிரிவு
அவைக்கூடம்—சபை
ஆய் நாடு—பொதிய மலையை உள்ளிட்ட நாடு
போர் இயல் நுணுக்கம்—போர்க்கலை சம்பந்தமான நுட்பங்கள்
செவ்வனே நன்றாக
அரசிருக்கை—தலைநகரம்
நால்வகை அரண் : மலையரண், நீரரண், காட்டரண், மதிலரண் என நாட்டிற்கு அமைந்த நால்வகைப் பாதுகாவல்கள்.
நெருநல்—நேற்று
ஒற்றர்—பகைவர் நாட்டில் நடைபெறும் செய்திகளை மறைவாகத் தெரிந்து கூறுவோர்.
பொதியம்—பொதிய மலை ; பாண்டிய நாட்டைச்சார்ந்தஒரு மலை

வரை—மலை
ஆய்குடி— ஆய் அண்டிரனது தலைநகரம்
புரக்க—காக்க
கூற்று—இயமன்
சமர்—போர்

பக்கம் : 18

துணைநலம்—நண்பர்களின் பலம்
மாற்றான்—பகைவன்
மூனைக்குமாயின்—வலியுடைய தாயின்
இவண்—இவ்விடம்
போந்த—வந்த
உசாவ—விசாரிக்க
அச்சுறுத்தின—அஞ்சச் செய்தன
கொங்குநாடு— தற்போதைய சேலம்,கோயம்புத்தூர் மாவட்டங்கள் பூண்டு கொங்கு நாடு என வழங்கப்பட்டன.
இறைவர்—தலைவர் : அரசர்
பற்றுக்கோடு—ஆதரவு
வெள்ளிடைமலையென — வெளியிடத்துள்ள மலை கண்ணுக்கு ஐயமின்றி விளங்குதல் போல
வேள்—குறுநிலமன்னர்க்கு வழங்கிய பெயர்
களிறு—ஆண்யானை
புல்லுரை—அற்பமொழி
உன்னவேண்டும் — நினைத்துப் பார்க்க வேண்டும்
ஓர்ந்திலன் — ஆராய்ந்து பார்த்திலன்
ஆணை—கட்டளை
ஈண்டுற்ற செய்யல்—இவ்விடத்தில் நாம் பேசும் செய்தி
தானைத்தலைவர்—சேனைத்தலைவர் ; சேனாதிபதி

பக்கம் : 19

படைத்திறன்—படைவலிமை
செவ்விதின்—நன்றாக
நாற்படைகள் : யானை, குதிரை, தேர், காலாட்படைகள்
உழுந்து—உளுந்து (ஒருவகைத் தானியம்)
அணித்தலைவன்—படையின் ஒரு பிரிவுக்குத் தலைவன்
அல்லும் பகலும்—இரவும் பகலும்
முடியுடை மூவேந்தர் : முடியணியும் உரிமையுடைய சேர,சோழ பாண்டிய மன்னர்கள்
குறுநிலமன்னன்—சிறிய நிலப் பகுதிக்கு அரசன் ; சிற்றரசன்
கழறிறுய்—கூறிறுய்
ஐயப்பாடு—சந்தேகம்
தகைமை—தகுதி
இடர்ப்பாடு—துன்பம்

பக்கம்: 20

புலால் மணக்கும்—புலால்நாற்றம் வீசுகின்ற
குருதி—இரத்தம்
வேட்கை—விருப்பம்
உடைவாள்—உடையினுள் வைக்கக் கூடிய சிறிய வாளாயுதம்
உறை—வாளாயுதத்தைச் செருகி வைக்கும் தோற்பை
கடுகி—விரைந்து
காலன்—இயமன்
தூணி—அம்புப்புட்டில்
முகில்—மேகம்
பிறைமதி—பிறைச்சந்திரன்
பண்டு—முன்னே
ஆற்றாது—முன்னே எதிர்த்துநிற்க முடியாமல்
புறமுதுகிட்டு—முதுகுகாட்டி
மைந்நாகமலை : இந்திரன் ஒரு சமயம் மலைகளின் அகந்தையை அடக்க அவற்றிற்கு இருந்த சிறகுகளை அரிந்தான். அப்போது மைந்நாகமலை மட்டும் அவனுக்குத் தெரியாமல் கடலுக்குள் மறைந்து தப்பித்துக் கொண்டது
கொங்கின்தேவி—கொங்கு நாடாகிய அன்னை

குன்ரகடல்—ஒலிக்கும் கடல்
ஞாலம்—பூமி
வெய்துயிர்ப்பு–வெம்மையான பெருமூச்சு
சினத்தீ—கோபமாகிய நெருப்பு

பக்கம் : 21

கொழுவிய—சிறந்த
பவானி, அமராவதி—காவிரியுடன் கலக்கும் உபநதிகள்
மிளிர்க—விளங்குக
தொழிற்படாதொழியின் — பணி செய்யா விட்டால்
கடைப்பட்ட—கீழான
போர்க்குறி......காயம் : போரில் அடையும் அடையாளங்களாகிய புண்களே புகழைக் குறிக்கும் அடையாளங்களாம்
பேறு—பாக்கியம்
பாடிநகர்—படைகள் தங்கியிருக்கும் பாசறை
அவண்—அவ்விடம்

பக்கம் : 22

நீர்க்குமிழி—நீரில் தோன்றும் குமிழி (முட்டை)கள்
திரை—அலை
நீரின்எழுத்து—தண்ணீரில் எழுதப்பட்ட எழுத்து
பேரணி—பெரிய ஆபரணம்
மேலுயிர்ப்பு—மேல்மூச்சு

பக்கம் : 23

அல்வினை—தீவினை
புரந்து—காத்து
புனல்—நீர், மழை
பூமிசை—பூமியில்
கொங்கன்—கொங்குநாட்டு மன்னன்
பேழை—பெட்டி
களிற்றுக் கொம்பு—ஆண்யானைத் தந்தம்
விழைந்தவாறே—விரும்பியவாறே

அவா—ஆசை
கயவன்—கீழ்மகன்
கள்ளம்—வஞ்சனை
ஆண்மை—வீரம்
எற்கு—எனக்கு
மாற்றலர்—பகைவர்
நிமித்தம்—சகுனம்
உவகை—மகிழ்ச்சி

பக்கம் : 24

அணுக—நெருங்க
பதின்மடங்கு—பத்துமடங்கு
எளிதில்—சுலபமாக
சிதறடிக்க–சிதறிஓடுமாறு செய்ய
செருவாற்றும்—போர் செய்யும்
முருகவேள்—முருகக்கடவுள்

பக்கம் : 25

தேவி......உமையாளே : செந்தமிழ்த் தாயே, உன்னை வணங்குகின்றோம்; எங்களுக்கு உயிரைத் தருபவளே, உன்னை வணங்குகின்றோம்; இந்த ஆய்குடியில்வாழும் தெய்வமே, உன்னை வணங்குகின்றோம்; கூட்டமான தேர்கள், யானைகள், குதிரைகள், காலாட்கள் ஆகிய பெரும்படையுடன் வந்து பெரும்போர் செய்து, நம்மை வெல்ல எண்ணியுள்ள கொங்கன் போரில் முதுகிட்டு ஓடுமாறு அருள் செய்வாய். பக்தியால் கூவி அழைக்கின்ற அடியவர்கள் துயரம் நீங்க நீல மயிலின் மீது ஏறிவந்து அருள் புரியும் கூர்மையான வேலாயுதத்தைத் தாங்கிய முருகக் கடவுளின் தாயே! உமையம்மையே! உன்னைப் பல முறை வணங்குகின்றோம். மனம் வாக்கு காயம் யாவும் ஒருங்கு கூடி உன் புகழ் பாடும் உன்ன

வெயிலில் பட்ட புழுப் போல.

டியவர் களாகிய எங்களின் கொடியவினை ஓட அருள் புரிவாயாக.
கனிதானே—பழம் தானே ; காரியம் வெற்றியா என்பதைக் கேட்க, பழந்தானே என்று கேட்பது உலக வழக்கம்.
காய்– காரியம் முடியாமையைக் குறிக்க உலக வழக்கில் குறிக்கும் சொல்.
காய்—அழி
செருக்களம்—போர்க்களம்
கொற்றவ– வெற்றிவீரனே !
ஊழிப் பெருநாள்—யுக முடிவு காலம்
பிணைந்து—ஒன்றுசேர்ந்து. ஒருவரை ஒருவர் பற்றி
பொருதாலென்ன—போர் செய்தது போல

பக்கம் : 26

முகில் கூட்டம்—மேகக் கூட்டம்
படைக்குழு—படைக்கூட்டம்
சமர்—போர்
ஏறெடுத்து—தலைநிமிர்ந்து
எஞ்சிய—மீதமுள்ள
இரண்டகம்—வஞ்சனை
உருத்து வந்து—உருவெடுத்து வந்து, முற்பட்டு வந்து
வெய்துயிர்த்து—பெருமூச்சு விட்டு

பக்கம் : 27

புரக்கும்—காக்கும்
நாகம்—பாம்பு
ஈச்சோப்பி—ஈயோட்டும் கருவி
நளிமுரசு—பெரியமுரச வாத்தியம்
விருது—வெற்றிச்சின்னம்
கொங்குக்கூற்றன்—கொங்குப் படைகட்கு இயமன்
குமரவேள்—முருகக்கடவுள்
அரியணை—சிங்காதனம்
ஆசான் —ஆசிரியன்
ஆன்றோன்—பெரியோன் ; குரு
எழுமையும்—எழுபிறப்பும்
வாகைசூடி—வெற்றிபெற்று

பக்கம் : 28

காட்சிக்கு எளியன்—குடிமக்கள் வந்து காண்பதற்கு எளிமையுடையாய் இருத்தல்
கடுஞ் சொல்லற்று—கடுஞ் சொல் பேசாமல்
பேணி—காத்து
இலங்குகின்றுள் விளங்குகின்றுள்
பரவுவோமாக—துதிப்போமாக

பாட விளக்கம்

காட்சி 2

ஒரு நாள் கொங்கு வேந்தன் தன் அமைச்சர்களுடன் ஆய் நாட்டின் மீது படையெடுத்தலைப் பற்றி ஆராய்ந்தனன். ஆய் அண்டிரன் போர் நுணுக்கங்களையறிந்து தன் நாட்டை நால்வகை அரண்களால் நன்கு பாதுகாத்துள்ளமையின் கொங்கு வேந்தன் மிகவும் கவலையுற்றிருந்தான். முதல் அமைச்சன் பெருங்குடிலன், ஆய்வேளுக்குப் பொதியமலையின் சிறு பகுதியாகிய கவிரமலையே உரியதாதலின் அதனை எத்துணை வலியுடையதாகக் காக்கினும் தம் படையினர் எளிதில் அழித்துவிடுவரென்று கூறி அரசனின் கவலையை மாற்றினன்.

துணை அமைச்சர் நல்லாயனாரோ, போருக்குச் செல்வதானால் தன் வலியும் மாற்றான் வலியும் ஒப்பிட்டுப் பார்த்தபின்னரே துணியவேண்டு மெனவும், தான் அனுப்பிய ஒற்றன் ஆயின் படையினர் மிக்க வலிமை யுடன் விளங்குவதாக நேரில் கண்டு வந்தனன் எனவும், யானைப்படை களில் ஆய் சிறந்திருத்தலின் நீர ஆலோசிக்க வேண்டுமெனவும் குறிப் பிட்டான். அதுகேட்ட முதல் அமைச்சர், நல்லாயனார் முன்னேற்றத் துக்கு முட்டுக்கட்டை யிடுவதாகக் கூறி, படைத்தலைவன் வீரநாதனை வருவித்தார்.

வீரநாதன் வேந்தன் அடிபணிந்து, தம் நாற்படைகளும் இமைக்கும் நேரத்தில் அரசன் முன் அணிவகுத்து நிற்குமெனவும், அணித்தலைவன் வச்சிரமுடியான் ஒப்பற்றவாறு பயிற்சியளித்த படைகள் சேரமானையே எளிதில் வென்றமையால் குறுநில மன்னனாகிய ஆயினை வெல்லுதல் அரி தன்று எனவும் பகர்ந்தான். வச்சிர முடியானும் மன்னனிடம் தங்கள் நால்வகைப் படையினரின் பேராற்றலை விளக்கிக் கூறிப் படையினரின் அணிவகுப்பை ஒருமுறை கண்டு களிக்குமாறு வேண்டினன்.

கொங்கு வேந்தன் பெரிதும் மகிழ்ச்சியுற்று, கொங்குத் தேவிக்கு இத் தகைய தொண்டாற்றுவதால் அவர்கள் புகழ் என்றும் அழியாதெனப் பாராட்டினன். வீரநாதன் அரசனுக்குத் தங்கள் நன்றியைக் கூறி, 'போர்க் குறிக்காயமே புகழ்க் குறிக்காயம்' என்ற குறிக்கோளுடன் படைவீரர் போர் செய்து வெற்றியும் புகழும் பெறுவர் என்று உறுதி கூறிப் படைகளைப் பாடி நகரில் வந்து காணுமாறு வேண்டினன், வேந்தனும் மாலையில் அங்குச் செல்ல ஏற்பாடுகள் புரியுமாறு அமைச்ச னுக்குக் கட்டளையிட்டான்.

காட்சி 3

சில நாட்கள் கழிந்தன. கொங்கு வேந்தன் தான் துணிந்தவாறே ஆய் நாட்டின்மீது படையெடுத்தான். ஆய் அண்டிரன் படைத்தலைமை பூண்டு அவனை எதிர்த்தனன்; ஒருநாள் மாலை பாடி நகரில் தனிமையில் இறைவனைத் துதித்து, உலக நிலையாமையை அறிந்து உண்மைப் பொருளை நாடாமல் மக்கள் அழிவுறும் பொருளையே தேடித் திரிவதை எண்ணி வருந்தினன். கொங்கு வேந்தனுக்குத் தான் பல அரிய பொருள் களை அனுப்பியபோது அவன் தன்னை உயிர்த்தோழனாகக் கருதினன். தான் அவனுக்கு ஒரு துன்பமும் புரியாதிருந்தும் தற்போது அவன் தன்மேல் போர் தொடுத்து வந்தமைக்குக் காரணம் என்ன? அவர்க்குத் தம் படையினரே தக்கவாறு பாடம் கற்பித்து ஒரு நாழிகையில் வெற்றி காண்பர் எனவும் ஆய் பலவாறு மனத்தில் ஆராய்ந்தனன். அமைச்சன் அரசனை வணங்கித் தம் படையினர் போர்க்குச் செல்லும்போது பல நன் னிமித்தங்கள் காணப்பட்டமையின் அவர்கள் வெற்றிகாண்பது திண்ணம் என உறுதி கூறினன். மேலும் அவன், "கொங்கு வேந்தனின் படை நம் படையைவிடப் பதின்மடங்கு பெரிதே எனினும் அவர் தம் அணி

வேடர் கையில் அகப்பட்ட தேன்கூண்டு போல

வகுப்பு நம் படையினர் உள்ளே எளிதில் நுழையக்கூடியவாறு அமைத்திருத்தலின், 'எதற்கும் அஞ்சவேண்டாம்,' எனப் படைத் தலைவர் இளந்திரையனார் செய்தி விடுத்துள்ளனர்'' என்றும் அறிவித்தனன். ஆய் அதுகேட்டு மகிழ்ந்து தானே போர்முகம் சென்று வீரரை ஊக்குவிக்க விரும்புவதாகக் கூற, அமைச்சரும் உடன்வருவதாக மொழிந்தனர். போர்க்களம் செல்லுமுன் அவர்கள் வீரமாதேவியை வழிபட்டனர்.

அவ்வமயம் ஒற்றனாகிய திருமேனி விரைந்து வந்து போர்க்களத்தில் தம் வீரர்கள் ஊழிப் பெருநாள்போல் முழக்கிப் பகைவரை அழித்தமையைப் பலவாறு விரித்துக்கூறினன். அதுகேட்டுக் களிப்புற்ற ஆய், படைத் தலைவனை அழைத்துவருமாறு திருமேனிக்கு ஆணையிட மறுநொடியில் அவனும் அங்கு வந்து வணங்கினன். ஆய் வேந்தன் அவனைப் பெரிதும் பாராட்டிஅவனுக்குக் கொங்குக்கூற்றன்தமிழவேள்இளந்திரையன் என்ற சிறப்புப் பெயரையும் மற்றும் பல வரிசைகளையும் நல்கினன். இளந்திரையன் அரசர் பெருமானின் இணையடிகளைப் போற்றி மனமார்ந்த நன்றியைச் செலுத்தினன். தனக்கு அளித்த பெருமைகள் யாவும் படையினருக்கே உரியனவெனவும் அரசன் நெறி தவறாது சீரியமுறையில் ஆட்சி புரிவதனாலேயே இத்தகைய வெற்றிகள் தமக்குக் கிட்டுகின்றன எனவும் படைத்தலைவன் கூறவே அனைவரும் மன்னனை வாழ்த்தினர்.

வினா விடைகள்

1. கொங்கு வேந்தன் ஆய்வேளின்மீது படையெடுப்பைப் பற்றிக் கவலை யுற்றதேன்?

1. ஆய்வேள் இளமை முதல் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினன். 2. அவன் உலகியலையும் போர் நுட்பங்களையும் நன்கு அறிந்தவன். 3. அவன் தனது நாட்டை நால்வகை அரண்களாலும் சிறந்த முறையில் பாதுகாத்து வந்தான். ஆதலின் கொங்கு வேந்தன் அவன் மீது படையெடுப்பைப் பற்றிப் பெரிதும் கவலை கொண்டனன்.

2. பெருங்குடிலன் ஆய் மன்னனது அரண்வலிமை பற்றிக் கூறியது யாது?

"ஆய் அண்டிரனுக்குப் பொதிய மலை முற்றும் உரியதன்று. அதில் ஒரு சிறு பகுதியாகிய கவிர மலைமட்டுமே அவனுக்கு உரியது. அதனை எத்துணைச் சிறந்த அரண்களாலும் படைகளாலும் பாதுகாக்கினும் நம் படை வீரர்கள் எதிர்த்துப் போர் புரிந்தால் தண்ணீரால் அணையும் தீப் போல அஃது அழிந்துவிடுதல் திண்ணம்,'' என்று கூறிக் கொங்கு வேந்தனின் மனக்கவலையை மாற்றினான்.

3. நல்லாயன் என்பான் யார்? அவன் கொங்கு வேந்தனுக்குக் கூறிய அறிவுரை யாது?

நல்லாயன் என்பான் கொங்கு வேந்தனின் துணை அமைச்சனாவான். அவன் மன்னனை நோக்கி, "எச்செயலையும் நன்கு ஆராய்ந்த பின்னரே

தொடங்கவேண்டும். போர் தொடுக்குமுன் நம் பொருள், படை, துணை வலிமைகளையும் பகைவர் வலிமைகளையும் ஒப்பிட்டுப்பார்த்து நம் வலிமை மிகுமாயின் போர்மேற் செல்லலாம். ஆனால் ஆயின் நாட்டுக்குச் சென்று வந்த ஒற்றனை நான்-வினவியபோது அவன் கூறியன என்னை அஞ்சுமாறு செய்கின்றன. ஆயின் நாடு பரப்பில் சிறிதே எனினும் செல்வத்திலும் படைவலியிலும் மிகச் சிறந்ததென்பது அனைவரும் அறிந்ததே. ஆய் தன்னை நாடிவரும் பாணர் புலவர் ஆகியோர்க்கு யானைகளை மிகுதியாகப் பரிசு தருவதால் அவன் யானைப்படையில் இணையற்றவன் என்பதும் விளங்குகிறது. இவற்றை மனத்துக்கொள்ள வேண்டும்,'' என்றும் கூறினன்.

4. 'இந்நல்லாயன் என்றும் முற்போக்கின் முட்டுக்கட்டை தான்'—சந்தர்ப்பம் கூறி விளக்குக.

கொங்கு வேந்தன் ஆய்வேளின் மீது படையெடுப்பதைப் பற்றி அமைச்சருடன் ஆலோசித்துக்கொண்டிருந்தான். அவ்வமயம் அரசன் ஆயின் நால்வகை அரண்களின் வலிமையைப் பற்றிக் கவலையுற்றனன். அப்போது முதல் அமைச்சனும் பெருங்குடிலன் ஆயின் கவிர மலையைத் தங்கள் படைவீரர்கள் அழிப்பது திண்ணம் என்று கூறினன். அது கேட்ட துணை அமைச்சர் நல்லாயனர் பகைவரின் படை முதலிய வலிமைகளை ஆராயாமல் போர் தொடுக்கலாகாதெனவும், ஆயின் நாட்டையும் அரண்களையும் அத்துணை அற்பமென அசட்டை செய்யலாகாதெனவும், ஆய் புலவர்கட்குக் கணக்கற்ற யானைகளைப் பரிசாகத் தருதலால் அவன் யானைப் படையின் வலிமை நன்கு விளங்குவதாகவும், ஆராய்ந்து பார்க்குமாறும் அறிவுரை கூறினர். தாம் கூறியதற்கு மாறாக நல்லாயனர் கூறியதை விரும்பாத பெருங்குடிலர் "இந்நல்லாயன் முற்போக்கின் முட்டுக் கட்டையாக உள்ளான். நம் படைமுன் ஆயின் அரண் வலி முதலியன என்னும் என்பதை இவன் அறியான்,'' என்று கூறி நகைத்தனன்.

'மந்திரிக் கழகு வரும் பொருள் உரைத்தல்' என்ற உயர்கொள்கையையுடைய நல்லாயனர் கூறியவற்றை விரும்பாதவனும், மன்னன் மனப்போக்கின்படி நடப்பவனுமாகிய பெருங்குடிலன் அரசனை மகிழ்விப்பதற்காக இங்ஙனம் கூறினன்.

5. வீரநாதன் தன் படைத் திறம் பற்றிக் கூறியது யாது?

வீரநாதன் தங்கள் நாற்படைகளுக்கும் அணித் தலைவனாகிய வச்சிர முடியான் சிறந்த பயிற்சி யளித்திருப்பதால் இமைப்பொழுதில் அவை அணிவகுத்து நிற்குமெனவும், அப்படைப் பெருக்கால் சேரமானே தளர்ச்சியுற்றனனாதலின் குறுநில மன்னனாகிய ஆய் அதற்குமுன் எதிர்த்து நிற்றல் இயலாதெனவும் மன்னனிடம் கூறினன்.

6. வச்சிர முடியான் நால்வகைப் படைகளின் போர்த் திறம் குறித்துக் கூறிய மொழிகளைப் பதினெட்டு வரிகளில் எழுதுக.

"நம் நற்படைகளும் தத்தம் உயர்வுக்கும் நாட்டு மக்களின் நல் வாழ்வுக்கும் ஏற்றவாறு உயிரையும் பொருட்படுத்தாமலும் முன்வைத்த காலைப் பின் வைக்காமலும் போர்புரியும் ஆற்றலுடையன. நமது காலாட் படையினர் பருந்துகள் வட்டமிடும் நீண்ட வேலைத் தாங்கியுள்ளனர்: இயமனது நாக்குப்போன்ற சிவந்த வாள்களை உறைகளில் பூண்டுள்ளனர். அவர் தம் தூணிகளில் கூற்றுவனின் பற்களினும் கூரிய அம்புகள் நிறைந் துள்ளன. அவர் தம் நாணொலி கேட்டு அனைவரும் அஞ்சுவர். நம் குதிரைகள் யாவும் கடிவாளங்களைப் பற்களால் கடித்துக்கொண்டும், குளம்புகளால் புழுதியெழ நிலத்தை உதைத்துக்கொண்டும் போருக் காகத் துடித்துக்கொண்டு நிற்கின்றன. யானைகள் தங்கள் நிழலையே பகைவரென்று கருதிக் குருதி மணக்கும் தம் தந்தங்களை அசைத்து நிற்கின்றன. இந்திரனுக்கு அஞ்சிக் கடலில் ஒளித்த மைந்நாக மலையைப் போன்ற நம் தேர்கள் "வீரர்களே வாரீர்! இந்திரனுலகும் சென்று அழிப் போம்" என்று கூறுவனபோல் தம் கொடிகளை அசைத்து நிற்கின்றன. இவை யாவற்றையும் தாமே நேரில் கண்டு களிப்பீராக!" என்று வச்சிர முடியான் தங்கள் நாற்படைகளின் திறத்தைக் கொங்கு வேந்தனுக்கு எடுத்துரைத்தான்.

7. நீரினுல் அவியும் நெருப்புப்போல, எமனது சிவந்த நாக்குப் போல, மைந்நாக மலைபோல—உவமைகள் எவற்றை விளக்க வந்தன.

நீரினுல் அவியும் நெருப்புப்போல:—ஆயின் அரண்களும் படை களும் நெருப்புப்போல் வலியனவேனும் அவை நீர் போன்ற கொங்கர் படைகளால் அழிவது திண்ணம் என்பதை இவ்வுவமை விளக்க வந்தது.

எமனது சிவந்த நாக்கு:—கொங்கு வேந்தனின் காலாட்படை யினர் உறைகளிலிட்டு அசைத்துள்ள வாள்கள் பகைவர் குருதியால் சிவந்து வளைந்து, எமனது சிவந்த நாக்குப்போல் உள்ளன என்பது இவ் வுவமையின் பொருளாம்.

மைந்நாக மலைபோல:—கொங்கு வேந்தனின் தேர்கள் இந்திர னுக்கு அஞ்சிக் கடலில் மறைந்து எழுந்த மைந்நாக மலைபோலக் கொடி களாம் சிறகுகளை அசைத்து அழகுறப் போருக்கு ஆயத்தமாயுள்ளன என்பது இதன் கருத்தாம்.

8. கொங்கு வேந்தன் தன் படைத் தலைவர்களை எங்ஙனம் பாராட்டினன்?

கொங்கு வேந்தன் தன் படைத்தலைவர்களை நோக்கி, "வீரமிக்க உங்களைப் படைத் தலைவராகக்கொண்ட எமக்கு ஒரு குறையும் இல்லை. நீவிர் ஒற்றுமையுடன் கொங்கின் தேவி உலகமுழுதும் தனிப்பேரரசு

செலுத்தி மகிழுமாறு சினத் தீ பொங்கப் போர் புரிவீர்கள் என்பது திண்ணம். எனவே நும்மினும் புகழுடையார் எவரும் இலர். உங்கள் நலங்கருதியே கொங்குத் தேவி பவானியாகவும், அமராவதியாகவும் அருள் சுரக்கின்றாள். நீங்கள் வெற்றியுடன் பெருவாழ்வு பெறுவீர்களாக," எனப் பாராட்டினான்.

9. வீரநாதன் தன் நன்றி மறவாத் தன்மையைப் புலப்படுத்தக் கூறியன யாவை?

கொங்கு வேந்தன் தங்களைப் பாராட்டிக் கூறியதைக் கேட்ட வீரநாதன், "பெரும! உப்பிட்டவரை உயிர் உள்ளளவும் நினைத்தல் வேண்டுமன்றோ! நாங்கள் தங்களிடம் பெற்ற நன்றிகட்கு எங்கள் கடமைகளைப் புரிவோம். இன்றேல் நன்றி கொன்றவர் படும் துன்பத்துள் ஆழ்வோம். இப்போரில் நாங்கள் பெறும் காயங்களே எம் புகழை அறிவிக்கும் அழியாத குறிகளென மதிப்போம். போரில் புண்படாது உலகில் புகழ்பெற இயலுமோ? உலகில் கணந்தொறும் கணக்கற்ற உயிர்கள் மாய்கின்றன. 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு'. எங்கள் உயிரினிடம் இம்மியும் பற்றின்றி நாட்டின் நலமொன்றே கருதிப் போர் புரிந்து புகழடைவோம். இதுபற்றிச் சிறிதும் ஐயம் வேண்டா," என்று பணிவுடன் அறிவித்தான்.

10. 'புண்படாதுலகில் புகழ் பெறலாமோ'—சந்தர்ப்பம் கூறி விளக்குக.

கொங்கு வேந்தன் ஆய்வேளின்மீது படையெடுத்தல் பற்றி அமைச்சருடன் ஆலோசித்தனன். அப்பொழுது படை வலிமை பற்றிப் படைத் தலைவரை வரவழைத்து வினவப் படைத்தலைவன் வீரநாதனும் அணித் தலைவன் வச்சிர முடியானும் தம் நாற்படைகளின் சிறப்பை உணர்த்தினர். அதுகேட்ட அரசன் அவர்களைப் பெரிதும் பாராட்டினான். அவ்வமயம் படைத்தலைவன் வீரநாதன் தங்கள் நன்றியைக் கூறியபின் இம்மொழிகளைக் கூறலாயினன்.

'போர்க்குறிக் காயமே புகழ்க்குறிக் காயம்' என்பதை மனத்தில் பதித்துப் படையினர் போராற்றும் பேராற்றலுடையவர் என்றும் போரில் புண்படாது உலகில் புகழ்பெறுதல் இயலாது எனவும் வீரநாதன் தங்கள் வீரரின் பெருமையை மன்னனுக்கு அறிவித்தான்.

11. ஆய்வேள் எத்தகைய வாழ்வு வாழலாகாது என்று கருதினான்?

"செல்வ நிலையாமையையும், யாக்கை நிலையாமையையும் கண்களிருந்தும் காணாது வாணாளை வீணாளாகக் கழித்தல் பேதைமை. ஐம்புலன்களும் கெட்டு அறிவிழந்து கூற்றுவன் ஆவியைக் கவருமுன் நல்வினைகளில் மனத்தைச் செலுத்தாது உண்டுறங்கும் ஒருவன் உலகெலாம் ஆட்சி புரியினும் அவ்வாழ்வு ஒரு நல் வாழ்வாகாது," என ஆய்வேள் மனத்தில் கருதினன்.

12. உலகம் புகழும் பெருமகன் என்று போற்றற்குரியவன் யாவன் ?

அற வழியில் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு நல்வினை புரிந்து, அல்வினை நீக்கி எளியவரைப் பாதுகாத்து வாழ்கின்றவன் எத்தகைய தாழ்ந்த மரபில் பிறந்திருப்பினும் உயர்நிலையும் உலகத்தினர் போற்றும் புகழும் வாய்த்த பெருமகனுவான்.

13. கொங்கு வேந்தனின் கயமைக் குணத்தைப்பற்றி ஆய்வேள் கருதியது யாது ?

கொங்கு வேந்தனுக்கு ஒரு துன்பமும் மனத்தாலும் நினையாதிருந்த போதும் அவன் பகைமை கொண்டு போர் தொடுத்தான். முன்பு ஆய் தன் நாட்டினின்று சந்தனமரத்தாலாகிய பெட்டிகளும், யானைத் தந்தங்களும் பிறவும் அவன் மனமகிழுமாறு கொடுத்தனுப்பியபோது 'ஆய் மன்னன் என் ஆருயிர்த்தோழன்' என்று நட்புப் பாராட்டிய கொங்கு வேந்தன் மனத்தில் வஞ்சனையும் சொற்களில் இனிமையும் பூண்டிருந்தனன். அத்தகைய கீழ்மைக் குணமுடையவனும் மன்னனுவானே என்று ஆய் கொங்கு வேந்தனை இழித்துக் கூறினன்.

14. நற்குடிவேள் தன் படைக்கு வெற்றிகிடைப்பது உறுதி என்று கூறக் காரணங்கள் யாவை ?

1. படைகள் வீர முழக்கத்துடன் போருக்குப் புறப்பட்டபோதே பல நன்னிமித்தங்கள் தோன்றின.
2. அமைச்சர் நற்குடி வேளின் உள்ளத்தில் என்றுமில்லாத வகையில் உவகை பொங்கி எழுந்தது.
3. கொங்கன் படையினர் ஆய் நாட்டை அடைவதற்கு முன்னரே ஒற்றன் திருமேனி அவர் வரும் செய்தியை அறிவித்து "கொங்கர் படை எண்ணளவில் நம்மினும் பதின்மடங்கு பெருகியிருப்பினும் நம் படைத்தலைவருக்கும் அவர் படைத் தலைவருக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை காணப்படுகிறது," என்று என்னிடமும் படைத்தலைவரிடமும் அறிவித்தனன்.
4. நம் படைத்தலைவர், "கொங்கரது படைகளின் அணிவகுப்பு முறை நம் படைகள் அதனுள் எளிதிற்புகுந்து அவர்களைச் சிதறி ஓடுமாறு செய்ய அனுகூலமாய் அமைந்துள்ளது. எதற்கும் அஞ்ச வேண்டா. வெற்றி நமக்கே," என்று இன்று செய்தி அனுப்பியுள்ளார்.

இக்காரணங்களால் தங்களுக்கு வெற்றி கிட்டுவது உறுதியேயாம், என்று நற்குடிவேள் கூறினன்.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

15. தமக்கு வெற்றியுண்டாம் என அமைச்சர் கூறியதைக் கேட்ட ஆய்வேள் யாது செய்யக் கருதினன்?

தமக்கு வெற்றியுண்டாம் என அமைச்சர் கூறியதைக் கேட்ட ஆய் வேள் அகமிக மகிழ்ந்தனனேனும், நேரில் போர்க்களம் சென்று படைத் தலைவரையும், துணைப்படைத் தலைவர்களையும் வீரத்துடன் போர் புரியு மாறு ஊக்க மளிக்க விரும்பினன். மற்றும் அங்ஙனம் போர்க்களம் செல்லு முன் அவர் தம் போர்க் கடவுளாகிய வீரமா தேவியையும், குலக் கடவுள் முருகப்பிரானையும் தங்கட்கு வெற்றியும் புகழும் அருளுமாறு தொழுது வேண்ட விரும்பினன்.

16. வீர மாதேவியை ஆய்வேள் போற்றி வணங்கிய பாடலின் கருத்து யாது?

(விடை அரும்பதமும் குறிப்பும் என்ற பகுதியில் காண்க)

17. திருமேனி என்பான் யார்? அவன் போர் நிகழ்ச்சி பற்றி யாது கூறினன்?

திருமேனி ஆய் வேளின் அன்பிற்குரிய ஒற்றனுவான். அவன், "நம் படையினர் கொங்கன் படையினருடன் கைகலந்தவுடன் ஊழிப் பெரு முழக்கம் போன்ற ஆரவாரம் அனைவரையும் கதி கலங்கச் செய்தது. 'வெட்டு, குத்து, கொல், எய், விடும், தொடும்.' என எங்கும் பேரொலி நிறைந்து எள் விழவும் இடமின்றிப் பகைவருடன் நம் படையினர் நெருங் கினர். மலைகளும் மலைகளும் எதிர்த்தன போன்றன தேர்ப்படைகள்; முகிலும் முகிலும் பொருதன போன்றன யானைப்படைகள்; பெருங்கட லின் அலைகள் போல் நம் குதிரைப்படைகள் பகைவர் கூட்டத்தில் பாய்ந் தோடின. நம் காலாட் படையினர் பகைவரின் மீது அம்புமாரி பொழிந் தனர். இவை யாவும் இமைக்கும் நேரத்தில் நிகழ்ந்தன, ஒரு நொடியில் உருண்ட தலைகள் பற்பலவாம். அக்கொங்கர்கள் நம் படைகளுக்கு ஆற் றுது புறமுதுகு காட்டி ஓடினர். கொங்கனும் எஞ்சிய படைகளுடன் ஓட்டம் பிடித்தான்," என்று ஆய்வேளிடம் போர் நிகழ்ச்சிகளை விளக் கிக் கூறினன்.

18. 'நாம் கனி கொள்வதன்றிக் காய் பெறுவதில்லையே'—சந் தர்ப்பம் கூறி விளக்குக.

தமக்கு வெற்றி கிட்டுவது திண்ணம் என்று அமைச்சன் நற்குடி வேள் கூறியதைக் கேட்டு மகிழ்ந்த ஆய் தானே நேரே போர்க்களம் சென்று படையினரை ஊக்குவிக்க விரும்பினன். போர்க்களம் செல்லு முன் போர்த் தெய்வமாம் வீரமாதேவியையும் குல தெய்வமாம் முருகக் கடவுளையும் வெற்றியும் புகழும் அருளுமாறு துதித்து அடிபணிந்தான். அவ்வமயம் ஒற்றன், திருமேனி ஓடி வந்து வணங்கினன்.

அப்போது அமைச்சன் நற்குடி வேள், திருமேனி களிப்புடன் ஓடி வருவதி லிருந்து தமக்கு வெற்றியே என்று மன்னனிடம் கூறித் திரு

மேனியைத் தமக்குக் கனிதானே என்று வினவினன். அதற்குத் திருமேனி தாம் கனியன்றிக் காய் கொள்வதில்லை எனவும், காய் என்பதற்குப் பகைவரைச் சினத்தியால் சுட்டொழிக்க என்ற பொருளேயே அவர் அறிவார் எனவும் மன்னனிடம் விண்ணப்பம் செய்தான்.

19. கொங்கு வேந்தனின் தோல்வி கேட்டு ஆய்வேள் கூறியது யாது?

தன்னிடம் நண்பனைப் போல் நடித்து நன்றி கொன்ற பாதகனும் கொங்கு வேந்தன் தக்க பரிசே பெற்றனன் எனவும், விதியையும் மதியால் வெல்லலாமேனும் ஊழ்வினையைக் கடக்க எவராலும் இயலாதாதலின் கொங்கு வேந்தன் இழைத்த தீவினையே அவனை அழித்த தெனவும் ஆய்வேள் கூறினன்.

20. ஆய் வள்ளல் இளந்திரையனை எங்ஙனம் பாராட்டினன்? அவனுக்கு அவன் அளித்த பரிசில்கள் யாவை?

"இளந்திரைய! நாட்டைக் காத்த வீரன் நீயே! ஆய் குடிப் படை என்றால் அடிவயிற்றில் நெருப்பைக் கொள்ளுமாறு பகைவனும் பதற அடித்த பெருமை உனதேயன்றோ! நின் பெயரைக் கேட்டால் இடியொலி கேட்ட நாகம் போல் அஞ்சி நடுங்குமாறு நீ புரிந்த தொண்டுகள் போற்றற்குரியன. இன்று முதல் நீ எனது அவையில் வீற்றிருக்க இவ்வரியணையை நல்குகிறோம், உனக்குக்கொங்குக் கூற்றன் தமிழவேள் இளந்திரையன் என்ற பட்டத்தையும் வழங்கினோம். நீ நலங்கள் பல பெற்று நீடு வாழ்க," என்று ஆய்வேள் படைத்தலைவன் இளந்திரையனைப் போற்றினன்.

மற்றும் ஆய் படைத்தலைவனுக்குப் பொற்பல்லக்கும். யானைப்பண்டியும், முரசும், சக்கலை ஓட்டும் ஆலவட்டமும் விருதுகளாக வழங்கினன்.

21. இளந் திரையனின் நன்றி மறவாக் குணத்தை விளக்குக.

இளந்திரையன் ஆய் வேளை ஐம் பெருங் குரவரின் தன்மை வாய்ந்தவனைப் பாராட்டி அவனடி பணிந்து போற்றினன். மன்னன் தனக்கு அளித்த பெருமைகளுக்கும் வரிசைகளுக்கும் உரியார் பலர் அவையில் இருக்கவும் ஆய்வேள் தன்னிடம் கொண்ட பேரன்பினாலேயே தன்னைப் பொருளாக்கிப் பெருமைப்படுத்தியதாகக் கூறித் தன் மனமார்ந்த நன்றியைச் செலுத்தினன். இதனால் அவனுடைய நன்றி மறவாக் குணம் நன்கு புலனாகிறது.

22. இளந்திரையனின் அடக்கத்தைச் சான்றுதந்து விளக்குக.

ஆய்வேள் தனக்குப் பல பரிசுகளை வழங்கிப் பட்டம் அளித்தபோது படைத்தலைவன் இளந்திரையன் அத்தகுதிகளுக்கு உரிய சான்றோர் பலர்

அவையில் இருப்பினும் தன்னிடம் உள்ள பேரன்பால் ஆய்வேள் தனக்கு அவற்றை அளித்ததாக நன்றி பாராட்டினன். மற்றும் தான் பகைவரைப் புறமுதுகு காட்டி ஓடுமாறு செய்து பெற்றவெற்றி துணைப்படைவரின் துணை வலியாலேயே கை கூடிற்றென்று கூறினன். இதனால் இளந்திரையனின் அடக்க மென்னும் அருங்குணம் விளங்குகிறது.

23. ஆய்வேளின் அரிய பண்புகளாக இளந்திரையன் குறிப்பிட்டன யாவை?

"ஆய்வேள் காட்சிக் கெளியன்; கடுஞ் சொல் இன்றி இன்மொழி பேசுபவன்; மக்கட்கு எவ்வகைத் துன்பமும் உண்டாகாதவாறு அவர்களைக் கண்ணுங் கருத்துமாய்க் காப்பவன்; தளர்ந்தவர்களைக் காத்துச் செங்கோலுடன் அறச் செயல் பல புரிபவன். இத்தகைய அருங்குணங்கள் வாய்ந்திருப்பதாலேயே வெற்றியன்னை அவனை அணைந்தாள்," என இளந்திரையன் ஆய்வேளின் அரிய பண்புகளைப் பாராட்டினன்.

---

3. பாரதியார் தமிழ்ப் புலமை

(திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் M. A. B. L.)

அரும்பதமும் குறிப்பும்

பக்கம்: 28

தன்நிகர் இல்லா—தனக்கு ஒப்பு ஒருவர் இல்லாத
நயப்பவரும்—விரும்புபவரும்
கடைபிறந்து—வரம்பு கடந்து
ஆதர்சம்—குறிக்கோள்; இலட்சியம்
ஆகர்ஷிக்கப்பட்டு—கவரப்பட்டு
மிதமிஞ்சி—அளவு கடந்து
கவரவிடாது—விருப்பு, வெறுப்பு வயப்படுத்திக் கொள்ளுமாறு விடாமல்
நய உரைகள்—நயமான (அழகான) உரைகள்

பக்கம்: 29

சங்கேதம்—கட்டுப்பாடு
நாகபந்தம்—பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிக்கிடப்பது போலப் படம் வரைந்து அப்படத்தில் பாடலை அமைக்கும் சித்திர கவி.
ஏகத்தாள்—இதுவும் ஒரு சித்திர கவி. ஒரே அடியே நான்கு தடவை வந்து பொருள் மட்டும் வேறு படுவது.
இதழ் அகல்—இதழ் (உதடு) ஒட்டாமல் பாடுவது. (அஃதாவது உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம என்ற எழுத்துக்கள் கலவாமல் பாடுவது)
யமகம்—ஒரு பாட்டின் முதலடியின் முதற்சீரே ஏனைய அடிகளிலும் முதற்சீராக அமையப் பாடிப் பொருள் வேறுபடக் கூறுவது.
அந்தாதி—ஒரு செய்யுளின் ஈற்றெழுத்தோ, அசையோ,

சிரோ அடுத்த செய்யுளின் முதலாக வரப்பாடுவது
புலமைத் தலைக்கோல்—அறிவினை அளக்கும் சிறந்த அளவுகோல்.
பாவலர்—பாவில் வல்ல புலவர்
சித்திரகவி—சித்திரங்களில் பாடல்களை அமைத்துப்பாடும் முறை.
சத்துரு—பகைவர்
மனோபாவம்—மன வளர்ச்சி; உணர்ச்சி; கற்பனாசக்தி
வறண்ட—வற்றிய
புலமைவனம்—அறிவாகிய சோலை
கொழுவிய—கொழுமையான; சத்துள்ள
அடர்ந்திருண்டு—அடர்த்தியாகி இருள் செறிந்து
வாழ்த்து—வயிரங்கொண்டு (உறுதி கொண்டு)
மலிந்த—நிறைந்த
வினைத்திறம்—வேலைப்பாடு
தொடை—தொடுக்கப்படும் (கட்டப்படும்) முறை
முடைகின்றனர்—கட்டுகின்றனர்
உணர்வு நீர்—அறிவாகிய நீர்
உரன்—வலிமை
நறுமலர்—மணமிக்க பூக்கள்
சுவைக்கனி—சுவையான பழங்கள்
அபூத விளைவு—இல்லாத பொருளின் விளைவு
இலைவனம்—இலை செறிந்த காடு
கனிமலர்த்தோப்பு—பூக்களும் பழங்களும் நிறைந்த தோட்டம்
பளிங்குநடை—பளிங்கு போன்ற தெளிவான நடை
ஒளிரும்—விளங்கும்
வெண்பொன்—வெள்ளி
திட்பம்—உறுதி; பொருட் செறிவு
நிகண்டு—சொற்களின் பொருள், களைச் செய்யுள் வடிவில் கூறும் நூல்
வெள்ளிடைமலை—வெட்டவெளியில் உள்ளமலை போலத்தெளிவாகத் தெரியும்
வயிரத்தின் திண்மை—வயிரம் மிகவும் உறுதியானது. வைரத்தை வைரத்தாலேயே அறுக்க வேண்டும்.
நீலத்திரை .....தமிழ் நாடு
நீலநிறம் பொருந்தியஅலை வீசும் கடலின் ஓரத்தில் நின்று எப்பொழுதும் தவம் செய்து கொண்டிருக்கும் கன்னியாகுமரித் தெய்வம் தெற்கு எல்லையாகவும், வடக்கே திருமாலின் மலையாக விளங்கும் வேங்கட மலை எல்லையாகவும் இருக்க இவ்வெல்லைகட்கு இடையே புகழ் செறிந்து விளங்குவது தமிழ் நாடு.

பக்கம்: 30

மாலைப் பொழுதில்...கண்டேன்: மாலைநேரத்தில்ஒருமேடையின் மீதர்ந்து ஆகாயத்தையும் கீட்லையும் பார்த்துக் கொண்டே இருந்தேன்; மூலையில் கடலினை அந்த வானமாகிய வட்டம் முத்தமிடுவதைப் போலத் தொட்டு மகிழ்வதைக் கண்டு களித்தேன்.
இனைய—இத்தகைய
உருகுபொன்ஒழுக்கு—உருக்கி ஊற்றிய பொன் ஓடுதல்
அலங்காரம்—தமிழில் உள்ள அணிகள்
உறையும்—தங்கும்
செவ்வி—தன்மை
அமுதருத்தி—உணவை உண்பித்து

ஒப்பு உணர் தேர்ச்சி—ஒருபொருளுக்கும்மற்றொருபொருளுக்கும் உள்ள ஒப்புமைத் தன்மையை ஆராய்ந்து அறியும் திறமை
கவிவனே—செய்யுள் இயற்றும்
கைவினை—தொழில், ஆற்றல்
அநாயாசம்—எளிமை
துருவி—ஆராய்ந்து
நிறுவ—நிலைநாட்ட
கருவியாக்கும்—காரணமாகச் செய்கின்ற
தேனை......உண்டோ :
தேன் குடிப்பதை மறந்த வண்டும், ஒளியை மறந்த பூவும். மழையை மறந்த பயிரும், இந்த உலகம் முழுவதும் தேடினாலும் கிடைக்காது. அது போலக் கண்ணன் முகம் மறந்து விட்டால் இந்தக் கண்கள் இருந்தும் பயனில்லையாம். எனவே கண்களின் பயன் கண்ணனைக் காண்பதே என்று பாரதியார் கூறுகிறார்.
இயைபு—பொருத்தம்
விசதமாக—தெளிவாக, விரிவாக
உருவகப்படுத்தி—வடிவம் கொடுத்து
தம்கோள்—தம் கொள்கை
கைவந்த—தேர்ச்சி பெற்ற, அநுபவம் வாய்ந்த
மதுரகவி—இனிய சொல்லும் பொருளும் அமையப் பாடும் கவிஞர்
மித்திரர்—நண்பர்
விஸ்தாரம்—விரிவு

பக்கம் : 31

ஒரு துறைக் காதல்பனுவல் - தலைவன், தலைவியர் என்ற இருவரிடையில் ஒருவரிடம் உள்ள காதலை மட்டும் வெளிப்படுத்திப் பாடும் நூல்.
நுதலிய—கூறிய
தலைநின்ற - முதன்மை பெற்ற
கவி தொறும்—பாடல்தோறும்
கனியும்—ததும்பி நிற்கும்
தேனும் தேன் போன்ற இனிய சுவையும்
அறுதொறும்—பாட்டு முடியுந் தோறும்
கமழும்—இனிக்கும்
கண்டும்—கற்கண்டு போன்ற இனிய சுவையும்
தெவிட்டாத—வெறுக்காத
பண்டுதொட்டு—முன் காலந் தொடங்கி
நால்வகைப்பா : வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
பனுவல்—நூல்
திருத்தக்கத் தேவர்—சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியர்
விறுபெற—பெருமையுற
அறவேமறந்து — அடியோடு மறந்து
அரசுரிமை—தலைமைப்பதவி
பாவினம் : தாழிசை, துறை, விருத்தம்
விழுமிய—சிறந்த
தனிப்பனுவல்—ஒப்பற்றநூல்
கலிங்கத்துப்பரணி : குலோத்துங்கன் என்ற மன்னன் கலிங்க நாட்டை வென்ற வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து ஜயங்கொண்டார் பாடிய நூல்.
தனிப்பாசுரம் — தனித்தனிப் பாடல்கள்
குறுகாமல்—சுருங்கி நிற்காமல்
புதுக்கிளர்ச்சி—சுதந்திரக் கிளர்ச்சியைக் குறிக்கும்
புது + அணி : புத்தணி—புதிய ஆபரணங்கள்
எதுகை—இரண்டாம் எழுத்து பல சீர்களிலோ, அடிகளிலோ ஒன்றி வரத்தொடுப்பது.

மோனை—முதல் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது
வேது—ஒற்றடம்
மிழன்று—மழலை பேசி
பண்ணேறி - இசையில் உயர்ந்து
ஆசாரம்—ஒழுக்கம்
சமுதாயம்—மக்கள் கூட்டம்
சமதிருஷ்டி—சமநோக்கம்
சர்வாபி அனுதாப நிறைவு-எல்லா வுயிர்களிடத்தும் அருள் நிறையப் பெற்றிருத்தல்
விரவும்—கலந்திருக்கும்

பாட விளக்கம்

1. பாரதியார் பாடல்களை ஆராயவேண்டிய முறை:—அண்மையில் காலம் சென்ற சுப்பிரமணிய பாரதியார் ஒப்பற்ற தமிழ்ப் புலவராவர். அவர் நமக்குச் சமீப காலத்தில் வாழ்ந்தவராதலால் அவர் மேல் உள்ள விருப்பு. வெறுப்பு காரணமாக அவர் பாடல்களையும் பலர் அளவின்றிப் புகழ்கின்றனர். பலர் அளவின்றி இகழவும் செய்கின்றனர். நம் காலத்தில் வாழ்ந்து நம் காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு வாழும் புலவர் ஒருவர் புதிய கொள்கையில் மனம் ஈடுபட்டுப் பாடிய பாடல்களை அளவின்றிப் புகழ்வதும், வெறுத்துப் பழிப்பதும் கூடாது. விருப்பு வெறுப்புக்களுக்கு மனத்தைப் பறிகொடுக்காமல் நடு நிலையோடு அப்புலவருடைய பாடல்களைப் படித்து உண்மை காணவேண்டும். அங்ஙனம் காணக்கூடிய திறம் எல்லோர்க்கும் உண்டாகாது; சிலருக்கே வாய்க்கும். நடுநிலையோடு கூடிய அறிஞர்கள் அப்புலவருடைய பாடலைப் படித்து ஆய்ந்து முடிவு கூறும் வரை மற்றவர்களும் ஆராயலாம். இயன்றவரை பாரதியார் பாடல்களை ஆராய்வோம்.

2. பாரதியார் பாக்களின் உயர்வு:—பாரதியார் தற்காலப் புலவர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கட்டுப்பாடுகளுக்குச் சிறிதும் இணங்காதவர். தற்காலப் புலவர்கள் நாகபந்தம், ஏகத்தாள், இதழ் அகல் யமக அந்தாதிகள் போன்ற சித்திர கவிகளைப் பாடுவதையே சிறந்த புலமையெனக் கருதுகின்றனர். அத்தகைய ஆற்றல் ஒருவரிடம் இருந்தாலே அவரைப் புலவர் என மதிக்கின்றனர். அத்தகையவர்கள் சித்திரகவிக்கு விரோதியாகிய பாரதியாரையும் அவர் பாடல்களையும் எங்ஙனம் மதிப்பர்? தற்காலத்தில் அறிவாகிய சோலை அழகும் மணமும் நிறைந்த பூக்கள், சுவைதரும் கனிகள் முதலியன தராமல் இருண்டு செறிந்த இலைச்செடிகளாலும் புதர்களாலும் நிறைந்து காணப்படுகின்றது. புலமை வனத்தில் தழைகளே அடர்ந்து தழைப்பதால் அத்தழைகளைக்கொண்டே மாலைகள் கட்டப்படுகின்றன. தழை மாலைகளுக்கு மதிப்பு ஏற்படுவதற்காகப் பலவித வேலைப்பாடுகளுடன் பார்ப்பவர்க்கு வியப்பை உண்டாக்கும் வகையில் அம்மாலைகள் கட்டப்படுகின்றன. அத்தகைய தழைகளே நிறைந்த சோலையில் ஒருபுறத்தில் ஊக்கம் உடைய ஒருவன் பயன்படாத வெறுஞ்செடிகளைக் களைந்தெறிந்து. நிலத்தைப் பண்படுத்தி அறிவாகிய நீரைப் பெய்து. ஒளியாகிய உணவினை ஊட்டிவளர்த்த தோட்டமானது மணம் மிக்க மலர்களையும்

சுவைமிக்க கனிகளையும் தருவதாக விளங்கினால் அச்சோலையை முழுது மாகப் பார்க்கின்றவர்க்கு அத்தோட்டம் ஒரு புதுமையானதாகவே தோன்றும். பாரதியார் பாட்டுக்கள் இலை செறிந்த காட்டில் எழுந்த கனிமலர்த் தோப்பாகும்.

[தற்காலப் புலவர்களிடத்தில் சிறந்த பாடல்களைப் பாடுவதற்கேற்ற மனோபாவம், கற்பனைசக்தி, பொருள்வளம் ஆகியன இல்லாமையால் அவர்கள் தழை செறிந்த மாலையைப்போலப் பயனற்ற பாடல்களைப் பாடுகின்றனர். அப்பாடல்களை மக்கள் மதிக்கவேண்டுமே என்பதற்காக அவர்களுக்கு வியப்பு உண்டாகும் வண்ணம் நாகபந்தம், ஏகத் தாள் போன்ற சித்திர கவிகளைப் பாடித் தாங்கள் பெரும்புலவர் என நினைத்துள்ளனர். அத்தகைய புலவர்களுக்கிடையில் தம் அறிவுத் திற மையால், உணர்ச்சி வேகத்தால், கற்பனை சக்தியால் எல்லோர்க்கும் பயன் படத்தக்க பாடல்களைப் பாடுகின்ற பாரதியார் விளங்கியது ஒரு புது மையேயாகும். அது தழை வனத்தில் எழுந்த கனிமலர்த் தோப்புப் போல் உள்ளது என்பது மேற்பத்தியின் உள்ளுறைப் பொருளாம்.]

3. **பாரதியார் பாடல்களின் இயல்புகள்** :—பாரதியார் பாடல்கள் சங்கப்புலவர்கள் மேற்கொண்ட தெளிவான நடையில் அமைந்தவை யாம். அவை வெண் பொன்னை உருக்கி ஊற்றினால் அது நேராக ஓடுவது போல நேராகப் பொருள்கொள்ளுமாறு அமைந்தவை மேலும் இனிய ஓசை, பொருட்செறிவு, சுவை முதலியன நிறைந்தவை. பாரதியார் பாடல்களைப் படிப்பதற்கு அகராதி முதலியவற்றின் துணை வேண்டிய தில்லை. தெளிவான மனமும், கவனமும், தமிழார்வமும் உடையவர்க்கு அவர் பாடல்கள் ஐயத்திற்கு இடமின்றி எளிதாக விளங்குவனவாம். இவர் பாடல்கள் ஆற்றொழுக்கான நடையை உடையனவாக இருந்தாலும் வயிரம்போல உறுதியும் ஒளியும் உடையனவாகும்.

4. **பாரதியார் உவமையைக் கையாளும் முறை** :—பாரதியார் உவமையை அமைத்துப் பாடுவதில் மிகவும் வல்லவர். இக்காலத்தில் அத்துறையில் அவருக்கு இணையானவர் இல்லை எனலாம். தற்காலப் புல வர்கள் முன்னோர் கூறிய உவமைகளைத் தேடிக் கண்டு அவற்றை ஒருங்கு சேர்த்துத் தாமே கூறுவதுபோல அமைத்துப் பாடி மகிழும் இயல்பினர். ஆனால் பாரதியார் கையாளும் உவமைகளோ இயற்கையானவை: புத்தம் புதியவை. அவை தாமே பாரதியாரைத் தேடிவந்து சேரும். அவ்வுவமைகள் எடுத்துக்கொண்ட கருத்தை விளக்க மிகப் பொருத்த மாக இருக்கும். படிப்பவர் மனத்தைவிட்டு என்றும் நீங்காமல் நிலவும். பாரதியார் கையாளும் உவமைகளைக் கொண்டே அவருடைய கற்பனைத் திறன், ஒப்பு மையை ஆராய்ந்தறியும் பேரறிவு, பாடல் இயற்றும் ஆற்றல், எதனையும் கஷ்டப்பட்டு எடுத்துக்கூறாமல் எளிதாக எடுத்து விளக்கும் சக்தி ஆகியவற்றை நன்கு அறியலாம். பாரதியார் பண்டைப்

புலவர்கள் கூறிய உவமைகளைத் தேடிப்பிடித்து அவற்றைத் தம் பாடல்களில் அமைத்துக்காட்டித் தம்முடைய திறமையைப் பலர் புகழக் கருவியாக்கிக் கொள்ளும் இழிந்த செயலை அடியோடு வெறுத்தவர். பாரதியார் சாதாரணமான மனோபாவங்களையும் எண்ணங்களையுமே உருவாக்கிக் காட்டித் தம் கொள்கையை வற்புறுத்திக் கூறுவதில் மிகவும் வல்லவராவார்.

5. **பாரதியார் மதுர கவி** :—பாரதியாரை மதுர கவி என்று கூறலாம். இவர் சித்திர கவியை வெறுப்பவர். இவர் விரிவான முறையில் எந்த நூலும் இயற்றவில்லை. பாஞ்சாலி சபதம், சேற்றூர் உலா என்பனவே இவர் இயற்றிய பெரிய நூல்கள். இவர் ஒரு பொருள் குறித்துப் பல துறைகளில் பாடிய பாட்டுக்களின் கோவைகளாக விளங்குவன கண்ணன் பாட்டு, சுதேச கீதங்கள் என்பனவே. ஆகவே இவர் விஸ்தார கவியுமல்லர், எனவே இவர் மதுர கவியே யாவர்.

6. **இசைப் பாடல்கள் இயற்றக் காரணம்** :—பழங்காலம் முதல் புலவர்கள் நால்வகைப் பாக்களிலும் பல நூல்கள் இயற்றிவந்தனர். திருத்தக்கதேவரும், கம்பரும் விருத்தப் பாக்களில் நூல்களை இயற்றி அப் பாடல்களுக்குப் பெருமையை ஏற்படுத்தினர். அதுமுதல் அனைவரும் அப்பாடல்களிலேயே நூல்களை இயற்றலாயினர். விருத்தமல்லாத பல வகையான பாவினங்களைக் கொண்டு எழுதப்பட்ட பிற்கால நூல்களில் கலிங்கத்துப் பரணி சிறந்ததாகும். பாரதியார் எத்தகைய பாடல்களையும் பாட வல்லவராயினும் இசைப் பாட்டுக்களையே அவர் விரும்பிப் பாடினர். பாரதியார் காலத்துக் கேற்பப் புதுப்புதுக் கருத்துக்கள் கொண்டவர். தன் நாடு, தன் மொழி, தன் மதம் என்று குறுகிய நோக்கம் கொள்ளாமல் உலகம் முழுவதும் ஒன்றெனக் கருதும் விசால நோக்கமுடையவர். சுதந்திர உணர்ச்சியுடையவர். இத்தகைய இவர் நோக்கங்கள் நிறைவேற வேண்டுமாயின், இவர் பாடல்கள் எங்கும் பரவவேண்டுமாயின், எல்லோரும் விரும்பிக் கற்கக் கூடிய இசைப் பாட்டுக்கள் மூலம் பாடுவதே சிறந்தது என்று எண்ணி இப்புது வழியில் புகுந்து அதன்மூலம் தமிழருக்குப் புத்துணர்ச்சியும் தமிழுக்குப் புது அணியும் தேடித்தந்துள்ளார்.

7. **பாரதியாரே தற்காலப் புலவர்களில் சிறந்தவர்** :—எதுகை மோனைகளையே பெரிதாக எண்ணிப் பொருளில்லாமல் பாடும் பாட்டுக்களால் புண்பட்ட தமிழன்னை பாரதியார் பாட்டுக்களால் அப்புண்கள் ஆறப்பெற்று மகிழ்ச்சி கொள்வாள். பாரதியாரின் கவிதா சக்தி மிகவும் புகழ் பெற்றதாகும். அவர் சமயம், ஆசாரம், சமுதாய ஒழுக்கம் முதலியவற்றில் சமநோக்கமுடையவர். எல்லா உயிர்களிடத்தும் இரக்கமுடையவர். இவ்வியல்புகளை இவர் பாடல்களில் எங்கும் காணலாம். ஆகவே தற்காலத்தில் பாரதியாரைப் போன்ற புலவரைக் காணமுடியாது. அவரினும் மிக்கவர் ஒருவருமிலர் என்று கூறலாம்.

வினு விடை

1. பாரதியார் பாடல்களைச் சிலர் விரும்பவும், சிலர் வெறுக்கவும் காரணம் என்ன ?

பாரதியார் நம் காலத்தில் வாழ்ந்தவர். நம்மில் பலரோடு பழகியவர். நாம் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர். அவர் வாழ்ந்த போது அவருடன் பழகி அவரை அதிகமாக நேசித்தவரும் பலர் இருக்கலாம். அவர் மேல் கொண்ட இவ்விருப்பு, வெறுப்பு ஆகியவைகளை மனத்தில் கொண்டு அவர் பாடல்களைப் படிப்பதால் அவரை அதிகமாக விரும்பியவர் அவர் பாடல்களை அதிகமாகப் புகழ்ந்து பேசுகின்றனர். அவரை அதிகமாக வெறுத்தவர் அவர் பாடல்களையும் அதிகமாகப் பழித்துக் கூறுகின்றனர். இவையே விருப்பு வெறுப்புக்குக் காரணங்களாம்.

2. நம் காலப் புலவரின் கவிகளை எங்ஙனம் ஆராய வேண்டும்?

நம் காலப் புலவர் கவிகளை அவர்மீது கொண்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து நடு நிலையான மனத்துடன் படித்து ஆராயவேண்டும். வேறு எண்ணங்களுக்கும் நோக்கங்களுக்கும் வயப்பட்டு நம் உணர்வைப் பறிகொடுத்து விடலாகாது. அங்ஙனம் கற்ருல் அவர் கவித்திறம் உண்மையாக விளங்கும். காய்தல், உவத்தலை அகற்றி ஒரு பொருளை ஆராய வேண்டும் என்று அறநெறிச் சாரமும் கூறுகின்றதன்ருே ?

3. பாரதியார் பாக்களைத் தற்காலப் புலவர்கள் மதிக்காமைக்குக் காரணம் என்ன ?

பாரதியார் தற்காலப் புலவர்களின் கட்டுப்பாடுகளுக்குச் சிறிதும் இணங்காதவர். தற்காலப் புலவர்கள் நாகபந்தம், ஏகத்தாள், இதழ் அகல் யமக அந்தாதிகள் போன்ற சித்திர கவிகளைப் பாடுவதே சிறந்த புலமைக்கு அளவுகோல் என்று கருதியுள்ளனர். அத்தகையவர்கள் சித்திர கவிக்கே சத்துருவாக விளங்கும் பாரதியார் பாடல்களை எங்ஙனம் மதிப்பர். இக்காரணத்தாலேயே தற்காலப் புலவர்கள் பாரதியார் பாடல்களை மதிப்பதில்லை.

4. 'பாரதியார் பாக்கள் இலைவனத்திடை எழுந்த கனிமலர்த் தோப்பாம்'—இவ்வாறு கூறப்படுவதன் கருத்தை நன்கு விளக்குக.

தற்காலப் புலவர்களிடையே மனோபாவமும், உயர்ந்த எண்ணங்களும், பொருளும் வறண்டு கிடப்பதனுல் அவர்கள் அறிவைப் புதுமையான துறைகளில் ஈடுபடுத்தி நாட்டுக்குப் பயன் தரும் நல்ல கவிகளை இயற்ற முடியவில்லை. ஆகவே தற்காலப் புலவர் தம் அறிவு வளத்தை ஒருவர்க்கும் பயன் தராத தழை செறிந்த காடு என்று கூறினுர். தழைகளே நிறைந்து நறுமண மலர்களும், சுவைதரும் கனிகளும் இல்லாமற்

போகவே தழை மாலைகளே கட்ட வேண்டியிருக்கிறது; அம்மாலைகள், மக்கள் மதிப்பைப் பெற, அவர்கள் எண்ணத்தைக் கவர அடுக்காலும் தொடையாலும் பற்பல வேலைப்பாடுகள் அமையக் கட்டப்படுகின்றன. அது போல மனோபாவம் வறண்ட புலவர்கள் தங்கட்குத் தெரிந்த பயனற்ற பாட்டுக்களையே பாடித் திரிகின்றனர். அப்பாட்டுக்கள் மக்கள் மனத்தைக் கவர, அதனால் தங்கட்கு ஒரு பெருமையைத் தேடிக் கொள்ள விரும்பிப் பற்பல சித்திரகவிகளாகப் பாடி மக்களைத் திகைக்கச் செய்கின்றனர். இத்தகைய பயனற்ற பாடல்களைப் பாடும் புலவர்களுக்கிடையில் நாட்டு மக்களுக்கு நற்பயனளிக்கக் கூடிய அவர்கள் உணர்வைத் தூண்டக் கூடிய பாரதியார் பாடல்கள் உணர்வுடையான் ஒருவன் நிலந் திருத்தி நீர்பாய்ச்சி எருவிட்டு வளர்க்க, அவ்விலை வனத்திடையே எழுந்து விளங்கும் கனியும் மலரும் மிக்க கவின் பெருந் தோட்டத்தைப் போல விளங்குகின்றது என்று கூறுதல் மிகவும் பொருத்தமாம்.

5. பாரதியார் பாடல்கள் எத்தகையன?

(பாட விளக்கம் மூன்றும் பத்தி இதற்கு விடையாம்)

6. பாரதியார் உவமைகளைக் கையாளுவதில் கைவந்த சமர்த்தர் என்பதற்கு ஒரு சான்று தருக.

பாரதியார் கையாளும் உவமைகள் இயற்கையாக அமைந்தவை. வருந்தித் தேடி அமைக்கப்பட்டவையல்ல. எளிமையும் மக்கள் வாழ்வில் காணக்கூடியவையும் ஆகியவற்றையே பாரதியார் உவமைகளாகக் கூறுவார். அவர் கூறும் உவமைகள் யாவும் கற்பவர்க்குப் பெருமகிழ்ச்சியை யூட்டி அவர் கவனத்தை விட்டு நீங்காதுறையும் இயல்பின. ஓர் உதாரணம் கூறுவோம்.

கண்களைப் பெற்ற பயன் கண்ணனைக் காண்பதே என்பதைக் கூற வருகின்றார் பாரதியார். அவ்வுண்மையைக் கண்ணன் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி அவனைப் பிரிந்து துன்பம் பொறாதவளாய்க் கூறும் முகத்தால் கூறி விளக்குகின்றார். அத்தலைவி தன் தோழியைப் பார்த்துத் தேனை மறந்திருக்கும் வண்டையும், ஒளியை மறந்து விட்ட பூவையும், மழையை மறந்திருக்கும் பயிரையும் இவ்வுலகில் எங்கேனும் காண முடியுமா? என்று கேட்கிறாள். தோழி என்ன பதில் கூறியிருப்பாள்? இல்லை என்று தானே கூறமுடியும். தேனை மறந்திருக்கும் வண்டும், ஒளிச் சிறப்பை இழந்து விட்ட பூவும் வானை மறந்திருக்கும் பயிரும் இவ்வையத்தில் எங்கும் இல்லாதன போலக் கண்ணன் முகத்தை மறந்து விட்டால் என் கண்கள் இருந்தும் என்ன பயன்? என்று முடிக்கிறாள் தலைவி.

இச் செய்யுள் தலைவியின் பிரிவுத் துன்பத்தை எவ்வளவு உருக்கமுடன் கூறுகிறது. இங்குப் பாரதியார் கையாண்டுள்ள உவமை பொது

லூக நோக்கும்போது உவமையாகவே தோன்றவில்லை. ஊன்றிக் கவனித்தால் தேனை மறந்தால் வண்டு உயிர் வாழாது; ஒளியை இழந்தால் பூக்கள் வண்டுகளைக் கவர்ந்து காய்த்துச் செழித்துப் பரவ முடியாது. மழையை மறந்தால் பயிர் வளர முடியாது. அவை எங்ஙனம் அவற்றின் வாழ்வுக்கே இன்றியமையாதனவாக உள்ளனவோ அது போலக் கண்ணன் முகம் என் வாழ்விற்கே ஆதாரமாக உள்ளது. அத்தகைய அம்முகத்தைக் காணமுடியாத கண்கள் இருந்து என்ன பயன்? என்று எவ்வளவு பொருத்தமாக உயர்ந்த கருத்தைத் தன்னகத்துக் கொண்டுள்ளதாக விளங்குகின்றது என்பது புலனாகும். இங்ஙனமே ஒவ்வோர் உவமையையும் பாரதியார் மிக மிகப் பொருத்தமாகவே அமைத்துள்ளனர். ஆதலால் அவர் உவமைகளைக் கையாளுவதில் மிகவும் சமர்த்தர் என்பது நன்கு விளங்குகின்றது.

8. நால்வகைக் கவிஞர் யாவர்? பாரதியார் அவர்களில் எப்பிரிவைச் சார்ந்தவராவார்? விளக்குக.

ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி எனக் கவிஞர் நால்வகையினர்.

பாரதியார் குற்றமற்ற மதுர கவியாவார். இனிய சொல்லும் பொருளும் அமையக் கேட்போர் உள்ளம் இனிக்கப்பாடும் கவிஞரே மதுர கவியாவர்.

பாரதியார் பாடல்கள் அத்தகையன என்பதில் ஐயமில்லை. ஆசுகவி என்பவர் பிறர் கொடுக்கும் குறிப்புக்களைக் கொண்டு அப்போதே பாடும் கவிஞர்; சித்திர கவியாவார் பலவிதச் சித்திரங்களில் பொருத்தமாகப் பாட்டமைக்க வல்லவர்; வித்தாரகவி என்பார் ஒரு காவியத்தை எடுத்துக் கொண்டு பல பாடல்களால் விரிவாகப் பாடுவோராவர். பாரதியார் இம் மூவகைக் கவிஞருமல்லர். அவர் சித்திரகவி சத்துரு. அவர் சிறிது விரிவாகப் பாடிய நூல் பாஞ்சாலி சபதம் என்ற ஒன்றேதான். சேற்றூர் உலா என்ற மற்றொன்று அச்சாகவில்லை. ஆதலால் பாரதியார் இம்மூவகைக் கவிஞருமல்லர் என்பது தெளிவாக விளங்கும். எனவே பாரதியார் மதுரகவி என்று கொள்வது மிகவும் பொருத்தமாம்.

9. பாரதியார் பாடிய பாடல்களும் நூல்களும் யாவை?

பாப்பாபாட்டு, முரசுப்பாட்டு, பள்ளு, கிளிப்பாட்டு, சுதேச கீதங்கள், கண்ணன் பாட்டு முதலியன பாரதியார் பாடிய பாடல்களிற் சிலவாம்.

பாஞ்சாலி சபதம், (அச்சிடப்படாத) சேற்றூர் உலா என்பன இவர் இயற்றிய நூல்களாகும்.

10. பாரதியார் பாடிய ஒரு துறைக்காதற் பனுவல், ஒரு பொருள் நுதலிய பல துறைக்கோவை என்று குறிக்கப் பெறும் நூல்கள் எவை? எங்ஙனம் என விளக்குக.

பாரதியார் இயற்றிய ஒரு துறைக்காதற் பனுவல் சேற்றூர் உலா என்பதாகும். ஒரு பொருள் நுதலிய பல துறைக்கோவை கண்ணன் பாட்டும் சுதேச கீதங்களுமாம்.

உலா என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று. ஒரு தலைவன் பவனி வரும்போது அவனைக் கண்டு காதல் கொண்ட பல பருவப் பெண்களின் நிலையை எடுத்துக்கூறி விளக்கும் முகத்தால் அத்தலைவனின் பெருமையைப் புகழ்ந்து பாடும் நூல் உலா ஆகும். தலைவனிடம் காதல் இல்லாமல் அவனைக்கண்ட பெண்களிடமே ஏற்பட்ட காதலையே கூறுவதால் இவ்வகை நூல் ஒரு துறைக்காதற் பனுவல் எனப்படும்.

ஒரு பொருளைப் பற்றிப் பல்வேறு வகையாகக் கூறிய பாடல்களின் தொகுதி ஒரு பொருள் நுதலிய பலதுறைக் கோவை எனப்படும். பாரதியார் கண்ணன் பாட்டில் கண்ணனைத் தன் தோழனாகவும், வேலைக்காரனாகவும், காதலியாகவும், காதலனாகவும் அமைத்துக் கண்ணனிடம் கொண்டுள்ள அளவிறந்த பக்தி ஒன்றையே விளக்கிப் பாடியிருப்பதால் அஃது இவ்வகையைச் சார்ந்ததாம். சுதேச கீதங்களும் நாட்டுப்பற்றின் அவசியத்தையும், விடுதலை வேட்கையின் இன்றியமையாமையையும் விளக்கிப் பலவிதமாகப் பாடப்பட்டுள்ளமையால் இவ்வகையைச் சாரும்.

11. விருத்தப்பாவுக்குப் பெருமை தந்தவர் யாவர்? எங்ஙனம்?

திருத்தக்க தேவரும், கம்பரும் விருத்தப்பாவுக்குப் பெருமை தந்தனர்.

திருத்தக்க தேவர் இயற்றிய சீவகசிந்தாமணியும், கம்பர் இயற்றிய இராமாயணமும் விருத்தப்பாக்களால் இயற்றப்பட்டனவாம். அவ்விரண்டு காவியங்களும் காவியங்களில் எல்லாம் மிகச்சிறந்தன என்று போற்றப்படும் பெருமை வாய்ந்தன. ஆதலால் அவர்களுக்குப்பின் அவர்கள் மேற்கொண்ட விருத்தப் பாக்களுக்கே பெருமை ஏற்பட்டன.

12. கலிங்கத்துப்பரணி சிறு குறிப்பு வரைக.

கலிங்கத்துப்பரணி முதலாம் குலோத்துங்கன் கலிங்க நாட்டில் அடைந்த வெற்றியைச் சிறப்பித்துச் சயங்கொண்டார் என்ற புலவரால் பாடப்பட்ட நூலாகும். பிற்காலத்தில் இயற்றப்பட்ட நூல்களில் விருத்தமல்லாத பல துறைப் பாவினங்களால் ஆகிச் சிறப்புப்பெற்ற நூல் இஃதொன்றேயாகும்.

13. நாகபந்தம், ஏகத்தாள், இதழ் அகல் யமக அந்தாதிகள் – குறிப்பு வரைக.

(விடை அரும்பதமும் குறிப்பும் என்ற பகுதியில் காண்க.)

14. பாரதியார் இசைப் பாட்டுக்கள் பாடக் காரணம் என்ன ?

(பாட விளக்கம் ஆறும் பத்தியில் விடை காண்க.)

15. பாரதியார் தற்காலப் புலவர்களில் சிறந்தவர் என்பதனை விளக்குக.

(பாட விளக்கம் ஏழாம் பத்தியில் விடை காண்க.)

---

4. நலங்கிள்ளியும் கோவூர்கிழாரும்

(திரு. ஆ. கார்மேகக் கோனார்)

அரும்பதமும் குறிப்பும்

பக்கம் 32

இற்றைக்கு - இன்றைக்கு
எஞ்சாது - குறையாமல்
புலமை - அறிவு
திறம் - வன்மை
மனந்தூய்மை......வரும் : தூய மனமும் தூய செயலும் ஒருவர் சேரும் நல் இனத்தின் காரணமாக உண்டாவனவாம்.
அனையார் - போன்றவர்
தலைக் கூடுவேன் - அடைவேன்
பீடு - பெருமை
மீதூர - அதிகரிக்க
அவைக்களம் - அரச சபை
விழைந்து - விரும்பி
மாட்சி - பெருமை ; (மாண் - பகுதி)
தொடுத்து - முறையாக இயற்றி
உழுவல் அன்பு - எழுமையும் தொடரும் அன்பு
பகை மூண்டு - விரோதம் அதிகரித்து
பொருதல் - போர் செய்தல்
ஆற்றுனாய் - இயலாதவனாகி
சோணாடு - சோழன் + நாடு
அரண் - பாதுகாவல்
தன்னகப்படுத்தல் - கைப்பற்றுதல்
வஞ்சி - பகைவர் நாட்டைக் கவரச் செல்வோர் அணியும் ஒரு வகை மலர்
உழிஞை - மதிலை வளைத்து முற்றுகையிடுவோர் அணியும் மலர்
மதிற்புறம் - மதிலின் வெளிப்பக்கத்தில் உள்ள இடம்
சமர் - போர்
நொச்சி - மதிலைப் பகைவரிடமிருந்து பாதுகாத்தல் கருதிப் போர் புரிகையில் அணியும் மலர்
மலைந்து - போர் செய்து

பக்கம் 33

ஒடுங்கி – அடங்கி
வாளா - வீணுக, ஒன்றும் செய்யாமல்
பன்னுள் - பல + நாள்
மதிலகத்து - மதிலின் உட்புறத்தில்

ஏமப்பொருள்கள் - உடலைப் பாது காத்தற்குக் காவலாக அமைந்த உணவுப் பொருள்கள்
கூற வொண்ணு - சொல்ல இயலாத
துயர் மீக்கூர்ந்தனர் - துன்பம் அதிகரித்தனர்
கவளம் - வாயளவு கொண்ட உணவு
சுழன்று - சுற்றித் திரிந்து
முழங்கவும் - ஆரவாரிக்கவும்
கூந்தல் - தலைமயிர்
கூப்பீடு - கூக்குரல், அழுகை யொலி
நாணுமல் - வெட்கம் கொள்ளாமல்
சால் - மிகவும்
தோன்றல் - ஆண்பாற் சிறப்புப் பெயர்
முன்னிலையில் - எதிரில்
திண்ணிய - வலிமை பொருந்திய; உறுதியான
பிடி - பெண் யானை
தொழுதி - கூட்டம்
கயம் - குளம்
படியா - நீராடாமல்
நெய்ம்மிதி - நெய்யோடு கலந்த உணவு
நோன்வெளில் - வலிய கம்பம்
ஒற்றி - சாய்த்து
வெய்துயிர்த்து-பெரு மூச்சுவிட்டு
அலமரல் - சுழலல்
உரும் - இடி
வறுந்தலை - வெறுந்தலை
இனை - வருந்தும்
கூ - கூப்பாடு, அழுகை
இன்னுது - தீயது

பக்கம் 34

துன்னரும் - நெருங்குதற்கரிய
துப்பு - வலிமை
வயமான் - வெற்றி பொருந்திய குதிரை
அறவை - அறத்தை யுடையவன்
மறவை - வீரத்தை யுடையவன்
அடைத்த - மூடிய
திண்ணிலை - உறுதியான நிலை
ஒரு சிறை - ஒரு பக்கம்
நாணுத்தகவுடைத்து - வெட்கப் படும் தன்மையுடையது
ததும்பும் - மிகுந்த
பொதிந்த - செறிந்த
பரிசிலாளன் - பரிசில் பெறுபவன்
இரகசியம் - மறைவான செய்தி
ஒற்றன் - மறைந்து நின்று செய்தி அறிபவன்
உய்விக்க - பிழைப்பிக்க
பிழைபட்டது - தவருனது
அநியாயம் - நீதி இல்லாதது
வஞ்சம் - வஞ்சனை
புனிதம் - தூய்மை
தொலைபு - நெடுந்தூரம்
பற்று - விருப்பம்
உள்ள மலர்ச்சி - மன மகிழ்ச்சி

பக்கம் 35

கல்வி முகத்தால் - கல்வி காரணமாக
சொற்போர் - வாதம் செய்தல், பேச்சுப் போட்டி
பெருமிதம் - பெருமை
தலையெடுத்து - நிமிர்ந்து
நலம் - சிறப்பு
சாதுரியமாய் - சாமர்த்தியமாக
நால்வகைப் படை - யானை, குதிரை, தேர், காலாள் என நான்கு வகைச் சேனைகள்
போந்து - வந்து
புலவர் சிகாமணி - புலவர்க்குத் தலையணி போன்றவர், தலை சிறந்த புலவர்
செற்றம் - தீராப் பகை

அடைத்தும் - மதிலைப் பகைவர் உட்புகாவண்ணம் மூடியும்
முற்றியும் - மதிலை வளைத்தும்
இயற்கை - இயல்பு
பூரிக்கும் - பருக்கும்
உவகை - மகிழ்ச்சி
அறவே - முழுவதும்
இரும்பனை - பெரிய பனைமரம்
கருஞ்சினை - கரிய கிளை
தெரியல் - மாலை

பக்கம் 36

கண்ணி - மாலை
பொருவோன்-போர் செய்வோன்
ஆர் - ஆத்தி
மிடைந்தன்று - கட்டப்பட்டது
வேறல் - வெல்லல்
குடிப்பொருள் அன்று - குடிக்குத் தக்கதன்று

மெய்ம்மலி உவகை - உடம்பு பூரிக்கக் கூடிய மகிழ்ச்சி
இகல் - பகை
சிந்தை - மனம்
சுரந் தெழுந்த-தாமாகத் தோன்றி வளர்ந்த
பசுமரத்தாணி-பசுமரத்தில் அடிக்கப்பட்ட ஆணிபோல
பதிய - நிலைபெற
நெடுக - நெடுங்காலமாக
ஒருப்படுவரோ - இசைவரோ
பெற்றி - தன்மை
இடையறுது - நீங்காமல்
திட்பம் - உறுதி
புணை - தெப்பம்
சலதி - கடல்
புவியரசு - உலகையாளும் அரசன்
வள்ளியோன் - ஈகைக் குணம் உடையவன்

பாட விளக்கம்

1. **நலங்கிள்ளியின் நல்லியல்புகள் :**—சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர், சோழ நாட்டை நலங்கிள்ளி என்பான் ஆண்டு வந்தான். அவன் அரசர்க்கு உரிய அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் நாற்குணமும் நிரம்பப் பெற்றவன். அவன் புலவர் பாடும் புகழும் நல்லொழுக்கமும் வாய்ந்தவனாக விளங்கினான்.

2. **கோவூர் கிழார் நலங் கிள்ளியின் அவைக்களம் அடைதல் :**—அவன் காலத்தில் கோவூர் கிழார், என்ற புலவர் ஒருவர் இருந்தார். நலங்கிள்ளி கோவூர் கிழாரின் குண நலன்களைக் கேள்வியுற்று அவரிடம் அன்பு கொண்டான் : அவரைத் தன் அவைக்களத்திற்கு அழைத்தான். கோவூர் கிழாரும் புலவரைப் போற்றும் புரவலனாகிய நலங்கிள்ளியின் அவைக்களத்தை அடைந்தார். அன்று முதல் இருவரும் அன்பு கலந்த நண்பினராயினர். புலவரும் மன்னனின் மாட்சிமை யெல்லாம் உணர்ந்து. அவனுடைய வீரம், நியாயம், தியாகம் முதலியவற்றைப் பல பாடல்களால் போற்றிப் புகழ்ந்து அவனை மகிழ்வித்தார்.

3. **நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் :**—இங்ஙனம் இருக்கும் போது, சோழ அரசுரிமை காரணமாக நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளி என்ற சோழனுக்கும் பெரும் பகை மூண்டது. அப்பகை இறுதியில்

பெரும் போராக முடிந்தது. நலங்கிள்ளியின் படை வலிமைக்கு ஆற்ருத நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையைத் தனக்கு அரணுக்கிக்கொண்டு ஒளிந்திருந்தான். அதனை உணர்ந்த நலங்கிள்ளி அக்கோட்டையை முற்றுகையிடத் துணிந்து மதிற்புறத்தை வளைத்துப் போர்புரிந்தான். நெடுங்கிள்ளியோ மதிலைக் காவல்புரியக் கருதாது மதிலை அடைத்து ஒரு புறத்து மறைந்திருந்தான். முற்றுகை பல நாள் நீடித்தமையால் மதிலகத்து உள்ளோர் உணவு முதலியன குறைந்து சொல்லொணுத் துயரடைந்து வருந்தினர்.

4. **கோவூர் கிழார் நெடுங்கிள்ளிக்குக் கூறிய அறிவுரை:—** மதிலகத்துள்ளோர் இவ்வாறு வருந்துவதை உணர்ந்து உள்ளம் உருகிய கோவூர் கிழார் அதனை எவ்வாறேனும் நீக்க வேண்டும் என்று கருதி நெடுங்கிள்ளியை அடைந்து, "அரசே! தங்கள் நாட்டில் யானைகள் எல்லாம் குளத்தில் படிந்து குளியாமலும் தமக்கு வேண்டிய உணவைப் பெருமலும் துதிக்கைகள் நிலத்திற் புரளப் பெருமூச்சு விட்டுக்கொண்டு பேரிடி போன்ற முழக்கத்தைச் செய்கின்றன. பால் இன்றிக் குழந்தைகள் அழுகின்றன. மகளிர் தம் கூந்தலைப் பூக்களால் அலங்கரித்துக் கொள்ளவில்லை. தண்ணீரும் கிடைக்காமையால் குடிமக்கள் தங்கள் வீடுகளில் கூக்குரலிட்டுக் கதறுகின்றனர். இவற்றை அறிந்தும் நீ நாணமின்றி இங்கு ஒளிந்திருத்தல் உனக்குப் பொருந்துமோ? நீ அறம் கருதினையாயின் நலங்கிள்ளியிடம் 'இக்கோட்டை உன்னுடையதே.' எனத் திறந்துவிடு. வீரமுடையவனுனல் அவனுடன் மேலைந்து வெற்றி பெறுவாய். இவ்விரண்டுமின்றி இங்கு ஒளிந்திருத்தல் மிகவும் நாணத்தக்கதன்றே." என்று அறிவுரை கூறினர். (அதனுல் அறிவு பெற்ற அரசனும் அடைமதிலைத் திறந்து விட்டு உறையூரை அடைந்தான். நலங்கிள்ளியும் ஆவூரைக் கைப்பற்றினன்.)

5. **கோவூர் கிழார் இளந்தத்தனை விடுவித்தமை:—** இங்ஙனம் ஆவூர்க் கோட்டையில் இருந்த நலங்கிள்ளியை இளந்தத்தன் என்னும் புலவர் ஒருவர் கண்டு அவன்பால் பரிசு பெற்ருர். அவர் நெடுங்கிள்ளியிடமும் பரிசு பெற விழைந்து உறையூரை அடைந்தார். அவரை நலங்கிள்ளியிடமிருந்து வந்த ஒற்றனென்று தவருகக் கருதிய நெடுங்கிள்ளி கொல்லவும் துணிந்தனன். இதனை உணர்ந்த கோவூர் கிழார் நெடுங்கிள்ளியிடம் சென்று புலவர்தம் வஞ்சம் கலவாத வாழ்க்கைத் திறத்தையும், அவனது முடிவு நியாய மற்றது என்பதையும் விளக்கிக் கூறி இளந்தத்தரை விடுவித்தார்.

6. **கோவூர் கிழார் நலங் கிள்ளியையும் நெடுங்கிள்ளியையும் ஒற்றுமைப்படுத்தல்:—** பின்னர் ஒரு பொழுது நலங்கிள்ளி நெடுங்கிள்ளி வாழ்ந்த உறையூரையும் கைப்பற்றத் துணிந்து உறையூரை முற்றுகையிட்டுப் பெரும் போர் புரிந்தனன். ஒருகுடிப் பிறந்த இருவரும் இங்ஙனம் போர் புரிதலைக் கண்டு மனம் பொருத கோவூர் கிழார் அவ்விருவரை

யும் ஒற்றுமைப் படுத்தக் கருதினர். அவ்விருவரிடமும் சென்று "உங்களுள் எவர் தோற்பினும் தோற்பது சோழர் குடியே யாகும். இருவரும் வெற்றி பெறுதல் இயலாது. சேர பாண்டியர்களும் இச்செயலைக்கண்டு எள்ளி நகையாடுவர்" என்று அறிவுரை பகர்ந்தார். குடிக்கு வழு உண்டாகும் என்ற சொல்லைக் கேட்ட இருவரும் தம்பகைமை மறந்து போர் ஒழிந்து ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

7. நலங்கிள்ளி புலவர் கூட்டுறவால் பெற்ற நன்மைகள்:— பிறர்க்கெனவே முயலும் பெற்றி வாய்ந்தவரும், வேலேந்தும் வேந்தரிடமும் அஞ்சாது அறிவுரை கூறும் ஆற்றல் அமைந்தவருமாகிய கோவூர் கிழாரின் பெரு நட்புக் கிடைத்தமைக்குத் தான் முன் செய்த புண்ணியமே காரணம் என்று கூறி, நலங்கிள்ளி அவரிடம் முன்னையினும் பன்மடங்கு அதிக அன்பு கொண்டான். புலவருடன் பலகாலும் பழகித் தமிழ்க் கடலின் கரை கண்டான்; கவிகள் பல பாடும் வன்மை பெற்றுக் கவியரசாகவும் திகழ்ந்தான். புலவரும் நலங்கிள்ளியின் வள்ளன்மையையும் தமிழ்ப்பற்றினையும் பல பாடல்களால் புகழ்ந்து பாடி அவனுடன் இன்பமாக வாழ்ந்து வந்தார்.

வினு விடைகள்

1. அரசர்க்கு உரிய அருங்குணங்கள் யாவை?

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய இந்நான்கும் அரசர்க்கு உரிய அருங்குணங்களாகும்.

2. சோழன் நலங்கிள்ளியின் சிறப்பியல்புகள் யாவை?

சோழன் நலங்கிள்ளி அரசர்க்கு உரிய அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய அருங்குணங்கள் அமைந்தவன்; நல்லொழுக்கமும் புலவர் பாடும் புகழும் பெருமையும் பொருந்தியவன்; புலவர் தம் அருமை பெருமைகளை அறிந்து ஆதரவு அளிப்பவன்; புலவர்களிடம் பேரன்பு கொண்டு அவர் கூட்டுறவையே பெரிதும் விரும்புவதுடன் வீரம், நியாயம், தியாகம் முதலிய நற்குணங்களுக்கும் இருப்பிடமானவன்.

3. நலங்கிள்ளி கோவூர் கிழாரிடம் நட்புக்கொள்ளக் காரணம் என்ன?

தூய மனமும் தூய செயலும் நல்லினத்தாரோடு சேர்ந்து பழகுவதனாலேயே தோன்றுவனவாகும் என்பதை நன்கு உணர்ந்தான் நலங்கிள்ளி. ஆதலின் அருள் வடிவமான கோவூர்கிழாரின் புலமைத்திறத்தையும், உலகியலறிவையும் பலகாலும் கேள்வியுற்றமையால் அன்னார் கூட்டுறவும் அறிவுரைகளும் தனக்கு மிக்க நன்மை பயக்கும் என்று கருதியே கோவூர் கிழாரிடம் நட்புக்கொண்டான்.

4. கோவூர் கிழார் நலங்கிள்ளியின் எப்பண்புகளைப் பாராட்டினர்?

கோவூர் கிழார் நலங்கிள்ளியின் வீரம், நியாயம், தியாகம் முதலிய அருங்குணங்களைத் தம் பாடல்களால் புகழ்ந்து பாராட்டினர்.

5. நலங்கிள்ளி ஆவூர்க் கோட்டையை முற்றுகையிடக் காரணமென்ன?

சோழர் குலத்தில் பிறந்த நெடுங்கிள்ளிக்கும் இந் நலங்கிள்ளிக்கும் சோழநாட்டு அரசுரிமை காரணமாகப் பெரு வழக்குகள் நிகழ்ந்தன. அவை தீராமையால் பகைமை அதிகமாகிப் பல போர்கள் நடைபெற்றன. அப்போருக்கு ஆற்றுத நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டையுள் ஒளிந்திருந்தான். அக்கோட்டையையும் தன்னகப்படுத்தக் கருதியே நலங்கிள்ளி அதனை முற்றுகையிட்டான்.

6. ஆவூர் முற்றுகையால் ஏற்பட்ட துன்பங்கள் யாவை?

ஆவூர் முற்றுகை நீடித்தமையால் கோட்டையினுள் வாழ்பவர்க்கு நீரும் உணவும் போதிய அளவு கிடைக்கவில்லை. தமக்கு வேண்டிய ஏமப் பொருள்கள் சுருங்கியமையால் மக்கள் சொல்லொணாத் துயருற்றனர். யானைகளெல்லாம் குளத்திற் படிந்து நீராடாமலும் நெற்கவளம் முதலியன பெறுமலும் நிலத்திற் புரண்டு பெருமூச்சு விட்டுக்கொண்டு பேரிடிபோல் முழங்கின. பால் இல்லாமல் குழந்தைகள் அழுதன. மகளிர் மலர்களால் தங்கள் கூந்தலை அலங்கரித்துக் கொள்ளவில்லை. மக்கள் பருகும் நீருமின்றிக் கூக்குரலிட்டுக் கதறலாயினர். இவையே அம்முற்றுகையால் நேர்ந்த துன்பங்களாகும்.

7. கோவூர் கிழார் நெடுங்கிள்ளிக்குக் கூறிய அறிவுரை யாது?

(விடை பாடவிளக்கம் பத்தி 4 காண்க.)

8. நலங்கிள்ளி இளந்தத்தன் என்ற புலவரைக் கொல்ல முற்பட்டமைக்குக் காரணம் யாது? கோவூர் கிழார் அப்புலவரை எங்ஙனம் காத்தனர்?

நலங்கிள்ளி ஆவூர்க் கோட்டையைக் கைப்பற்றி அங்கு வாழ்ந்து வரும்போது இளந்தத்தன் என்னும் புலவர் அவனைப் பாடிப் பரிசில் பல பெற்றார். அவர் நெடுங்கிள்ளியிடமும் பரிசுபெற விரும்பி உறையூரை அடைந்தார். நெடுங்கிள்ளி அவரைப் புலவரென்று கருதாது நலங்கிள்ளியிடமிருந்து தம் நாட்டு இரகசியங்களை அறிய வந்த ஒற்றனென்று கருதிக் கொல்லத் துணிந்தனன்.

கோவூர் கிழார், நெடுங்கிள்ளி புலவரை ஒற்றன் என்று தவருக எண்ணிக் கொல்லத் துணிந்தமை அறிந்து அவனை அத்தீமையிலிருந்து காக்க விரைந்து அவனை அடைந்தார். "புலவர்கள் வஞ்சம் கலவாத வாழ்க்கையுடையவர்கள். பரிசு வழங்குவோர் யாவரேயாயினும், எங்

இருப்பினும் பழுத்த மரத்தைத் தேடிக்கொண்டு செல்லும் பறவை போல அவரை நாடிச்சென்று பரிசு பெறுவர். அத்தகைய புலவர்களில் ஒருவரே இவர். இவர் சிறிதும் வஞ்சனையில்லாதவர். உனக்கும் நலங்கிள்ளிக்கும் உள்ள பகைமை இவருக்குத் தெரியாது. இவரை ஒற்றன் என்று தவருகக் கருதிக் கொல்ல முற்பட்டது பெரும்பாவச் செயலாகும்'' என்று அவனுக்கு எடுத்துக் கூறினர். புலவர் உரைகேட்ட நெடுங்கிள்ளி தன் தவறுணர்ந்து சமயத்தில் வந்து தன்னைப் பெரும்பாவத்திலிருந்து காத்த கோவூர் கிழாருக்கு நன்றி கூறி, இளந்தத்தரை விடுதலை செய்தான்.

9. புலவர் இயல்பைப் பற்றிக் கோவூர் கிழார் கூறியது யாது ?

'பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைகள் நெடுந்தூரம் பறந்து சென்று தாம் விரும்பியவற்றை அடைவது போலப் புலவர்களும் கடத்தற்கரிய வழிகளைக் கடந்து, நெடுந்தூரம் சென்று வள்ளல்களிடம் தாம் விரும்பிய பரிசு பெற்று மீள்வர்; பொருளில் பற்றின்றிப் பிறர்க்குப் கொடுத்தும், சொற்போரில் மற்றைப் புலவர்களை வென்றும் பெருமையாக வாழ்வர்; இங்ஙனமின்றிப் பிறர்க்குத் தீங்கு புரிவதை ஒரு பொழுதும் அறியார்; புவியரசர்களைப்போன்று கவியரசராகத் திகழ்வர்' என்று புலவர் இயல்பைக் கோவூர் கிழார் நெடுங்கிள்ளிக்கு அறிவுறுத்தினர்.

10. கோவூர் கிழார் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் எவ்வாறு ஒற்றுமை உண்டாக்கினர் ?

ஆவூரைக் கைப்பற்றியிருந்த நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி வாழ்ந்து வந்த உறையூரை முற்றுகையிட்டான். ஒரு குடியில் பிறந்த இருவரும் தம்முள் மாறுபட்டு நிற்றலை உணர்ந்த கோவூர் கிழார் அவர்களிடம் சென்று ''அரசர்களே ! பகைத்து நிற்கும் நீவிர் இருவிரும் ஆத்திமாலையை அணிந்த சோழர் குடியில் தோன்றியவர்களே. நீவிர் பனம்பூ மாலையை அணிந்த சேரர் குடியிலும், வேப்பமாலையை அணிந்த பாண்டியர் மரபிலும் தோன்றவில்லையாதலால் உம்மிருவருள் எவர் தோற்பினும் தோற்பது சோழர் குடியேயாகும். இருவரும் வெற்றி பெறுதல் இயலாது. ஆதலின் உங்கள் செயல் உங்கள் குலத்திற்கே வடுவுண்டாக்குவதுடன் பகைவர் எள்ளி நகையாடுதற்கும் இடமாக உள்ளது. ஆதலின் போர் புரிதல் தக்கதன்று'' என்று அறிவுரை கூறினர். அது பசுமரத்தாணி போல் இருவர் மனத்திலும் பதியவே, இருவரும் செற்றம் நீக்கி ஒற்றுமையாய் வாழத்தலைப்பட்டனர். இங்ஙனம் இருவேந்தரையும் ஒற்றுமைப் படுத்தினர் கோவூர் கிழார்.

11. கோவூர் கிழாரின் வாக்குச் சாதுரியத்தைச் சான்று காட்டி விளக்குக.

(நெடுங்கிள்ளியிடமிருந்து இளந்தத்தரை விடுவிக்கக் கூறிய அறிவுரையையேனும், நலங்கிள்ளியையும் நெடுங்கிள்ளியையும் ஒற்றுமைப்

படுத்தக்கூறிய அறிவுரையையேனும் இதற்கு உதாரணமாகக் கொள்க). (விடை : 9, 10)

12. நலங்கிள்ளி கோவூர் கிழாரின் பெருமையை உணர்ந்து அவரை எங்ஙனம் போற்றினன்? அதனால் அவன் பெற்ற நன்மை யாது?

நலங்கிள்ளி புலவரின் பெருங்குணத்தையும், பிறர்க்கென வாழும் பெருந்தகைமையையும், வேந்தரிடமும் அஞ்சாது அறிவுரை கூறும் ஆற்றலையும் அறிந்து 'இத்தகைய பெரியோர் நட்பு தனக்குக் கிடைத்தமை முன்செய்த புண்ணியப் பயனே' என்று போற்றிப் புகழ்ந்தான். அதுமுதல் புலவருடன் இடையருது பழகிப் பன்மடங்கு முன்னிலும் அன்பு கொண்டான்.

இவ்வாறு புலவருடன் பழகியமையால் நலங்கிள்ளி புலவர் நட்பாகிய தெப்பத்தின் உதவிகொண்டு தமிழ்க் கடலின் கரை கண்டான்; அமிழ்தினும் இனிய தமிழ்க் கவிகள் புனையும் ஆற்றல் பெற்றான்; புவியரசாக இருப்பதோடு கவியரசாகவும் விளங்கினன்; கோவூர் கிழாராலும் புலவாறு புகழ்ந்து பாடப்பெறும் பேறு பெற்றான்.

13. பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகள் போல—இவ்வுவமை எக்கருத்தை விளக்க வந்தது?

பழுத்த மரங்கள் நெடுந்தூரத்தில் இருப்பினும் பறவைகள் அங்குச் சென்று தமக்கு உரிய உணவாகிய அக்கனிகளை உண்டு களிப்புடன் வாழும்; அதுபோல் பாடிப் பரிசில் பெறும் புலவர்களும் வள்ளல்கள் நெடுந் தொலைவில் இருப்பினும் அவர்களிடம் பரிசில் பெறக்கருதிக் கடத்தற்கு அரிய காடுகளையும் கடந்து சென்று, பரிசில் பெறுவர் என்பதனை விளக்க இவ்வுவமை வந்துள்ளது.

14. கோவூர் கிழாரின் குண நலன்கள் யாவை?

கோவூர் கிழார் செந்தமிழ் நூல்களைச் சிறப்புறக் கற்றுக் கற்றவழி நிற்கும் பெருமை வாய்ந்தவர்; உலகியல் அறிவும் உயர்குணமும் உடையவர்; அரசர்க்கும் அஞ்சாது அறிவுரை கூறும் ஆண்மை மிக்கவர்; ஆருயிர் அனைத்திடமும் அருட்குணம் அமைந்தவர்; மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதி அத்துன்பத்தைப் போக்க முயல்பவர். தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் தன்மை வாய்ந்தவர்.

இலக்கணம்

I. இன்றியமையாத இலக்கணக் குறிப்புக்கள்

1. வட சொல் தமிழில் வரும் போது அடையும் மாறுபாடுகள்

i ஜ என்ற எழுத்து தமிழில் வரும் போது மொழிக்கு முதலில் ச ஆகவும், இடையில் ச அல்லது ய ஆகவும் திரியும்.

(உ—ம்) ஜயம்—சயம், விஜயம்—விசயம், பங்கஜம்—பங்கயம்.

ii ஷ என்ற எழுத்து மொழிக்கு முதலில் ச ஆகவும், மொழிக்கு இடையில் ட ஆகவும் திரியும்.

(உ—ம்) ஷண்முகம்—சண்முகம், விஷம்—விடம்.

iii ஸ என்ற எழுத்து மொழிக்கு முதலில் ச ஆகவும், இடையில் ச அல்லது த ஆகவும் திரியும்.

(உ—ம்) ஸர்ப்பம்—சர்ப்பம், மாஸம்—மாசம், மாதம்.

iv ஹ என்ற எழுத்து மொழிக்கு முதலில் அ ஆகவும், மொழிக்கு இடையில் க ஆகவும் திரியும்.

(உ—ம்) ஹரன்—அரன், தேஹம்—தேகம்,

v க்ஷ என்ற எழுத்து மொழிக்கு முதலில் க ஆகவும், மொழிக்கு இடையில் க்க அல்லது ட்ச ஆகவும் திரியும்.

(உ—ம்) க்ஷணம்—கணம், பக்ஷம்—பக்கம், பட்சம்.

vi ஆ என்று முடியும் வட சொற்கள் தமிழில் ஐ என்று முடிவு பெறும்.

(உ—ம்) மாலா—மாலை

vii 'ஈ' என்று முடியும் வட சொற்கள் தமிழில் இ என்று முடிவு பெறும்.

(உ—ம்) லக்ஷ்மீ—இலட்சுமி.

viii தற்சமம் :—வட சொல் சிறிதும் வேறுபாடு இல்லாமல் தமிழில் வந்து வழங்குவது.

(உ—ம்) கமலம், காரியம்.

ix தற்பவம் :—வடசொல் தமிழுக்கேற்ப மாறுபட்டுத் தமிழில் வழங்குவது.

(உ-ம்) விஷம்—விடம். ஹரி—அரி.

நாவை அடக்குதல் நோவை ஒழிக்கும்

2. தத்திதாந்த நாமம் :

வட சொல் சிறிது வேறுபட்டு அதனோடு சம்பந்த முடைய பொருளுக்குப் பெயராகி வருவது.

(உ - ம்) தாசரதி: தசரதன் என்பது 'தாசரதி' எனத் திரிந்து தசரதன் மகனாகிய இராமனைக் குறித்து வந்தது.

3. உபலட்சணம் :

ஒரு சொல் அதனுடைய பொருளுடன் அதற்கு இனமான பொருள்களையும் குறித்து வருவது.

(உ - ம்) (1) சோறுண்டான் : இது சோற்றை மட்டுமே குறிக்காமல் அதன் இனமாகிய காய் கறி முதலியவற்றையும் குறிப்பது காண்க.

(2) வன் மருங்குல் வாளரக்கியர் : வாள் என்ற படை ஏனைய ஆயுதங்களையும் குறித்தல் காண்க. (கம்ப. 1)

3. அருந்து மெல்லடகு ஆரிட அருந்தும் : அடகு என்பது ஏனைய காய், கனி, கிழங்குகளையும் குறித்தல் காண்க. (கம்ப. 8)

4. இலக்கணை :

ஒரு பொருளுக்குரிய இலக்கணத்தை மற்றொரு பொருளுக்குத் தந்து (ஏற்றி) உரைப்பது. அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும்.

(உ - ம்) (1) சென்றது கொல் நேர் மருங்கில் கையூன்றி மாறற்கு உழந்து பின் சென்ற என் நெஞ்சு—என்ற இடத்து நெஞ்சைக் குறிக்கும் போது இடுப்பில் கையூன்றி வருந்திய நெஞ்சம் என்று குறிக்கப்பட்டுள்ளது. நெஞ்சத்திற்கு இடையும், கையும், ஊன்றுதலும் ஆகியன இவை இல்லாதவை அதற்குத் தந்துரைக்கப்பட்டுள்ளது. ஆதலின் இது விட்ட இலக்கணையாம்.

(2) கங்கையின் கண் இடைச்சேரி : கங்கைக் கரையில் இடைச்சேரி உள்ளது. அங்ஙனம் இருக்கும் அதனைக் கங்கையில் இடைச்சேரி என்று கூறியது விடாத இலக்கணை.

(3) இருள் பருகிப் பகல் கான்று எழுதரும் பரிதி—என்றவிடத்து பருகுதலும், கக்குதலுமாகிய தொழில்கள் சூரியனுக்கு இல்லை : இருளைப் போக்குதலும், பகலைத் தருதலுமாகிய தொழில்கள் பரிதிக்கு உண்டு. இங்ஙனம் உள்ளதும் இல்லாததுமாகிய இயல்புகளைச் சூரியனுக்கு ஏற்றிக் கூறியமையால் இது விட்டும் விடாத இலக்கணை.

5. வழுவமைதிகள் :

தவறான சொற்களை ஒரு பொருள் கருதிச் சரியெனக் கொண்டு அமைப்பது வழுவமைதியாம். அது திணை வழுவமைதி, பால் வழு

வமைதி, எண் வழுவமைதி, இட வழுவமைதி. கால வழுவமைதி, மரபு வழுவமைதி, எனப் பலவகைப்படும்.

(உ - ம்) 1. திங்களும் சான்றோரும் ஒப்பர் — சிறப்புக்கருதி அஃறிணையும் (திங்கள்) உயர்திணையும் (சான்றோர்) இணைந்து ஒப்பர் என்ற உயர்திணை முடிவைக் கொண்டன. (திணைவழுவமைதி)

2. மனைவியும்தானும் வந்தான். (பால் வழுவமைதி)

6. தன்வினை :

கருத்தா தானே செய்யும் தொழிலைத் தெரிவிக்கும் வினைச்சொல் தன்வினையாம்.

(உ - ம்) செய்தான், உண்டான்.

7. பிறவினை :

கருத்தா பிறரைக் கொண்டு செய்விக்கும் தொழிலைத் தெரிவிக்கும் வினைச்சொல் பிறவினையாம். தன்வினைப் பகுதியோடு வி, பி, சேர்த்தால் பிறவினையாம். கு, சு, டு, து, பு, று என்ற வல்லின உகரங்களைத் தன் வினைப் பகுதியோடு சேர்த்தாலும், தன்வினைப் பகுதியின் இடையில் மெல்லின மிருந்தால் அதை வல்லினமாக மாற்றினாலும் அவை பிறவினை களாக மாறும்.

(உ - ம்)	செய்தான்	— செய்வித்தான்	(செய்வி)
	உண்டான்	— உண்பித்தான்	(உண்பி)
	போனான்	— போக்கினான்	(போக்கு)
	கலங்கினான்	— கலக்கினான்	(கலக்கு)

8. செய்வினை :

கருத்தா செய்யும் தொழிலை நேராகத் தெரிவிக்கும் வினை செய்வினையாம்.

(உ - ம்) இராமன் பாடம் படித்தான்.
தச்சன் பெட்டி செய்தான்.

9. செயப்பாட்டு வினை :

கருத்தா செய்யும் தொழிலைச் செயப்படுபொருள் மேலேற்றிச் செயப் படு பொருளை எழுவாயாக்கி உரைக்கும் வினை செயப்பாட்டு வினையாம்.

(உ - ம்) பாடம் இராமனால் படிக்கப்பட்டது.
பெட்டி தச்சனால் செய்யப்பட்டது.

(குறிப்பு: செய்வினையில் கருத்தாவே எழுவாயாக இருக்கும். செயப்பாட்டு வினையில் செயப்படுபொருள் எழுவாயாகவும், செய்வினைக் கருத்தா மூன்றாம் வேற்றுமைக் கருத்தாவாகவும் வரும். பயனிலையோடு படு என்பது சேர்ந்து எழுவாய்க்கு ஏற்ப உயர்திணையாகவோ அஃறிணையாகவோ வரும்.)

10. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று :

தன்மையிடத்தோடு முன்னிலை இடமும், படர்க்கை இடமும், முன்னிலை படர்க்கை இடங்களும் கலந்து தன்மைப் பன்மை வினைமுற்று விகுதியைக் கொண்டு முடியும் வினைமுற்றாம்.

அம், ஆம் என்பன முன்னிலை இடத்தை மட்டும் தன்மையோடு உளப்படுத்த விகுதிகளாக வரும்.

எம், ஏம், ஓம் என்பன படர்க்கை இடத்தைத் தன்மையோடு உளப்படுத்த விகுதிகளாக வரும்.

கும், டும், தும், றும் என்பன முன்னிலையையும் படர்க்கையையும் தன்மையோடு உளப்படுத்த விகுதிகளாக வரும்.

(உ - ம்) 1. நானும் நீயும் உண்டனம்
நானும் நீயும் உண்டாம்

2. நானும் அவனும் செய்தனெம்
நானும் அவனும் படித்தேம்
நானும் அவனும் கண்டோம்

3. நானும் நீயும் அவனும் உண்கும்
நானும் நீயும் அவனும் உண்டும்
நானும் நீயும் அவனும் வருதும்
நானும் நீயும் அவனும் சேறும்

11. உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று :

இது முன்னிலையோடு படர்க்கையிடம் கலந்து வந்து முன்னிலைப் பன்மை வினைமுற்றைக் கொண்டு முடிவதாம். இர், ஈர், மின், உம் என்பன விகுதிகளாக வரும்.

(உ - ம்) நீயும் அவனும் செய்தனிர் (செய்தீர்; செய்யும்; செய்மின்)

12. ஏவலுக்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு :

ஏவல்	வியங்கோள்
1. முன்னிலையில் மட்டும் வரும்.	1. ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.
2. ஒருமை பன்மையில் வேறுபடும்.	2. ஒருமை, பன்மையில் ஒரே விதமாக இருக்கும்.
3. கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்.	3. வாழ்த்துதல், வைதல், வேண்டிக் கோடல், கட்டளை முதலிய பல பொருள்களை உணர்த்தி வரும்.

13. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயர்க்கும் வேறுபாடு :

தொழிற் பெயர்	வினையாலணையும் பெயர்
1. தொழிலுக்குப் பெயராகி வரும்.	1. தொழிலையுடைய பொருளுக்குப் பெயராகி வரும்.
2. படர்க்கை இடத்தில் மட்டுமே வரும்.	2. ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.
3. பெரும்பாலும் காலம் காட்டாது.	3. மூன்றுகாலங்களையும் காட்டி வரும்.

14. ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு :

ஆகுபெயர்	அன்மொழித் தொகை
1. பெரும்பாலும் தனிச் சொல்லில் வரும்.	1. தொடர் மொழியிலேயே வரும்.
2. தன்னுடன் சம்பந்தப்பட்ட பொருளுக்கே பெயராக வரும்.	2. எந்தப் பொருளிலும் வரும்.
3. தொன்று தொட்ட வழக்குடையது.	3. அந்நியதி இதற்கு இல்லை.

15. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக் கிளவிக்கும் வேறுபாடு:

அடுக்குத்தொடர்	இரட்டைக் கிளவி
1. ஒருசொல் பலமுறை அடுக்கி வரும். இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கும்.	1. இரட்டைச் சொல்லாகவே வரும். இலை இரட்டை போல ஒரே ஒலி இரண்டு சொல் போல வழங்கி வரும்.
2. வினைகளுக்கு அடைமொழியாகி அவற்றைச் சிறப்பிக்க வரும்.	2. வினைகளைச் சிறப்பித்து வராமல் விரைவு, மிகுதி, துணிவு முதலிய பல பொருள்களை உணர்த்தி வரும்.
3. அடுக்குத் தொடரில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் தனித் தனியே பிரித்தால் ஒவ்வொன்றும் பொருள் தரும்.	3. இரட்டைக் கிளவியில் உள்ள சொற்களைப் பிரிக்க முடியாது. பிரித்தால் பொருள் தராது.

புணர்ச்சி இலக்கணம்

1. இயல்புப் புணர்ச்சி:

1. விளி எழுத்துக்களை ஈற்றிலுடைய சொற்களின் முன்னும், விளிப்பெயர்களின் முன்னும் வல்லினம் வரின் இயல்பாகப் புணரும்.

(உ - ம்) இராமனு பெற்றான். இராமா செல்க.

2. பொதுப் பெயர், உயர்திணைப் பெயர்களின் ஈற்றில் உள்ள மெய் எழுத்து வல்லினம் வரின் இயல்பாகப் புணரும். உயிரெழுத்துக்களையும் ய், ர் என்ற எழுத்துக்களையும் ஈற்றிலே கொண்ட பொதுப் பெயர், உயர்திணைப் பெயர்களின் முன்னும் வல்லினம் வரின் இயல்பாம்.

உயர்திணைப் பெயர்கள் சில சமயங்களில் விகார மடைதலும் உண்டு.

(உ - ம்) சாத்தன் கை, அவன் படித்தான், நம்பி பெரியன், ஆய் பெரியன், அவர் சிறியர், கம்பராமாயணம்.

3. உயிரெழுத்துக்களையும், ய், ர், ழ் என்ற எழுத்துக்களையும் ஈற்றிலுடைய சொற்களுக்கு முன் வல்லினம் வரின் இயல்பாகும்.

(உ - ம்)	உண்டனை	தேவா.
	எய்	சாத்தா
	ஈர்	கண்ணா
	வாழ்	கொற்றா.

4. இடைச் சொற்களாகிய ஏகார, ஓகாரங்கட்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

(உ - ம்) அவனே செய்வான்; இராமனே சென்றான்.

5. செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம், அகர ஈற்றுப் பெயரெச்சம், வினைமுற்றுக்கள், ஆறும் வேற்றுமை உருபு, அஃறிணைப் பன்மைப் பெயர், அம்ம என்னும் இடைச் சொல் ஆகியவற்றின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்.

(உ - ம்) உண்ணிய கொண்டான்; வந்த செய்தி; வந்தன குதிரைகள்; தன கைகள்; அவனுடைய பெயர்; பல பாடங்கள்; அம்ம கேட்டி.

6. உகர ஈற்று மூன்றும் வேற்றுமை உருபு, எண்ணுப் பெயர்கள், வினைத்தொகை, சுட்டுப்பெயர்கள் இவைகளின் முன் வல்லினம் வரின் இயல்பாம்.

(உ - ம்) இராமனொடு சென்றார்; அவனது கை,

ஒரு பையன்; இருசெவி; அறுகுணம்; எழுபுதல்வர்.

அடுகளிறு; அது பெரிது.

7. வன்றொடரல்லாத மற்றைய குற்றியலுகரங்களுக்கு முன் வரும் வல்லினம் பெரும்பாலும் இயல்பாம்.

(உ - ம்) காது சிறியது; கயிறு பெரிது; பந்து பெரியது; வீழ்து சிறியது; எஃகு பெரிது.

2. விகாரப் புணர்ச்சி

1, சுட்டு வினாப் புணர்ச்சி :

எ என்னும் வினா இடைச்சொல், அ இ உ என்னும் சுட்டிடைச் சொற்கள் ஆகிய இவற்றின் முன், உயிரெழுத்துக்களையும் யகர மெய்யையும் முதலாக உடைய சொல் வந்தால் வ் என்ற எழுத்து இடையில் தோன்றும்; ஏனைய மெய்யெழுத்துக்கள் வந்தால் வந்த மெய் எழுத்தே இடையில் மிகும்; செய்யுளில் சுட்டெழுத்து நீண்டுவந்தால் ய் என்ற எழுத்து இடையில் தோன்றும்.

(உ - ம்) எ + அணி = எவ்வணி; எ + யானை = எவ் யானை; எ + குதிரை = எக்குதிரை.

அவ்வணில், அவ்யாண்டு, அப்பையன், ஆயிடை.

2. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி :

(i) ஒன்று என்ற சொல் வருமொழியோடு புணரும்பொழுது ஈற்று உயிர்மெய் ஆகிய 'று' கெட்டு, முதல் நீண்டு, இடையில் உள்ள 'ன்' 'ர்' ஆக மாறும்; முதல் நீளாமல் 'ர்' என்பதனோடு உகரம் சேர்ந்து வருதலும் உண்டு.

(உ - ம்) ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்.
ஒன்று + வீடு = ஒரு வீடு.

(ii) இரண்டு என்ற சொல் ஈற்று உயிர்மெய் கெட்டு, ஆதி நீண்டு, 'ண்' என்ற மெய்யும், 'ர்' என்பதில் உள்ள அகரமும் கெடும்; ஆதி நீளாமல் 'ர்' என்பதனோடு உகரம் பெற்று வருதலும் உண்டு.

(உ - ம்) இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்
இரண்டு + கைகள் = இருகைகள்.

(iii) மூன்று என்னும் சொல் ஈற்று உயிர் மெய்யும் இடையில் உள்ள 'ன்' என்பதும் கெட்டுப் புணரும், 'மூ' என்னும் முதல் எழுத்து 'மு' என்று குறுகுதலும் உண்டு.

(உ - ம்) மூன்று + உலகு = மூவுலகு
மூன்று + மதம் = மும்மதம்.

(iv) நான்கு என்னும் சொல் ஈற்று உயிர் மெய் கெட்டு இடையில் உள்ள 'ன்' என்ற எழுத்து 'ல்' ஆகவும், 'ற்' ஆகவும் திரியும்.

(உ - ம்) நான்கு + வகை = நால்வகை
நான்கு + படை = நாற்படை.

(v) ஐந்து என்னும் சொல் ஈற்று உயிர்மெய் கெட்டு இடையில் உள்ள 'ந்' என்ற எழுத்து வருகின்ற மெய்யெழுத்து ஆகியும், அதற்கு இனமான மெய்யெழுத்தாகியும், கெட்டும் புணரும்.

(உ - ம்) ஐந்து + மூன்று = ஐம்மூன்று
ஐந்து + பொறி = ஐம்பொறி
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்.

(vi) ஆறு என்னும் சொல் முதல் குறுகிப் புணரும்.

(உ - ம்) ஆறு + தொழில் = அறுதொழில்.

(vii) ஏழு என்னும் சொல் முதல் குறுகும் அல்லது ஈற்றிலுள்ள உயிர்கெடும்.

(உ - ம்) ஏழு + பிறவி = எழுபிறவி
ஏழு + உலகம் = ஏழுலகம்.

(viii) எட்டு என்னும் சொல் ஈற்று உயிர் மெய் கெட்டு இடையில் உள்ள 'ட்' 'ண்' ஆகத் திரியும்.

(உ - ம்) எட்டு + குணம் = எண்குணம்.

(ix) ஒன்பது என்னும் சொல் பத்து என்னும் சொல்லோடும் நூறு என்னும் சொல்லோடும் சேரும்பொழுது பத்து என்னும் சொல் நூறு என்றும், நூறு என்ற சொல் ஆயிரம் என்றும் மாறும். நிலைமொழியில் உள்ள 'ஒ' 'தொ' எனத் திரியும். ஒன்பது என்பதில் உள்ள 'பது' கெடும். 'ன்' நூறு என்பதனுடன் சேருகையில் 'ண்' ஆகவும் ஆயிரம் என்பதனுடன் சேருகையில் 'ள்' ஆகவும் திரியும்.

(உ - ம்) ஒன்பது × பத்து = தொண்ணூறு
ஒன்பது × நூறு = தொள்ளாயிரம்.

(x) பத்து என்னும் சொல் ஒன்று, பத்து, ஆயிரம், கோடி என்னும் எண்ணுப் பெயர்களும் பிறபெயர்களும் வந்து புணரும்போது ஈற்று உயிர் மெய் கெட்டு இன் சாரியையேனும் இற்றுச் சாரியையேனும் பெறும். இரண்டு என்னும் சொல் வரும்பொழுது ஈற்று உயிர்மெய் கெட்டு 'த்' 'ன்' ஆகத் திரியும்.

(உ - ம்) பதினொன்று, பதிற்றுப் பத்து, பதினாயிரம், பதிற்றுக் கோடி, பன்னிரண்டு.

xi. ஒன்பது நீங்கலாக ஒன்று முதல் பத்து ஈறாக உள்ள எண்ணுப் பெயர்களுக்குமுன் அந்த எண்ணுப் பெயர்களே வந்து புணரும்போது நிலைமொழியின் முதலெழுத்து மாத்திரம் நிற்க மற்றைய எழுத்துக்கள் எல்லாம் கெடும். வருமொழி உயிர் முதலாயின் இடையில் 'வ்' தோன்றும். மெய்முதலாயின் வந்த மெய்யெழுத்தே இடையில் தோன்றும்.

(உ - ம்) ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று, மூன்று + மூன்று = மும்மூன்று.

3. திசைச் சொல் புணர்ச்சி :

திசைச் சொற்களோடு திசைச் சொற்களும் பிற சொற்களும் சேரும் பொழுது நிலைமொழி ஈற்று உயிர் மெய்யும், 'க்' என்ற மெய்யெழுத்தும் கெடும். 'ற்' என்ற எழுத்து 'ல்' ஆகவும், 'ன்' ஆகவும் திரியும்.

(உ – ம்) வடக்கு + கிழக்கு = வடகிழக்கு; தெற்கு + மேற்கு = தென்மேற்கு; மேற்கு + நாடு = மேல் நாடு.

4. இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி :

இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வருமொழி முதலில் வரும் வல்லினம் மிகாது. விரியாயின் மிகும்.

(உ – ம்) நீர் குடித்தான் (தொகை); நீரைக் குடித்தான் (விரி)

5. தீர்க்க சந்தி :

அ ஆ முன் அ ஆ வரின் இரண்டும் கெட 'ஆ' காரமும், இ ஈ முன் இ ஈ வர இரண்டும் கெட ஈ காரமும், உ ஊ முன் உ ஊ வரின் இரண்டும் கெட 'ஊ' காரமும் வருவது தீர்க்க சந்தியாம்.

(உ - ம்) ராம + அயனம் = ராமாயணம்; கௌரீ + ஈசன் = கௌரீசன்; குரு + உபதேசம் = குருபதேசம்.

6. குணசந்தி :

அ ஆ முன் இ ஈ வரின் இரண்டும் கெட 'ஏ' காரமும், அ ஆ முன் உ ஊ வரின் இரண்டும் கெட 'ஓ' காரமும் வருவது குணசந்தியாம்.

(உ - ம்) மகா + ஈசன் = மகேசன்; குசேல + உபாக்கியானம் = குசேலோ பாக்கியானம்.

7. விருத்திசந்தி :

அ ஆ முன் எ ஏ வரின் இரண்டும் கெட 'ஐ' காரமும், அ ஆ முன் ஒ ஓ வரின் இரண்டும் கெட 'ஔ' காரமும் வருவது விருத்தி சந்தியாம்.

(உ - ம்) லோக + ஏகம் = லோகைகம்; பரம + ஒஷதி = பரமௌஷதி.

III யாப்பிலக்கணம்

1. சீர் :

சீர் ஓரசைச் சீர், ஈரசைச் சீர், மூவசைச் சீர், நாலசைச் சீர் என நான்கு வகைப்படும்.

ஓரசைச் சீர், நேரசைச் சீர், நிரையசைச் சீர் என இரண்டு வகைப்படும். (நேர்—நாள்; நிரை—மலர்.)

ஈரசைச் சீர், மாச்சீர், விளச்சீர் என இருவகைப்படும். (மாச்சீர்—தேமா, புளிமா; விளச்சீர்—கருவிளம், கூவிளம்.)

மூவசைச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் என இருவகைப்படும். (காய்ச்சீர்-தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய்; கனிச்சீர்-தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி.)

நாலசைச்சீர் செய்யுட்களில் சிறுபான்மையே வரும். (தேமாந் தண்பூ, தேமாந்தண்ணிழல் முதலியன.)

2. தளை :

i மாமுன் நேர் (நேர் முன் நேர்) வருவது நேரொன்றாசிரியத்தளை.

ii விள முன் நிரை (நிரை முன் நிரை) வருவது நிரையொன்றாசிரியத்தளை.

iii மாமுன் நிரையும் (நேர் முன் நிரையும்) விள முன் நேரும் (நிரை முன் நேரும்) வருவன இயற்சீர் வெண்டளையாம்.

iv காய் முன் நேர் (மூவசைச்சீரில் நேர் முன் நேர்) வருவது வெண்சீர் வெண்டளையாம்.

v காய் முன் நிரை (மூவசைச் சீரில் நேர் முன் நிரை) வருவது கலித்தளை.

vi கனி முன் நிரை (மூவசைச் சீரில் நிரைமுன் நிரை) வருவது ஒன்றிய வஞ்சித்தளையாம்.

vii கனி முன் நேர் (மூவசைச் சீரில் நிரை முன் நேர்) வருவது ஒன்று வஞ்சித்தளையாம்.

குறிப்பு : முதல் இரண்டு தளைகள் ஆசிரியப்பாவிற்கும், மூன்று நான்காம் தளைகள் வெண்பாவிற்கும், ஐந்தாம் தளை கலிப்பாவிற்கும், ஆறு ஏழாம்தளைகள் வஞ்சிப்பாவிற்கும் உரியனவாம்.

(உ - ம்) (சிலப்பதிகார வினு விடையில் காண்க.)

மோனை எதுகை வகைகள் :

மோனை எதுகை வகைகள் யாவும் நாற்சீர்களைக் கொண்ட அடிகளை உடைய பாக்களுக்கே கூறப்படும்.

(i) 1, 2 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே இணை மோனை இணை எதுகை எனப்படும்.

(ii) 1, 3 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே பொழிப்பு மோனை, பொழிப்பெதுகை எனப்படும்.

(iii) 1, 2, 3 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே கூழை மோனை, கூழை எதுகை எனப்படும்.

(iv) 1, 4 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே ஒரூஉ மோனை, ஒரூஉ எதுகை எனப்படும்.

(v) 1, 3, 4 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே மேற்கதுவாய் மோனை, மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

(vi) 1, 2, 4 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே கீழ்க்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

(vii) 1, 2, 3, 4 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே முற்று மோனை, முற்றெதுகை எனப்படும்.

(உ - ம்) அணிபூண் அணிந்த யானை இயல்தேர் - இணைமோனை.
வருந்த வேண்டா வாழ்கவன் றேளே - பொழிப்புமோனை.
பலநாள் பயின்று பலரொடும் செல்லினும் - கூழை மோனை.

கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டருஞ்சீர். ஒரூஉ எதுகை.

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ்— கீழ்க்கதுவாய்.

காதலி கண்ட கனவு கருநெடுங்கண்—முற்று மோனை.

குறிப்பு : இவ்வாறே பிறவும் காண்க.

பா இலக்கணம்

1. வெண்பா - (i) அடிக்கு நான்கு சீர்களையுடையதாய் இருத்தல்,
(ii) ஈற்றடி முச்சீராய் இருத்தல்,
(iii) ஈற்றுச்சீர் நேரசை, நிரையசை நேர்பு, நிரைபு அசைகளில் ஒன்றாய் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாடுகளில் முடிதல்.
(iv) இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை பிழையாமல் இருத்தல்
(v) ஒரே எதுகையுடனும் பல எதுகைகளுடனும் வருதல்

ஆகிய இலக்கணங்களையுடையதாய் வருவதே வெண்பாவாம்.

வெண்பாவின் வகைகள் :

(i) குறள் வெண்பா—இரண்டடிகளை உடையது.
(ii) சிந்தியல் வெண்பா—மூன்றடிகளையுடையது.
(iii) நேரிசை வெண்பா } நான்கடிகளை
(vi) இன்னிசை வெண்பா } யுடையது.
(v) பஃறொடை வெண்பா 5 முதல் 12 அடிகள் வரை உடையது.

நேரிசை வெண்பாவுக்கும் இன்னிசை வெண்பாவுக்கும் வேறுபாடுகள்.

நேரிசை வெண்பா நான்கடிகளும் ஓர் எதுகையாக வேனும், முதலிரண்டடியும், பின் இரண்டடிகளும் வெவ்வேறு எதுகைகளாக வேனும்வரும். இரண்டாமடியின் நான்காம் சீர் முதலிரண்டடிகளின் எதுகையை உடைய தனிச் சொல்லாக வரும்.

இன்னிசை வெண்பா நான்கடியும் ஓர் எதுகையாய்த் தனிச்சொல் இன்றியும், இரண்டாம் அடியில் தனிச் சொல் பெற்று இரண்டுக்கு மேற்பட்ட எதுகைகளுடனும், மூன்றாமடியில் தனிச்சொல் பெற்றும் வரும்.

(உ - ம்) நேரிசை வெண்பா :- காதலி கண்ட கனவு (சிலப்பதிகாரச் செய்யுள்)

இன்னிசை வெண்பா :

துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுறயார் மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

தனிச் சொல் இன்றி நான்கடியும் ஒரெதுகையாய் வந்தமை காண்க.

ஆசிரியப்பா : (i) நான்கு சீர்களைக் கொண்ட அடிகளைப் பெற்று வருதல்.

(ii) கீழெல்லை மூன்றடிக்குக் குறைந்து வாராமை. மேலெல்லை பாடுவோர் கருத்துப்படி எத்தனை அடிகள் வேண்டுமானாலும் இருக்கலாம்.

(iii) பெரும்பாலும் நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத்தளையும் வருதல், (சிறுபான்மை பிறவும் கலந்து வருதல்) ஆகிய இலக்கணங்களையுடையதே ஆசிரியப்பாவாம்.

கட்டளைக் கலித்துறை :—ஐந்து சீர்களைக் கொண்ட நான்கு அடிகளைப் பெற்று வரும். அடிதோறும் முதற்சீர் நான்கும் இயற்சீர் வெண்டளையாகவேனும், வெண்சீர் வெண்டளையாகவேனும் வரும். இறுதிச் சீர் விளங்காய்ச் சீர்களில் ஒன்றாக வரும். நேரசையில் தொடங்கும் அடி மெய்யெழுத்துக்களை நீக்கிப் பதினாறு எழுத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும். நிரையசையில் தொடங்கும் அடி மெய்யெழுத்துக்கள் நீக்கிப் பதினேழு எழுத்துக்களை உடையதாக இருக்கும். 1, 3, 5 ஆம் சீர்களில் மோனை வருவது சிறந்ததாம்.

(உ - ம்) சீதக்காதியின் கொடை வளத்தைப்பற்றிய பாடல்கள். (பகுதி I)

ஆசிரிய விருத்தம் :—நான்கடிகளாய், அடிதோறும் ஆறு சீர்களுக்குக் குறையாமல் பெற்று, அடிகள் அளவொத்து, நான்கடியும் ஒரெதுகையாய் வருவது ஆசிரிய விருத்தம்.

(உ - ம்) குசேலோபாக்கியானம் 1-7 செய்யுட்கள். (ஆறுசீர்களைக் கொண்டது.)

IV. அணி இலக்கணம்

1. **வேற்றுப் பொருள் வைப்பணி** :—கவி தான் சொல்லக் கருதிய பொருளை வற்புறுத்துவதற்கு வேறொரு பொருளைச் சான்றாகக் காட்டுதலாம். அங்ஙனம் கூறும்போது பொதுப் பொருளைச் சிறப்புப் பொருளாலும், சிறப்புப் பொருளைப் பொதுப் பொருளாலும் வற்புறுத்திக் கூறுதல் மரபாம்.

(உ - ம்) மாசுண்ட மணியனாள் (கம்பரா. 16.)

2. **வேற்றுமை யணி** :—இரு பொருள்களுக்குள்ள ஒப்புமையைக் கூறி வேற்றுமையையும் எடுத்துக் கூறுவதாம்.

(உ - ம்) அங்கண் விசும்பில் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மருவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

இதில் திங்களுக்கும் சான்றோருக்கும் ஒப்புமை கூறி வேற்றுமையை எடுத்துக் கூறியிருத்தல் காண்க.

3. **வஞ்சப் புகழ்ச்சியணி**:—வஞ்சனையாகப் புகழ்வது. அஃதாவது புகழ்வதுபோலப் பழித்தலும், பழிப்பதுபோலப் புகழ்தலும் ஆம்.

(உ - ம்) பாரிபாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

இதில் பாரியைப் பழிப்பதுபோலப் புகழ்ந்தமை காண்க.

4. பிறிது மொழிதலணி:—கவி தான் சொல்லக் கருதிய பொருளை நேரே கூறுமல் அதனோடு ஒத்த வேறொன்றைக் கூறித் தான் சொல்லக் கூறியதை நிலைநிறுத்தல். அஃதாவது உவமானத்தைக் கூறி உவமேயத்தைப் பெற வைத்தல்.

(உ - ம்) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

எளிய மயிலிறகே பலவாகச் சேர்ந்தால் வண்டியின் அச்சினை முறிக்கும் என்றுகூறி அதன் மூலமாக எளியவர் பலர் சேர்ந்தால் வலியவரையும் வெல்லலாம் என்பதைப் பெற வைத்தமை காண்க.

5. கருத்துடையடை கொளி யணி ;—கவி தான் சொல்லக் கருதும் பொருளைக் குறிப்பாத விளக்கத்தக்க அடை மொழிகளைப் பொருளுடன் சேர்த்துக் கூறுவது.

(உ - ம்) மாசுண்ட மணியனுள்......(கம்பரா. 16.)

இச்செய்யுளில் சீதையின் கற்பும் காவலும் அழியவில்லை என்பதை விளக்கும் அடைமொழிகளைச் சேர்த்துச் சீதையைச் சிறப்பித்தமை காண்க.

V. பொருளிலக்கணம்

பொருள் அகப்பொருள் புறப்பொருள் என இருவகைப்படும்.

அகப் பொருள் :—அகம் - மனம், மனத்தால் உணரத் தக்கதும் புறத்தாருக்கு இன்ன தன்மையுடைதென்று கூற இயலாததுமாகிய இன்பத்தைப் பற்றிக் கூறும் இலக்கணமாம். இது தலைவன் தலைவியரிடையே தோன்றுவதாம்.

புறப் பொருள் :—புறத்தார்க்குப் புலனவைதோர் தன்மையுடைய பொருள்களைப் பற்றிக் கூறும் இலக்கணமே புறப்பொருள். இஃது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கனுள் முதல் இரண்டுமாகும்.

அகப் பொருள் :—குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து திணைகளாகப் பிரித்துக் கூறப்படும். திணையாவது ஒழுக்கமாம்.

குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்; உரிப்பொருள்—திருமணம்.

முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்; உரிப்பொருள்—தலைவனைப் பிரிந்து ஆற்றியிருத்தல்.

மருதம்-வயலும் வயல் சார்ந்த இடமும்; உரிப்பொருள் - தலைவனுடன் பிணங்குதல்.

நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும் : உரிப்பொருள் – பிரிந்து இரங்கல்,

பாலை - மணலும் மணல் சார்ந்த இடமும்: – உரிப்பொருள் - பிரிதல்.

புறப் பொருள் :—இது வெட்சி, வஞ்சி ,உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழுவகைப்படும்.

வெட்சி - பகைவருடைய பசுக்கூட்டங்களைக் கவர்தல்.

வஞ்சி - பகைவர்மேல் படையெடுத்தல்.

உழிஞை - பகைவர் மதிலை வளைத்துப் போர்புரிதல்,

தும்பை - பரந்த போர்க்களத்தில் இருவர் படையும் நேர் நின்று போர் புரிதல்,

வாகை - வெற்றி பெற்றவர் வாகை மாலை சூடி ஆரவாரித்தல்.

காஞ்சி - பல்வேறு நிலையாமைகளை உலக மக்களுக்கு உயர்ந்தோர் அறிவுறுத்தல்.

பாடாண் - பாடப்படும் ஆண்மகனுடைய ஆண்மை வீரம் முதலிய வற்றைப் புகழ்ந்து பாடுதல்,

---

மாதிரி வினாத்தாள் : I

காலம் : 2½ மணி

அம்சங்கள் : 100

குறிப்பு : 1. கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்,
2. விடைகளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் குறிப்பிட்ட அளவினவாகவும் எழுதுக.
3. விடைகளை நும் சொற்களிலேயே அமைத்திடுக.

I a. புறநானூறு—இந்நூலின் சிறப்பியல்புகள் யாவை? 2
b. திணை, துறை என்றவற்றின் இலக்கணங்கள் யாவை? 2
c. வாகை, மூதின் முல்லை; இவைகளை விளக்குக. 2
d. சிலப்பதிகாரம்—பிரித்துப் பொருளும் தொடரிலக்கணமும் கூறுக. புணர்ச்சி விதியும் எழுதுக. 3
e. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை? 2
f. பழங்கால இடைக்கால இக்காலச் செய்யுட்களிடையே நீவிர் அறிந்த வேற்றுமைகள் யாவை? 3

II a. அதியமானின் ஈகைப் பெருமையை எழுதுக. 3
b. 'உண்டாலம்ம' என்ற செய்யுளுக்குரிய திணை, துறைகள் யாவை? அவை எங்ஙனம் பொருந்தும்? 2

c. கண்ணகி கண்ட கனுத்திறம் கூறுக. 3

d. கண்ணகியின் கற்பு மாண்பினே விளக்கச் சான்றுகள் தருக. 3

II a. சீதையின் கற்பு மாண்பினே அனுமன் பாராட்டிக் கூறிய வைகளை ஒருபக்கத்தில் நயந் தோன்ற எழுதுக. 6

b. சீதையின் பெண்மையின் இயல்புகளைப் புலப்படுத்தும் முறையில் கம்பர் கூறியன யாவை? 3

c. இராம பிரானைப் பிரிந்து வருந்திய சீதை இராமபிரானின் எவ்வருங் குணங்களை நினைந்து ஏங்கினள்? 2

d. வேற்றுப் பொருள் வைப்பணியின் இலக்கணம் கூறி உதாரணம் தந்து விளக்குக. 2

IV a. குசேலர் குடும்பத்தின் வறுமை நிலையை இருபதுவரி களில் எழுதுக. 5

b. பாண்டவர்களுடன் சூதாடுதல் தக்கது என்பதற்குத் துரியோதனன் கூறிய காரணங்கள் யாவை? 3

c. கீழ் வரும் உவமைகளை நயம் தோன்ற விளக்கி எழுதுக. 4

1. கன்மருங் கெழுந்து என்று மோர் துளிவரக் காணு நன்மருந்து போல்.

2. யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போல,

d. கீழ் வரும் தொடர்களை இடஞ் சுட்டி விளக்கமும் தருக. 3

1. எம் கோட்டத்து நீவா

2. வெல்லுமோ தீவினை அறத்தை

V a. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக:— 4

இயறேர், பைந்தொடி, கன்மருங்கு, இரு மகவு.

b. ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேற்றுமையை யாவது, ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் உள்ள வேற்றுமையையாவது எழுதுக. 2

c. 1. 'உற்றேனே டுற்ற உறுவனே டியானுற்ற நற்றிறங் கேட்கின் நகையாகும் பொற்றெடி'

இவ்வடிகளில் அமைந்த மோனை எதுகைகளையும் அவற்றின் வகைகளையும் குறிப்பிடுக.

2. இவ்வடிகளில் அமைந்த தளைகளையும் குறிப்பிடுக.

d. வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற் கனைசுடர் கால்சியா முன். 3

அலகிட்டு வாய்பாடு கூறுக.

e. தடித்த எழுத்திலுள்ளவைகட்கு இலக்கணக் குறிப்பு வரைக:— 4

1. அங்கக ரெல்லாம் அரும்பவிழ் முல்லை நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகன் மாய்ந்த

2. காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
3. இலம்பாடு நாணுத்தரு மெனக்கென்ன
4. தூவியன்ன மென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
5. யானும் வீகலேன்
6. பாவி தன்னுயிர் கொள்வான் இழைத்த பண்பிதால்

VI a. சங்கப் புலவர்கள் காரணிகளைப் பெற்ற வரலாற்றை விளக்கி எழுதுக. 4

b. 'மெய்யுரை பெற்றும் இந்நூற்கு' —இடம் சுட்டி விளக்குக. 3

c. வச்சிர முடியான் தன் நாற்படைகளின் வலிமையை எங்ஙனம் விளக்கினன்? 5

d. இளந்திரையனுக்கு ஆய்வேள் செய்த சிறப்புக்கள் யாவை? 3

VI a. பாரதியாரின் உவமைத் திறத்தை உதாரணம் காட்டி விளக்குக. 5

b. பாரதியார் பாடல்களின் இயல்புகள் யாவை? 3

c. கோவூர் கிழார் மதிலடைத்திருந்த நெடுங்கிள்ளிக்குக் கூறிய அறிவுரை யாது? 4

d. கோவூர் கிழார் கூறிய புலவர் இயல்புகள் யாவை? 3

100

மாதிரி வினாத்தாள் : II

காலம் : 2½ மணி

அம்சங்கள் : 100

I a. இளங்கோவடிகள், கம்பர் இவர்களில் ஒருவரைப் பற்றிக் குறிப்பு வரைக. அவர்கள் நூலியற்றக் காரணம் என்ன என்றும் குறிக்க. 2

b. குசேலோபாக்கியானம் - பிரித்துப் பொருள் கூறுக. புணர்ச்சி விதியும் கூறுக. 2

c. 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்பதற்கு இளம்பெருவழுதி கூறிய காரணங்களைக் குறிப்பிடுக. 3

d. பொன்முடியார் தாய், தந்தை முதலியவர்கட்குக் கூறும் கடமைகளை விளக்கும் செய்யுளைச் சீர்பிறழாது எழுதுக. 5

a. பாசண்டச் சாத்தன் மனித உருவில் தோன்றி வாழ்ந்த வரலாற்றை இருபது வரிகளில் எழுதுக. 5

b. கண்ணகி கணவனைப் பெறத் தேவந்தி கூறிய உபாயம் யாது? அதனைக் கண்ணகி மறுத்துரைக்கக் காரணம் என்ன? 3

c. 'சிலம்புள கொண்ம்'—சந்தர்ப்பம் கூறி விளக்குக. 3

d. பொழிப்புரை தருக :—

துயிலெனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்
வெயிலிடைத் தந்த விளக்கென வொளியிலா மெய்யாள்
மயிலி யற்குயின் மழலையாள் மானிளம் பேடை
அயலெயிற்றுவெம் புலிக்குழாத் தகப்பட்ட தன்னுள். 4

e. 'அமிழ்துகொண் டனங்கவேள் செய்த ஓவியம் புகை யுண்டதே ஒக்கின்ற உருவாள்'—இவ்வுவமையை நயந் தோன்ற விளக்கி எழுதுக. 3

f. அரக்கியரிடையில் இருந்த நங்கை சீதையே என்று அனுமன் எங்ஙனம் துணிந்தனன்? அவன் அடைந்த மகிழ்ச்சியையும் எழுதுக. 4

I a. இரத்தலின் இழிவை விளக்குக. 2

b. குசேலர், சுசீலை இவர்தம் நற்பண்புகள் யாவை? 4

c. அரசர்கள் பொருள் தொகுப்பதில் மேற்கொள்ள வேண்டிய முயற்சி குறித்துத் துரியோதனன் கூறியன யாவை? 2

d. நீதித்தருமனும் சூதிலன்புள்ளான் - சந்தர்ப்பம் கூறி விளக்குக. 2

V a. கீழ்வரும் அடிகளின் கருத்தை விளக்கி எழுதுக :— 4

1. பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம்
2. பட்டபதியில் படாததொரு வார்த்தை
இட்டனரூரார் இடுதேளிட் டென்றன்மேல்
3. காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்க.
4. இருந்த மாநிலம் செல்லரித்திடவும் ஆண்டெழா தாள்

b. இடஞ்சுட்டி விளக்கம் தருக :— 3

1. செய்தவ மில்லோர்க்குத் தேவர் வரங்கொடார்
2. வீடினதன்றறன் யானும் வீகலேன்
3. மடுத்த வலைதறிந்திலேன்

a. தொடரிலக்கணம் கூறுக :— 3

அருஞ்சமம், உயிர்க்குழவி, பொற்றொடி, பூமித் தெய்வம், முந்திர மறைகள், விரிமழை.

b. உறுப்பிலக்கணம் கூறுக :— 4
மெலிந்தாள், அருந்துவ, காட்டி, கொடுக்குவர்.

c. கோட்டிடை, ஆருயிர்—பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக. 3

d. வெண்பாவின் இலக்கணத்தையாவது கட்டளைக் கலித்துறையின் இலக்கணத்தையாவது எழுதுக. 3

e. உவமையணியின் இலக்கணத்தை விளக்கி உதாரணம் தருக. 3

f. ஆவதே யையமில் அரவி னீங்கிய
தேவனே யவனிவள் கமலச் செல்வியே.
இவ்வடிகளில் அமைந்த மோனை எதுகை வகைகளைப் புலப்படுத்துக. 3

VI. a. அரசனுக்கு ஏற்பட்ட கவலை யாது? அஃது எங்ஙனம் நீங்கியது? 4

b. அவன் குமார தெய்வம்; அங்கோர் சாபத்தினுற்றோன் றினன்—இதனை விளக்குக. 3

c. இளந்திரையனின் நன்றி மறவாப் பண்பினை விளக்கி எழுதுக, 4

d. வீரநூதன் படைவீரரின் சிறப்பையும் கடமையையும் கொங்கு வேந்தனுக்கு எங்ஙனம் அறிவித்தனன் (18-வரிகள்)

VII a. தற்காலப் புலவர்கட்கும் பாரதியாருக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை? 4

b. பாரதியாரைக் கற்ற மற்ற மதுரகவி என்பது எங்ஙனம் பொருந்தும்? 3

c. நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் கோவூர் கிழார் எங்ஙனம் ஒற்றுமை உண்டாக்கினர்? 4

d. நலங்கிள்ளி கோவூர் கிழார் நட்பினால் பெற்ற நன்மைகள் யாவை? 3

100

அனுபந்தம்

1. இலக்கணக் குறிப்பு

	பக்கம்
அடுக்குத் தொடர்—வரும் வரும்	58
அன்மொழித் தொகை—பொற்றொடி	40
ஆறும் வேற்றுமைத் தொகை—பகல் வாயில்	25
இடவாகு பெயர்—உலகு	74
இடைச் சொல்—மன்	62
இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை—உயிர்க்குழவி	29
இருபெயரொட்டுப் பண்புத்தொகை—பரிதிவானவன்	58
இலக்கணப் போலி—முன்றில்	40
இறந்தது தழுவிய எச்ச உம்மை—ஊர்க்குற்ற நீங்கும்	38
இன்னிசை அளபெடை—செறி தொடீஇ	40
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்—மூவா	32
ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்—நந்தா	92
ஈற்றுப் போலி—பொதும்பர்	29
உம்மைத் தொகை—மந்திரமறை	89
உரிச் சொல் தொடர்—உறுநோய்	25
உருபு மயக்கம்—சாத்தற்கு மேவி	25
உருவகம்—பொருட்குன்றம்	43
உவமத் தொகை—கொடியிடையார்	20
உவமையணி—மானிளம்......அன்னுள்	55
உவமையாகு பெயர்—காளே	13
உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று—ஆடுவதும்	40
எண்ணாகு பெயர்—ஒன்று	57
எண்ணும்மை—தந்தைக்கும் தாயர்க்கும்	31
எதிர்மறை வினைமுற்று—நோற்றிலன்	80
ஏழாம் வேற்றுமைத் தொகை—கை நீட்ட	89
ஓகாரம்-எதிர்மறை—நவிலற்பாலதோ	79
கருத்துடையடை கொளியணி—மாசுண்ட......ஈறுண்டோ	74
காரணப் பெயர் பூண்	6
காரிய ஆகுபெயர்—பகல்	20
குண சந்தி—குசேலோபாக்கியானம்	83
குளகம்—குசேலோபாக்கியானம் 3, 4 செய்யுள்	88
குறிப்பு வினைமுற்று—அரிது	58
குறிப்பு வினையாலணையும் பெயர்—உளத்தான்	88
குற்றியலிகரம்—உறுவனேடியானுற்ற	38

பக்கம்

கூட்ட அணி—விழுதல்......எழுதல் 57
செய்யா என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்—பாரா 58
செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று—அழுங்கும் 66
சொல்லிசை யளபெடை—தூஉய் 20
தற்சமம் – கமலம் 73
தற்பவம் – சடிதி 102
தன்மை ஒருமை வினைமுற்று—வீகலேன் 73
தன்மைப் பன்மை வினைமுற்று—பட்டேம் 38
தீர்க்க சந்தி—ராமாயணம் 48
தேற்றேகாரம்—பொருளுரையே 27
தொகுத்தல் விகாரம்—எழுகென்று 46
தொழிற் பெயர்—விம்முதல் 57
நீட்டல் விகாரம்—நீழல் 29
பண்பாகு பெயர்—விருந்து 85
பண்புத் தொகை—நன்னடை 13
பெயரெச்சம்—நீடிய 41
மகரக்குறுக்கம்—கொண்ம் 44
மரூஉ—ஆர் 66
முதல் நிலை திரிந்த தொழிற் பெயர்—பாடு 25
முதனிலைத் தொழிற் பெயர்—வாடு 35
முற்று மோனை—காதலி கண்ட கனவு கருநெடுங்கண் 47
முற்றும்மை—அனைத்தையும் 58
முற்றெச்சம்—தேடினென் 73
மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க
தொகை—பெற்றேடி 40
வானீற்று வினையெச்சம்—கொள்வான் 74
வியங்கோள் வினைமுற்று—பெறுக 35
வினைத் தொகை—கனைசுடர் 46
வினையாலணையும் பெயர்—அழுதாள் 29
வேற்றுப் பொருள் வைப்பணி—கற்பும்......ஈறுண்டோ 75

2. உவமைத் தொடர்

பக்கம்

அனங்கவேள் செய்த ஓவியம் 59
கண்ணினீர் ....அன்னத்தன்மையாள் 74
கன்மருங்கு ...... நன் மருந்து போல் 53
சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் முகம் 68
மாசுண்ட மணியனுள் 71
மானிளம்பேடை புலிக்குழாத்தகப்பட்ட தன்னுள் 55

	பக்கம்
மீண்டு மீண்டு எரிபுக்கு நுழைந்தாலென	61
யானைதன் கோட்டிடை வைத்த கவளம் போல	5
வயங்கு வெங்கதிர்த் தேசுண்ட திங்களுமென்ன	74
விரிமழைக்குலம் கிழித்தொளிரு மின்னென	70
வெயிலிடைத் தந்த விளக்கென	53

3. சந்தர்ப்பம்

	பக்கம்
அரவின் நீங்கிய தேவனே அவன்	73
இலம்பாடு நாணுத் தரும்	43
இவள் கமலச் செல்வியே	73
எம் கோட்டத்து நீவா	31
எம்பி நின் தம்பி நீ தோழன்	69
ஏடலர் கோதாய் எழுக	45
சிலம்புள கொண்ம்	44
செய்தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்	26
தேவிகாள் எம்முறு நோய் தீர்ம்	23
நல்வழி தீயவழி என நாமிதில் சோதனை செயத்தகுமா	98
பகை காய்கிலார் தம்மைப் பூமித்தெய்வம் விழுங்கிடும்	101
பகை குமைப்பன யாவும் நற்படை யலவோ	98
படாதன விட்டு ஏற்பன கூறுர்	22
பெறுக கணவனோ டென்றுள்	34
மடுத்த அஃதறிந்திலேன்	92
முன்னை உயிர்க் குழவி காணுய்	28
யானுற்ற நற்றிறங் கேட்கின் நகையாகும்	36
யாமொருநாள் ஆடுதும்	39
வருந்த வேண்டா வாழ்க வன்றுளே	4
விருந்து கண்டபோது என்னுறுமோவென்று விம்மும்	64
விடினு தன்றறன் யானும் வீகலேன்	73

4. சிறு குறிப்பு

	பக்கம்		பக்கம்
அமரர் தரு	23	ஔவையார்	3
அனங்கவேள்	60	சகுனி	103
இடுதேளிடுதல்	37	சூரியகுண்டம்	40
இளம் பெரு வழுதி	3	சோமகுண்டம்	40
உச்சிக்கிழான்	24	திணை	2
ஊர்க்கோட்டம்	24	துறை	2
டுத்தொகை	1	தேவந்தி	17
ருவைகட்கரசன்	31	நிக்கந்தன்	25

	பக்கம்		பக்கம்
நீவாரப்புல்	88	புறம்பணையான்	25
பரிசில் கடா நிலை	6	பொன் முடியார்	3
பாசண்டச் சாத்தன்	25	மாலதி	17
பாடாண் திணை	6	மூதின் முல்லை	13
புகர்வெள்ளை நாகர்	24	வாகை	1[illegible]
பொது வியல்	9	வெள் யானை	24
பொருள் மொழிக் காஞ்சி	9	வேற் கோட்டம்	24

5. பிரித்துப் புணர்ச்சி விதி கூறுதல்

	பக்கம்		பக்கம்
என்றலை	13	நோன்றுள்	10
என்னட்டார்	93	பொருட்குன்றம்	43
கடற்றுணை	72	பொருட்கேள்வி	31
களிறெறிந்து	13	மகக்கொண்டு	22
கன்மருங்கு	54	மாற்ருண் மகவுக்கு	21
நற்றிறம்	38	வயிற்றெழுந்த	9[illegible]
நன்னடை	13		

6. குறிக்கும் தொடர்

அரவின் நீங்கிய தேவன்—திருமால்
அனங்கவேள்—மன்மதன்
ஆருயிர் போன்ற மாமன்—சகுனி
இருந்த மாநிலம் [illegible]ழாதாள்—சீதை
எருவைகட் கரசன்—சடாயு
கமலச் செல்வி—இலட்சுமி
கருநிறத் தழகன்—இராமன்
சலம் புணர் கொள்கைச் சலதி –மாதவி
சுருதி நாயகன்—இராமன்
நன் மருந்து...நங்கை—சீதை
நிக்கந்தன்—அருகன்
பகல் வாயில் உச்சிக் கிழான்—சூரியன்
பரிதி வானவன்—சூரியன்
புகர் வெள்ளை நாகர் – பலதேவர்
புறம் பணையான்—சாதவாகனன், ஐயனர்
மயிலியற் குயில் மழலையாள்—சீதை
மானிளம் பேடை ...அகப்பட்டதன்றுள்—சீதை
மூவகையுலகையும் முறையின் நீக்கிய பாவி—இராவணன்
வனிதையர் திலகம்—சீதை
வெயிலிடை......மெய்யாள்– சீதை

...MARA PUBLIC LIBR...